T. 6745

# போகர் ஏழாயிரம்

## (இரண்டாம் ஆயிரம்)

II



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு
1975

வெளியீட்டுத் தொடர் எண் : 15

# போகர் ஏழாயிரம்

(இரண்டாம் ஆயிரம்)

பதிப்பித்தல் :

**பாண்டேச்சுரம் திரு. வே. கங்காதரத் தேவர் அவர்கள்**

பதிப்பின்படி பதிப்பிக்கப்பட்டது



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால் பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975 விலை ரு.

முதற் பதிப்பு : 1893

இரண்டாம் பதிப்பு : 1975

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

அச்சிட்டோர் :

சோல்டன் & கோ
சென்னை-600005

# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி
# திருக்கோயில் அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன்,
அறங்காவலர் குழுத்தலைவர்.

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி.எஸ்ஸி., அறங்காவலர்

திரு. என். நாச்சிமுத்து எம்.எல்.ஏ., ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.; ,,

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர், ,,

வி. எஸ். கோதண்டபாணி, பி.எஸ்ஸி., பி.எல்,
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

# அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
# சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை - 600029. — தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர்,
தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை - 600005. — பொருளாளர்

திரு. பு. மனோகரன் அவர்கள்,
தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், — உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை. — உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி, பி.எஸ்ஸி. பி.எல்.,
நிர்வாக அதிகாரி,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். — உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால். எச்.பி. ஐ.எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை - 600029. — சிறப்பு அழைப்பினர்

# சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
பொறுப்பலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆய்வு நிலையம்,
சென்னை - 600029. — தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ.எம்.,
— செயலர்
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, உறுப்பினர்
சென்னை - 600029.

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை - 600005. — உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். — ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன், எல்.ஐ.எம்.,
மருத்துவ அலுவலர்,
ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வ. ஆற்காடு. — ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி, எல்.ஐ.எம்.,
ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. — ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், தமிழக அரசு, இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை - 600005. — ,,

8. டாக்டர் ப. சிற்சபை, ஆர்.ஐ.எம்.பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக்கழகம்,
சென்னை - 600005. — ,,

9. பண்டிட் பெ. முத்துகருப்பபிள்ளை, ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம்,
மதுரை. — ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம், ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை - 600012. — உறுப்பினர்

11. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை,
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை. — ,,

12. டாக்டர் என். சேது ரகுநாதன், தமிழ்ப் பேராசிரியர்,
விருதுநகர். — ,,

# சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி.ஏ., ஜி.சி.ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன், எல்.ஐ எம்.,
பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பா ரெட்டி,
கௌரவ இயக்குநர் இந்திய மருத்துவ வரலாற்று
ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம், பி.எஸ்ஸி.,
எம்.டி., எம்.ஆர்.சி.பி., (லண்டன்),
சென்னை - 600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு பேராசிரியர் **க. அன்பழகன்** எம்.ஏ., அவர்கள்

அளித்த

# அணிந்துரை

முன்தோன்றிய — மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிறதென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும் கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்-இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு— ஓலைச் சுவடிகளாகவும், ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள் உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும், மருந்து செய்முறைகளை ஒப்பு நோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப் படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்

பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோப்பதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும்—அதன் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்—இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம். அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக் குரியனவாகும்.

அருள்மிகு பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக் கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையில் போகர் ஏழாயிரத்தில் தற்போது கிட்டியுள்ள முதல் மூன்று ஆயிரங் களும் ஆகும். அவற்றுள் முதல் இரண்டு ஆயிரங்கள் திரு. வே. கங்காதரத் தேவர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று கிட்டாத பதிப்பாக உள்ள இந்நூல் 'போகர் இரண்டா மாயிரம்', வெளிவருவது மிகுந்த பயன்தர வல்லதாம்.

இந்நூலை இயற்றியருளியவர், போற்றுதலுக்குரிய சித்தர் 'போகர்' என்பவராவர் இவர் போகர் நிகண்டு, போகர் எழு நூறு, போகர் கற்பம் முதலிய பல நூல்களையும் இயற்றி யுள்ளார்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மை கள்—இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு – ஒளி காண்பதற்கு வழிகண்ட வல்லுநர்களில் திரு. வே. கங்காதரத் தேவரும் ஒருவராவர்.

''மிகக் கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

''அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது; ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை.'' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடை முறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு இந்த அரிய நூலை பதிப்பித்து வழங்கிச் சென்ற வே. கங்காதரத் தேவர் அவர்களின் தொண்டு.

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

என்னும் குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப் படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
20-3-1975

க. அன்பழகன்

# இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ் மொழி; அதுபோல் தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம்மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின் — நிலநடுக்கம், கடற்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும் அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களும் அவர்கள் அனுபவங்களும் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித்தீர்வும், அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சி சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவ மனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில்

மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைத்த பாடத் திட்டப்படி கற்பிக்கப் போதிய பாட புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாட புத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறை தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட், வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ் சென்ற க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்னும் நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக் குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும், அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி கல்லூரியாக மிளிர்ந்த போது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணி புரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசு வழி வெளியிடப் பெற்றன.

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர் பாளையங்கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாட நூல்களும் துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களைச் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopea Committee 1965 G.O.MS. 2163 Dt. 23—8—60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற்குழு என்று (G.O.MS. No. 1060 Health Dt. 13—6—66) ஒரு குழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காகவும் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும் ஒரு குழுவை அரசு ஆணைப்படி (G.O.MS. No. 2571 of 23—10—73) தோற்றுவித்தார்கள். அக்குழுவின் பணிகளாவன: 1. சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்;

ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப்படிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்தும் திருத்தம் செய்தும் அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள சில உறுப்பினர்களுடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில், தற்போது கிட்டியுள்ள போகர் ஏழாயிரத்தின் முதல் மூன்று ஆயிரங்களும் இடம் பெறும். மேற்படி நூலின் ஆசிரியர் போகர் என்னும் சித்தரென்பது வெளிப்படை. இவரைப் பதினெண் சித்தரில் ஒருவரென்பர். இவர் போகர் நிகண்டு, மூலிகைத் தொகுப்பு, கற்பம், முந்நூறு, வர்மநூல் முதலிய பல அரிய நூல்களை யாத்தளித்துள்ளார் என்று தெரியவருகிறது. இவரது ஆசான் காலாங்கிநாதரென்றும், இவரது பாட்டனுர் திருமூலரென்றும் இவருடைய பாடல்களிலிருந்து புலப்படுகின்றது. இவருடைய சீடர் புலிபபாணி என்பர். இவர் தம் சீடருடன் பழநியில் வாழ்ந்து பல சித்து விளையாடல்கள் செய்த காரணத்தால் பழநியைச் "சித்தன் வாழ்வு" என்று பல நூல்கள் கூறும். அத்தகையவற்றில் ஒன்றுதான் பழநி மலைமீதுள்ள ஞானதண்டாயுதபாணி திருவுருவம் என்பது பலர் கருத்தாகும். இவர் உலக நாடுகள் பல சுற்றிக் கண்டும், ஆய்ந்தும் அதன் பயனாகப் பல மொழிகளில் புலமை பெற்றும், பல கலைகளில் வல்லுநராகவும் திகழ்ந்தாரென்று அறியக் கிடக்கின்றது.

இவருடைய வரலாறுகளைப் பல நூல்களில் பற்பல விதமாகக் காணலாம். அவைகளை இங்கு விவரிக்க இடமில்லையாதலால் இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு இவரியற்றிய ஏழாயிரமென்னும் நூலின் முதலிரண்டு ஆயிரங்களை 1893இல் பாண்டேச்சுரம் வே. கங்காதரத் தேவரென்பவர் அச்சியற்றி உதவியதைத் தழுவியும், சென்னை, சைதாப்பேட்டை, காலஞ்சென்ற திரு. தணிகாசல வைத்தியர் திருமகனுர் திரு. டாக்டர் த. தங்க

வேலு அவர்கள் கொடுத்து உதவிய இரண்டு கையெழுத்துப் படிகளை ஒப்பு நோக்கித் தனிப்பிரதி எடுத்தும் மேற்படி நூல்களுக்குக் குறிப்புரையும், அருஞ்சொல்லுரையும் எழுதி இணைத்தும் தனித்தனிப் படிகளாக பதிப்பித்தளிக்க முன்வந்துள்ளோம். அவற்றுள், முதலாம் ஆயிரத்தின் முற்பகுதி அட்டாங்கயோக நூலாம். பிற்பகுதி காயகற்ப நூலாம். இரண்டாம் ஆயிரத்தின் முற்பகுதி சரக்குவைப்பு முறைகளையும் பிற்பகுதி இயற்கைச் சரக்குகளின் விவரங்களையும் கூறும் நூலாகும். மூன்றுமாயிரம் அறுபத்து நான்கு வகைப் பாடாணங்களின் வைப்பு, இயற்கை முதலியன கூறும் நூலாகும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்கு பெருந்தொகை தேவைப்படுவதால், இப் பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழகஅரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர் திரு. க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்ததோடு, அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு, காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்துவைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும், அமைச்சர் பெருமகனுர் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டும், நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும், வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி, நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக, இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும், சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும், இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரி யாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி, பி.எஸ்ஸி., அவர்களுக்கும், இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து வரும் இந்துமத அறநிலையப் பாதுகாப்புத் தலைவர் உயர்திரு. எல். நரசிம் மன், பி.ஏ., ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இக் குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும், பிற வசதி களும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்தும், பணி இடை யீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்து வரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் உயர்திரு. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி ஐ.எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், மிக விரைவில் அச்சடிக்கும் தாள்களை சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து கிடைக்கும்படிச் செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரி விக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் செய்வித் தும், இப்போகர் நூலுக்குக் குறிப்புரை எழுதியும், இக் குழுவுக்குத் துணைபுரிந்துவரும் தனி அலுவலர் திரு. டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம். அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் திரு. மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வை. முரு. முத்துக்குமார சாமி, ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவைப்பட்ட அச்சுப் படியும் கையெழுத் துப் படியும் (போகரேழாயிரம்—முதலாம் ஆயிரம், மேற்படி இரண் டாமாயிரம்—கையெழுத்துப்படி மட்டும்) கொடுத்துதவிய டாக்டர் டி. வி. கலியாணசுந்தரனுருக்கும், மேற்படி போகர் ஏழாயிரம்—மூன்றும் ஆயிரத்தின் இரண்டு கையெழுத்துப் படிகளைக் கொடுத்துதவிய சென்னை, சைதாப்பேட்டை, காலஞ்சென்ற திரு. தணிகாசல வைத் தியர் திருக்குமாரர் திரு. டாக்டர் த. தங்கவேலு அவர்களுக்கும், மேற்படி குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த திரு. புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக்கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச் சியற்றிய அந்தந்த அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவோடு திருத்தங்களை அமைத்துக் கொண்டு அத் திருத்தங்களின் விளக்கங்களுடன் எமக்கறிவுரையும் வழங்கி எம்மை ஊக்குவிக்குமென்ற துணிபுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ எம்.,
தலைவர்,

| | |
|---|---|
| இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-600029 | அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு. |

# முதற்பதிப்பின் முகவுரை

" **போகமுனிவர் ஏழாயிரம்** " என்னும் வைத்திய வாத நுட்பங்களோடு கூடிய இவ்வரிய பெரிய நூலை 1891-வது வருடத்தில் அச்சிற் பதிப்பிக்க ஆரம்பித்தேன். அதில் முதலாம் ஆயிரம் முடிவுபெறுந் தருணத்தில் எனது நண்பருள் சிலர் ஒவ்வொரு ஆயிரமாக அச்சிற் பதிப்பித்து வெளியிட்டால் எளிதாக விலை கொடுத்து வாங்கவும், படிக்கவும் எல்லோருக்கும் அனுகூலமாக இருக்குமென்று சொன்னதனால் முதலாம் ஆயிரத்தை அவ்வருடத்திலேயே பதிப்பித்து வெளியிட்டேன். உடனே இரண்டாம் ஆயிரத்தையும் பதிப்பிக்கத் தொடங்கினேன். ஆயினும், சென்ற வருடத்தில் வேறுபல காரியங்களால் அவகாசம் கிடைக்காமையாலும் கிடைத்த காலத்தில் பல பிரதிகளையும் கொண்டு ஒப்புநோக்கி பண்டித சகாயத்தோடு பரிசோதிக்க வேண்டியிருந்தமையாலும் இவ்விரண்டாம் ஆயிரம் முடிவதற்கு இத்தனை நாளாயிற்று.

இரண்டாம் ஆயிரத்தின் செய்யுள் தொகை ஆயிரத்து நான்கு (1004). அவற்றுள்,

முதல் நானூற்றுச் சொச்சஞ் செய்யுள் சரக்குகளின் வைப்புமுறைக்கும், அவற்றைப் பதங்கம் செய்வதற்கும் இன்றியமையாதனவாகிய வெடியுப்புச் செயநீர் முதலியவற்றையும்,உப்புவகை இருபத்தைந்தனுள் இந்துப்பு முதல் காசி இலவணம் ஈறுகச் சொல்லப்பட்ட பதினைந்து வகையான காரசாரங்களின் வைப்பு முறைகளையும், சூடன் முதல் கடல் நுரையீறுகச் சொல்லப்பட்ட பத்து வகையான கார சாரங்கள் பிறக்கும் விதத்தையும், வைப்பும், பிறப்பு மாகிய இலவண வகைகளைப் பத்தகஞ் (கட்டு) செய்யும் பான்மையையும், நீராக்கும் நிலைமையையும், செயநீர் செய்யும் திறத்தையும், வாத வைத்தியங்களுக்கு உபயோகிக்கும் வழியையும், அவற்றால் காயசித்தி எய்தி ஞானபாக வஸ்து நிலையை நாடுந்தன்மையையும் இன்னும் பலவற்றையும் விவரித்துச் சொல்லும்.

பின்னுள்ள அறுநூற்றுச் சொச்சஞ் செய்யுள் தாது முதலிய பொருள்களின் வைப்பு முறைக்கும் அவற்றைப் பத்தகஞ் (கட்டு) செய்வதற்கும் இன்றியமையாதனவாகிய வேறு முறையார்கச் செய்யும் வெடியுப்புச் செயநீர் முதலியவற்றையும், பாடாணவகை அறுபத்து

நான்கினுள் புத்தோட்டுத் தொட்டி முதல் இந்திர பாடாணம் ஈருகச் சொல்லப்பட்ட முப்பத்திரெண்டு வகையான தாதுக்களின் வைப்பு முறை விவரத்தையும், கறடக பாடாணம் முதல் வெள்ளைப் பாடாணம் ஈருகச் சொல்லப்பட்ட முப்பத்திரெண்டு வகையான பிறப்புப் பாடாணங்களுள் முதற் பத்துத் தாதுக்கள் பிறக்கும் விதத்தையும், வைப்பும் பிறப்புமாகிய பாடாண வகைகளைப் பத்தகஞ் (கட்டு) செய்யும் பான்மையையும், மெழுகு, சிந்தூரம், பற்பம் முதலியவற்றைச் செய்யுந் திறத்தையும், வாத வைத்தியங்களுக்கு உபயோகிக்கும் வழியையும், அவற்ருல் காயசித்தி யெய்தி ஞான பாகவஸ்து நிலையை நாடுந் தன்மையையும் இன்னும் பலவற்றையும் விவரித்துச் சொல்லும்.

இனி மற்றைய ஐந்து காண்டங்களையும் இடையூறின்றி விரைவில் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யும்படி ஸ்ரீ சிவ பெருமான் திருவருள் பாலிப்பாராக.

இங்ஙனம்,

**பா. கங்காதரன்.**

# போகர் ஏழாயிரம் - இரண்டாமாயிரம்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அமுதப் பாடாண உற்பத்தி | ... | 239 |
| அமுரித் தண்ணீர் | ... | 178 |
| அயச் செம்பு செய்தல் | ... | 127 |
| அய முருக்கு | ... | 20 |
| அரிதார வைப்பு | ... | 156 |
| அரிதார உற்பத்தி | ... | 224 |
| அறவுரை கூறல் | ... | 151, 158, 177, 190 |
| அறிவுரை கூறல் | | 133, 145, 177, 193, 198, 238 |
| ஆத்தாளின் பெருமை | ... | 112 |
| இந்திரப் பாடாண வைப்பு | ... | 207 |
| இந்துப்பு வைப்பு | ... | 15 |
| இரதக்களங்கும் செந்தூரமும் | ... | 57 |
| இரத்தச் சிங்கி வைப்பு | ... | 126 |
| இரத்தப் பாடாண வைப்பு | ... | 172 |
| இரசக் களங்கு சிந்தூரம் | | 57 |
| இரசக் கிணறு உற்பத்தி | ... | 186 |
| இரசத்தின் பண்பு | ... | 184 |
| இரசிதப் பாடாண வைப்பு | ... | 178 |
| இரசேந்திரத்தின் பண்பு | ... | 184 |
| இலிங்கக் கட்டு | ... | 152 |
| எருமை நாத்தொட்டி வைப்பு | ... | 118 |
| எவட்சாரக் கட்டு | ... | 30 |
| எவட்சாரச் சுண்ணம் | ... | 30 |
| எவட்சார வைப்பு | ... | 29 |
| ஏகம்பச் சார வைப்பு | ... | 42 |
| ஏமச் சிங்கி வைப்பு | ... | 129 |
| ஐந்துவித இரதங் கூறல் | ... | 184 |
| கடல் நுரையின் மகிமை | ... | 99 |
| கடுங்காரச் செய நீர் | ... | 8 |
| கந்தகப் பாடாண வைப்பு | ... | 191 |
| கந்தக பேதம் | ... | 192 |
| கருமுகிற் பாடாண வைப்பு | ... | 134 |
| கல்லுப்பின் பிறப்பு | ... | 87 |
| கறடகப் பாடாண உற்பத்தி | ... | 212 |
| கறியுப்பின் மகிமை | ... | 93 |
| காகப் பாடாண வைப்பு | ... | 199 |
| காசி லவ்ண வைப்பு | ... | 72 |
| காச்சு லவண வைப்பு | ... | 60 |
| காப்பு | ... | 1 |
| காரக் களங்கு | ... | 23 |

காரீயச் செந்தூரம் ... 115
குங்குமப் பீரடாண வைப்பு ... 169
குணசலத் தைலம் ... 111
குதிரைப்பல் பாடாணக் கட்டு ... 137
கெந்தகப் பாடாண உற்பத்தி ... 225
கெந்தியுப்பு வைப்பு ... 47
கெந்தி லவணக் கட்டு ... 56
கெந்தி லவண வைப்பு ... 55
கோடா சோரி வைப்பு ... 160
கோழித்தலைக் கெந்தி வைப்பு ... 153
கோளகப் பாடாண உற்பத்தி ... 219
கௌரிப் பாடாணக் கட்டு ... 145
கௌரி வைப்பு ... 144
சத்திச்சார வைப்பு ... 39
சரக்கு வைப்புகளுக்குத் திராவகம் ... 106
சரக்கு வைப்புகளுக்கு வெடியுப்புச் செயநீர் ... 105
சர நூல் யோக மார்க்கம் கூறல் ... 75
சரியை யாதி நான்கின் துறை கூறல் ... 84
சவுக்காரக் குரு ... 9
சவுக்காரச் செயநீர் ... 6
சவுக்காரச் செயநீர் ... 11
சவ்வீர வைப்பு ... 146
சாரக் கட்டு ... 148
சாரக் கட்டு (சோரப் பாடாண வைப்பிற்கு) ... 196
சாரச் சுண்ணம் ... 4
சாரச் செயநீர் ... 213
சித்தி வகை கூறல் ... 100
சிந்து லவணக் கட்டுச் சுண்ணம் ... 68
சிந்து லவண வைப்பு ... 67
சிரபந்தப் பாடாண உற்பத்தி ... 241
சீனத்தின் மகிமை ... 80
சீனச் செயநீர்—பயன்படுத்தல் ... 80
சுத்த சயிலோகதம் ... 215
சூக்கும ஐந்தெழுத்தின் ஒடுக்கம் ... 92
சூடச் செயநீர் ... 73
சூடன் உற்பத்தி ... 72
சூடன் சுண்ணம் ... 73
சூதக் கட்டும், மணியும் ... 74
சூதக் கட்டு ... 124
சூதக் கட்டு ... 233
சூதச் செந்தூரம் ... 65
சூதத்தின் பண்பு ... 186
சூதப் பாடாணம் ... 187

சூதப் பாடாண வைப்பு ... 187
சூதப் பாடாண உற்பத்தி ... 221
செப்புத்தொட்டி வைப்பு ... 114
செயநீர் ... 62
சோடசக் கலை இருப்பு ... 78
சோரப் பாடாண வைப்பு ... 196
ஞானங் கூறல் 17, 66, 69, 96, 126, 129, 131, 188, 201
ஞான போதனை ... 109
ஞான யோகங் கூறல் 28, 32, 175, 205
தத்துவங் கூறல் ... 81
தம்பனக் குளிகை ... 138
தங்க பற்பம் ... 74
தயிலப் பாடாண உற்பத்தி ... 181
தயிலப் பாடாண வைப்பு ... 182
தாது உற்பத்தியாகும் இடங்கள் ... 211
தாம்பிரச் சுண்ணம் ... 3
தாலகப் பாடாண உற்பத்தி ... 237
தாளகச் சுண்ணம் ... 73
திராவகம்—(சரக்கு வைப்புகளுக்கு) ... 106
திராவகம் ... 220
திரிவங்கச் சுண்ணம் ... 3
தீமுறு கற்பாடாண வைப்பு ... 135
துத்த வைப்பு ... 174
துருசுக் களங்கு ... 27
துருசுக் குரு ... 27
துருசு வைப்பு ... 24
துருசு வைப்பு ... 176
தூமம் ... 183
நல்லுபதேசம் 31, 155, 180, 220
நவச்சாரக் கட்டு ... 33
நவச்சார வைப்பு ... 33
நாகப் பாடாண வைப்பு ... 204
நிமிளைச் சுண்ணம் ... 74
நிருவிடத் தைலம் ... 231
நீலப் பாடாண வைப்பு ... 189
பச்சைக் கற்பூர மகிமை ... 85
பஞ்சபட்சி பாடாண வைப்பு ... 165
பஞ்சலோக வெடியுப்புச் சுண்ணம் ... 4
பர தத்துவம் கூறல் ... 75, 143
பராபரையின் துதி ... 82
பவழப்புற்றுப் பாடாண வைப்பு ... 156
பாரதத்தின் பண்பு ... 185
பாடாணத்தின் தொகை வகை ... 102
பிடா லவண வைப்பு ... 62
பிறப்புக்கார சாரங்களின் பெயர் ... 72
பிறப்புப் பாடாணத்தின் பெயர் ... 211
புத்தோட்டுத் தொட்டிப் பாடாண வைப்பு ... 103, 106
புரியட்டகம் ... 217

| | |
|---|---|
| பூநீற்றின் செயநீர் | ... 82 |
| பூநீற்றின் மகிமை | ... 82 |
| பூரச் செயநீர் | ... 5 |
| பொட்டுலுப்புச் சுண்ணம் | ... 19 |
| பொட்டுலுப்பு வைப்பு | ... 18 |
| பொற்ளுெட்டி வைப்பு | ... 110 |
| பொன்னம்பர் மார்க்கம் | ... 95 |
| மகோதகம் | ... 214 |
| மந்திர சாத்திரம் கூறல் | ... 116 |
| மிசிரகத்தின் பண்பு | ... 186 |
| மிருதாருசிங்கி செந்தூரம் | ... 123 |
| மிருதாருசிங்கிச் வைப்பு | ... 122 |
| மீனம்பர் மார்க்கம் | ... 97 |
| மெழுகுக்குப் பால்துருதி | ... 221 |
| யோகம் கூறல் | ... 21, 24, 120, 135, 168, 173 |
| யோகம் ஞானம் கூறல் | ... 170, 226 |
| யோக தத்துவங் கூறல் | ... 87, 235 |
| யோக மார்க்கம் | ... 58, 60, 75 |
| யோகிக்கும் ஞானிக்கும் வேறுபாடு கூறல் | ... 222 |
| லவண பாடாண வைப்பு | ... 201 |
| லோகச் சுண்ணம் | ... 2 |
| லோகத் திராவகம் | ... 14 |
| வச்சிரக் கவசம் | ... 214 |
| வாசியின் பெருமை | ... 94 |
| வளையலுப்பின் மகிமை | ... 83 |
| வாணக் கெந்தி வைப்பு | ... 156 |
| வித்துத் துருதி | ... 212 |
| வீரக் கட்டு | ... 150 |
| வீரக் கட்டு | ... 197 |
| வீர உற்பத்தி | ... 228 |
| வெங்காரக் கட்டு | ... 23 |
| வெங்காரச் செயநீர் | ... 5 |
| வெங்கார வைப்பு | ... 22 |
| வெடியுப்புச் செயநீர் | ... 1 |
| வெடியுப்புச் செயநீர் (சரக்கு வைப்புகளுக்கு) | ... 105 |
| வெடியுப்புச் செயநீர் | ... 213, 231 |
| வெள்ளியங் கிரியான வரலாறு | ... 180 |
| வெள்ளைப் பாடாணக் கட்டு | ... 142 |
| வெள்ளைப் படாாண வைப்பு | ... 140 |
| வேதாந்தம் கூறல் | ... 168, 216 |
| வைகிராந்தப் பாடாண உற்பத்தி | ... 234 |
| வைப்புச் சரக்குகளின் தொகை | ... 14 |
| வைப்புப் பாடாணங்களின் பெயர்கள் | ... 102 |

# போகமுனிவர் ஏழாயிரம்

## இரண்டாமாயிரம்

### காப்பு

இரண்டான ஆயிரத்தை விரித்துச் சொல்ல
ஈசர் பயின்றெடுத்த கரிமுகன் காப்பாகும்
திரண்டான சிவனுடைய பதத்தைப் போற்றி
திரிபுரசுந்தரி பாதம் சிரத்தில் வைத்து
கரண்டான காலாங்கியையர் பாதம் போற்றி
கடாட்சித்த மூலகுரு பாதம் போற்றி
பரண்டான பதஞ்சலியார் தக்ஷிணாமூர்த்தி
மென்பாதறன் சிரசில் வைத்துப்பா டுறேனே. 1

பாடுறேன் ரிசிசித்தர் பாதம் போற்றி
பயிற்றுவித்த அகத்தியர்தம் பாதம் போற்றி
வாடுறேன் வாணியவள் பாதம் போற்றி
மகத்தாங் கோரக்கர் பாதம் போற்றி
தேடுறேன் புசண்ட (ர்) பதம் சிரத்தில் வைத்துச்
சிவகாமித் தாய் சொன்ன சொல்லைக் கேட்டுப்
போடுறேன் பிற்காண்ட மாயி ரத்திற்
புகட்டினேன் வாதமென்ற அங்கந்தானே. 2

அங்கந்தான் ஏதென்றால் சொல்லக் கேளு
ஆண்மையாம் உபரசங்கள் நூற்றிரெண்டு பத்து
பங்சந்தான் பாடாண மறுபத்து நாலு
பாங்கான நவலோகம் நவரத் தினங்கள்
உங்கந்தா னுப்புவகை இருபத் தைந்தோ
டுயர்ந்திட்ட மூலிகையிலீயம் செம்பு
தங்கந்தான் சவளைசெய்யு மார்க்க மெல்லாம்
சாற்றுறேன் இலகுவாகச் சாற்று றேனே. 3

### சரக்குவைப்புகளுக்குச் செயநீர்கள் :

### வெடியுப்புச் செயநீர்

சாற்றவே வெடியுப்புச் செயநீ ரொன்று
தயங்காதே நாற்காய்ச்ச லைந்தாங் காய்ச்சல்
மாற்றவே பலம்பத்து கல்வத்திட்டு
வகையாகுஞ் சீனமஃதி ரண்டரை பலந்தான்

போற்றவே கல்லுப்பு பலமு மொன்று
பொங்கமாம் பூநீறு பலந்தா னென்று
தோற்றவே சத்தியென்ற சாரமொன்று
துடியான பழச்சாற்று லரைத்தி டாயே. 4

அரைத்திட்டு நாற்சாம மான பின்னர்
ஆண்மையாஞ் சட்டியினில் வாங்கிக்கொண்டு
கரைத்திட்டடுப்பில் வை காய்ச்சும் போது
கரைந்துமே உருகையிலே சொல்லக் கேளு
பரைத்திட்டண் டமஃ தொவ்வொன் றுகப்
பாங்காகக் கொடுத்துவா பத்துத்தானும்
தரைத்திட்டுத் தம்பித்துச் சுண்ணமாகும்
சாற்றுறேனிதைப் பொடித்துப் பனியில் வையே. 5

பனியில்வை பல டலெனச் செயநீ ராகும்
பாங்காக விந்நீரில் வீரம் பூரம்
தினியில் வை செயநீரிற் பொடித்துப் போட்டுச்
செப்புக்கு ளொடுத்துவை பதன மாக
இனியில் வை விந்நீரிற் பாடா ணங்கள்
ஏற்றமாஞ் சரக்குகளைத் தோய்த்து வாட்ட
கனியில்வை சரக்கெல்லாங் கட்டிப் போகும்
கார சாரங் களெல்லாம் கட்டிப் போமே. 6

கட்டியதோர் சரக்குகளில் வேதை கோடி
கனமான குருகோடி களங்கு கோடி
எட்டியதோர் சுண்ணவகை மெழுகு கோடி
எடுத்தோடும் குளிகைசெந் தூரம் கோடி
பட்டியதோர் பழுப்பினமும் கெடுப்பும் கோடி
படிப்படியா யேறுகிற துறையோ கோடி
தெட்டியதோர் செயநீரிற் சகலந் தானும்
செயமான வெடியுப்புச் சுண்ணத் தாட்டே. 7

### லோகச் சுண்ணம்

ஆட்டான அரப்பொடிதான் பலமும் பத்து
அழுந்தவே பழச்சாற்றி லூற விட்டு
மூட்டான மூன்றும்நாள் கழுவிப் போட்டு
முனையான குதிரைப்பல் பாடா ணந்தான்
நேட்டான அரப்பொடிக்குப் பாதி சேர்த்து
நேகரைத்துப் பழச்சாற்றால் வில்லை கட்டி
பூட்டான அகல் வைத்துப் புடத்தைப் போடு
பெருங்குகையில் வைத்துமே உருக்கிப் போடே. 8

உருக்கியே மணியாக வாங்கிக் கொண்டு
உய்த்துமே கல்வத்திற் பொடியாய்ப் பண்ணி
வெருக்கியே முன்சொன்ன வெடியுப்புச் சுண்ணம்
மேன்மையாம் சமபாகம் ஒக்கக் கூட்டி
நருக்கியே ஓட்டிலிட்டு ஊதிப் போடு
நலமாகத் தவளம்போல் சுண்ண மாகும்
தெருக்கியே செப்புக்குள் எடுத்து வைத்துத்
திரிவங்கம் பலம் மூன்று நிறுத்துக் கொள்ளே. 9

## திரிவங்கச் சுண்ணம்

நிறுத்துமே சட்டிதனிற் போட்டு ருக்கி
நீக்கான குதிரைப்பல் பாடா ணந்தான்
பொறுத்துமே ஒன்றரையே பலந்தான் போடு
பொட்டுலுப்பு சுண்ணமது பலந்தான் மூன்று
கறுத்துமே கல்வத்திற் பொடியாய்ப் பண்ணிக்
கசகாம லுருகுகின்ற முகத்திற் தூவி
சிறுத்துமே அயக்கதிராற் கிண்டிக் கிண்டி
தூவிவரப் பொடிதனையே சிறுகத் தானே. 10

சிறுகவே தூவியபின் பொடியாய்ப் போகும்
சிக்கனவே யெரியிட்டால் பொருமி நீறும்
உருகவே பொடியெல்லாம் கல்வத் திட்டே
யுகந்துவெண் கருவதனு லரைத்த ரைத்தே
பெருகவே யகலிட்டுப் புடந்தான் போடு
பிலத்தரைத்துப் பத்துவிசை அண்ட நீரால்
கறுகவே கடுஞ்சுண்ணம் திரிவங்கச் சுண்ணம்
கனத்ததோர் செப்புக் குளடைத் திடாயே. 11

## தாம்பிரச் சுண்ணம்

அடைத்திட்ட செம்புதுட்டு பலமொன் றுகும்
ஆண்மையாம் வெள்ளீயம் பலந்தா னுன்காம்
துடைத்திட்டுத் துட்டுக்குச் சவ்வீ ரந்தான்
சுயமாக விராகனெடை யெருக்கம் பாலால்
தடைத்திட்டங் கரைத்துதுட் டுக்குப் பூசிச்
சாங்கமாய்க் குவிந்தசட்டி தன்னில் வைத்து
விடைத்திட்ட வெள்ளீயம் மேலே யிட்டு
விரவியே அடுப்பினில்வைத் தெரித்தி டாயே. 12

எரித்திட்டே யிடுக்கியினுல் துட்டைத் தானும்
யெடுத்துப்பா ரிரு சாம மானக் பின்பு
விரித்திட்டங் குப்பியுமே வெளுப்பாய்க் காணும்
மெதுவான பதத்தினிலே துட்டை வாங்கு

தரித்திட்டு தீத்தானு மிஞ்சி னுக்கால்
சாங்கமாய் ஈயத்தில் ரேகித்துப் போம்
கரித்திட்டு வெளுப்பான பதத்தில் வாங்கு
கல்வத்திற் போட்டண்ட வெள்ளை வாரே. 13

## பஞ்சலோக வெடியுப்புச் சுண்ணம்

வாருமே வெள்ளையென்ற பாடா ணந்தான்
மறவாதே யெட்டிலொன்று கூடக் கூட்டி
நேருமே நேகரைத்து வில்லை பண்ணி
நேர்பாகப் புடமேபோட் டெடுத்துக் கொள்வாய்
சாருமே அயச்சுண்ணம் பலந்தா னென்று
தயங்காத திரிவங்கச் சுண்ண மூன்று
தாருமே தாம்பிரத்தின் சுண்ண மொன்று
சத்தியென்ற சாரமது பலந்தா னென்றே. 14

ஒன்றான கல்லுப்புப் பலந்தா னென்று
உயர்கின்ற பூநீறு பலந்தா னென்று
தின்றான சீனமது பலமும் ஐந்து
சிறப்பான கம்பியுப்புப் பலம்மூ வைந்து
குன்றான வினவ யெல்லாம் ஒக்கக் கூட்டிக்
கூர்மையாம் பழச்சாற்றி லரைத்து மைபோல்
பன்றான வில்லைபண்ணிச் சட்டி யிட்டுப்
பக்குவமாய்த் தீயிடவே சுண்ண மாமே. 15

## சாரச் சுண்ணம்

சுண்ணத்தைப் பனியிவைக்கச் செய நீராகும்
செயநீரிற் சவ்வீரம் பூரந் தானும்
வண்ணத்தைப் பொடி பண்ணிச் செயநீரிற் போட்டு
மகத்தான பரணிதனில் லடைத்து வைப்பாய்
தண்ணத்தைச் சாரமொரு பலந்தா னுலு
தளுக்கான வெங்காரம் பலந்தா னுலு
கண்ணத்தைக் காரத்தை யுருக்கிக் கொண்டு
கனமாகச் சாரத்திற் புரட்டி டாயே. 16

புரட்டியே காரமெல்லா மான பின்பு
பொட்டுலுப்புப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
பரட்டியே கல்லுப்புப் பதினைந் துபலம்
பாங்காகப் பொடிபண்ணி வைத்துக் கொண்டு
திரட்டியே சட்டிதனில் நாயுருவிச் சாம்பல்
திறமாக வடிதன்னில் நாழி போட்டு
அரட்டியே அதின்மேற்பா தியுப்பை வைத்தே
அதன்மேலே சாரத்தை அமுத்தி வையே. 17

அமுத்தியே மேலுமந்த உப்பை வைபின்
அதன்மேலே நாயுருவிச் சாம்பல் போட்டு
நமுத்தியே நாற்சாமம் கமலம் போல
நன்றாக வெரியிட்டே ஆறப் போட்டுத்
தமுத்தியே சாரத்தை யெடுத்துக் கொண்டு
சாரத்தி னெடைச் சமனாய்ப் பஞ்சவெடியுப்புத்
தொமுத்தியே சுண்ணத்தைக் கூடப் போட்டுத்
துவளரைத்து நெட்டடங்கு மட்டு மாட்டே. 18

ஆட்டியே அகலிலிட்டுப் புடத்தைப் போட்டங்
ககலமாம் பீங்கானிற் பனியில் வைப்பாய்
வீட்டியே விடுவிச்சுச் செயநீ ராகும்
இடுக்கான செயநீரில் வீரம் பூரம்
பூட்டியே பொடிபண்ணிப் போட்டு வைத்துப்
பேரான சரக்குகளிற் றேய்த்து வாட்டக்
கூட்டியே அறுபத்து நாலு தாதுங்
குமிழிவிட்டுப் பொன்போல வுருகும் பாரே. 19

வெங்காரச் செயநீர்

உருகின்ற வெங்காரப் பலகை தன்னை
உயர்ந்ததோரா வெருத்தின் சாணி தன்னில்
தெருகின்ற தேய்ச்சுமே கழுவிப் போட்டுச்
செயநீரின் னேய்வைத்து ரவியிற் போடு
பருகின்ற பட்ச மொன்று கழித்த பின்பு
பஞ்சலோகச் சுண்ணமது சமனாய்ச் சேர்த்து
கருகின்ற மைபோல வரைத்துத் தானுங்
கனமான செப்பிலிட்டுப் புடத்தைப் போடே. 20

புடம்போடச் சுண்ணும்பார்ஞ் சமனாய்ச் சாரம்
போட்டரைத் தங் கவிபுடமாய்ப் போட்டெ டுத்துப்
புடம்போடப் பீங்கானில் வாரி யிட்டு
பனிவைக்க செயநீராம் பதனம் பண்ணு
விடம்போட வெங்காரச் செயநீ ராகும்
மிடுக்கான வுபரசம் நூற் றிரண்டுஞ் சத்தாந்
தடம்போடத் தாதுவெல்லாஞ் சத்து மாகுஞ்
காரசாரங் களெல்லாமும் சத்து மாமே. 21

பூரச் செயநீர்

சத்துமாங் காரமென்ற சுண்ணத் தோடே
சமபாகம் இந்துப்பு நிறுத்துக் கொண்டு
பத்துமாம் பச்சைக் கற் பூரந் தன்னைப்
பாங்காக இரண்டெடைக்குஞ் சமனாய்ச் சேர்த்து

கொடுத்துமாம் வெடியுப்பு சார நீராற்
குமட்டியரை நாற்சாமம் குவிந்த பின்னர்
எத்துமா மகலிலிட்டுப் புடத்தைப் போட
ஏற்றமாம் சுண்ணும்பாம் பூரம் தானே. 22

பூரத்தி னெடைக்கெடைக்குச் சாரம் சேர்த்துப்
பொங்கிவரு மரைத்துமே புடத்தைப் போடு
மாரத்தை மல்லிகைப்பூப் போலாஞ் சுண்ணம்
வழித்தெடுத்துப் பீங்கானிற் பனியில் வைக்க
ஆரத்தை ஆறுபோலச் செயநீ ராகும்
ஆண்மையாம் செயநீரில் வீரம் போட்டுத்
தாரத்தைச் சிமிழுக்குள் அடைத்து வைத்துத்
தாதுவெல்லாம் தோய்க்கவே கட்டிப் போகும். 23

போமென்ற செயநீரி லுபரசங்கள் சத்தாம்
போக்கான லவணவகை இருபத் தைந்தும்
காமென்ற கட்டியே மணிபோலாடும்
காரசாரங் களெல்லாம் சுண்ணும் பாகும்
ஏமென்ற விந்நீரிற் சுண்ண மெல்லா
மேற்றமாய் வெகுதூரம் எட்டி யோடும்
வேமென்ற விந்நீரில் இந்திர கோபம்
விட்டக்கால் நூறுந் தான் ரத்த மாமே. 24

ரத்தமாஞ் செயநீரிற் காரீயஞ் சாய்க்க
நேர்பான செம்பாகுந் துரா வோடும்
வத்தமாந் தங்கத்தை உருக்கிச் சாய்க்க
மாசற்ற செம்பாகும் தங்கச் செம்பாம்
உத்தமா முருக்கினதோ ரிரும்பைத் தானும்
ஒன்பதுதான் தரஞ்சாய்க்க உருகிச் செம்பாம்
கத்தமாங் காந்தத்தை யுருக்கிச் சாய்க்க
கனகம்போற் செம்பாகும் கருதிக் காணே. 25

## சவுக்காரச் செயநீர்

காணவே சவுக்காரச் செயநீ ரொன்று
கவடற்றுச் சொல்லுகிறேன் நன்முய்க் கேளு
பூணவே பூநீறு பதக்கு வாரிப்
பெரும்பாண்டந் தனிற்போட்டுத் தண்ணீர் விட்டு
நாணவே நாலாநாள் தெளி விறுத்து
நலமாகக் காய்ச்சியே உப்பு வாங்கி
வேணவே சுத்தவெடி யுப்பு நீரால்
விளங்கவரைத் தைந்துபுடம் போட்டி டாயே. 26

அஞ்சுபுடம் போட்டெடுத்து வேறே வைத்து
ஆண்மையாங் கல்லுப்பு படிதா னென்று
விஞ்சுமே கல்வத்தில் வெடியுப்பு நீரால்
விளங்கவரைத் தைந்துபுடம் போட் டெடுத்துத்
தெஞ்சுமே சீனமது பலந்தா னென்று
செப்பமாம் வெடியுப்பு நீரா லாட்டி
பிஞ்சவே பெரும்புடமா யைந்தும் போடு
பெரிதான ஓட்டிலிட்டுப் பெருக்கத் தானே. 27

பெருக்கவே வெள்ளையென்ற பாஷாணந் தான்
பொரித்தெடுத்த வண்டோடும் சமனுய் கூட்டி
தருக்கவே வெடியுப்பு நீரா லாட்டித்
தாக்கியே வில்லைபண்ணி அகலி விட்டு
குருக்கவே குக்குடத்தின் புடமாய்ப் போட்டு
குமட்டியே அரைத்தரைத் தைந்து புடம்போ
டருக்கவே அப்புறமாய் வைத்துக் கொண்டு
அரிதான தாளகந்தான் பலமும் ஐந்தே. 28

பலமைந்து சங்குச் சுண்ணும்பு தானும்
பகட்டியரை நாற்சாமம் வில்லை பண்ணி
மலமைந்து அகலிலிட்டுப் புடந்தானைந்து
மறவாதே மணல்மறைவிற் போட்டு வைப்பாய்
தலமைந்து சாதிலிங்கம் பலந்தா னைந்து
தவளமாங் கருடபட்சிக் கற்சுண் ணும்பு
வெலமைந்து வெடியுப்பு நீரா லாட்டி
மிடுக்கியரை நாற்சாமம் வில்லை கட்டே. 29

வில்லைகட்டி மணல்மறைவில் ஐந்துபுடம் போடு
மிடுக்கான சவ்வீரம் பலந்தா னைந்து
சத்தியென்ற தல்லையாஞ் சார மைந்து
தாக்கியரை நாற்சாமம் வெடியுப்பு நீரால்
தெல்லைகட்டி மணல்மறைவி லைந்து புடம் போடு
செப்புக்குள் ளெடுத்து வைத்துச் சொல்ல
தொல்லையாம் கெந்தகந்தான் பலமு மைந்து
சிப்பியாமுமையென்ற சுண்ணந் தானே. 30

தானென்ற சமமாக நிறுத்துக் கொண்டு
தனித்ததோர் வெடியுப்பு நீரா லாட்டித்
தேனென்ற செப்பில்வைத் தைந்துபுடம் போடு
சிவந்துமே சுண்ணும்பாம் சொல்லக் கேளு
கோனென்ற இரும்பினுடைச் சுண்ண மொன்று
கொடிதான தாம்பிரத்தின் சுண்ண மொன்று
வேனென்ற வெள்ளீயச் சுண்ண மொன்று
மிடுக்கான காரீயச் சுண்ண மொன்றே. 31

ஒன்றான நாகத்தின் சுண்ண மொன்று
உயர்வெள்ளைப் பாஷாணச் சுண்ண மொன்று
தன்றான தாளகத்தின் சுண்ண மொன்று
சாதிலிங்கச் சுண்ணமொன்று வீரச் சுண்ணம்
வின்றான கெந்தியுடச் சுண்ண மொன்று
மேன்மையாம் கல்லுப்புச் சுண்ணமைந்து
தின்றான சீனத்தின் சுண்ணம் பத்து
சிறப்பான பூநீற்றுச் சுண்ணம் கேளே. 32

கேளென்ற விருபதுதான் பலமு மாகுங்
கெட்டியாய்ச் சுண்ணமெல்லாம் நாற்பத் தைந்து
பேளென்ற பெரிதான கல்வத் திட்டுப்
பெருமையாம் வெடியுப்பு நீரா லாட்டி
வேளென்ற வில்லைகட்டி அகலி லிட்டு
மிடுக்காக வைந்துபுட மரைத்துப் போடு
கோளென்ற கொக்கிறகு போலாஞ் சுண்ணம்
குமட்டியே கடுங்காரச் செயநீர் கேளே 33

## கடுங்காரச் செயநீர்

காரத்தின் செயநீரைச் சொல்லக் கேளு
கடிதான கற்சுண்ணஞ் சேரி ரண்டு
நாரத்தின் நற்றண் ணீர் சேர்தா னெட்டு
நலக்கரைத்து நாலாநாள் தெளிவை வாங்கி
ஆரத்தி னண்டமென்ற சுண்ணந் தானும்
அடுக்காக விரண்டுபல முன்தெளிவிற் போட்டுப்
பாரத்திலண்டமது நூற்றுப் பத்துப்
பாங்காக வெண்கருவை யொன்றில் வாரே. 34

வார்த்துமே முன்தெளிவிற் கூடக் கூட்டி
மத்தித்தங் கொன்றாக வைத்துக் கொண்டு
நார்த்துமே நண்டுநத்தை நாரகமாம் வண்டு
நளின மாஞ் சங்குசிப்பி யைந்துஞ் சுட்டுத்
தூர்த்துமே நீற்றியே யைந்துமிரு பலந்தான்
துப்புரவாய் முன்னீரிற் கூடப் போட்டு
வேர்த்துமே வெடியுப்புச் சுண்ணத் தோடு
மிடுக்கான சீனமென்ற சுண்ணந் தாளே. 35

தானென்ற கல்லுப்புச் சுண்ணத் தோடு
சாங்கமாம் துரிசியென்ற சுண்ண மாகும்
கோனென்ற சத்தியென்ற சாரச் சுண்ணம்
குணமாக வைந்தையுந்தா னிரண்டு போடு

வேனென்ற வெள்வங்கங் கருவங்கத் தோடு
மிடுக்கான நாகத்தின் சுண்ணத் தோடு
கானென்ற தாம்பிரமும் லோகச் சுண்ணம்
கணக்காக இரண்டுபலங் கூடப் போடே. 36

கூடவே சூதமோ டுரமும் நாபி
குருவண்டு நூற்றிரண்டு வீரம் பூரம்
பூடவே புழுகொடு குக்குடவெண் மலமும்
புரூவெச்சஞ் சாரமொடு சூட னுகும்
வாடவே வகைக்கி ரண்டு வராகன் தூக்கி
வகையாக முன்னீரி லாட்டிக் கொண்டு
மூடவே முன்னீரிற் கலக்கிப் பின்பு
மூர்க்கமா யெருக்கம்பால் படிதான் வாரே. 37

சவுக்காரக் குரு

படிவார்த்து மத்திப்பாய்க் குச்சி யாலே
பாங்காக வடிக்கடிக்கு மூன்று நாள்தான்
நடிநாலா நாளிறுத்துத் தெளிவை யெல்லாம்
நாட்டமாம் பரணிதனிலடைத்துக் கொண்டு
துடிமுன்னஞ் சவுக்காரந் தன்னைத் தானும்
சுளுகாக எடுத்துமே கல்வத்திட்டு
நெடிகாணு மரைத்தரைத்து மூன்றுபுடம் போடு
நிசமான சவுக்காரக் குருவு மாச்சே. 38

சவுக்காரக் குருதனையே சித்த ரெல்லாம்
சப்தித்து சொல்லாதே போனுரையா
மவுக்காரஞ் சிவன்தாய்க்கன் றருளிச் செய்தார்
மாயியவள் மைந்தன் மேல் மகிழ்ந்து கூர்ந்து
தவுக்கமாம் போகரென்ற சிறியே னுக்குத்
தாயளித்த தாலதனை சாதித் தேனுன்
உவுக்கமாஞ் சித்தருக்கிங் குதவி யாக
வுண்மையா யொளிப்பில்லா துரைத்திட் டேனே. 39

உரைத்திட்டேன் சவுக்கார மருமந் தன்னை
உலகத்தோ ரெல்லோரும் நமைப்போ லாகார்
வரைத்திட்டே னெழுகாண்டம் பிறகாண் டத்துள்
வண்மையா மைந்தலையாம் நாகந் தானும்
பரைத்திட்டுப் பஞ்சதலை தனையால் தேடி
பட்சிக்கி லொருவழியிற் பாங்காம் போலத்
தரைத்திட்டுச் சவுக்காரத்துட் புகுந்தால்
சகலசித்துஞ் சித்திக்குந் தாய்சொன் னுளே. 40

சொன்னுளே சிறுபிள்ளை என்னைப் பெற்ருள்
துடியான சவுக்கார மிதுதான் போதம்
பன்னுளே பாட்டர்திரு மூல நாதர்
பதமென்றன் சிரம்வைத்துப் பாங்கைச் சொன்னேன்
கன்னுளே யெனைப்பெற்ற காலாங்கி நாதர்
கடாட்சித்துச் சவுக்காரக் கருத்தைச் சொன்ஞர்
முன்னுளே சிவயோக முனியென் பாட்டர்
மேருவுக்குப் போகையிலே சொன்ஞர் காணே. •41

காணவே தட்சிணுமூர்த்தி நூலுங்
கவடற்றுப் பதஞ்சலியார் சொன்ன நூலும்
பூணவே புசண்ட ரிசி சொன்ன நூலும்
போக்கோடே ராம தேவ ராயர் நூலும்
ஊணவே ரோமமுனி சொன்ன நூலும்
மூர்த்தியாஞ் சங்கரமா முனிதன் னூலும்
நாணவே நந்தீசர் சொன்ன நூலும்
நடுவாக வென்னூலும் நாட்டிட் டேனே. 42

நாட்டிஞர் வெகுசித்தர் நூலுக்குள்ளே
நான்தானு மறியாமற் சொன்ன நூலில்
பாட்டிஞர் பயன்புன் சொற் பிழைக ளெல்லாம்
பாதமென்றன் சிரம்வைத்துப் பவுரி கண்டு
தீட்டிஞர் பிழைதிருத்திச் சிறியேன் சொன்ன
செந்தமிழைத் தேசிகர்தான் தெளிவாய்ப் பண்ணி
ஒட்டிஞ ரெட்டெட்டுச் சித்தி கண்டு
உண்மையா யுரைசெய்தே னடிமை தானே. 43

அடிமைதா னெழுகாண்டம் அருளோடு பொருளும்
ஆராய்ந்தங்காயிசொன்ன அதிகாரப் படிக்குக்
கடுமைதான் கவடுகுற்றந் தன்னைத் தாம் நீக்கி
கருணையாந்த யாநிதியாம் பாட்டரான நாதர்
கொடுமைதான் குரவர் தம்மொழியினருட் படிக்கே
கூறினேன் ரிசியோகி பிழைக்க வென்றே எண்ணிக்
கடுமையாய்க் கனபாடு பட்டுச் சொல்லத் தாம்
கடாட்சித்தார் காலாங்கி யை யர்தானே காண். 44

காலாங்கியையர் சொன்ன மொழியி ஞலே
கடைத்தேறி யெழுகாண்டங் கருவாய்ச் சொன்னேன்
காலாங்கியையர் சொன்ன வுபதே சத்தாற்
களிகூர்ந்து சவுக்காரங் கருதிச் சொன்னேன்
காலாங்கியையர் சொல் கேட்டுக் கேட்டுக்
கனமான சரக்குமுறை கண்டு சொன்னேன்
காலாங்கியையர் பதஞ் சிரத்தில் வைத்துக்
காரசாரங் களெல்லாமும் வைத்திட் டேனே. 45

வைத்திட்ட தேதென்ருற் சொல்லக் கேளு
வாசியாஞ்ச வுக்காரக் குருவி ஞலே
உய்த்திட்ட வூசரத்தின் பூவி ஞலே
உறுதியாங் கல்லுப்புக் கூர்மை யாலே
வைத்திட்ட வெடியுப்பு நீரி ஞலே
மேன்மையாங் கடுங்காரச் செய்நீ ராலே
தெய்க்கடிதாம் திராவகத் தாலே யானே
திறமையாய்ச் சரக்கெல்லாம் செய்திட் டேனே. 46

## சவுக்காரச் செய்நீர்

செய்திட்ட சவுக்காரச் செய்நீர் கேளு
திணியான சாரமது பலமும் பத்து
வைத்திட்ட வபிஞேடு மிளகு பூரம்
வகையொன்றுக் கைந்துகாசெ டையே தூக்கி
மெய்திட்ட மேனிநீர் விட்டாங் காட்டி
மிகையான சாரத்தின் மேலே பூசி
அய்திட்ட அரக்கதுதான் பலமும் ஐந்து
அதன்மேலே யிளக்கியுமே கவசம் போடே. 47

கவசந்தான் போட்டபின்பு கறியுப் போடு
கம்பியுப்பு மீரைந்து பலமும் தூக்கி
புவசந்தான் பொடிபண்ணிச் சட்டி பாதி
பொருந்தவே பாதிவைத்து நடுவே தானும்
அவசந்தா னரக்கிட்ட சாரம் வைத்தங்
கதின்மேலே பாதிமுன்னின் பொடிதான் வைத்துக்
குவசந்தான் குருத்துமணல் மேலே விட்டுக்
கூசாதே யடுப்பில்வைத் துத்தீப் போடே. 48

தீப்போடே கமலம்போற் சாமம் நாலு
சீதளமா யாறவிட்டுக் கவசம் வாங்கி
ஆய்ப்போடே எடுத்துப்பார் கட்டி தானும்
அழுத்தமாய்த் தந்தம்போல் இறுகிக் காணும்
வாய்ப்போடே இவ்வெடைக்குச் சவுக்காரச் சுண்ணம்
வரிசையாய்ச் சமஞகச் சேர்த்துக் கொண்டு
காய்ப்போடு கல்வத்திற் பொடியாய்ப் பண்ணிக்
கூடுங்காரச் செயநீரா லரைத்தி டாயே. 49

அரைத்துமே நாற்சாமம் வில்லைக் கட்டி
அகலிலிட்டுப் புடம் போட்டுப் பனியில் வைப்பாய்
நிரைத்துமே சாரமென்ற செய்நீ ராகும்
நேரான விந்நீரில் வீரம் பூரம்

தரைத்துமே சாதிலிங்கம் வகைக்கு வராகன்
தகர்த்துமே பொடிபண்ணி நீரிற் போட்டு
பரைத்துமே பரணிதன்னி லடைத்துக் கொண்டு
பாங்கான நீரதனின் பருவங் கேளே. 50

பருவமாம் நீர்தன்னில் நாகந் தன்னைப்
பதினெருக்கா லிலுப்பநெய் யிலுருக்கிச் சாய்த்துத்
துருவமாம் நீரிற்சாய் பதினெ ருக்கால்
சுப்பிரமாய் வெள்ளியைப்போல் கண்விட் டாடும்
அருவமா மிருவங்கம் கட்டிப் போகும்
அறுபத்து நாலான பாடா ணஞ்சாம்
உருவமா யுபரசம்நூற் றிரண்டுஞ் சத்தாம்
ஒரு நொடிக்குள் சுற்றுகின்ற குளிகை யாமே. 51

## குறிப்புரை

**பாடல் எண் 1 முதல் 51 வரை**

பாடல் எண் : 1 :- பாடுறேன் - பாடுகிறேன் (பரவை வழக்கு)

பாடல் எண் : 3 :- சவளை செய்யும் மார்க்கம் - வேதை செய்யும் வழிகள்

பாடல் எண் : 4 :- சீனம் - படிகாரம் (சீனக்காரம்)
சத்தியென்றசாரம் - சத்திச்சாரம் (சர்ஜக்ஷாரம் என்று வழங்கும்)
பழச்சாறு - எலுமிச்சைப் பழச்சாறு
துடி - விறுவிறுப்பு, சுறுசுறுப்பு

பாடல் எண் : 5 :- அண்டம் - கோழிமுட்டை; தம்பித்து - கட்டியாகி
சாமம் - மூன்று மணி ($7\frac{1}{2}$ நாழிகை) கொண்ட நேரம்

பாடல் எண் : 6 :- கனியில் வைத்த - தீயில் வைத்து பதப்படுத்தி வைத்த

பாடல் எண் : 9 :- தவளம் - வெண்மை; திரிவங்கம் - வெள்வங்கம், கருவங்கம், நாகம்.

பாடல் எண் : 10 :- பொட்டுலுப்பு - வெடியுப்பு, அயக் கதிர் - இரும்புக் கம்பி

பாடல் மண் : 12 :- செம்புதுட்டு - செப்புக்காசு; விராகனெடை = 32 குன்றி எடை (சுமார் 4·2 கிராம்)

பாடல் எண் : 1. :- ரேகித்துப்போகும் - (விழுங்கப்பட்டுக்) கரைந்து போகும் (மறைந்து விடும்)

பாடல் எண் : 15 :- கப்பியுப்பு - தசதீட்சை (பத்தாங்காய்ச்சல்) ஆனவெடியுப்பு

பாடல் எண் : 17 :- நாழி - படி (முகத்தலளவை) 64 பலம் கொண்டது (இதில் முதல், இடை, கடைசியென்ற பேதமுண்டு முறையே 64, 32, 16 பலம் கொண்டது)

பாடல் எண் : 18 :- பஞ்சவெடியுப்பு - ஐந்தாங்காய்ச்சல் வெடியுப்பு

பாடல் எண் : 20 :- ஆவெருத்தின் சாணி - காளையின் சாணி (ஆ-பசு) (எருமைக்கடாச் சாணியல்ல)
பட்சம் - பதினைந்து தினங்கொண்ட கால அளவை
செப்பு - மண் சொப்பு

பாடல் எண் : 24 :- (இ) லவணவகை - உப்பு வகை (கள்) இந்திரகோபம் - தம்பலப் பூச்சி என்னும் ஓர்வகைச் செந்நிறப்பூச்சி. மழைக்காலங்களில் காணப்படும். (இ) ரத்தம் - சிவப்பு (நிறம்)

பாடல் எண் : 25 :- சாய்க்க - (உருக்கி) ஊற்ற

பாடல் எண் : 26 :- பதக்கு - இரண்டு மரக்கால் (பதினாறு படி கொண்டது) முகத்தலளவை

பாடல் எண் : 23 :- குக்குடத்தின் புடம் - கோழிப்புடம் (10 வறட்டியில் போடுவது)

பாடல் எண் : 29 :- கருடப்பட்சி - கருடக்கல் (கருடப்பச்சை)

பாடல் எண் : 30 :- ஊமை - கும்பிடு கிளிஞ்சில்

பாடல் எண் : 35 :- நாகர (மாம்) வண்டு - ஒருவகை வண்டு.

பாடல் எண் : 36 :- துரிசி - மயில் துத்தம்

பாடல் எண் : 37 :- உரம் - தேவி, உரம் - கெந்தகம்
குருவண்டு - ஓர்வகை வண்டு
புனுகு; குக்குடவெண் மலம் - கோழியின் வெண்மையான எச்சம்

பாடல் எண் : 38 :- மத்திப்பாய் - (அரைத்து) கலக்குவாய்

பாடல் எண் : 40 :- பட்சிக்கில் - உண்டால்

பாடல் எண் : 44 :- குரவர் - குரு

பாடல் எண் : 45 :- வைத்திட்டேன் - (செயற்கைச் சரக்குகளை) செய்திட்டேன்

பாடல் எண் : 46 :- ஊசரத்தின் பூ - உழமண்பூப்பு - பூநீறு.
கூர்மை - உவர்ப்பு - வீரியம்; கடுங்காரம் = மிக்கக் காரம்

பாடல் எண் : 47 :- மேனிநீர் - குப்பை மேனிச்சாறு; காசெடை - $3\frac{3}{4}$ குன்றிஎடை
கவசம் - மேல் போர்வை

பாடல் எண் : 48 :- குறுத்துமணல் - மெல்லிய மணல்

பாடல் எண் : 49 :- தந்தம் - யானைக் கொம்பு

பாடல் எண் : 51 :- துருவமாம்நீர் - சவுக்காரச் செய்நீர்; சுப்பிரம் - அழகு, மிக்க ஒளி, வெண்மை, தூய்மை.

## லோகத்திரவகம்

ஆமமென்ற லோகத்தைக் கரைக்கா நின்ற
ஆண்மையாந்தீ நீரைத்தா னென்றைக் கேளு
வேமென்ற வெடியுப்புப் பலந்தான் நூறு
வெண்மையாம் படிக்காரம் நூற்றுப் பத்து
தாமென்ற சவுட்டுப்போ வெழுபத் தைந்து
சத்தியென்ற சாரமது மூவைம் பலந்தான்
தோமென்றரி துசிஃபீ ரைந்து பலந்தான்
தூக்கியேநீ பொடிபண்ணி வைத்துக் கொள்ளே. 52

கொள்ளவே அடிகனத்தத் தோண்டியிலே போட்டுக்
குமட்டாமற் சக்கரமாம் வாலே மூடி
அள்ளவே சக்கரமா மடுப்பில் வைத்தங்
கசகாமற் றீமூட்டிப் பீங்கான் கிண்ணி
வள்ளவே வாய்வைக்க வேர்வை யாகி
வந்துவிழும் புகையோடு சலமுந் தானும்
துள்ளவே சுவேதநீளந் தன்னை நீக்கித்
துடியான நீர்தன்னை வாங்கி டாயே. 53

வாங்கியே வயிரமாய பரணிக் குள்ளே
வார்த்திட்டு வைத்திட்டே வகையைக் கேளு
தாங்கியே சரக்குவைப்பு முப்பா னிரண்டு
சாரகாரத் தின்வைப்புப் பதினைந் தாகும்
தேங்கியே தீநீரில் அரைத்துக் கொண்டு
செய்திட்டாற் சரக்கெல்லாம் திடமா யொக்கும்
ஓங்கியே நீரில்லாச் சரக்கெல் லாந்தான்
ஒன்றுக்கு மாகா தாங் கொக்கப் பாழே. 54

## வைப்புச் சரக்குகளின் தொகை

ஒக்கவே வைக்கின்ற சரக்குக் கேளு
உசத்தியாம் பாடாண முப்பத் திரண்டு
தக்கவே காரசாரத் தின்வைப் புந்தான்
சமுசயங்க ளில்லாமல் மூவைந் தாகும்
மிக்கவே குடோரியது மூன்று மாகும்
மிடுக்கான சவ்வீர மேழு மாகும்
நிக்கவே சூதவைப்போ ஏழுந் தானும்
நிலவரமாம் பச்சைவைப்பு மூன்று தானே. 55

## காரசார வைப்புப் பதினைந்து

### ஒன்ருவது — இந்துப்புவைப்பு

தாஞன விந்துப்பு வைப்புக் கேளு
சமுத்திரத்தின் நீரதுவும் படிதான் நூறு
பூஞன புதுச்சட்டி தன்னில் வார்த்துப்
பிசகாமற் கைமுறையாய்ச் சேர்த்துத் தானும்
ஊஞன காய்ச்சிடவே யுப்பு மாகும்
உடைந்ததென்றால் மறுசட்டி வைத்துக் காய்ச்சு
கோஞன உப்பையெல்லா மொன்ருய் வாங்கி
குறிப்பாக அடிகனத்த சட்டி போடே. 56

சட்டியிலே நூறுபலம் நிறுத்துப் போட்டுத்
தாக்கான அடுப்புசக்க ரம்போற் கட்டிக்
கட்டியிலே கருப்பாலை யடுப்புப் போலே
கட்டியுமே அதன் மேலே சட்டி வைத்துத்
திட்டியிலே காடாங்கி யாகப் போட்டு
தீயிடவே உப்படங்கி உருகும் போது
வெட்டியிலே வெடியுப்புப் பலந்தா னைந்து
மிக்கான சீனமது பலமும் ஐந்தே. 57

பலந்தானும் பூநீறு மூன்றுங் கூட்டிப்
பக்குவமா யுருகையிலே பொடித்துத் தூவு
குலந்தானு முருகி யொன்ருய்க் கலந்த பின்பு
குளிரவிட்டெ டுத்தக்காற் கட்டி யாகும்
அலந்தானு முடைத்ததையே வாங்கிப் பார்த்தா
லடுக்காக வைரம்போல் வெளுத்தே இருக்கும்
புலந்தானு மிந்துப்பென் றிதற்குப் பேராம்
பூரமென்ற பச்சையஃதி தற்குட் சாமே. 58

சாமென்ற விந்துப்புப் பலமு மொன்று
சவுக்காரச் சுண்ணமது பலமு மொன்று
காமென்ற கல்வத்தி லிவற்றைப் போட்டுக்
கடுங்காரச் செய்நீரா லரைத்து மைபோல்
வேமென்ற வில்லைதட்டி யுலரப் போட்டு
மிக்கான செப்பிலிட்டுப் புடத்தைப் போடு
தேமென்ற சுண்ணும்பாஞ் செயசா ரத்தான்
சேர்த்திட்டுச் சமஞக வரைத்தி டாயே. 59

அரைத்துமே அகலிலிட்டுப் புடத்தைப் போட்டங்
காறவிட் டெடுத்துடனே பனியில் வைப்பாய்
பரைத்துமே பலபலெனச் செய்நீ ராகும்
பாங்கான பூரமொடு வீரம், லிங்கம்
கரைத்துமே யிந்நீரிற் பீங்கான் வைத்துக்
கணக்காகப் பலம் நிறுத்துப் பீங்கான் வார்த்து
நிரைத்துமே பச்சையென்ற கர்ப்பூ ரத்தை
நேகரைத்துப் பலமொன்று நீரிற் போடே. 60

ஒன்றுதான் போட்டுமே மூன்று நாள்தான்
உறுதியாகக் காற்றில்லா விடத்தில் வைத்து
நன்றுதா னதன்பிறகி ரவியில் வைப்பாய்
நலமாக மூன்றுநாளில் வற்றி யுப்பாம்
கன்றுதா னுப்பெடுத்துக் கல்வத் தாட்டிக்
கனமான சிப்பிக்குள் வைத்து மூடி
மண்ணுந்தான் செய்துமேதான் மணற்குள் வைத்து
மார்க்கமதாய்ப் புடம்மூன்றும் போட்டி டாயே. 61

புடம்மூன்றும் போட்டபின்பு சமனுச் சாரம்
பூட்டியுமே கல்வத்தி லாட்டிக் கொண்டே
அடம்போன்ற அகலினிலே வாரி வைத்தங்
கசகாமல் மண்செய்து புடத்தைப் போடத்
திடம்போன்ற அகல்வைத்த மருந்தை வாங்கி
சிறுபீங்கான் தனில்வைத்துப் பனியில் வைக்கக்
குடம்போன்ற லட்சுமிதான் வாசல் வந்து
குடியிருப்பாள் குறையொன்றும் மில்லை தானே. 62

இல்லையென்ற பூரத்தி னுட்டைச் சொல்ல
எழுகடல்மைக் காப்புக்கே இடம்பற் றுது
தல்லையென்ற தாளகந்தான் சலவை யாகும்
தாயான கெந்தியுட மஞ்சள் போகும்
தில்லையென்ற கண்டரைத்தான் தோய்த்துப் போடச்
சிமிட்டுமுன்னே கொக்கிறகுப் போலே யாகும்
கொல்லையென்ற குபேரனுடைப் பொக்கி சந்தான்
குருவான துரிசிக்குக் கூறெ ணுதே. 63

கூறெண்ணுத் துரிசினெடைச் சூதஞ் சேர்த்துக்
கொப்பளித்த வாய்நீரி லரைத்து மைபோல்
வீறெண்ணு வெள்வங்கந் தகடாய்த் தட்டி
மேன்மையாகுந் தகட்டெடைமுன் மருந்து பூசி

ஆறென்னு அகலிவிட்டுப் புடத்தைப் போட
　　ஆறியபின் தங்கத்தில் சரியாய்த் தாக்கு
காறென்னுக் காரமிட்டே உருகு மிரும்பு
　　கனகத்தி னெடை போட்டங் குருக்கிப் போடே. 64

உருக்கவே களங்காஞ்சுத் தித்த செம்பில்
　　உண்ணவே யிருபதுக்கு மொன்று போடு
துருக்கவே செம்பதுவு முடையுந் தூளாய்
　　துய்யனிற் பத்துக்கே இரண்டு போடு
கருக்கவே கருப்பாகு மோட்டி லூது
　　கரிவைத் துக் காரமிட்டு ருக்கிப் பாரு
மருக்கவே மாற்றெட்டுக் காவிக் குப்பு
　　மாற்றேறிக் கனகமய மாகுந் தானே. 65

கனகமாந் தாளகத்திற் குளிகை கோடி
　　கண்டருடைச் சுண்ணத்தில் விந்தை கோடி
பனகமாங் கெந்தகத்திற் றயிலங் கோடி
　　பச்சையென்ற பூரத்திற் குருவோ கோடி
அனகமா மித்தனையு முப்பி னாலே
　　ஆண்மையெலாஞ் சவுக்காரச் சுண்ணத் தாலே
வனகமாம் வழலைவங்க மறியா விட்டால்
　　வாதமென்ற சொல்லெல்லாம் வழுவாய்ப் போச்சே. 66

போச்சென்றே யெண்ணுதே புகலக் கேளு
　　பேர்பெரிய பாட்டர்நம் மூல நாதர்
ஆச்சென்று சவுக்காரம் அறியப் பண்ணி
　　ஆனந்த போதத்தில் வங்கஞ் சொன்னர்.
நீச்சென்ற நிலைகாட்டி யறியப் பண்ணி
　　நேராகத் தொழிலெல்லாம் நினைவா யுன்னிக்
காச்சென்ற பருத்தியது புடவை யான
　　காரணம்போல் வாதமெலாங் கைக்குள் ளாச்சே. 67

ஞானங் கூறல்

கைக்குள்ளாய்ச் சிக்குமட்டுங் கருவாய்ப் பாரு
　　காலூன்றிச் சிவயோகக் கருத்தில் நில்லு
பைக்குள்ளாய் வைத்தபணம் பார்த்தாற் போலப்
　　பகலிரவும் வாசியைநீ பரிந்து மாட்டு

மைக்குவிழி மடமாதர் மயக்கம் நீக்கு
மருந்தென்ற கற்பமெல்லாம் வளமா யுண்ணு
தைக்குள்ளாய்ச் சங்கற்ப விகற்பம் நீக்குச்
சாதியென்ற வரம்பழித்துச் சமாதி புக்கே. 68

புக்கினுற் சித்தனென்ற நாம மாச்சு
புக்காட்டால் வாதியென்ற நாம மாச்சு
சிக்கினுற் குளிகைவகை யோகி யாச்சு
சிக்காட்டாற் செகசண்டி நாம மாச்சு
தக்கினுற் சடந்தானும் சித்தி யாச்சு
தக்காட்டாற் சாவதுவுந் தலைமா டாச்சு
மக்கினுல் மவுனமது விவேகி யாச்சு
மருந்தான கற்பமுண்டால் மயக்கம் போச்சே. 69

போச்சென்ற மனம்புத்தி யாங்காரஞ் சித்தம்
பொறி புலன்கள் போனவழி போகொட் டாமல்
நாச்சென்ற மனஞ்செம்மை யாகப்பண் ணித்தான்
நாதாந்தப் பெருவழியே நாடிச் சென்முல்
மாச்சென்ற நடனவொலி மருவிநிற்கில் நீயோ
மனுடநர சென்மமல்ல சித்தன்சித் தன்முன்
மூச்சென்ற மூச்சுவிட்ட டக்குமுன்னே நீயும்
முதிர்ந்தறிவைத் தள்ளிவிட்டால் மோசம்தான் பாரே. 70

பாரென்முற் சும்மாத்தான் வருமோ சொல்லு
பண்ணியதோர் பலாபலத்தாற் பலிக்கும் பாரு
நேரென்முற் புத்தியினு னேரப் போமோ
நேருவது குருசொல்ல நிலைத்துப் போகும்
தூரென்முல் தத்துவமாங் குப்பை யெல்லாம்
சோதித்துத் தள்ளிவிட்டுச் சூட்சம் பாரு
காருகண்டாய் சதநித்த மூலத் துள்ளே
கடாட்சித்தங் கருள்புரிவார் கணேசர் தானே. 71

## 2-வது பொட்டுலுப்பு வைப்பு.

தானென்ற பொட்டுலுப்பு வைப்புக் கேளு
தனிப்பெரிய பாண்டத்திற் குருது கட்டி
வானென்ற வாய்க்காலா யிறங்க விட்டு
மருவுகின்ற வழிக்குள்ளே சட்டி வைத்து
கோனென்ற குருதடியில் பொத்தல் விட்டு
கொட்டிடுவாய் உப்புதிர்ந்த மண்ணைத் தானும்
வேனென்ற தண்ணீரை மேலே யூற்றி
விடுபட்ட சட்டிதனில் தண்ணீர் வாங்கே. 72

வாங்கியே நீரெல்லாஞ் சட்டி விட்டு
வற்றிடவே காய்ச்சிடவே உப்பு மாகும்
தாங்கியே நீரெல்லாங் காய்ச்சிக் காய்ச்சிச்
சமர்த்தாக உப்பையெல்லாம் வாங்கு வாங்கு
ஓங்கியே வாங்கியதோர் உப்புக் குத்தான்
ஒன்றுக்கு நாலுதண்ணீரளந்து வார்த்து
தேங்கியே மோர்விட்டுப் பழச்சாற்றோடு
சிறப்பாக முப்பானுக் கொன்று வாரே. 73

வார்த்துமே நாற்காய்ச்ச லேந்தாங் காய்ச்சல்
மாட்டியிந்த முறைக்காய்ச்சக் கம்பி யுப்பாம்
பார்த்துமே யிந்தவுப்பிற் பரிச வேதை
பரிவாக வாதத்தி லடியாஞ் சுண்ணம்
காத்துமே யிதைக்கட்டி சித்தி தானும்
கைக்கட்டி வாய்புதைத்துக் கருமம் கேட்கும்
சேர்த்துமே சுண்ணமுறைச் சொல்லக் கேளு
சிவன்சொன்னார் தேவிக்குத் திடமாய்க் காணே. 74

## பொட்டுலுப்புச் சுண்ணம்

காணவே யிந்தவுப்பின் கட்டைப் போலக்
கருதியே நூல் பார்த்தே னெதிலு மில்லை
பாணவே கம்பியுப்புப் பலந்தான் பத்து
பாங்கான வெள்ளீயம் பலந்தா னஞ்சு
தோணவே சுத்தித்த அயத்தின் பொடிதான்
சுத்தமாயி ரண்டரையே பலமுந் தூக்கி
கோணவே குதிரைப்பல் பாடா ணந்தான்
கூர்மையா யிரண்டரையே பலமுந் தூக்கே. 75

தூக்கியே அரப்பொடியும் பாடா ணத்தைச்
சுத்தமாங் கல்வத்தில் நிறுத்துப் போட்டு
பாக்கியே பழச்சாறு விட்ட ரைத்துப்
பாரமா மகலிலிட்டுப் புடத்தைப் போடு
ஆக்கியே ஆறவிட்டெ டுத்துக் கொண்டே
ஐம்பலம் வெள்ளீயம் அதனில் சேர்த்து
நீக்கியே குகைவைத்து ருக்கிக் கொண்டு
நீங்காமற் கோலாடி யூத்திப் போடே. 76

ஊத்தியே பொடிபண்ணி யுப்போ டொக்க
வொக்கவேபூ நீறுகல்லுப் புஞ்சு டன்தான்
தேத்தியே சீனமொடு சாரந் தானும்
சிறப்பாக வகைக்கரையே பலந்தான் போட்டு

நீத்தியே பழச்சாறு விட்டே யாட்டி
நிசமாக நாற்சாமம் அரைத்து மைபோல்
பாத்தியே சட்டியிலிட் டடுப்பி லேற்றிப்
பக்குவமா யெரியிடவே சுண்ண மாகும். 77

சுண்ணத்தைச் சுறண்டிப்பீங் கானில் வைத்துச்
சோமனும் பனிபடவே செய்நீ ராகும்
வெண்ணத்தை வீரமொடு பூரம் லிங்கம்
மீருமல் வகைக்குக்காற் பலமுங் கூட்டித்
திண்ணத்தைச் செய்நீரிற் பொடித்துப் போட்டு
சிந்தாமற் பரணிதனி லடைத்து வைத்து
நண்ணத்தை நீர்தன்னில் நாகஞ் சாய்க்க
நலியாது புகையஞ்சங் கட்டிப் போமே. 78

கட்டுமே காரசார மெல்லாம் காணும்
கனமான பாடாணம் நவலோ கங்கள்
வெட்டுமே செயநீரில் மிடுக்காஞ் சுண்ணம்
வெட்டியுப்பு அடியான வேரே யாகும்
தட்டுமே சாரமொரு பலந்தான் போடு
தலையான வெடியுப்புச் சுண்ண மொன்று
கிட்டுமே யிரண்டையுந்தான் கல்வத் திட்டுக்
கட்டியாக நாற்சாமம் அரைத்தி டாயே. 79

அரைத்திட்டே யகலிலிட்டுப் புடத்தைப் போய்ட்டங்
காறவிட் டெடுத்ததையே பனியில் வைப்பாய்
நிரைத்திட்டுப் பலபலெனச் செய்நீ ராகும்
நீச்சான நீர்தன்னில் வீரம் பூரம்
கரைத்திட்டு லிங்கமொடு மூன்றுந் தானும்
காரணமாஞ் செய்நீரில் தாளக மரைத்து
விரைத்திட்டு நாள்மூன்று மான பின்பு
மேன்மையாங் காரமொடு சமனாய்ச் சேரே. 80

## அய முருக்கு

சமனாகச் சேர்த்தரைத்தி ரண்டை யுந்தான்
தாக்கான அரப்பொடிதான் சுத்தி பண்ணி
வமனாக மருந்ததற்கு மிரட்டி சேர்த்து
வார்த்தரைப்பா யிச்சார நீரி னாலே
நமனாகக் குகைகுள்ளே வைத்து ருக்கு
நலமாக மூன்றுக்கில் மணிபோ லாடும்
எமனாக இரும்புசவ டுதிரை யற்றங்
கேற்றமதாய் ஊரலாற்று மணிபோ லாமே. 81

மணியான இரும்புநின்று ருகுமப் போது
மாட்டிடுவாய் நாலதறுக் கொன்று தங்கம்
கணியான வெள்ளியஞ் சார நீரிற்
கருக்கியே பதின்மூன்று தரந்தான் சாய்ப்பாய்
நணியான நாகப்பூ வஞ்சு தரந்தான்
நாட்டமாய் உருக்கியுமே சாய்த்துக் கொண்டு
அணியான அயத்திெனடை வெள்ளீ யஞ்சேர்
ஆச்சரிய மீயமெடை நாகம் போடே. 82

நாகத்தி னெடைக்கொக்க லிங்கந் தன்னை
நனைந்திடவே முலைப்பாலும் பழத்தின் சாறும்
பாகத்திற் சுருக்கிட்டுச் சார நீரும்
பக்குவமாய் நாற்சாமம் வெள்வங் கந்தான்
தாகத்திற் சாரநீராந் தன்னி லுலே
சந்தனம்போற் சாணைக்கல் தனிலு ரைத்தே
ஆகத்தி லிலிங்கவெடைக் கவசங் கட்டி
அனலுக்குள் வாட்டிலகு புடமாய்ப் போடே. 83

லகுபுடமாய்ப் போட்டயம் நின்ற வெடைதான்
லோாக இரும்புவங்கந் தங்கம் நாகம்
உகுபுடமாய் இருக்கையிலே கார மீந்து
ஊதியுமே யுள்ளுக்கு ளமுந்த ஈவாய்
விகுபுடமாய் வாங்கியது களங்கு மாகு
மேதினியெல் லாங்கனக மதாய்ப்போம் பாரே
தகுபுடமாய்ச் சத்திரத்துக் கொன்றே போடுத்
தாய்சொல்ல யான்கண்டேன் றனித்தங் காடே. 84

ஆடினதோர் களங்கெடுத்துப் பொற்றலை யிலாட்டி
அளவாகப் புடம்போடச் சிந்தூ ரமாகும்
பாடினதோர் பணவெடைதான் பால்தனி லுண்ணு
பத்தியமாய்ப் புளியுப்புப் படுக்கை நீக்கு
ஓடினதோர் வாசியெல்லர் முள்ளே புக்கு
உகாந்தம் வரைக் காயம் அழிவோ வில்லை
காடினதோர் காயமது கழறுகற் றூணும்
கனகம்போற் றேகமுமாங் கண்டு கொள்ளே. 85

யோகங்கூறல்

கண்டுகண்டு சதாநித்தம் மூலம் பாரு
காமத்தை விண்ணென்ற மதியி லேற்று
உண்டுகண்ட வுருசியைநீ யுகந்தி டாதே
யுருசியெல்லாம் வாய்க்குள்ளே யப்பா வில்லை.

தொண்டுகண்டு குருவுடைய பதத்தலைக் காத்தால்
துவாத சாந்தத் தினின்றுகூட்டிப் பாருன் றன்னைப்
பண்டுகண்ட பழக்கமெல்லாம் பாம்பா யெண்ணு
பரமபோதத்தை உணும்பாங்கு பார்த்தி டீரே. 86

பார்த்திடீர் மேன்மூலம் பராப ரத்தாய்ப்
பதம்போற்றிச் சிலம்பொலியிற் பரிந்து கூடு
தூர்த்திடீர் துவாதசாந்தத் தினுக்கு மேலே
சூழ்ந்தவீரங் குலத்தினது மேலே நிற்கும்
காத்திடீர் பதந்தன்னில் வாசி வைத்துக்
கருத்தன்று னருகிருந்து காட்சி யீவான்
வேர்த்திடீர் வாசிவைத்துப் பதத்தை யுன்னு
வேதாந்தஞ் சிலம்பொலியின் மேவ லாமே. 87

மேவியே சிலம்பொலியி னியக்கங் கேட்டால்
வேதாந்தஞ் சித்தாந்தம் விரவிப் போச்சு
தாவியே பிள்ளையைத்தான் தாயே சென்று
சடுதியிலே யெடுத்ததுபோற் போதங் கொள்ளும்
ஆவியே யெப்போது மழிந்தி டாது
அருணநிறக் காந்தியொப்பா மாயி பாதம்
கூவியே சதநித்தங் குடியி ருந்து
கூப்பிட்டுப் பதங்காத்துக் கொள்ளி டீரே. 88

3-வது – வெங்காரவைப்பு

காத்துமே வெங்கார வைப்புக் கேளு
கரடில்லாச் சீனமது பலமும் நூறு
பாத்துமே பருப்புப்போற் பலகை யாகப்
பாங்காக வெட்டியே வைத்துக் கொண்டு
போத்துமே பெரும்பாண்டந் தன்னில் தானும்
பூநீறு படிதானென் றளந்தே போட்டுத்
தாத்துமே தண்ணீர்தான் படிதா னெட்டு
தனிற்கரைத்துத் தெளிவெல்லா மிறுத்துக் கொள்ளே. 89

இறுத்துமே பதினறுக் கொன்று வெடியுப்
பேற்றமாஞ் சீனத்திற் கலந்து கொண்டு
மறுத்துமே பூநிற்றுத் தண்ணீர் போட்டு
மகத்தான ரவிதனிலே வைப்பாய் பட்சம்
கறுத்துமே யிருக்குமதை அடுப்பில் வைத்துக்
கள்ளிசுட்ட சாம்பலது படியொன் றளந்து
நிறுத்துமே பூநீறூ டொக்கப் போடு
வேர்ந்தபின்பு குன்றிமணிச் சாறு வாரே. 90

சாறுதா னிலையிடித்துப் படிதான் வார்த்துத்
தயங்காமல் விளக்கெண்ணெய் பாதி வாரு
ஆறுதா னடுப் பேற்றி பொங்கி வாரா
தசகாமற் கமலம்போல் தீயைப் போடு
நூறுதான் நாழிகைநா லெரித்தா யானல்
நலங்காமற் வாய்விரிந்த தாழி பார்த்து
வேறுதா னூற்றிப்பின் வெய்யில் வைக்க
விடுபட்டால் பட்சம்வெங் காரந் தானே. 91

காரமென் றிதற்குப்பேர் வந்த தேது
கட்டுமே அறுபத்து நாலு தாதும்
காரமென் றிற்குப்பேர் வந்த தாலே
கடிசான வுபரசநூற் றிரண்டுஞ் சத்தாம்
காரமென் றிதற்குப்பேர் வந்த தென்றால்
கட்டாத சாரந்தானி தற்குள் கட்டும்
காரமென் றிதற்குப்பேர் வந்த தாலே
களங்குகுரு சிந்தூரத் தாதி காணே. 92

## வெங்காரக் கட்டு

காணவிந்த காரத்தைக் கட்டக் கேளு
கடிதான வெடியுப்பு நீரில் தோய்த்து
பாணவிந்த பட்சமொன்று ரவியிற் போட்டு
பாங்காக வாங்கியதைப் பலகை மேலே
பூணவிந்தப் பூநீறு நீரா லாட்டி
பெரியதாய்ப் பிசகாமற் கவசங் கட்டித்
தோணவிந்தக் குக்குடத்தின் புடமே போட
சுழன்றுருகிக் காரமது மணிபோ லாமே. 93

## காரக்களங்கு

மணியான காரத்தைத் தூக்கிச் கொண்டு
மாட்டிடுவாய் நாலதனுக் கொன்று தங்கம்
அணியான வெள்ளீயம் பலந்தா னென்றும்
அரப்பொடிதான் பலமொன்று கட்டுங் காரம்
தணியான பலமரைதான் கூட இட்டுத்
தாக்கியே யுருக்கிடவே மணியு மாகும்
திணியான முன்காரந் தங்க மிரண்டுஞ்
சேர்ந்து நின்று ருகையிலே யிரண்டு போடே. 94

போட்டுமே திரளநன்று யுருக்கிக் கொண்டு
பேரான சாரநீரி லிங்கத் துக்கு
மாட்டியே பழச்சாறும் பாலுந் தானும்
மறவாதே லிங்கத்தின் சுறுக்குப் போடு

தாட்டுமே சாரநீரில் சுறுக்குப் போட்டு
தங்கத்தி னெடையொக்கக் கூடத் தாக்கு
காட்டுமே காரமென்ற களங்கு மாகும்
கனமான லோகத்தி னூற்றுக் கொன்றே. 95

நூற்றுக்கொன் றிட்டிடவே களங்கா யாகும்
நுணுக்கித்தான் களங்கைப்பொற் றலையின் சாற்றில்
வேத்துக்கு வில்லைகட்டிப் புடத்தைப் போடு
விளங்கும்செம் பவளம்போற் சிந்தூ ரமாகும்
பாத்துக்குப் பணவெடைதான் பாலி லுண்ணு
பவளம்போற் சிவந்துமேனி பால னுவாய்
மாத்துக்கு மண்டலந்தான் தின்று யானல்
மண்ணூழி காலம்வரை மருவ லாமே. 96

## யோகங் கூறல்

மருவவே வாசிவைத்து மூலத் தூணு
வழியோடே யாறுதல மேறிப் பாரு
தருவவே சதாதார கத்தில் நில்லு
சகத்திரமா மரவிந்தப் பூவைக் கொய்வாய்
அருவவே யாயிபதந் தனையர்ச் சித்தே
அடுக்கநின்ற கங்கையிலே நானம் பண்ணி
உருவவே பஞ்சதசாட் சரமா மத்தை
உச்சரிப்பாய் மாதாவின் பதத்தில் தானே. 97

பதத்திலே அர்ச்சனைக ளெல்லாம் பண்ணிப்
பாங்கான வெளிதனிலே வத்து வைத்து
மதத்திலே பூசைபண்ணி யாவ கித்து
மயங்காமல் வத்துவைத்தான் பானம் பண்ணி
இதத்திலே வாசியைத்தா னிழுத்தே ஏற்றி
ஏகமாக மனதொன்றி யிருந்து கொண்டு
விதத்திலே ஆடினதோ ராட்டைப் பார்த்து
மேன்மேலு மீறியதோர் விளக்கம் பாரே. 98

## 4-வது - துரிசிவைப்பு

பாரென்ற துரிசியுடை வைப்புக் கேளு
பாங்கான கல்லுப்புப் பலமும் நூறு
நேரென்ற சீனமது பலமும் பத்து
நெறியதாம் வெடியுப்புப் பலமும் பத்து
தேரென்ற செம்பான பாத்தி ரத்திற்
சிறப்பாகப் பொடித்துமே யதிலே போட்டுக்
காரென்ற பழச்சாறும் தயிரும் விட்டுக்
கலந்துநின்ற பூமிக்குள் குழிதான் வெட்டே 99

வெட்டியே குழிக்குள்ளே குதிரை லத்தி
மிதித்துமே யதன்மேலே பாண்டம் வைத்துத்
தெட்டியே மேல்மூடி லத்திப் போட்டுச்
சிறப்பாக மண்போட்டு மூடிப் போடு
அட்டியே ஆறுமாதம் முற்றத் தான்சென்
றப்புறந்தா னெடுத்திடவே துரிசி யாகும்
வட்டியே யிதனுடைய மார்க்கஞ் சொல்ல
மகத்தான ரிசசித்தர் வழிகா ணுரே. 100

## குறிப்புரை

### பாடல் எண் 52 முதல் 100 வரை

பாடல் எண் : 52 :- லோகம் - உலோகம் - இரும்பு, தீநீர் - திராவகம், துரிசி - மயில்துத்தம்.

பாடல் எண் : 53 :- வாலை - திராவகப் பானையின் மேல் பாகம் - சுவேதநீளம் - வியர்த்து வடியும் நீர் (நீரை ஆந்திரர் நீளு என்று வழங்குவதைக் காண்க).

பாடல் எண் : 54 :- வயிரம் - வச்சிரமென்பர் - ஒன்பான் மணிகளி லொன்று, பரணி - குப்பி (ஓர்வகை பாத்திரம்) முப்பானிரண்டு (32) முப்பத்திரண்டு, வார்த்து - ஊற்றி

பாடல் எண் : 55 :- சமுசயம் - ஐயப்பாடு

பாடல் எண் : 57 :- கருப்பாலையடுப்பு - கரும்புசாறு காய்ச்சும் அடுப்பு காடாங்கி - கடாக்கினி

பாடல் எண் : 58 :- பூரமென்ற பச்சை - பச்சைக்கர்ப்பூரம் - சாமே - மடியுமே

பாடல் எண் : 59 :- செயசாரம் - கட்டிய நவாச்சாரம் (முறையை 47, 48, 49 பாடல்களில் காண்க)

பாடல் எண் : 60 :- நேக - மெத்தென்று

பாடல் எண் : 61 :- சிப்பி - கிளிஞ்சல் (முத்துச்சிப்பியாகில் நன்று)

பாடல் எண் : 6 :- எழுகடல் மைக்காப்பு - உலகம், சலவை - வெண்மை, தில்லைக் கண்டர் - துருசு; சிமிட்டு முன்னே - கண்மூடித் திறப்பதற்குள்

பாடல் எண் : 64 :- கொப்பளித்தவாய் நீர் - திராவகம் (செய்முறை 52, 53, 54-ம் பாடல்களிலும் காண்க - லோகத் திராவகம்

பாடல் எண் : 65 :- துய்யான் - வெள்ளி

பாடல் எண் : 66 :- விந்தை - வித்தை
வழு : குற்றம்

பாடல் எண் : 67 :- தொழில் - இரசவாதத்தொழில்

பாடல் எண் : 68 :- கருவாய் - கருத்தாய்

பாடல் எண் : 69 :- செகசண்டி - உலகில் ஏறுமாறாய் இருப்பவன்; சடம் - உடல்

பாடல் எண் : 70 :- பெருவழி - ஞானமார்க்கம்

பாடல் எண் : 72 :- குருதுகட்டி - பெரிய மட்பாண்டம் தாங்கி (கட்டி) மூங்கில் போன்ற கருவியால்) சமைத்து

பாடல் எண் : 76 :- கோலாடி - செங்கல்லில் கோல் போலப் பள்ளம் தோண்டி அதில் உருக்கிய களங்கு முதலியவற்றை ஊற்றுதல்

பாடல் எண் : 78 :- நலியாது - குற்றமுறாது - (சுத்தமாம் என்றபடி) புகையஞ்சும் - தீயிலிடப் புகைந்து போகும் சரக்குகளைந்தும் - பூரம், வீரம், இலிங்கம், தாளகம், கந்தகம், ஆகியவை

பாடல் எண் : 79 :- அடியானவேர் - ஆணிவேர்.

பாடல் எண் : 81 :- இரட்டி - இரண்டு பங்கு; சவுடு - துரு; திரை - மேல் மட்டம் மேடு பள்ளமும் சுர சுரப்புமாய் ஆதல்; ஊரல் - கசிவு

பாடல் எண் : 82 :- கருக்கியே - உருக்கி என்ற பொருளில் வந்துள்ளது (அரிய ஆட்சி)

பாடல் எண் : 84 :- சகத்திரம் - (ஸஹஸ்ரம்) ஆயிரம் (1000)

பாடல் எண் : 85 :- படுக்கை - (இடக்கரடக்கல்) ஆண் பெண்ணுடலுறவு

பாடல் எண் : 86 :- காமம் - குண்டலினி சக்தி; விண் - சிதாகாசம்; மதி - சகஸ்ராரத்துக்கு மேலேயுள்ள விண் வெளியில் காணும் மதிமண்டலம். உருசி - சுவை உகந்திடாதே - மகிழ்ந்து விரும்பிடாதே; துவாதசாந்தம் - பரவெளி; பரமபோதம் - (மேலான) மெய்ஞானம்

பாடல் எண் : 87 :- மேல்மூலம் - சகஸ்ராரம் (புருவமத்தியம் என்றும் கூறுவர்) பராபரத்தாய் - உன்மனித்தாய் என்றும் வழங்குவர்

பாடல் எண் : 88 :- சடுதி - (ஜல்தி என்று வழங்கும்) விரைவில்

பாடல் எண் : 96 :- பொற்றலையான் - மஞ்சட்கரிசாலை

பாடல் எண் : 97 :- தாரகம் - இது மஹாமந்திரம் (இகப்பற்று விட்டுப் பரத்துக்குத் தாண்டவைப்பது என்பது பொருள்) சகத்திரமமரவிந்தப் பூவைக் கொய் வாய் - ஆறுதாரங்களுக்கும் மேலான சகஸ்ராரம் என்னும் தானத்தை யடைந்து அந்த அனுபவத்தை அடைவாய்; நானம் - (ஸ்நானம்) நீராடல் பஞ்சதசாட்சரம் - இது தேவி மகா மந்திரம். முறையாக உபதேசம் பெற்றவரிடம்

தக்கபடி ஒழுகிக் கேட்டுத் தினம் ஜபம் செய்ய வேண்டிய மகா மந்திரம் ஆனது பற்றி அதை ஈண்டு எழுதுதல் தகாது என்பர் நூலோர்.

பாடல் எண் : 98 :- ஆவகித்து - (ஆவாகனம் செய்து) அழைத்துத் தங்கவைத்து; மனதொன்றி - மனம் குவிந்து

பாடல் எண் : 100 :- லத்தி - (திசைச் சொல்) சாணம்.

## துரிசிக் குரு

காணாத துரிசியுடைக் குருவைக் கேளு
கடிசான சாரநீர் தன்னில் தோய்த்துத்
தோணாத சுடுரவியிற் பட்சம் போடு
துரியமாக வெள்வங்கச் செய்நீ ராலே
தாணாத சாணைக்கல் தனிலு ரைத்துத்
தனியாகக் கண்டரின்மேற் கவசங் கட்டிப்
பூணாத சீலைசெய்து குக்கு டத்தின்
புடமதுவும் போட்டெடுத்தால் குருதா னாமே. 101

குருவாக நின்றதற்குத் திராவகத்தைக் குத்தி
கொடிதான ரவிதன்னிற் போட்டு வைத்தே
அருவாக அஞ்சுநாள் ரவியொளியிற் போட்டே
ஆனபின்பு திராவகத்தில் கடிதே அரைத்துத்
திருவாக வில்லைகட்டிப் புடந்தனிலே போடு
சிதம்பரம்போல் வெளுப்பாகும் சரியாய்ச் சூதம்
பருவாகச் சேர்த்தரைத்து லகுபுடமாய்ப் போடு
பாங்கான குருவாகுந் துரிசி தானே. 102

துரிசியினிற் தங்கத்தின் ரேக்குச் சுற்றி
சுப்பிரமாம் வங்கம்மேற் கவசங் கட்டு
தரிசிபினில் லகுபுடமாய்ப் போட்டெ டுக்கத்
தவளம்போல் குருவாகுந் தங்கந் தானும்
வரிசியினில் வெள்ளியிலே நூற்றுக்கு நாலு
வண்மையாய்க் குருவீய மாற்றெட் டாகும்
கரிசிக்கி தைவிற்றுச் செலவு செய்து
கனமான கற்பத்தை யுண்டி டாயே. 103

## துரிசிக் களங்கு

உண்டிடவே துரிசியுடைக் களங்கு கேளு
உற்பனமா மரப்பொடியைப் பழச்சா றிட்டுத்
துண்டிடவே சுத்திபண்ணி நிறுத்திக் கொண்டு
துணையாகக் கவுரிதன்னை பாதி சேர்த்து

அண்டிடவே பழச்சாற்றில் அரைத்து மைபோல்
அரப்பொடிதான் நிறைச்சரியாய்த் துரிசி வாங்கி
பண்டிடவே சாரச்செய் நீரில் தோய்த்துப்
பட்சமொன்று ரவிதனிலே போட்டி டாயே. 104

போட்டுமே யரப்பொடியைக் கவசங் கட்டி
பெருக்கவே சுண்ணும்புச் சீலை செய்து
காட்டுமே கனபுடமாய்ப் போட்டெ டுத்துக்
கைமுறையாய்ச் சுண்ணும்புக் கவசம் நீக்கிக்
கூட்டுமே குகையிலிட்டுக் காரங் கூட்டிக்
குமுறவே யுருக்கிடவே களங்கு மாகும்.
பூட்டுமே ரவிதன்னி லஞ்சு மாற்று
பேரான புடத்துக்கி றங்கும் பாரே. 105

ஞானயோகங் கூறல்

இறங்குமே சீவனத்துக் கிடந்தான் பண்ணி
எந்நேரம் சிவயோகத் தொழிலைப் பாரு
உறங்குமே யுச்சிக்குக் கீழே தானும்
உணர்வுக்கு மேலாக வுன்னி யாடு
சுறங்குதா னடித்தாற்போல் நாத வோசை
கண்ணிலே காணுமே நடனக் கூத்து
தறங்குதா னடித்தாற்போ லசைந்தி டாமற்
சமாதியிலே யுறைத்தபின்பு ஞானம் பாரே. 106

ஞானம்தான் வாய்ப்பேச்சு சொன்னு லாமோ
நல்வினையுந் தீவினையு மொன்ருய்க் காணும்
தானந்தான் சீவசெந்து சகல முந்தான்
தம்முயிர்போ லெண்ணியே தயவா யாடு
வானந்தான் வீட்டிருந்தென் காட்டி ருந்தென்
மக்கள்யார் பெண்டீரார் தன்மம் யார்தான்
ஊனந்தான் காக்கைமணி யொன்ரு னுற்போல்
ஒருமனதாய்ச் சிவயோகத் துண்மை காணே. 107

உண்மையொத்துத் துரிசியென்ருல் எளிதோ வாய்க்கே
உற்பனந்தான் துரிசியைப்போ லொன்று மில்லை
வண்மையொத்துச் சிவஞ்சத்தி யிரண்டுங் கூடி
மருவினதால் மகத்தான நாம மாச்சு
தண்மையொத்த கல்லுப்புச் சத்தி யாச்சு
தனியான பாண்டமது சிவமு மாச்சு
வண்மையொத்த தயிர்ச்சீனம் மால்தா னுச்சு
மகத்தான பழச்சாறு பிரம னுச்சே. 108

ஆச்சுதே பொட்டுலுப்பு ருத்திர ஞச்சே
அடங்காத குழிபதுவு மகேச ஞச்சே
வாச்சுதே யிப்படியே துரிசி யாச்சு
மகத்தான பஞ்சகர்த்தர் மருவி நின்றுர்
ஏச்சுதே யிதைவிட்டால் வாதந் தானும்
எந்தெந்த முறைதனக்கு மிதுமுன் வேணும்
போச்சுதே துரிசியில்லாச் சரக்கெல் லாந்தான்
புழுதிக்கு மொப்பல்ல பொய்யாய்ப் போமே. 109

பொய்யாகப் போகாமற் சிவனைப் பூசி
பொற்கடத்தில் மதுவைத்து மந்தி ரத்தால்
பொய்யாகத் தியானித்துச் சாபம் போக்கி
விரைந்துமே யுட்கொண்டு சமாதி யுற்று
தெய்யாக நிருத்தமிட்ட நடேசர் பாதம்
தேவியுடைச் சிலம்பொலியில் மனத்தை மாட்டி
அய்யாக அசையாம லிருந்து கொண்டே
ஆனந்தத் தொய்த்தத்தி லழுந்தி டாயே. 110

## 5-வது—எவட்சாரவைப்பு

அழுந்திட்ட எவட்சார வைப்புக் கேளு
ஆதிமுதற் பூநீறு பலந்தான் பத்து
தழுந்திட்ட தண்ணீரிற் கலக்கி வைத்துச்
சாங்கமதாய் ஒன்றுக்கு நாலாந் தண்ணீர்
குளிர்ந்திட்ட விட்ம்வைத்து நாலாம் நாள்தான்
கூர்மையாகத் தெளிவிறுத்துப் பாண்டத்தி லிட்டு
திளுந்திட்ட சீனமது பலந்தா ணிரண்டு
சிவஞ்சத்தி யாந்துரிசி பலமோ ரெண்டே 111

பலமிரண்டு வெடியுப்புக் கூடக் கூட்டி
பாங்காகப் பொடிபண்ணி நீரிற் போட்டு
பிலமான சட்டிதனிற் காய்ச்சும் போது
பெருக்காமற் கொஞ்சமாக விட்டுக் காய்ச்சே
அலமாக அடுக்கடுக்காய் வரிசை யாக
அமர்ந்திருக்கு மடிதனிலே யெவட்சா ரந்தான்
நலமாகக் கத்தியாற் சீவி வாங்கு
நல்லானைத் தந்தம்போல் கட்டி யாமே. 112

கட்டியா மெவட்சாரஞ் சார ணைக்குக்
கடிசான திராவகத்துக் குறுதி யாகும்
புட்டியாம் பழம்புளியைக் கவசங் கட்டி
பெரும்புடமாய்ப் போட்டெடுக்கச் சுண்ண மாகும்

குட்டிதான் போட்டெடுத்த குரங்கைப் போல
கொடிதான சாரத்தை கணத்திற் கொல்லும்
வெட்டிதான் பெருவெட்டி சாரங் கட்டில்
வெகுதூர மெட்டித்தான் ஓடுந் தானே. 113

## எவட்சாரக் கட்டு

ஓடுகின்ற தூமமான சாரந் தன்னை
யுறுதியாகக் கட்டிடவே உண்மை கேளு
ஆடுகின்ற அண்டம்போற் சாரஞ் சிவி
அந்தவெடைக் கெவட்சாரச் சுண்ணந் தூக்கிப்
பாடுகின்ற பழச்சாற்றில் அரைத்து மைபோல்
பதராதே சாரத்தின் மேலே பூசு
நாடுகின்ற ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
நாயுருவி சாம்பலுக்கு ளமுத்தி டாயே. 114

## எவட்சாரச் சுண்ணம்

அமுத்தியே கமலம்போற் றீயை மூட்டி
அலறுமல் நாற்சாம மெரித்த பின்பு
தமுத்தியே ஆறவிட்டெ டுத்துப் பாரு
தவளமாய்த் தந்தம்போல் இறுகி நிற்கும்
பமுத்தியே சாரத்தில் வீரம் பூரம்
பக்குவமா யரைத்துமே மேலே பூசி
கமுத்தியே அஞ்சுசுண்ணக் குகையில் வைத்துக்
கடினமதா யூதிடவே நீறுய்ப் போமே. 115

நீறுன சாரத்திற் காசெ டுத்து
நிமிளைக்குப் பூசியுமே ரவியிற் போடே
ஆறுன அஞ்சுசுண்ணக் குகையில் வைத்திட்
டதட்டியேநீ புடம்போட நிமிளைச் சுண்ணம்
வாறுன சுண்ணத்தைப் பறியின் மேலே
மாட்டிடவே தங்கமது சுண்ண மாகும்
வேறுன சுண்ணத்தைக் கண்டார்க் கப்பி
விரவியுமே அஞ்சுசுண்ணக் குகையி லூதே. 116

ஊதியே கண்டருடைச் சுண்ணந் தன்னை
உகந்தவன்னிக் கர்ப்பத்தில் கவசம் போடு
கோதியே புடம்போட லிங்கச் சுண்ணம்
கொடியநவ லோகமாயி ரத்துக் கோடும்
வாதியே எதிர்த்துவந்து, தர்க்கம் பேசில்
மயிர்பிடித்துப் பரிசனத்தில் வேதை காட்டு
பாதியே நவலோகம் வெள்ளி யாக்கு
பாதிதனை ஏமமாகப் பண்ணிக் காட்டே. 117

காட்டுவது துய்யானில் தகடு தட்டிக்
கனத்த வெள்ளைப் பாடாண மெடைதா னென்று
தீட்டுவது சினம்ஃதோ எடைதா னென்று
செயலிங்கச் சுண்ணமது மெடைதா னென்று
பூட்டுவது வாய்நீரி லரைத்துக் கொண்டு
பொருந்தவே பலம்வெள்ளித் தகட்டிற் பூசி
நீட்டுவது புடம்போட நிமிடம் நீரும்
நேரான வயத்தகட்டில் நூற்றுக் கொண்ணே. 118

ஒண்ணன வயத்தகட்டில் நுற்றுக் கொன்று
மூறுகின்ற மூலைப்பாலா லரைத்துப் பூசி
திண்ணன பாதிக்குப் பூசக் கேளு
சிறப்பான சவ்வீரங் காரீ யத்தில்
விண்ணன லிங்கத்தின் குருவும் போட்டு
மேன்மையாய்ப் புடம்போடக் காரி நீரும்
பண்ணன அயத்தகட்டிற் பூசிக் காய்ச்சிப்
பரும்புடமாய்ப் போட்டெடுக்க இரவி மதியாம். 119

மதிரவியை ஓரினத்திற் காட்டிப் பின்பு
மயிர்பிடித்து நீயுமந்தப் படிபோ டென்னும்
விதிதவறில் வேதையது தவறு தென்று
மேன்மையாம் லிங்கத்தின் குருச்சத் தீவாய்
சதிபண்ணும் வாதியைநீ சேர்த்தி டாதே
சமரசமாம் வாதியொடு தர்க்கித் தாடே
ஓதிபருத்துத் தூணகா வாறு போல
உலுத் தருக்கிம் முறையைத்தா னுரைக்கா காதே. 120

நல்லுப தேசம்

ஆகாத மும்பருடன் வாதச் சொல்லை
அனுசரித்துப் பேசாதே அப்பாற் சொல்லு
தாகாது சடத்துக்கு வினைவந் தெய்தும்
செகசண்டி பாவத்துக் கஞ்சி டான்கான்
ஏகாது பழிவருமே முகம்பா ராதே
எத்தனையாய் நல்விசேடஞ் சொன்ன லுந்தான்
வேகாது நல்வினைதீ வினைக ளிரண்டும்
மிகச்சரியாய்ப் பார்த்தவர்க்கு விசேடம் பேசே. 121

பேசிடுவாய் வேதாந்தக் கூட்டத் தோடு
பின்னையொன்றில் மனமொன்றிப் பேசி டாதே
கூசிடுவாய் பெண்மாயை தன்னில் தானும்
கொடியதான ஆசைப்பெண் ணரவாம் கண்டாய்

பாசிடுவாய் படுகுழியில் வீழ்ந்தி டாதே
பலப்பலவாம் ருசிதன்னில் இச்சிக் காதே
ஏசிடுவர் யெந்நேரம் பொறி களஞ்சும்
இழுத்தபடி மனம்போக விசைந்தி டாதே. 122

இசைந்திட்ட எவட்சாரச் சுண்ணத் தாலே
எட்டெட்டுக் காரியமுஞ் சித்தி யாகும்
பிசைந்திட்டால் சரக்குகளிற் கட்டிப் போகும்
பேசாதே எவட்சாரப் போக்குத் தன்னைத்
தசைந்திட்ட குருவாற்கோடி கவ ராடும்
சத்துக்குச் செய்நீரால் தாக்கி யாடு
நசைந்திட்ட புகைநீரிற் குருதான் சேர்ந்தால்
நாமறியோ மிதுபோலப் போக்குத் தானே. 123

## ஞானயோகம் கூறல்

தானென்ற ஆணவத்தை அறுத்துத் தள்ளு
சண்டாள கோபத்தை வாளால் வீசு
ஊனென்ற ருசிதன்னை யொழித்துப் போடு
உளருதே சையோகந் தன்னை நீக்கு
கானென்றே னூறென்றேன் மனஞ்செவ் வானுற்
கற்பங்கள் தின்றுசடக் கட்டை நீக்கு
வேனென்ற சடமெடுத்தால் விழலா காமல்
மெய்ஞ்ஞான விரிவுதனை விளக்கஞ் செய்யே. 124

செய்திட்டு மறதியாக யிருந்தா யானல்
தேவியைத்தான் சிந்தித்துக் கேட்டுக் கொள்ளு
வைதிட்டு ஆத்தாளை வா தங் கேளு
மாதாதான் மக்கள்மேல் மசிழ்ச்சி யாகி
எய்திட்டுப் பானத்தா லெல்லாஞ் சொல்வாள்
ஏழைபங்கிற் குடியிருந்தே இரட்சிக் குந்தாய்
உய்திட்டுப் போகாமற் கற்ப முண்ணு
உத்தமித்தாய் விளக்கொளியி னுறுதி கேளே. 125

விளக்கமாய்ச் சிவயோக மார்க்கந் தன்னை
விடுக்காதே யெந்நேரம் விரைவிற் கூடு
நளக்கமாய் வாசியது நழுவி டாமல்
நாள்தோறும் நாள்தோறுமு சந்துக் கும்பி
பளக்கமாய் நாள்தோறும் கடிகை யேற்று
பகலிரவு மற்றவிடத் திருந்து கொண்டே
இளக்கமாயி ரேசிப்பாய் தவறி டாதே
எந்நேரந் தத்துவத்தி லுறுதி கேளே. 126

## 6-வது நவச்சார வைப்பு

உறுதியாய்ச் சாரவைப்பின் உண்மை கேளு
ஒளித்தார்கள் சித்தர்தா முயர்ந்த வைப்பை
அறுதியா யாடுபன்றி குதிரை யானை
அசடான ஒட்டகந்தான் மனிதர் மாடு
பிறுதியா யிவையிருக்கும் பூமி தன்னிற்
பேரான மலமூத்திரம் விடுகை யாலே
வறுதியாய் மண்மக்கிப் பூப்போல் நிற்கும்
மண்பார்த்துப் பாண்டத்தில் வரைந்து போடே. 127

போட்டுமே குருதுகட்டி மனித ரமுரி
பேரான தண்ணீரிற் சூடன் சீனம்
போட்டுமே வெடியுப்பு மூன்றுந் தானும்
மிஞ்சாமல் வார்த்துவரக் குருது மையம்
ஆட்டுமே அடிப்பாண்டத் தடியில் மூன்றே
அங்குட்ட விரற்பருமன் தமரும் போடு
வாட்டுமே தமருக்குள் வைக்கோற் போட்டு
மண்கொட்டி மனிதருடை யமுரி யூற்று
மூட்டுமே நூறுபடி தண்ணீர் வாங்கி
மூன்றான சரக்கதுவும் பலந்தா னூறே. 128

நூறான சரக்கதுதண் ணீரிற் போட்டு
நுட்பமாய் யெரித்தும்நீ உப்பாய் வாங்கு
ஆறான உப்பையடிக் கனத்த தோண்டி
அதற்குளரை வாசிமட்டு முப்பைப் போட்டு
வாறான அடுப்பேற்றி தீபம் போல
மறவாதே அறுசாமந் தீயைப் போடு
பாறான பதங்கமஃ துயர வேறிப்
பக்குவமாய்ச் சாரமது கட்டி யாமே. 129

## நவச்சாரக்கட்டு

கட்டியாஞ் சாரத்தைக் கட்டு தற்குக்
கடினமெத்தக் கடுங்காரந் தன்னாற் கட்டும்
தட்டியாஞ் சாரமது கட்டி னுக்காற்
சகலசித்து மாடலாகுந் தாய்தன் னோடே
கெட்டியாய் வழக்காடி பேச லாகும்
கேசரத்தில் சாகாமல் ஏற லாகும்
உட்டியாய்க் காயமது கற்றா னுகும்
உகாந்தவரை யொருநிமிட மாகுந் தானே. 130

காணவே சாரத்தைக் கட்டக் கேளு
கரடில்லாச் சாரமது பலந்தான் நாலு.
பூணவே அண்டம்போற் சீவிக் கொண்டு
பேரான அபினேடு மிளகு பூரம்
தாணவே வகைக்கரைப் பலந்தான் கூட்டிச்
சார்ந்தகுப்பை மேனிச்சாறு விட்டே யாட்டித்
தோணவே சாரத்தின் மேலே பூசி
சுத்தமாகக் காய்ந்தபின்பு சொல்லக் கேளு. 131

சொல்லவே யதன்மேலே அரக்குத் தானும்
சூட்டாலே தானிளக்கிக் கவசங் கட்டி
அல்லவே அதற்கிளையக் கன்றின் சாணி
அதுட்டாகக் கவசமாகக் கட்டிப் போடு
பல்லவே பத்தெருவிற் புடத்தைப் போட்டு
பாங்கான கவசமெல்லாம் வாங்கிப் போடு
தல்லவே சாரமது தந்தம் போலச்
சாங்கமாய்ச் சுத்தியாகும் சாரந் தானே. 132

சுத்தித்த சாரத்தைக் கட்டும் மார்க்கம்
சொல்லுவமே மாயிரத்தில் சூட்ச மெல்லாம்
வெத்தித்த வெடியுப்பு நீர்தன் னாலே
வெண்காரம் பொட்டிலுப்புக் கல்லுப் புத்தான்
ஒத்தித்தொவ் வொன்றாக வெவ்வே றாக
ஊறவைத்துப் பட்சந்தான் ரவியிற் போடே
அத்தித்தோர் சாமமரைத் தரைத்து நன்றாய்
அம்மியோடி ரவிதனிலே பட்சம் போடே. 133

பட்சந்தான் சுத்தித்த சாரந் தன்னைப்
பத்துவிசை தினமொன்று வெடியுப்பு நீரில்
கட்சந்தான் கடுரவியில் பட்சம் போடு
காயக்கா யவேமீண்டுந் தோய்ச்சுப் போடு
சுட்சந்தான் அதன்பிறகு கனத்த சட்டி
சோடாயொண் ணிற்புளியின் புறணிச் சாம்பல்
அட்சந்தான் அரைவாசி அமுத்திப் போட்டே
அதன்மேலே யரைத்தகல் லுப்பு நீறே. 134

கல்லுப்பு நீறதுவும் பாதி யிட்டுக்
கணக்காக வெடியுப்பு நீறு தானும்
பல்லுப்புச் சாரத்தி லிரட்டி ரட்டிப்
பதாறமற் கைவளமாய்ப் பருகிப் போட்டு
அல்லுப்பு வெங்கார நீறுந் தானும்
அந்தவெடை அதன்மேலே பரப்பி வைத்து
தல்லுப்பு சாரத்தின் மேலே வைத்து
சமத்தான வெங்கார நீற்றால் மூடே 135

மூடியே அதன்மேல்வெங் கார நீறு
முயற்சியாக அதன்மேலே வெடியுப் புநீறு
தேடியே அதன்மேலே கல்லுப்பு நீறு
சிறப்பாகப் புளிப்புறணிச் சாம்ப லதன்மே
லாடியே யமுத்தியிட்டுச் சட்டி மூடி
அசகாமற் சீலைசெய்தே அடுப்பி லேற்றி
நாடியே அறுசாம மெரித்த பின்பு
நலமாக ஆறவிட்டே எடுத்துப் பாரே. 136

எடுத்துப்பா ரெலும்பைப்போ லிருக்கும் பாரு
என்னசொல்வே னிக்கட்டுக் கொப்பொன் றில்லை
அடுத்துப்பார் வாதங்கைக் கட்டி நின்றே
அடிமைபோலத் தொழி லெல்லாஞ் செய்யுங் காணே
தொடுத்துப்பார் சோமனைப்போல் சொரியும் பாரு
செகச்சால மெட்டெட்டுந் திறந்து போச்சு
விடுத்துப்பார் நவலோகம் ஏம மாச்சு
மேன்மையாந் தொழிலாச்சு சாரந் தானே. 137

சாரந்தான் பேரென்று வந்த தேது
சகலதுறைச் சகலகருத் தடங்கிப் போச்சு
சாரந்தான் இதைவிட்டால் நிசார மாச்சு
தலையான கல்லுப்பைச் சணத்திற் கொல்லும்
சாரந்தான் பட்டக்கா லூற லெல்லாம்
தகர்ந்ததுவுங் கழன்றேபோய்ச் சுத்தி யாகும்
சாரந்தான் நவலோகத் துட்பு குந்தால்
தங்கியேநன் றுயக்கண்விட் டாடும் பாரே. 138

ஆடுகின்ற சாரமின்றேல் செயநீர் போச்சே
அறுபத்து நாலான பாடா ணங்கள்
நாடுகின்ற உப்புவகை இருபத் தஞ்சும்
நலமான உபரசம் நூற் றிரண்டு பத்தும்
ஓடுகின்ற சத்துவகை கட்டி னங்கள்
உசத்தியாம் சுண்ணமெல்லாம் மொக்கப் போச்சு
தேடுகின்ற சாரத்தைச் கட்டி யாடு
சணத்தினிலே யெட்டெட்டும் சித்தி யாமே. 139

சித்தியாம் கட்டினதோர் சாரந் தன்னைச்
செயநீரில் பூரமொடு வீரஞ் சீனம்
அத்தியா யரைத்துடன்சா ரத்திற் பூசி
அஞ்சுசுண்ணக் குகையில்வைத் தனலி லூது
மத்தியாய் மல்லிகைப்பூப் போலச் சுண்ணம்
மாசற்ற நிர்க்குணத்துக் கொப்பு மாகும்
வெத்தியாம் சாரத்தைப் பனியில் வைக்க
விடுபட்ட வருணசலம் போலு மாமே. 140

ஆமென்ற செயநீரில் வீரம் பூரம்
 ஆண்மையான லிங்கமொடு காரம் கூட்டி
வேமென்ற பொடிபண்ணி அதனிற் போட்டு
 மிடுக்கான பரணிக்குள் அடைத்து வைத்துத்
தாமென்ற சாரகாரங் களோடுஞ் சொல்லும்
 தனித்துநின்ற பாடாண உபர சங்கள்
தோமென்ற செயநீரிற் சுருக்குப் போடச்
 சுறுக்கிலே கட்டியது மணிபோ லாமே. 141

மணிபோல நின்றுடும் சரக்கெல் லாந்தான்
 மாசற்ற நவலோகத் தூறல் போக்கும்
திணிபோலத் துரிசியது நீறு மாகும்
 செப்பினுடைக் களிம்பெல்லாம் சணத்திற் கொல்லும்
அணிபோல அயந்தானும் சவுடு திரையற்
 றஞ்சுவகைத் தோடகுண மெல்லாம் போகும்
துணிபோல துவண்டிருந்த சரக்கெல் லாந்தான்
 சுறுக்கிட்டால் வயிரம்போ லிறுகும் பாரே. 142

வயிரப்போ லிறுகியே சட்டிட் டக்கால்
 மாசற்ற நவலோகம் ஏம மாகும்
கயிரம்போற் காயமது சித்தி யாகும்
 கற்பாந்த காலமெல்லாம் கடிகை யாகும்
தயிரமாஞ் சாவதுவும் பொய்யாய்ப் போகும்
 சதுமுகன்ற னெழுத்ததுவுந் தப்பிப் போகும்
பயிரமாம் பகலிரவு மொன்றய்ப் போகும்
 பராபரத்தாய் பதந்தல்லைப் பரிந்து போற்றே. 143

போற்றியே பெரியோரைக் கண்டு பேசு
 பொய்யொன்றுஞ் சொல்லாதே பொருளின் மேலே
மாற்றியே மனந்தன்னு லிச்சிக் காதே
 மங்கையரை மாதாப்போல் மனத்தி லெண்ணு
ஆற்றியே அமுத வெள்ளந் தன்னை யுண்டு
 அரைக்கணமு மவத்திலே மனம்போக் காதே
தேற்றியே சிவபோக வழியிற் செல்லு
 சிறந்தமனோன் மணிச்சிலம்பி னொலியின் மேவே. 144

மேவியே சதாநித்த மானந்தக் கூத்தை
 விடுக்காதே விழியாலக் கரத்திற் பாகு
தாவியே மதலையைத்தாய்ச் சென்று வந்துத்
 தழுவியேநன் கணைத்ததுபோல் போதங் கொள்ளும்
ஆவியே போகாம லாத்தா ளைத்தான்
 அழைத்துடனே கேட்டிருந்தே அருள்தா வென்று
தூவியே சோற்றுக்குக் காகம் வந்து
 சுழன்றதுபோல் நடனத்திற் சொக்கிப் போவே. 145

சொக்கினுல் முத்திபுத்தி சித்தி யுண்டு
சொக்காட்டால் திரிகைப்போல் சென்ன முண்டாம்
மக்கினுல் மனந்தானும் விவேக மாச்சு
மதத்தினுல் கர்வித்தால் நிர்மூ டனுமாச்சு
தக்கினுல் காயயோகச் சித்தி யாச்சு
தக்காட்டாற் சாவதூங்கா வடிபோ லாச்சு
புக்கினுற் பூரணத்திற் பிறவிப் போச்சு
பெண்ணோடே சஞ்சரித்தாற் பிறவியாச்சே. 146

ஆச்சென்ற வாங்கார ஆண வத்தை
ஐப் புலனை அறிவென்ற வாளால் வீசு
பேச்சென்ற பேச்சாலே ஒன்றும் இல்லை
பிரணவத்தை யோங்காரக் கப்பம் நாட்டி
தேச்சென்ற சிங்குசடி வாளம் பூட்டிச்
சிற்பரிபா தத்தில்தே சியைத்தான் கட்டி
பாச்சென்ற படுகுழியில் வீழ்ந்தி டாதே
பகலிரவு மொன்ருகப் பரிந்து கூடே. 147

பரிந்துநித்தங் குருவுடைய பதத்தைப் போற்று
பலகாலு மூலத்தில் வாசி பூட்டு
கரிந்துருகிக் கற்பத்தைக் கடுகிக் கொள்ளு
காலூன்றித் தமர்வாசற் கசட்டை நீக்கு
தெரிந்துமே தேவியுடைக் கிரியை தன்னிற்
சிவானந்தத் தேற லுண்டு தெளிவாய்ப் பாரு
புரிந்துமே புரியட்ட மோட்டம் நீக்கு
பிரண்டுருண்டுஞ் சாரத்தைப் பேணிப் பாரே. 148

பாரென்ற சாரத்தின் கட்டைப் போலே
பலப்பலவாஞ் சாத்திரத்தி லில்லை யில்லை
வேரேன்ற வெடியுப்புச் செயநீ ராலே
மேன்மேலாய் விளங்கிற்றுச் சாரச் சுண்ணம்
தாரென்ற சாரத்தின் செயநீ ராலே
சகலகருச் சகலதுறைத் தங்கிப் போச்சு
காரென்ற காலாங்கி நாதர் தாமும்
கடாட்சித்த படியானுங் கருதி னேனே. 149

கருதியே பாட்டர்திரு மூல நாதர்
கடாட்சத்தால் நூலெல்லாம் கருதிப் பார்த்து
வருதியே மந்திரமெண் ணுயி ரத்தில்
வகையெல்லாம் பார்த்துணர்ந்து மகிழ்ச்சி கூர்ந்து
நருதியே நந்திசொன்ன ஏழு காண்டம்
நட்பெல்லாம் நாடிநன்ருய்ச் சோதித் தேறி
பருதியே கண்டவிருள் பறந்தாற் போலே
பாடினேனே ழாயிரந்தான் கருத்தாய்க் காணே. 150

## குறிப்புரை

### பாடல் எண் 101 முதல் 150 வரை

பாடல் எண் : 101 :- சாரநீர், வெள்வங்கச் செயநீர் முன் கூறப் பட்டுள்ளவைகளை ஆங்காங்கு கண்டு கொள்க சாணைக்கல் - ஆயுதங்களைத் தீட்டி கூர்மை யாக்கும் கல்

பாடல் எண் : 113 :- கணம் - நொடி

பாடல் எண் : 115 :- அஞ்சு சுண்ணக்குகை - அண்ட ஓடு, நண்டோடு, நத்தை ஓடு, சிப்பி, சங்கு இவைகளைச் சுண்ணம் செய்து எருக்கம் பாலால் அரைத்து வேண்டிய அளவுப்படி மூசையும் மூடியும் செய்தல்

பாடல் எண் : 116 :- பறி - தங்கம்

பாடல் எண் : 118 :- துய்யான்-வெள்ளி

பாடல் எண் : 119 :- காரி - காரீயம்

பாடல் எண் : 120 :- சதி - சூழ்ச்சி; ஓதி - ஓர் மரம் (இதை ஓதியமரம் என்பர்)

பாடல் எண் : 121 :- அழும்பர் - உலுத்தர் - மூடர்

பாடல் எண் : 122 :- இசைந்திடாதே - இணங்காதே

பாடல் எண் : 123 :- எட்டெட்டுக் காரியம் - அறுபத்து நான்கு கலைகள்

பாடல் எண் : 124 :- செவ்வானுல் - செம்மையானல், சடக்கட்டு - தேகத்தின் பிணி, விழல் - வீண்

பாடல் எண் : 128 :- அங்குட்ட விரல் - கட்டை விரல்

பாடல் எண் : 135 :- வெங்கார நீறு - வெங்காரச் சுண்ணம்

பாடல் எண் : 138 :- கணத்தில் - கணம் - நொடி
1'3 பாடலைக் காண்க

பாடல் எண் : 140 :- வருணசலம் - (இரு பெயரொட்டு) - மழை நீர்

பாடல் எண் : 143 :- ஏமம் - பொன்; கற்பாந்த காலம் - பிரம னுடைய ஆயுட்காலம். (பிரமனுக்கு நாலு யுகங்களும் சேர்ந்தது ஒரு பகலாம்; அதுபோல நூறாண்டு கொண்டது அவனுடைய ஆயுட் காலமாம்.) சதுமுகன் - பிரமன், சொக்கினுல் - மனது ஆழ்ந்து நிலை பெற்றால்

பாடல் எண் : 146 :- திரிகை - சக்கரம்; மக்கினுல் - அடங்கினுல்; மதம் - அகங்காரம்; தக்கினுல் - நிலைபெற்றால்; புக்கினுல் - நுழைந்தால்

பாடல் எண் : 147 :- ஐம்புலன் : மெய், வாய், கண், மூக்குச் செவி, தேச்சு - ஒளி (தேஜசு); சிங் - சக்தி ,பீஜாட்சரம் சிற்பரி - சக்தி. தேசி - உணர்வு (ஞானம்)

பாடல் எண் : 148 :- மூலத்தில் வாசி பூட்டு=பிராணயாம சக்தியில் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியைத் தூண்டு; கற்பம் - நீண்ட நாளைக் குறிக்கும் சொல் (பிரம்மாவின் ஆயுட்காலம் ஒரு கற்பம் என்பர். இங்கு யோக சாதனையைக் குறிக்கும்; கடுகி - விரைவில். காலூன்றி - தளராமல் ஊக்கமுடன். தமர்வாசல் - ஐம்புலன்கள். கசடு - குற்றம் (நீக்கத் தக்க பொருள்) தேறல் - தேன் (அமுதம்.) சாரம் - நவாசாரம்

பாடல் எண் : 150 :- பருதி - சூரியன்

காணவே பாட்டருடை நூலிற் ருனுங்
 கருக்கமொன்றுந் தெரியாதென் றேநீ எண்ணி
நாணவே நந்திகுருச் சந்தப் பாவில்
 நாளினமாம் பாட்டில் வெளி யாக வில்லை
ஏணவே இக்கருவை மறைத்துச் சொன்ஞல்
 ஏற்றமாம் வர்க்கத்தில் கீர்த்தி யில்லை
தோணவே வெளியாக வெள்ளைப் பாவாய்
 சொன்னவே மூயிரந்தான் நிசமாங் கணே. 151

### 7-வது சத்திச்சாரவைப்பு

காணவே சத்தியென்ற சார வைப்பைக்
 கண்டபடி யான்சொல்லக் கருதிக் கேளு
தோணவே குருதுகட்டிப் பூநீறு தானும்
 சுத்தமாகநூறுபடி யளந்து கொண்டு
வேணவே சுண்ணும்பஞ் சுபத்துப் படிதான்
 விளங்கவொன்ருய்க் கலந்துமே கருதிப் போட்டுப்
பூணவே சுவருதிர்ந்த வுப்பு மண்தான்
 பேராக நூறுபடி யொக்கப் போடே. 152

போட்டுமே யொன்றுக்கு நாலு தண்ணீர்
 புரட்டியே கணக்காகப் பிரித்துக் கொண்டு
கூட்டுமே கொஞ்சமாய் வார்த்து வார்த்து
 குறுதடியில் வழி விட்டுச் சட்டி வைத்துத்
தாட்டியே தண்ணீரை வாங்கி வாங்கி
 தாழியென்ற சட்டிதனில் விட்டுக் காய்ச்சி
கூட்டியே மெழுகுபதந் தானி றக்கி
 கொட்டியே பாய்மேலே வில்லை வாரே. 153

## சத்தீச்சாரக்கட்டு

வில்லைபோல் வார்த்துமே காயப் போட்டால்
மிடுக்கான சத்தியென்ற சார மாகும்
தொல்லையாய் விடுக்காதே கட்டக் கேளு
சுளுக்காக இதற்குள்ளே சூட்ச மெத்த
பல்லையே திறந்துகொண்டு வாதம் பார்க்கில்
பலித்திடுமோ பசுவான சனங்க ளுக்கு
கொல்லையிலே கறியிருக்க தூர வோடும்
குலாமரே சரக்கைவைத்து வாதம் பாரே. 154

வாதந்தா னெளிசுதன்னி லாகு மோடா
மகத்தான பஞ்சகர்த்தர் பஞ்ச கிர்த்தியந்
காதந்தான் கெடுமென்று கருத லாக
கடிசிலே வைத்தார்கள் ஏம வித்தை
போகந்தான் பார்த்தவர்கட் கெளிசி லாகும்
புகழ்பெரிய இருடிசித்த ரிவர்கட் கெல்லாம்
பாதந்தான் நடவாமல் ககனம் போகப்
பசியடக்க ஏமவித்தை பாலித் தாரே. 155

பாலித்தார் வெகுநூலி லநேக வித்தை
பார்த்தவர்க்கு வெகுசுளுக்காய்ப் பண்பாய்க் காணும்
ஆலித்த நேசுந்தான் பார்த்திட் டாலும்
அதற்குள்ளே சித்தியொன்று மணுகி டாது
காலித்து கால்தலையாய் முன்பின் னாக
கறடாகக் கருகலாக வைத்துப்போட்டார்
சோலித்துப் பார்த்தபடி அடியேன் மார்க்கம்
சூட்சமெல்லாம் நூல்தனிலே சூட்டி னேனே. 156

சூட்டினதோர் சத்தியென்ற சாரந் தன்னை
சுளுக்காகக் கட்டுதற்குத் துறையைக் கேளு
வெட்டினதோர் வெடியுப்பு நீரி னாலே
மிகத்தோய்த்து ரவிக்குள்ளே போடு போடு
பாட்டினதோர் பட்சமொன்று போட்டா யானல்
பாங்கான பின்புதான் பரிசு கேளு
காட்டினகல் லுப்புபழம் புளியு மரைத்துக்
கவசமாகக் கட்டியேநீ காயப் போடே. 157

காய்ந்தபின்பு பத்தெருவிற் புடத்தைப் போடு
கடிசான சுண்ணும்பாம் சத்திச் சாரம்
ஆய்ந்தபின்பு கல்லுப்பும் சமனாய்ச் சேர்த்து
அந்தெடைக்கு நவச்சாரங் கூடக் கூட்டி

நோய்ந்தபின்பு நெட்டங்கு மட்டு மாட்டி
நேராகப் புடம்போட்டு பனியில் வைக்க
பாய்ந்தபுலி போலவே செயநீ ராகும்
பட்டாங்கைப் படிப்படியாய்ப் பகரக் கேளே. 158

பட்டாங்கைச் சொல்லவே வீரம் பூரம்
பாங்கான லிங்கமொடு வகைக்குக் காசாய்த்
திட்டாங்க மாய்ப்பொடியாய்ப் பண்ணிப் போட்டு
சிறப்பாக வீரத்தில் தங்க ரேக்கை
அட்டாங்கந் தானென்று மேலே சுற்றி
ஆண்மையாஞ் சூடனுடை விளக்குத் தன்னில்
துட்டாங்கச் செயநீரில் தோய்த்து வாட்ட
சுருக்கமதா யிறுகியுமே கட்டும் பாரே. 159

கட்டினதோர் வீரத்தைக் கனகத் தூட்டக்
கண்திறந்து வாங்கியுமே யுடையும் பாரு
தெட்டினதோர் தூளதனைக் கல்வத் திட்டுச்
சிறப்பாக முன்கட்டு வீரம் போட்டு
முட்டினதோர் முலைப்பாலால் சாம மாட்டி
முறுகாமல் லேசாக வில்லை பண்ணி
நெட்டினதோர் நிழலுலர்த்தி அண்டத் தோடு
நேர்ப்பாகப் பொடித்துமே கீழ்மேற் போடே. 160

போட்டுமே யதற்குள்ளே வில்லை வைத்து
பெரியபுடம் போட்டிடவே தங்கம் நீறும்
மாட்டுமே மல்லிகைப்பூப் போலாஞ் சுண்ணம்
வாதந்தான் பிறக்கின்ற கற்ப மாச்சு
தீட்டுமே வாதமென்ற வுளிய தாகும்
சிறந்தகட்டைக் கனுவையெல்லாந் தறிக்கு மப்பா
ஓட்டுமே வாதத்தோர்க் குறுதி யாக
உற்பனந்தான் கோசமென்ற சுண்ணந் தானே. 161

கோசமென்ற சுண்ணத்தைத் துரிசிக் கப்பி
குறிப்பாகப் புடம்போடக் கண்டர் சுண்ணம்
விசமென்ற ஆனையதில் வீறிட் டுச்சாம்
விலங்காகுஞ் சூதமென்ற ஆனைக் கப்பா
பாசமென்ற படுகுழியில் வீழ்ந்தாற் போலப்
பதைத்துமே கட்டியுமே மணியு மாகும்
நாசமென்ற சாவதுவும் ஓடிப் போச்சு.
நாட்டமாங் காயசித்தி சுறுக்கி லாச்சே. 162

ஆச்சுதே நாடிப்பா ருலக வாழ்க்கை
அரைக் கணந்தா னுற்றுப்பார் பொய்யாம் மாயை.
போச்சுதே பார்த்தவுடன் வெறும்பொய் யாகும்
பெண்மாயை தனிலழுந்திச் சுரைக்கொ டியைப்போல்
ஏச்சுதே லயித்தவுட னெல்லாம் போகும்
எங்கெங்கு மாயையா மிருளிற் புக்கி
மாச்சுதே நல்வினைதீ வினைக ளாகி
மகத்தான சன்னமாம் பிறவி யாச்சே 163

பிறவியென்ற சாகரத்தி லழுந்தி டாதே
பெரிதான நூல்தனிலே புக்கிப் பார்த்துத்
துறவியென்ற சித்தருக்குத் தொண்டு பண்ணி
சூட்சாதி சூட்சமெல்லாங் கேட்டுக் கொண்டு
சிறவிபோல் தேகசித்தி பண்ணிக் கொண்டு
சித்தியாம் சரக்குவைப்பை ஒவ்வொன் றாக
மறவியா யில்லாமல் வைத்துக் கொண்டேநீ
வாதத்தில் நுழைந்துபார் பின்பு தானே. 164

தானான நூன்முறையிற் சொன்ன மார்க்கம்
தவறாத படிக்கினிமேல் வரிசை யாக
ஊனான காயத்தைச் சித்தி பண்ணி
உண்மையாய்ச் சிதம்பரத்தைப் பூசை பண்ணு
தேனான சிலம்பொலியிற் சதாநித் தமேவி
தேவியுடைப் பதந்தன்னில் விலங்கைப் பூட்டிக்
கானான சமாதியிலே இருந்து கொண்டு
கசகாமல் வாசியைநீ கருத்தோ டுன்னே 165

8-வது ஏகம்பச்சார வைப்பு

கருத்தாக ஏகம் பச் சாரங் கேளு
கைகண்ட துறையிதுதான் கண்டு பாரு
குருத்தான பூநீறு சேர்தான் இரண்டு
கூர்மையாம் வெடியுப்பு சேரி ரண்டு
விருத்தான வெங்காரம் சேரி ரண்டு
வெளுப்பான சீனமது சேரி ரண்டு
பருத்தான கல்லுப்பு சேரி ரண்டு
பாங்கான சாரமது சேரி ரண்டே. 166

ரெண்டோடு பல் லிரண்டு சேரு தன்னை
நேகவே பொடிபண்ணிக் கல்வத் திட்டு
விண்டோடு வெடியுப்புச் செயநீ ராலே
விளங்கவே அரைத்தரைத்து ரவியிற் போடு

பண்போடு பட்சமொன்ற ரைத்த பின்பு
பாங்கைக்கேள் பொடிபண்ணி வைத்துக் கொண்டு,
அண்டோடு பொடிபண்ணிச் சேரி ரண்டு
அடிகனத்த தோண்டியிரண் டபர வாங்கே. 167

வாங்கியே ஒன்ருேடே ஒன்றைத் தேய்த்து
வைத்துமே மேல்தோண்டி தன்னிற் கேளு
ஓங்கியே உள்ளுக்குள் ஊமத் தஞ்சாறு
உலரவிட்டு லரவிட்டஞ் சுதரம் பூசு
தேங்கியே தோண்டியடி தன்னிற் கேளு
சிறப்பாக அண்டோட்டின் பொடிபா திபோட்டு
விங்கியே முன்மருந்து நடுவே வைத்து
மேலுமந்த அண்டோட்டுப் பொடியைத் தூவே. 168

தூவியே கையாலே யழுத்தி நன்ருய்
தோண்டியைத்தான் மேல்மூடி மண்ணைச் செய்து
ஆவியே போகாமல் அடுப்பி லேற்றி
அசகாமல் முத்தீயும் அறுசா மந்தான்
தாவியே எரியிட்டு ஆறப் போட்டு
சந்துக்கு நீர்விட்டு மண்ணை வாங்கு
பாவியே படுக்கவிட்டு மண்ணை யெல்லாம்
பக்குவமாய் வாங்கியே பாரு பாரே. 169

பார்க்கவே வெளுப்பாக மேல்தோண் டிக்குள்
பற்றியே மாப்போலே யிருக்கும் பாரு
சேர்க்கவே மாவெல்லாம் கதிர் போலாக
சிந்தாம லெடுத்துமே நிறுத்துக் கொண்டு
மர்க்கமாய் மயிர்க்குச்சுக் கட்டிக் கொண்டு
மாவெல்லாம் சுறண்டியே வாங்கு வாங்கு
சாக்கவே கல்வத்தில் மாவை யிட்டுக்
கடிதான திராவகத்தால் அரைத்தி டாயே 170

அரைத்திட்டு ரவிதனிலே காயப் போடு
அரைத்துமே அரைபட்ச மான பின்பு
கரைத்திட்ட கல்லுப்புச் சேரு நாலு
கரைத்துமே தண்ணீரிற் காய்ச்சி யுப்பாய்
துரைத்திட்ட சூதமது பலந்தான் பத்து
சுத்தமாங் கெந்தகமொன் றேகால் பலந்தான்
உரைத்திட்ட செந்தகத்தை யோட்டி லுருக்கி
உயர்கின்ற சூதத்தைப் போட்டுக் கிண்டே. 171

கிண்டவே கரிபோலே தூளு மாகும்
கெட்டியாந் தோண்டிக்குட் சாறு பூசி·
அண்டவே யஞ்சுதரம் மத்தஞ் சாறு
அடைவாக அதுமேலே பூசிப் பூசி
ஓண்டியே யுலர்ந்தபின்பு மேல்தோண் டியாக்கி
உகந்தஅடித் தோண்டிக்குற் பனத்தைக் கேளு
கண்டவே கல்லுப்புத் தூளுக் கிரட்டி
கலந்திடுவாய் செங்கலென்ற தூளுந் தானே. 172

தூளுந்தான் கலந்தரையே வாசி போட்டு
சூதத்தின் தூள்தனையே யதன்மேல் வைத்து
வேளுந்தான் மேலுமந்த செங்க லுப்பை
விரவியே மேல்தோண்டி தன்னுல் மூடி
வாளுந்தான் மண்செய்சக் கரமா மடுப்பில்
வைத்துமே தீயெரிப்பா யறுசா மந்தான்
பாளுந்தான் பதங்கமது மேலே யேறும்
பக்குவத்தி லாறவிட்டுப் படுக்கப் போடே, 173

படுக்கவே போட்டிருந்த தோண்டி தன்னைப்
பாங்கான மண்மேலே தண்ணீர் குத்தி
அடுக்கவே அசையாமல் நீக்கிக் கையால்
அதன்பின்பு மேல்தோண்டி மல்லாத் திவைத்து
படுக்கவே மயிர்குச்சி யாலே வாங்கி
வாகான பீங்கானிற் பதனம் பண்ணி
முடுக்கவே முன்சாரம் பலந்தா னெட்டு
மூர்க்கசூதப் பொடிதானும் பலந்தான் ஞூலே. 174

பலமான பன்னிரண்டுங் கல்வத் திட்டு
பண்பாக எட்டுநாள் நேக ஆட்டி
பிலமான திராவகத்தால் அரைத்த ரைத்துப்
பெரிதான ரவிதனிலே போடு போடு
நலமான பொடியான பதத்தில் வாங்கி
நற்காசிக் குப்பிக்குட் பாதி போட்டு
வலமான வாலுகையின் மேலே வைத்து
மறவாதே பன்னிரண்டு சாமத் தியே. 175

தியதுவு முத்தீயு மாட்டிப் பின்பு
சீதளமா யாறவிட்டெ டுத்துக் கொண்டு
ஓயதுவு முடைத்துப்பார் சிவப்புத் தானுய்
உசந்தடியிற் ருனிருக்கு மெடுத்துக் கொண்டு
காயதுவுங் கல்வத்தில் நிறுத்துக் கொட்டி
கனகத்தின் ரேக்கதுவும் மெட்டுச் கொன்று
தோயதுவுந் திராவகத்தி லரைத்து மைபோற்
சுத்தயாய்க் காசியென்ற மேருக் கேற்றே. 176

மேருக்கேற் றியேவாலு கைக்குள் வைத்து
விதமாகத் தீபன்னி ரண்டு சாமம்
ஏருக்கே ஆறவிட்டெ டுத்துப் பாரு
இதமாக அருணன்போல் சிவப்பு மாகும்
தேருக்கே அலங்கார மானற் போலச்
சிவந்ததோர் நவச்சாரப் போக்கு மாகும்
போருக்கே தொடுத்ததோ ரம்புப் போலப்
பொன்னுன வருடந்தான் பொழியும் பாரே. 177

பொழியுமே சரக்குகளிற் பொட்டுப் போடப்
பேராகக் கட்டுண்டு பொன்னு மாகும்
விழியுமே சூதமென்ற ஆனே கட்டும்
விடுபட்ட நவலோகம் பரிசிக்கில் பொன்னும்
கழியுமே காயசித்தி சுறுக்கி லாகும்
கனகப்போற் றேகமுமாங் கத்தூ ரிவீசும்
வழியுமே கோடிலட்சங் காதந் தானும்
மகத்தான ஒருநொடியிற் சுற்ற லாமே. 178

நொடிக்குள்ளே சுற்றியேமா மேருக் கிரியை
நுட்பமான மூலிகைகள் கண்டு கொள்ளு
மடிக்குள்ளே வைத்ததனம் போலத் தானும்
மகத்தான மூலிகையிற் சுறுக்கு வித்தை
செடிக்குள்ளே ஒவ்வொன்றிற் சூதங் கட்டும்
சித்தான மூலிகைகள் மெத்த வுண்டு
இடிக்குள்ளே சத்தமுற்ற நாகம் போல
இடும்பான ஆணவத்தை நீக்கிப் போடே. 179

ஆணவத்தை யைம்புலனை யடித்த கற்று
ஆதியொன்ற சவுக்காரக் குருவைப் பண்ணு
தோணவத்தை வெடியுப்புச் செயநீர் பண்ணு
சுறுக்கான திராவகத்தை வைத்துக் கொண்டு
தாணவத்தை சரக்கையெல்லாம் வைத்துக் கொள்ளு
தவருதே காயசித்தி பண்ணிக் கொள்ளு
மாணவத்தைப் போக்கிவிட்டு மூலம் பார்த்து
வழியாறு தலமெல்லா மேறிப் பாரே. 180

ஏறியே பாரென்று காலாங் கியையர்
ஏழையாம் பிள்ளையென் றுபதே சித்தார்
மாறியே மனப்பிடித்தா றுவரைத் தாண்டி
மதியென்ற சந்திரமண் டலத்திற் புக்கித்
தேறியே தேறலைத்தான் தெவிட்ட வுண்டு
தேவியவள் பதந்தன்னிற் சொக்கிப் போனேன்
மீறியே நடனவொலி செவிக்கு ளாச்சு
மேலேறிக் குருபதத்தில் மேவி னேனே. 181

மேவியே சிவப்பான சாரந் தன்னை
வெட்டவெளிக் கருமறைப்போ லொன்று மில்லை
தேவியே சொன்னபடி யானும் சொன்னேன்
திருமூல நாதர்பதம் சிரசில் வைத்து
ஆவியே போறவுயிர் கணத்தில் மீட்கும்
ஆயியுடைக் கிருபைபோல் அனைத்து மளிக்கும்
பாவியே இதைத்தின்று சடத்தைப் போற்று
பாங்கான ஆனந்தத் தொய்தத் தூடே 182

ஊடியே சிதம்பரத்தில் நடனந் தன்னை
உற்றுப்பார் ஆனந்தக் கூத்தைத் தானும்
நாடியே பின்னொன்றில் மனம்நா டாதே
நாட்டமாய் வாசியைநீ தவறி டாதே
தேடியே மனதுதன்னைத் திடப் படுத்திச்
செகசாலத் தேசுமன்று மாய்ந்தி டாதே
வாடியே யிளையாதே பெண்ணைத் தேடி
வருந்தியே பசியடக்கிக் கோபம் போக்கே. 183

போக்கான சாரத்தை ராம தேவர்
போராடி நாலுயுகம் பார்த்துத் தேர்ந்தார்
வாக்கான சாரத்தாற் குளிகை கட்டி
மகத்தான சித்தியுண்டா யட்டாங் கவித்தை
தாக்கான சித்தியெல்லா மாடிப் பார்த்தார்
சாங்கமாய் சாரத்தை யானும் யார்த்து
நோக்கான மகிமை சொல்லக் கூடா தென்று
நுட்பமாய்ச் சுருக்கியே சொன்னேன் பாரே? 184

சொன்னதோர் சிவப்பான சாரந் தன்னைச்
செம்புருக்கி நூற்றினுக்கொன் றீந்தா யானல்
வன்னதோர் மாற்றுபனி ரண்டு மாகும்
மாசற்ற சூதத்தைக் கரண்டி விட்டு
பன்னதோர் பத்துக்கொன் றுகச் சாரம்
பாங்காகக் கூடவிட்டுக் கொதிக்க வைக்க
இன்னதோர் இட்டவிபோற் கட்டி யாகும்
ஏற்றமாம் சூதமிஃ துருகிடும் பாரே. 185

உருகியே இச்சூதம் கன்விட் டாடும்
உத்தமமாங் குளிகைக்காஞ் சார ணைக்காம்
பருகியே கமலினிக்காம் சொருபத்துக் காமே
பாய்ச்சினூற் ககனவழி சுறுக்கா யோடும்
கருதியே சாரத்திற் போக்கு மெத்த
சணத்திலே சட்டைகக்கி பாலை யாகும்
பெருகவே பெருமரத்தில் கோடி கவர்போல்
பிரித்துமே ஆடலாம் பேசா தாடே. 186

ஆடினதோர் ஆட்டெல்லாம் சவுக்கா ரத்தாலே
ஆண்மையாம் வெடியுப்பு நீரினாலே
ஓடினதோர் ஓட்டெல்லாம் சூதத்தாலே
ஊறலற்ற ஏமமெல்லாம் சாரத் தாலே
தேடினதோர் தேட்டெல்லாஞ் துரிசினாலே
சிவப்பான ஏகம்பச் சாரத் தாலே
பாடினதோர் பாட்டெல்லாம் பலிப்பு மாச்சு
பார்த்துணர்ந்து படிப்படியாய்ப் பாடி னேனே. 187

9–வது கெந்தியுப்பு வைப்பு

பாடியே கெந்தியுப்பின் பண்பு கேளு
பார்த்தவர்க்கு வெகுசுளுவு பாங்காய்ப் பாரு
நாடியே கடற்றண்ணீர் கொண்டு வந்து
நாலாறு சட்டியிலே யுப்புக் காச்சி
தாடியே தாழியென்ற சட்டிக் குள்ளே
தாக்காக வுப்பையெலாம் வாரிக் கொட்டி
ஆடியே யாலேச்சா றடுப்பில் வைத்து
அதட்டியே பெயரிடவே யிளகும் பாரே. 188

இளகயிலே இருபதுக்கே ஒன்று சீனம்
ஏற்றமாம் வெடியுப்பி ருபஃதுக் கொன்று
பளகயிலே இருபதுக்கே ஒன்று கேளு
பாங்கான வாணத்தின் கெந்தி யோடு
நிளகயிலே நீலவுண்டை அந்தெடையே டோடு
நிறையாகப் பொடிபண்ணிக் கூடப் போட்டு
அளகயிலே இரும்பான கோலாற் கிண்டி
அதட்டியே எரியிட்டா றப்போட் டும்மே. 189

ஆறவிட்டுத் தாழியைத்தா னுடைத்துப் போடு
அடுக்காகக் கெட்டியாங் கெந்தி யுப்பு
தேறவிட்டுப் பாண்டத்தில் வைத்துக் கொண்டு
சித்தாகும் தொழில்முறையைச் சொல்லக் கேளு
நூறவிட்டு செப்பதனைச் சுத்தி பண்ணி
நலியாமற் தகடுபுளி யிலேபோல் நறுக்கி
ஏறவிட்டு வெடியுப்பு நீரினாலே
இழுத்தரைப்பாய் கெந்தி யென்ற உப்பைத் தானே. 190

கெந்தியென்ற உப்பதுவும் பலமு நாலு
கேடில்லாச் செம்பதுவும் பலமு நாலு
மெந்தியென்ற கெந்தியுப்பை வெடியுப் புநீரில்
மிடுக்காக அரைத்துமே கவசங் கட்டி
புந்தியென்ற புளிப்புறணிக் குள்ளே வைத்து
பேராக எருவடுக்கிப் புடத்தைப் போட்டு
சந்தியென்ற தாம்பிரத்தின் தகட்டை யெல்லாம்
சாகசமாய்த் தானெடுத்து வைத்துக் கொள்ளே. 191

எடுத்துமே கெந்தியுப்பை வெடிப் புநீரில்
இழுத்தரைத்து மறுபடியுங் கவசங் கட்டி
விடுத்துமே முன்போலப் புடத்தைப் போடு
மேன்மையா யிப்படியே மூன்றும் போடு
தொடுத்துமே நொறுங்கியே யெல்லாம் தூளாம்
துப்புரவாய்ப் பொறுக்கியே கல்வத் திட்டு
அடுத்துமே தானரைத்துஅ ரிதாரந் தன்னை
அடுக்கான சுண்ணும்பிற் சுத்தி பண்ணே. 192

பண்ணியபின் வெடியுப்பு நீரி னாலே
பாங்காகச் சுறுக்கிட்டு நாலு சாமம்
அண்ணியபின் வளையலுப்பை அரைத்துக் கொண்டு
அரிதாரந் தன்மேலே கவசங் கட்டி
கண்ணியபின் கரியோட்டி லடுக்க வாட்டி
காரியமா முன்செப்போ டொக்கச் சேர்த்து
திண்ணியபின் பச்சைரகச் செந்தூ ரத்தைச்
செயநீரிற் சுறுக்கிட்டுக் கூடப் போடே. 193

போடுநீ செம்புக்கு நாலத் தொன்று
பொருமுகின்ற திராவகத்தா லரைத்து மைபோல்
ஆடுநீ அகலிலிட்டுப் புடத்தைப் போட்டு
அதீதமாம் வவள்ளியிலே பத்துக் கொன்று
கோடுநீ கொடுத்திட்டு ஊதிப் போட
குணமாக மாற்றுமே யாறு காணும்
போடுநீ யிதைத் தொட்டுச் சரக்கை வைத்து
பின்புதான் பெரியதொழில் பூண்டு பாரே. 194

பூண்டுமே பெரியதொழி லெல்லாம் பார்த்து
பெருமைசற்று மில்லாமற் றன்மை யாகி
ஆண்டுமுனை யடித்தாலும் வைதிட் டாலும்
அவன்செயலே யென்றெண்ணி ஆண்மை குன்றி
தூண்டுமே மூலத்திற் கருத்து வைத்து
சுத்தசைதன் னியந்தன்னில் தூக்க முற்று
ஈண்டுமே யெந்நேரம் வேதாந் தம்பார்த்
தேழையைப்போ லிருந்துகொண்டே ஏற்றம் போக்கே. 195

ஏற்றமா மாணவத்தைப் போக்கி விட்டே
இருந்துகொள்ளு சமாதியிலே யெந்நே ரந்தான்
சீற்றமாம் பொறியஞ்சுந் தகித்துப் போட்டுத்
தேசியென்ற குதிரைதன்னை வசமாக் கிக்கொள்
நாற்றமா முடம்புதன்னைச் சித்தி யாக்கு
நாதாந்த வேதாந்த நாட்டம் பாரு
மூற்றமா மடவார்மே லாசை நீக்கு
முனையான கழிமுனையில் மூட்டிப் பாரே. 196

முட்டியே துட்டருடன் பேசி டாதே
முற்கரமாய்ச் சிகாரத்தை ரேசிக் காதே
எட்டியே பிரணவத்தை யெழுத்தி டாதே
இடும்பான புலையருட னிணங் கிடாதே
மட்டியா மனிதருடன் போதப் பேச்சை
வாய்வைத்துப் பேசாதே மவுனஞ் சாதி
திட்டியா லாசைதன்னைச் சிந்திக் காதே
திடப்படுத்தி மனந்தன்னை யொருமித் தோங்கே. 197

ஓங்காரக் கம்பத்தில் அசபை யைத்தான்
உறுதியாய்க் காயத்திரி தன்னைத் தானும்
ரீங்காரத் தேவியுடை வீட்டிற் கட்டி
நித்தியமாம் பூரணத்தை நீங்கா தோங்கு
ஆங்கார ஆணவமாஞ் சிங்கந் தன்னை
அடியோடே வேர்களைந் தப்பாற் போடு
ஓங்காரப் பொறிகளஞ்சாம் புலிகள் தம்மை
பீசகாமல் ஒருமித்து மனத்திற் கட்டே. 198

கட்டியே திலாலவண வைப்புத் தன்னை
கவடற்று நிரந்தரமும் சொல்லக் கேளு
ஒட்டியே எட்சக்கை சுட்ட சாம்பல்
உகந்துமே கலந்தானு மளந்து கொண்டு
கொட்டியே குருதுதன்னில் தண்ணீ ரூற்று
கூசாதே நீரெல்லாம் தாழிதனில் வார்த்து
அட்டியே அடுப்புவைத்துக் காயும் போது
ஆதியான பூநீறு படிதான் மூணே. 199

மூணோடு கல்லுப்புப் படிதான் மூணு
முதற்றரமாம் வெடியுப்பும் படிதான் மூணு
ஆணோடு இவையெல்லாம் தாழியிலே போட்டு
அடுப்பில்வைத் தெரியிட்டுக் கரைந்த பின்பு
வாணோடு மறுசட்டி தன்னிற் றூனே
வடிகட்டி வார்த்துடனே யடுப்பிற் காய்ச்சு
பாணோடு துரும்பினிலே தோய்த்துக் கொண்டு
பனையோலை தன்னிலேநீ குத்திப் பாரே. 200

## குறிப்புரை

### பாடல் எண் 151 முதல் 200 வரை

பாடல் எண் : 151 :- நளினம் - அழகு (தாமரை)

பாடல் எண் : 154 :- சுளுக்காக - சுறுக்கமாக என்பதன் மருஉ. சுளு வாய் என்றும் வழங்குகிறது.

பாடல் எண் : 155 :- பஞ்சகர்த்தர் - ஐந்தொழில் செய்பவர் (சத்தி) பஞ்சகிர்த்யம் - ஐந்தொழில் (ஆக்கல், அளித்தல், மறைத்தல், அருளல்.) ககனம் - விண் (ஆகாசம்).

பாடல் எண் : 157 :- துறை - வழி; ரவி - சூரியன்.

பாடல் எண் : 159 :- காசு - ஐந்து குன்றி எடை; எடுத்தலளவை (எடை) சூடன் - கர்ப்பூரம்.

பாடல் எண் : 160 :- கனகம் - பொன்; உடையும் - வெட்டையாகும். அண்டத்தோடு - கோழி முட்டையோடு (சுத்தித்தது).

பாடல் எண் : 161 :- நீறும் - பற்பிக்கும். உளி - ஆயுதம். கோசம் - கரு.

பாடல் எண் : 162 :- கண்டர் - மயில்துத்தம், விலங்கு - கட்டுதற்கான பொருள்; சாம் - இறக்கும். சூதம் - இரதம்; மணி - இரதமணி.

பாடல் எண் : 164 :- சாகரம் - கடல்; சிறவி - சிறந்தவன் (துறந்தவன் என்பதைத் துறவி என்றல் போல்) மறவி - மறந்தவன் (சரியாக நினைவு இல்லாதவன்).

பாடல் எண் : 166 :- குருத்தான - பாடல் எண் 152-ல் கண்ட விளக்கம் கொள்க. சேர் - எட்டு பலம் (கொண்ட எடுத்தலளவை).

பாடல் எண் : 167 :- நேக - நுண்ணியதாக. அமர - பொருந்த (வாய்கள்).

பாடல் எண் : 168 :- ஊமத்தன் நீர் - ஊமத்தைச் சாறு.

பாடல் எண் : 169 :- அசகாமல் - அசங்காமல் என்று வழங்கும். சந்து - இணைப்பு (சட்டிகள் வாய் பொருத்திய இடம்).

பாடல் எண் : 170 :- கடிசான - வீரியமுள்ள.

பாடல் எண் : 171 :- கிண்டு - கிளறு.

பாடல் எண் : 172 :- மத்தன் சாறு - ஊமத்தைச் சாறு.

பாடல் எண் : 173 :- வாசி - அளவு. விரவி - கலந்து.

பாடல் எண் : 174 .- குத்தி - விட்டு.

பாடல் எண் : 175 :- வாலுகை - மணற்பொறி.

பாடல் எண் : 176 :- முத்தீ - தீபாக்கினி, கமலாக்கினி காடாக்கினி. ரேக்கு - மெல்லிய தகடு.

பாடல் எண் : 177 :- மேரு - குப்பி, அருணன் - சூரியனுடைய சாரதி என்றும் சூரியனென்றும் நூல்கள் கூறும்.

வருடம் - மழை (வர்ஷம் என்னும் வட சொல்லின் தற்பவம்)

பாடல் எண் : 178 :- பொட்டு - சிறிதளவு (சொட்டு) பரிசி - தொடு கத்தூரி - (கத்தூரியின்) மணம் காதம் - 3 மைல் என்றும் பத்து மைலென்றும் கூறுவர். (நீட்டலளவை) 4,800 கி.மீ.) (அ) (16 கி.மீ) நொடி - விநாடி. நவலோகம் - பொன், வெள்ளி, இரும்பு, நாகம், வெள்வங்கம். கருவங்கம், தாம்பிரம், (கலப்பு லோகமாகிய) பித்தளையும், வெண்கலமும் என்பர்.

பாடல் எண் : 179 :- தனம் - செல்வம்; ஆணவம் - அகங்காரம்.

பாடல் எண் : 180 :- வழியாறுதலமெல்லாம் ஏறிப்பாரே - முறையோடு வழியாக ஆருதாரத்திலும் ஏறி (இன்பமனுவித்துப்)பார்.

பாடல் எண் : 181 :- ஆறுவரை - ஆருதாரங்கள் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆக்ஞை.)

மதியென்ற சந்திர மண்டலம் - சகஸ்ராரம்; தேறல் - தேன் (அமுதம்) தெவிட்ட - மனதார.

பாடல் எண் : 182 :- கணம் - நொடி (கால அளவை) ஆயி - தாய் (உலகமாதா (பராசக்தி)

சடம் - தேகம்; ஆனந்தத் தொய்தநூடே - இருவகையான மகிழ்ச்சிக்குள்ளே. (தொய்தம் - இரண்டு).

பாடல் எண் : 183 :- செக சாலம் - உலகமாயை (கூட்டம்); மாய் - இற.

பாடல் எண் : 184 :- குளிகை - (இரத) மணி.

அட்டாங்க வித்தை - யோகம்.

பாடல் எண் : 186 :- சாரணை, சுறுக்குக் கொடுத்தல. கமலினி - எரிப்பு முறை (பற்பம், சுண்ணம் செய்ய). உருவுடனும் அருவமாயும் இருக்கலாம். எண்ணிய உருவங்கள் படிமங்கள் உருக்கி ஊற்றிச் செய்யலாம். ககனம் - விண் ; சட்டைகக்கி - தோலுரிந்து; பாலை - இளமை; கவர் - கிளை.

பாடல் எண் : 187 :- ஏமம் - பொன்

பாடல் எண் : 188 :- ஆலைச்சாறு - கரும்பின் சாறு (ஆலையிலாட்டி எடுத்தது)

பாடல் எண் : 189 :- நீலவுண்டை - துரிசு.

பாடல் எண் : 190 :- சித்தாகும் - வேதை செய்யும்.

பாடல் எண் : 191 :- புளிப்புறணி - புளிமரத்தின் மேற்பட்டை.

பாடல் எண் : 192 :- அரிதாரம் - தாளகம்,

பாடல் எண் : 193 :- பச்சைரசச் செந்தூரம் - கடைச் சரக்காகிய ரசசெந்தூரம்

பாடல் எண் : 195 :- தண்மை - அருளாளனுந்தன்மை; சைதன்னியம் - சமாதிநிலே.

பாடல் எண் : 196 :- ஆணவம் - அகம்பாவம் (யான் எனதென்னும் எண்ணம்); தகித்து - எரித்து; மடவார் - பெண்கள்.

பாடல் எண் : 197 :- முற்கரமாய் - முரட்டுத்தனமாய்; சிகாரத்தை - பஞ்சாட்சரத்தில் 'சி' என்பது தியம்சமானது.

ரேசி - காற்றை மூக்கின் வழியாக வெளிவிடல் இது சரநூலின் தேர்ச்சி பெற்றவரிடம் முறையாக உபதேசம் கொள்ளவேண்டிய முறை.
அசபை - ஹம்ஸ காயத்திரி.

பாடல் எண் : 198 :- பிசகாமல் - வழுவாமல்.

பாடல் எண் : 199 ; கவடு - வஞ்சனே; கலம் - 12 மரக்கால் (96படி) தண்ணீரெல்லாம் - சாம்பல்கரைத்துத்தெளிந்த நீர் தாழி - பெரிய பானே; எட்சக்கை - எள்ளின் செடிகளின் தறித்த சக்கை.

பாடல் எண் : 200 :- துரும்பு - சிறிய குச்சி.

பாரோடு உறைந்தக்காற் பதமாச் சென்று
பற்றியே யிறக்கியசை யாமல் வைத்து
தாரோடு மூன்றுநாள் சுப் பிரமாம் ரவியில்
சுயம்பாகக் காய்ந்திட நீ ரெல்லாம் வற்றி
தேரோடு திலாலவண மாயிருக்கும்
செப்பரிதி தன்மகிமை சிவன்சொல் லவேணும்
காரோடு காலாங்கி நாதர் சொல்ல
கருத்துறைத்த சைந்திடாமல் வைத்தி டேநீ. 201

அசையாமல் வைத்துமே யாறப் போட்டு
அசையாம லுறைந்துமே யுப்புப் போலக்
கசையாமற் கருஞ்சிவப்ப தாயி ருக்கும்
காரியமாந் திலாலவண மென்று பேரு
திசையாமல் தீநீர்க்காங் கிராணத் துக்காம்
செப்பரிய குன்மவலி ஓடிப் போகும்
வசையாமல் வாதத்தை யுண்டாக் குவித்த
மகத்தான திலாலவண மார்க்கந் தானே. 202

லவணத்தை வெடியுப்பு நீரா லாட்டி
நாற்சாமந் தானரைத்தே யகலி லிட்டு
புவணத்தை மண்செய்து புடத்தைப் போடு
பெரிதான சுண்ணும்பாஞ் சாரம் சேர்த்து
தவணத்துக் கெடைக்கெடை தானரைத்து மைபோற்
சார்வாகப் புடம்போட்டுப் பனியில் வைக்க
பதணத்தைப் பலபலெனச் செயநீ ராகும்
பாகமாம் வீரத்தைப் பொடித்துத் தூவே. 203

வீரளடை பூரமொடு லிங்கங் கூட்டி
விளங்கவே பொடிபண்ணி நீரிற் போட்டு
மாரளடை மனோசிலைதான் பலமு மொன்று
மகத்தான லிங்கமொரு பலமு மாகும்
தூரளடை முலைப்பாலில் பழச்சாற் றில்தான்
சிறுபிள்ளை யமுரியினிற் கற்சுண் ணநீரில்
பாரளடை பாக்குவெற்றி லையுந்தான் தின்ற
பாங்கான வாய்நீரிற் சுத்தி பண்ணே. 204

சுத்தியே பண்ணியபின் சொல்லக் கேளு
சூட்டியே அப்பிரகத் தகட்டில் வைத்து
மத்தியே மனோசிலையும் லிங்கந் தானும்
வரிசையாஞ் செயநீரிற் சுருக்குப் போடே
எத்தியே இருசரக்கும் கட்டிப் போகும்
ஏற்றமாம் நாற்சாமம் சுருக்குப் போட்டு
பத்தியே பின்புதான் செய்யா நின்ற
பாகத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளே. 205

பண்பான வெடியுப்பு பலமும் நூறு
பாங்கான சீனமது நூற்றுப் பத்து
கண்பான விரண்டையுந்தான் பொடியாய்ப் பண்ணிக்
கலசத்தி லரைமட்டும் போட்ட பின்பு
தண்பான சக்கரமாம் வாலை மூடிச்
சாயவைத்துப் பீங்கானில் திராவம் வாங்கு
மண்பான மனோசிலையும் லிங்கந் தன்னை
மறவாதே பீங்கானிற் புகைதாக் கவேவையே. 206

வைத்துமே பீங்கானில் திராவ கத்தை
வார்த்துமே குப்பிக்கு ளடைத்துக் கொள்ளு
தைத்துமே மறுபடியும் பீங்கா னுக்குள்
சமர்த்தாகச் சரக்கெடுத்துப் போட்டுக் கொள்ளு
பொய்த்துமே புகையடங்கி நீர்வா ராட்டால்
பேரான கரிநெருப்பில் ஓட்டை வைத்து
துய்த்துமே சுறுக்கிடுநீ சரக்கை வைத்துச்
சுப்பிரமாய் நாற்சாமஞ் சூட்சந் தானே. 207

நாலுசாமம் சுருக்கிட்டா லபின் கேளு
நயமாகக் கரண்டியிற் காரீய முருக்கி
ஏலவே யிலுப்பைநெய்யி லிருபத் தொன்று
ஏற்றமாகச் சாய்த்திடவே சுத்தி யாகும்
தாலவே தகடுதட்டிக் கத்த ரித்துச்
சாதிலிங்கம் மனோசிலையின் நிறைக்குக் கூட்டி
தேலவே திராவகத்தி லரைத்து மைபோற்
செப்புக்குள் ளடைத்துவைத்துப் புடத்தைப் போடே. 208

புடம்போட்டு நவலோகத் திந்தா யானால்
பேராக மாற்றேழுங் காணுங் காணும்
திடம்போட்டுத் தங்கமிட்டுச் சிந்தூ ரித்துண்
சிறுகதிர்பொன் மேனியுமாஞ் சாவோ இல்லை
விடம்போட்ட கடிவிடங்கள் உதர நோய்கள்
மிடுக்கான நோயெல்லாம் விரைந்து போமே. 209

போமென்ற சரியையென்ன தேவி தீட்சை
பொருந்தி நின்ற கிரியையென்ன மாயிபூசை
ஓமென்ற யோகமென்ன மாசில் அமிர்தம்
உணர்வான ஞானமென்ன மவுனத் தந்திரம்
தோமென்ற தோத்திரமா யியுடைக் கீதந்
துணையாமஞ் சலிமனந்தா னடங்கும் நேயம்
வேமென்ற பானந்தான் தாயார்க் கமிர்தம்
விதமான ஞானவித்தை விளையுந் தானே. 210

விளைகின்ற ஞானத்தின் விளக்கங் கேளு
மேன்மையாம் யோகமென்ற அகார வீடு
வளைகின்ற மண்ணிலே வித்தைக் கேளு
மருவிநிற்கு மறிவான உகார வித்து
புளைகின்ற பூமியெல்லாம் படர்ந்து நின்று
போதாந்த வந்தமென்ற மகார மாச்சு
குளைகின்ற நாதமங்கே குமுறி யாடுங்
கூப்பிட்டாற் கேளாது ரூபம் போச்சே. 211

போச்சுதே தத்துவங்க ளெல்லரம் நீருய்ப்
புலன்பொறிகள் பூதாதி யொக்கக் கெட்டு
ஆச்சுதே யறுவரையில் பயங்கி நின்று
ஆகாசப் பட்டம்போ லசைந்து தோன்றும்
தீச்சுதே கடுநீச்சாய்த் திரோதா யிவெள்ளந்
துறையேது கரையேது தெப்ப மேது
மாச்சுதே மாயைவந்து சுற்றிக் கொண்டு
மனதறிவைத் தள்ளிவிடு மயக்க மாமே. 212

மயக்கமா மனவரையா மாறுக் குள்ளே
மாச்சல் மெத்த மகாகடின மனது தேறு
உயக்கமா யூணவென்றால் மணமு ணுது
உகந்துமே பிடித்தாலும் நிலையா மனது
கயக்கமாய்க் காசினியில் ஞான மெல்லாங்
கடிதான வேதாந்தஞ் சித்தாந் தந்தான்
துயக்கமாய் ஞானமென்ன கண்டிப் பில்லை
சூரியகாந் தியொளி போலத் தோன்றுந் தானே. 213

தோன்றுகின்ற நிர்மலமா மனத்தின் வீதி
சுத்தமாய்த் தாண்டினக்கால் லறிவி லேற்றும்
தான்றுகின்ற மனஞ்சயிக்கச் சாதகங் கேளு
தாக்கான கற்பமுண்ணு வத்துண் ணப்பா
பூன்றுகின்ற பானத்தின் போதத் தில்நில்
பூரணமாய்க் கேசரியில் மனத்தை யுன்னு
வேன்றுகின்ற சிதம்பரத்தின் விரிவு காணு
வெறும் வெளியில் மாச்சலெலாம் விரவி யுன்னே. 214

## 11-வது கெந்திலவணவைப்பு

உன்னியே கெந்தியென்ற லவணந் தன்னை
யுரைக்கவே யுற்பனத்தை யுற்றுக் கேளு
வன்னியே கெந்தகந்தான் பலமும் பத்து
வாணவுப்புப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
என்னியே யிந்துப்புப் பலமும் பத்து
ஏற்றமாம் வளையல் மண் பலந்தான் பத்து
தன்னியே பொடியாக்கித் தாழி போட்டு
சலுங்காம லடுப்பின்மேல் வைத்திடாயே. 215

வைத்துமே கமலம்போல் தீயைப் போட்டு
வறுத்திடுவாய் கரண்டியாற் கிண்டித் தானும்
கெய்த்துமே கெந்தகத்தின் தயில மெல்லாங்
கெட்டியாக உப்பெல்லா முண்ணு மட்டும்
பொய்த்துமே மறுபடியும் பொடியாய்ப் பண்ணி
பெரிதான பாண்டத்தி லளந்து போட்டு
ஒய்த்துமே யொன்றுக்கு நாலு தண்ணீர்
வார்கரைத்த தட்டிநன்கு கலக்கி வையே. 216

கலக்கிவைத்து நாலாம்நாள் தெளிவை வாங்கிக்
கனமான சட்டியிலே வற்றக் காய்ச்சி
உலக்கிவைத்துப் புறைகின்ற பருவம் பார்த்தே
ஊற்றிவிடு மறுசட்டி தன்னி லேதான்

நலக்கிவைத்தி ரவிதனிலே காயப் போடு
நலமான கெந்தியென்ற லவண வாகும்
மலக்கிவைத்தி தனுடைய மார்க்கந் தன்னை
வரிசையாய்ப் பார்த்துணர்ந்தால் மகிழ்ச்சி தானே. 217

## கெந்திலவணக் கட்டு

மகிழ்ச்சியாய்க் கெந்தியென்ற லவணந் தன்னை
மார்க்கந்தான் கட்டுகின்ற வண்மை கேளு
நெகிழ்ச்சியாய்ச் செம்புலியாட் டுமயிர் தானும்
நேராகப் பலம்பத்து வெடியுப் பஃதே
பகிழ்ச்சியாய்ப் படிகாரம் பலமும் மூணு
பாங்கான நவச்சாரங் காசு மூணு
எகிழ்ச்சியாய் இந்துப்புப் பலமும் மூணு
ஏற்றமாஞ் சூடனது காசு மூணே. 218

மூணோடு பூநீறு பலமும் மூணு
முனையான காரியம் பலமும் மூணு
ஆணோடு அரப்பொடியும் பலமும் மூணு
அதீதமாஞ் செம்பினரப் பொடியும் மூணு
வேணோடு வெடியுப்புப் பத்துப் பலமு
மிடுக்கான சட்டிதனி லுருக்கிக் கொண்டு
தோணோடு செம்புலியின் மயிரைத் தானும்
சுருக்கிடவே கொஞ்சகொஞ்சங் கட்டிப் போமே. 219

கட்டியே சுண்ணும்பாம் வெடியுப் புத்தான்
கணக்காக முன்மருந்துங் கூடக் கூட்டி
வெட்டியே பச்சைவெடி யுப்புத் தானும்
மிடுக்காகப் பலமைந்து கூடப் போட்டு
ஓட்டியே மருந்தெல்லா மொக்க விட்டு
உறக்கரைத்து மைபோலப் பழச்சாற் றாலே
அட்டியே யகலிலிட்டுப் புடத்தைப் போட
ஆண்மையாம் வெடியுப்புச் சுண்ணந் தானே. 220

வெடியுப்புச் சுண்ணத்தில் பச்சை வெடியுப்பு
மிடுக்காகப் பலமைந்து கூடக் கூட்டி
எடியுப்பு எலுமிச்சம் பழச்சாற் றாலே
இழுத்தரைத்த கலிலிட்டுக் கெசத்தின் புடமாம்
படிப்படியாய் மூணு தொந்த மேற்றி நீயும்
பண்பாக விப்படிமும் முறையும் போடு
கெடியுப்புச் சுண்ணும்பாம் பனியில் வைக்கக்
கெடியான செயநீர்தா னிதற்குப் பேரே. 221

### கெந்திலவணச் சுண்ணமும் செய்நீரும்

பேரான செயநீரில் வீரம் பூரம்
பேணியே லிங்கமொடு பொடித்துப் போட்டு
கேரான கெந்தியென்ற லவணந் தன்னைக்
கெட்டியாய் இழுத்தரைத்துப் புடத்தைப் போட
மாரான கெந்தியென்ற லவணந் தானும்
மாசற்றுத் தவளம்போற் சுண்ண மாகும்
தேரான சாரத்தை யெடைக்கெ டையே
சேர்த்தரைத்தண் டோட்டிட்டுப் புடத்தைப் போடே. 222

### இரதக் களங்கும் செந்தூரமும்

அண்டோட்டிற் புடம்போட்டுப் பனியில் வைக்க
ஆறுபோலச் செயநீராம் நீருக் குள்ளே
விண்டோட்டில் வீரமொடு பூரம் லிங்கம்
மேன்மையாய்ப் பொடிபண்ணிக் கூடப் போட்டுத்
துண்டோட்டிற் சூதமொரு பலத்தை வாங்கிச்
சுத்தித்துக் கல்வத்திற் போட்டுக் கொண்டு
கண்டோட்டில் செயநீரை விட்டே ஆட்டிக்
காரணமா யைந்துநாட்கள் கலர ஆட்டே. 223

ஆட்டியே கிருட்டிணவப் பிரக மிந்நீரில்
அரைத்துமே மெழுகுபோற் குகைபோற் பண்ணித்
தேட்டியே சில்லொன்றும் பண்ணிக் கொண்டு
சூதத்தைக் குழம்போடே வாரி விட்டு
மாட்டியே சில்லுத்தான் மண்ணைச் செய்து
மார்க்கமா யுமிக்குள்ளே புடத்தைப் போட்டு
வீட்டியே மறுபடியும் கல்வத் திட்டு
மிடுக்கான செயநீரா லரைத்தி டாயே. 224

அரைத்திட்டு முன்மூசை தன்னைய ரைத்தே
அழகாகுங் குகைபோல முன்போற் பண்ணிப்
புரைத்திட்டு வாரியிட்டுப் புடத்தைப் போடு
பேராக ஐம்முறையிப் படியே தானே
துரைத்திட்ட சூதமது மணியு மாகுஞ்
சுப்பிரமாய்த் தானிருக்குங் கண்விட் டாடும்
பரைத்திட்டிச் சூதமொக்கும் பராப ரத்தை
பராபரங்கள் மெத்தவுண்டு பாடி லேனே. 225

பாடிலேன் சூதத்தைக் குகைவைத் துருக்கிப்
பாங்காக நாலிலொன்று தங்கம் போடு
தாடிலேன் தங்கம்நின் றுருகும் போது
சமர்த்தாக சுத்தித்த நாகந் தானும்

சூடிலேன் சூதவெடை பாதி போடு
சுழன்குறகிற் காரியம் நாகத் தெடையே
தேடிலேன் சரக்கெல்லாஞ் சரிக்குத் தானுஞ்
சுத்தித்த கெந்தியைத்தான் கூடப் போடே. 226

போடுவது கெந்தியைக்கல் வத்திற் போட்டுப்
பொற்றலையின் சாறுதன்ஞல் அரைத்த ரைத்தே
ஆடுவத ரிதாரமஞே சிலையுங் கூட
அதிட்டான கெந்திக்கு நாலத் தொன்று
வீடுவது வீரமஞே சிலையி னெடைதான்
மிக்காக இவைநால்பொற் றலையா லாட்டி
ஊடுவது உண்டைபண்ணி மிளகு போல
உருகையிலொவ் வொன்ருய்க்கா ரத்தோ டியே. 227

ஈந்திடவே தம்பித்துக் களங்க தாகும்
எடுத்துமே நவலோகத் தீந்தா யாஞல்
ஆய்ந்திடவே மாற்றதுவு மெட்டு மாகும்
அரைத்துமே களங்கைப்பொற் றலையின் சாற்றில்
சாய்ந்திடவே ஐந்துபுடம் போட்டெ டுக்கச்
சாரிவிட்ட சூரியன்போற் சிவப்பு மாகும்
தோய்ந்திடவே தேனிலுண்ண மண்ட லத்திற்
சித்திசிக்கி ரத்திலாமுண் பத்திய மாமே. 228

உண்டுமே நிமைக்குமுன்னே குளிகை கூட்டும்
உம்மென்ருற் பூரணந்தான் கூடப் பேசும்
மண்டுமே மனவரையின் மயக்கம் போக்கும்
அறிவினிலே தொக்கிநின்ருட் டிவைக்கும் பாரு
புண்டுமே பூரணத்தி லேற்றிக் காட்டும்
பிலமான சாரணையாற் கமணம் சூதம்
திண்டுமே சித்தருக்குக் குளிகை தேட்டுச்
செகத்தோர்க்குத் தேட்டுத்தான் வாத மாமே. 229

## யோக மார்க்கம்

வாதமென்ற வரைகடந்து மனமுந் தாண்டி
மதியென்ற அறிவினுடை வரையிற் புக்கிப்
போதமென்ற பூரணத்தின் வரைகா ணென்று
பிரிவான மூன்றுவரை யேறிச் சொக்கி
ஏதமென்ற கடினமென்றே இறங்கி விட்டேன்
ஏகமாம் வெறுவெளியி லேறப் போகா
சேதமென்ற சித்திபெற்ற இருடி சித்தர்
தீர்க்கமாய்ச் சோதித்து வரைகண் டாரே. 230

வரைகண்டு சிங்கென்று முன்னே யூணி
மாசற்ற அட்சரமுந் தளமுங் கண்டு
கரைகண்டு மவுனமுன்னி மேலே யேறிக்
கடந்துநின்ற தளமெல்லாம் பார்த்துக் கண்டு
புரைகண்டு புருவமையத் திற்றான் கூடிப்
பின்புதான் துரியமென்ற அறிவிற் சொக்கி
அரைகண்டு அறிவைவிட்டு அகண்ட மேறி
அந்தரமாஞ் சமாதியுள்ளே மூழ்கி னாரே. 231

சமாதியுள்ளே மூழ்கிமூன்று வரையுந் தாண்டிச்
சடத்தோடே சொரூபவரை காண வென்று
சமாதியுள்ளே திரவென்று துணிந்து பொங்கிச்
சொக்கியல்லோ ஏறுதற்கென் னவித மென்று
குமாதியுள்ளே குளிகையெல்லாம் பார்த்துப் பார்த்துக்
கூடியேறற் றுவிக்குஞ்சொ ரூப மணியாம்
பமாதியுள்ளே பாட்டருடை நூலைப் பார்த்துப்
பதஞ்சலியார் வியாக்கிரமர் நூல்பார்த் தாரே. 232

நூல்பார்த்தே இந்தமணி நுட்பந் தன்னை
நேயமாங்கை லாயதட்சி ணாமூர்த் தியுமே
மால்பார்த்துத் தம்முடைய வர்க்க மான
வகையான சீடரிலே திருமூ லநாதர்
சேல்பார்த்துச் சனகாதி நால்வ ரோடு
செனனத்தைப் போக்கிவைத்த சண்டி கேசர்
பால்பார்த்த பதஞ்சலியும் வியாக்கிர ரோடு
பண்பான அடியேனு டொன்பான் பேரே. 233

ஒன்பதுபேர் பிள்ளைகளைத் தாம ழைத்தே
உத்தமமாய்ப் பூரணத்தி லெழுமென் றார்காண்
நின்பயிலே நின்மலம்போற் சடமோ காணு
நேரான பூரணமு மெதிரில் பேசும்
குன்பயிலே குளிகைமுதற் கண்டிப் பற்றுக்
குவிந்தெழும்புந் தீபத்தின் சுடர்போற் காணும்
துன்பயிலே தேகமில்லை சுடர்க்கொ டிபோலாம்
சூட்சமாக இருந்தசடந் தேகந் தானே. 234

தேகந்தான் மேலெழும்பி மவுன முற்றுச்
சித்துறைச் சமாதியுடைப் பலந்தான் காணு
தாகந்தான் சொரூபமணி கமலி னிதானும்
தனிலடங்கா அட்டமான சித்தி யொன்று
போகந்தான் கைகொடுத்தென் றன்பாட் டர்தான்
பொருளோடு அருளான போதங் காட்டித்
தோகந்தான் தோன்றிநிற்குஞ் சும்மா சும்மா
சொக்குமென்றார் இருந்ததிலே சும்மாத் தானே. 235

இருந்ததிலே வேதாந்தம் விளம்பு மென்றார்
எடுத்துரைத்தே னுலகத்தா யிரந்தான் வேதம்
திருந்ததிலே சனகர்வே தாந்தங் கோடி
செப்பினர் மவுனத்தைச் சண்டி கேசர்
விருந்தினர் பதஞ்சலியோ அனேகங் கோடி
விரித்தல்லோ என்பாட்டர் அனேகஞ் சொன்னார்
பொருந்தினர் அவரவர்க ளென்று யானும்
போக்கோடே யெழுகாண்டஞ் சொன்னேன் பாரே. 236

12. காச்சுலவண வைப்பு

சொன்னதோர் காச்சென்ற லவணந் தன்னைச்
சொல்லவே யதனுடைய சூட்சங் கேளு
கன்னதோர் கடலோரங் கருப்பு மணலாய்க்
கருக்கலாய்ப் பொரிப்பொரியாய் மின்னும் பாரு
வன்னதோர் மண்வாரிக் குருது கட்டி
மகத்தான கடற்றண்ணீ ரதிலே விட்டுத்
தன்னதோர் தண்ணீரை வாங்கிக் கொண்டு
தாழியிலே விட்டுமே யடுப்பி லேற்றே. 237

ஏற்றியே பூநீறு படிமூன் றிட்டே
இயலான வளையலுப்புப் படிதான் மூன்று
போற்றியே வெடியுப்புப் படிதான் மூன்று
புகழான பேதியது பலந்தா னெட்டு
கோத்தியே தண்ணீரிற் கரைத்துக் கொண்டு
குமுறவே நாலாம்நாள் தெளிவை வாங்கி
ஆற்றியே யடுப்பேற்றிக் காய்ச்சிக் கொண்டு
அழுந்தவே பதம்பார்த்தாற் றிப்போ டேதான். 238

ஊற்றியே பாய்மேலே காயப் போடு
உத்தமமாங் காச்சென்ற லவண மாச்சு
வேற்றியே வெடியுப்பு நீர்தன் னாலே
விளங்கரைத்து நாள்மூன்றும் அகலி விட்டுப்
பாத்தியே பருப்புடமாய்ப் போட்டெ டுத்துப்
பக்குவமா யாறவிட்டுப் பனியில் வைக்கத்
தேத்தியே செயநீர்தா னருவி போலாஞ்
சிறுபிள்ளை யாடுமிதில் வாதந் தானே. 239

யோக மார்க்கங் கூறல்

ஆடுறதோர் அறுபத்தி நாலு தாதும்
அடைவான காரசாரங் களொக்கத் தானும்
ஏடுறதோர் இருபத்தஞ் சோடுஞ் சோதி
இசைவான நவரத்னம் நவலோ கங்கள்

ஓடுறதோர் உபரசம்நூற் றிரண்டு பத்தும்
ஒருநொடிக்குள் சத்தாகுங் கட்டு மாகும்
தேடுறதோர் சிந்தூரம் குருவு மாகும்
செப்பரிது காசசென்ற லவணப் போக்கே. 240

போக்கான முப்மணியுங் கயிலா யவர்க்கப்
பிள்ளைகட்கே யல்லாமல் மற்றோர்க் கில்லை
சிக்கான விம்மூன்றுஞ் சித்தர் சொல்லார்
சொற்பெரிய பூரணமே சொல்லுங் கேளு
ஊக்கான தாராலுஞ் சொல்லக் கூடா
உறுவேதாந் தத்தினெளி தன்னிற் கூட்டும்
ஆக்கான அறுபான்நான் குமர புள்ளே
யாருக்குங் கிடையாது கிட்டா தென்னே. 241

கிட்டாத குளிகைக்குச் சாரணைத் தீர்த்துக்
கெடியான இதன்பெருமை காண வென்று
புட்டாத அண்டமுதற் புவனம் பார்த்தே
பேரண்டப் பதம்பார்த்துத் திரிந்தே யாடி
எட்டாத குறிப்பெல்லா மேறிப் பார்த்துப்
எளிதான பூரணத்தைக் காண வென்று
கட்டாத மனமுறையக் குளிகைகளைக் கட்டித்
துஞ்சாத மனவரையி லேறி னாரே. 242

மனவரையி லேறியே யாறுவரை கண்டு
வலிதான அறிவினுடை வரையிற் சென்று
கனவரையி லேறியேதம் மனமு றைத்தார்
கண்டத்தே சேர்ந்தேறி வரையொன்று தாண்டி
உனவரையி லிவ்வளவும் ஒன்றே வென்றார்
ஒதுங்காமல் மறுவரையில் குதிரைப் போட்டார்
இனவரையில் சென்றுமனம் பிடித்துச் சென்றார்
இம்மூன்றுங் கடக்கவொரு கற்ப மாச்சே. 243

கற்பமாய் நால்வரையி லேறும் போது
கனமான வொருகோடி யிடிபோல் நாதம்
முற்பமாய் மூச்சாடா முன்பின் தோணு
முதிர்ந்தமன மாகையினாற் பின்னுஞ் சென்றார்
அற்பமாய் ஐவரையிற் புக்கி நின்று
அரகரவென் றதனிற்றான் மனமுந் தேறி
நிற்பமாய்ச் சடமென்று நிராசை யாகி
நிலவ்ரமா யறுவரையி லேறி னாரே. 244

அறுவரையிற் சுழற்காற்றின் துரும்பு போல
அலைந்துமே மூலருடைப் பேர னாரும்
குறுவரையில் மனம்போச்சு குளிகை போச்சு
கூறாத மவுனமுள்ளே குழைந்து போச்சு

சிறுவரையிற் சிலம்பொலிதா னுள்ளே வாய்க்கச்
சிவசிவா குளிகையது கீழே வாங்கத்
துறுவரையி லென்னசெய்வே னென்றேங் கநிசத்
துரியத்தை விட்டுமெள்ளக் கீழ்க்கொண் டாரே. 245

## 13. பிடர லவண வைப்பு

கொண்டதோர் பிடாலவண வைப்பு தன்னைக்
கூறிடவே வெடியுப்புப் பலமும் நூறு
மண்டதோர் மகிடத்தின் கொம்புச் சீவல்
மாட்டிடவே பலந்தானு மைம்ப தாகும்
விண்டதோர் வெடியுப்பைச் சட்டி யிலுருக்கி
இப்பாங்காய்ச் சீவலைத்தான் கிராசம் போடு
தண்டதோர் தயிலமெலாம் வாங்கிக் கொண்டு
தம்பித்து நிற்கின்ற பருவம் பாரே. 246

பருவத்தைப் பார்த்தொன்றுக் குநாலு பங்கு
பாங்கான தண்ணீரில் பொடித்துப் போடு
துருவத்தைச் சீனமது மூவைம் பலந்தான்
தூக்கியுமே சரக்கெல்லாம் பொடியாய்ச் செய்து
தருவத்தைத் தண்ணீரிற் போட்டுக் காய்ச்சிச்
சாங்கமதாய்க் கரைத்துவடி கட்டிக் கொண்டு
அருவத்தை யடுப்பிட்டுக் காய்ச்சிக் கொண்டு
ஆனபதம் பார்த்துடனே யிறக்கிப் போடே. 247

### செயநீர்

பதம்பார்த்தி றக்கியதைப் பாலில் விட்டுப்
பரிதிமுன்னே காயவைக்கக் கம்பி யுப்பாம்
விதம்பார்த்துப் பிடாலவண மென்று பேரு
மேன்மையாம் புளியதுவும் பலமும் பத்து
நிதம்பார்த்துப் பிடாலவண மிருபத் துபலம்
நேராக இவையிரண்டும் கல்வத் தாட்டி
மதம்பார்த்த அகலிலிட்டுப் புடமாய்ப் போடு
மாசற்று வெண்மையாய்ச் சுண்ண மாமே. 248

சுண்ணத்தைப் பனியில்வை செயநீ ராகுஞ்
சுறுக்காகத் தானிருக்குஞ் சிவப்பு நீராம்
புன்னகத்தைப் பூரமொடு வீரம் லிங்கம்
பொடிபண்ணிச் செயநீரிற் போட்டுக் கொண்டு
வன்னத்தைச் சரக்கெல்லாந் தோய்த்து வாட்ட
மணிபோலே நின்றுருகும் புகையோ இல்லை
இன்னத்தை இன்னதென்று சொல்லப் போகா
எடுத்த சரக் கெல்லாந்தான் கட்டு மாமே. 249

## திராவகம்

கட்டவே திராவகத்தைச் சொல்லக் கேளு
கடிதான பிடாலவண மிருபத் துபலம்
திட்டவே சீனமதே இருபத் தைந்து
சிறப்பாக இவையிரண்டும் பொடியாய்ச் செய்து
புட்டவே புதுக்கலசந் தன்னி லிட்டுப்
பேரான சக்கரமாம் வாலை மூடி
தட்டவே சக்கரமா மடுப்பில் வைத்துச்
சாங்கமதாய்த் திநீரை வாங்கு வாங்கே. 250

## குறிப்புரை

### பாடல் எண் 201 முதல் 249 வரை

பாடல் எண் : 201 :- சுப்பிரம் = தெளிவான.

பாடல் எண் : 202 :- கிராணம் = மூக்கில் இழுத்தல்.
வாதம் = வேதை (வாதரோகமில்லை)

பாடல் எண் : 205 :- பாகம் = பக்குவம்.

பாடல் எண் : 206 :- வாலை = திராவகப் பானையின் மேல் பாகம்.

பாடல் எண் : 207 :- குப்பி = பளிங்குப் பாத்திரம்.

பாடல் எண் : 209 :- சிறுகதிர் = இளஞ்சூரியன்.

பாடல் எண் : 210 :- மாயி = தேவி (சத்தி).
பானம் = பருகும் திரவம்.

பாடல் எண் : 211 :- போதம் = அறிவு. அந்தம் - முடிவு.

பாடல் எண் : 212 :- தத்துவங்கள் = தொண்ணூற்றாறு என்பர்.
திரோதாயி = மறைப்பு.

பாடல் எண் : 213 :- மயக்கமாம் மனவரையாம் ஆறு = காமம், குரோதம், மோகம். லோபம், மதம், மாத்சரியம் என்பன. மாச்சல் = மாற்சரியம் என்பது. ஊணவென்றால் = ஊன்றவென்றால் என்பதன் மரூ, பதிய = நிலைக்க என்று பொருள்.

பாடல் எண் : 214 :- கேசரி = பரப்பிரம்மம்.

பாடல் எண் : 215 :- வாண உப்பு = வெடியுப்பு, வளையல் மண் = வளையலுப்புண்டாகும் மண்.

பாடல் எண் : 216 :- ஊார் = ஊற்று.
எண் 9-ல் கெந்தியுப்பென்று கூறியது வேறு. அதில் சேரும் சரக்குகளும் செய்முறையும் வேறு என்பது உற்று நோக்கற்பாலது.

பாடல் எண் : 218 :- செம்புலியாடு = செம்மறி என்று வழங்குவது (செம்புலியின் மயிர் என்று மேலும் 219-ம் பாடலில் மேற்படி ஆட்டைக் குறிக்கிறார்.

பாடல் எண் : 221 :- மூணு தொந்தம் = மூன்று சேர்க்கை (பச்சை வெடியுப்பு ஒவ்வொரு தடவை சேர்ப்பதைக் குறிப்பிடுகிறார்.

பாடல் எண் : 224 :- இருட்டின அப்பிரகம் = கருப்பு அப்பிரகம். குகை = மூசை, சில்லு = மூடி.

பாடல் எண் : 227 :- பொற்றலையான் = மஞ்சட்கரிசாலை.

பாடல் எண் : 228 :- தம்பித்து = கட்(டி)டுண்டு, மண்டலம் = நாற்பது நாள் கொண்டகால அளவு (சிலர் 45, 48 நாளாகவும் கொள்வர்.)

பாடல் எண் : 229 : நிமைக்கும் முன்னே = கண் இமை மூடித்திறக்கும் முன்னே, தேட்டு = தேடிக் கண்டுபிடிப்பு.

பாடல் எண் : 230 :- சொக்கி = தாரணையில் நின்று.

பாடல் எண் : 231 :- சிங் = இது ஒரு பீஜாட்சரம், அட்ரசம் = ஒவ்வொரு ஆதாரத்தின் அட்சரங்கள், தளம் = ஒவ்வொரு ஆதாரத்தின் இதழ்கள், இது யோக நூல்களில் விரிவாகக் காணலாம்.

பாடல் எண் : 232 :- பதஞ்சலியார் = அத்திரி மகரிஷியின் பிள்ளையாகிய பதஞ்சலி முனிவர் (யோக நூலின் கர்த்தா) வியாக்கிரமர் = புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்.)

பாடல் எண் : 233 :- செனகாதி நால்வர் = சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர்.

பாடல் எண் : 237 :- தன்னதோர் தண்ணீரை வாங்கிக்கொண்டு = ஊறிக் கரைந்து தெளிந்த நீரைப் பக்குவமாய் வேறு பாண்டத்தில் பெய்துகொண்டு.

பாடல் எண் : 238 :- பேதி = அன்னபேதி.

பாடல் எண் : 240 :- சோதி இசைவான = ஒளி பொருந்திய, நவரத்(தி)னம் = ஒன்பது மணிகள் ;—வைரம், வைடூரியம், புட்பராகம், கோமேதகம், மாணிக்கம், மரகதம், நீலம், முத்து, பவழம்.

பாடல் எண் : 242 :- கட்டாத மனமுறைய = கட்டவியலாத மனங் குவிந்தடங்க, துஞ்சாது = தூங்காது (மலையாளத்தில் வழக்கிலுள்ளது)

பாடல் எண் : 244 :- நாதம் = ஒலி (சப்தம்.)

பாடல் எண் : 245 :- வாங்க = கேட்க.

பாடல் எண் : 246 :- மகிடம்=எருமை, கிராசம் - சுறுக்கு.

பாடல் எண் : 247 :- தூக்கி=எடைபோட்டு.

பாடல் எண் : 248 :- மாசற்று=குற்றமின்றி.

பாடல் எண் : 249 :- சுறுக்காக=வீரியமுள்ளதாக.

## சூதச் செந்தூரம்

தீநீர்வாங் கியேபரணி தனில டைத்துச்
சூதத்தைச் சுத்திபண்ணிப் பலந்தா னெட்டுத்
தாய்நீராம் பிடாலவண நீரைத் தானுஞ்
சாங்கமாகச் சூதத்திற் சுருக்குப் போடு
மாய்நீரை யக்சரண்டிக் குள்ளே விட்டு
மாசற்ற சூதத்திற் சுருக்குப் போடத்
தோய்நீரில் நாற்சாமஞ் சுருக்கிட் டாக்கால்
துடியடங்கி மாலையைப்போ லாகுங் காணே. 251

மாலையைப் போலிருக்கின்ற சூதந் தன்னை
வழித்திட்டுக் கல்வத்திற் காடி யாலே
காலையைப்போல் கழுவியே கல்வத் திட்டுக்
கனகத்தின் ரேக்கதுவும் பலந்தான் போட்டு
வேலையைப்போல் தீநீரை நிறைய விட்டு
விளக்கமாய ரைத்திட்டு நாலு சாமம்
பாலையைப்போல் தானிருக்கும் பருப்பிங் கானில்
பக்குவமாயீ விட்டுமேதான் கரியோட் டுதே. 25.

ஊதியே திராவகத்தைச் சுருக்குப் போடு
உத்தமமாய் நாற்சாம மானபின்பு
பூதிபோல் தானிருக்குங் காசி மேரு
புதிதாக எடுத்துந்தான் மண்ணைச் செய்து
வாதியே பொடியையரை வாசி யிட்டு
வாலுகையின் மேல்வைபன்னி ரண்டு சாமம்
சேதியே முத்தீயு மாட்டிப் பின்பு
சிலாகிட்டுப் பார்த்திடவே சிவப்பு மாமே. 253

சிவப்புத்தான் மாதளம்பூப் போலே வண்ணந்
திறமான நிறம்பார்த்துத் தீயை மாற்று
உவப்புத்தான் குடியிருந்த கோச பீச
உதயம்பொற் செந்தூர மாச்சு தென்றால்
தொகுப்புத்தான் சொல்லவென்றால் நாவோ கூசுஞ்
சொல்லரிது இதன்மகிமை சித்தர் காணர்
பகுப்புத்தான் பாட்டர்சொல் லக்கேட் டிருந்தேன்
பாங்காமுலோ கத்திலாயி ரத்துக் கொண்ணே. 254

ஒண்ணுன செந்தூரம் பாவி லுண்ணு
உண்மையாக மண்டலத்தி லுகாந்த காலம்
மண்ணுன தனிலிருந்து மகத்தாம் வித்தை
வாதவித்தை வழக்கங்கள் நீபார்க்க லாகும்
பெண்ணுன மங்கையரை முகம்பா ராதே
பேய்க்கூத்தாம் மாயையிலே சுழன்றி டாதே
கண்ணுன காயமது கற்றூண் போலக்
கனல்நிறமாய் இருக்குமிதைக் கண்டு கொள்ளே. 255

## ஞானங் கூறல்

கண்டுகொண்டே கீழ்க்கொண்டார் கருத்தாஞ் சித்தர்
ககனத்தை விட்டுமெள்ள அறிவில் வந்து
பண்டுகொண்ட பாடெல்லாம் நினைந்து கொண்டு
பரிவாக நான்பிழைத்தே னென்றே எண்ணி
அண்டுகொண்ட குருவேபூ ரணத்தே நின்றீர்
ஆச்சரிய மெனையீன் றிவ் வரையோ ஐயா
எண்டுகொண்ட என்தவத்தை யீந்தே னையா
ஏழையாஞ் சிலம்பொலியில் மேவி னேனே. 256

சிலம்பொலியில் மேவென்று சொல்லு முன்னே
சீக்கிரத்தில் மேற்கொண்டு சித்தாம் போகர்
குலம்பொலியி லவரைப்போல் குருவோ காணேன்
கோவென்ற குருவுக்கு நாமே சீடர்
விலம்பொலிவே தாந்தசித் தாந்தம் பார்த்து
மேலாகப் பறக்கிறதோர் குளிகை கட்டிக்
கலம்பொலியிற் கைலாய வர்க்க மாகிக்
காரணமாஞ் சித்தராயி ருடியா னுரே. 257

ஆனுர்கள் சிலம்பொலியைக் கண்டா ருண்டோ
அதற்குள்ளே நேராகச் சேர்ந்தா ருண்டோ
போனுர்கள் புக்கிவந்து மீண்டா ருண்டோ
பேரான ரசவித்தை யறிந்தா ருண்டோ
கானுர்கள் கமனமொத்துத் திரிந்தா ருண்டோ
கரைகாணு அண்டமுதற் புவனத் தாண்டி
வானேர்கள் நிறைகண்டு வந்தா ருண்டோ
மவுனமுற்றுச் சமாதியுற்றால் வருகுங் காணே. 258

வருகுங்காண் இருடியாட்டுஞ் சித்த ராட்டும்
மவுனமாய்ச் சமாதியுற்று நின்றோ ராட்டும்
பெருகுங்காண் பூரணத்தில் லயித்தோ ராட்டும்
பொன்னுக மரமுதலாய் நின்றோ ராட்டும்

தருகுங்காண் வாசியுடைக் குதிரை யாட்டுந்
தன்மயமா யொன்றுமற்று நின்ற வாட்டும்
துருகுங்கா ணிவையெல்லா மையர்க் கல்லால்
சூழுலகிற் சித்தருண்டோ சொல்லுங் காணே. 259

தானான குளிகையொன்றே ஞான மொன்றே
சாதித்த கற்பமொன்றே வாசி யொன்றே
வானான வாதமொன்றே சுண்ண மொன்றே
மார்க்கமான சிங்கியொன்றே செயநீ ரொன்றே
வேனானவிட மொன்றே சாரணைதா னொன்றே
வெவ்வேறாய்க் கூட்டுகின்ற குடோரி யொன்றே
கோனான வேதைகொள்ளுங் கிராச மொன்றே
குறிப்பாகப் பதினேழும் அமர்த்தி னாரே. 260

அமர்த்தினார் பதினேழு மேழு காண்டம்
அன்றுதித்த பிள்ளைகட்கு மறிவு தோன்றும்
புமர்த்தினார் பாடினது பொற்கம்பி போலப்
புத்திகெட்ட மிலேச்சருக்கு மறிவு தோன்றும்
சுமத்திய வரங்கள்வெட் டவெளி யாகக்
கருமறைப்பில் லாமல்தான் சுளுகாய்ச் சொன்னார்
சுமத்தினார் பாட்டுக்கொப் பொன்று மில்லை
சூட்சாதி பேரெல்லாம் வெளியு மாச்சே. 261

வெளியாக உலகத்தோர்க் காக வேண்டி
மேதினியே சித்தமய மாக வென்றே
நெளியாகப் பூரணம்போல் வெட்ட வெளியாய்
நிசமாகத் திறந்துவிட்டார் அருளோ டுபொருள்
குளியாக நிட்களமாம் புத்தி யாலே
கூறாத சரக்கையெல்லாம் கூறி விட்டார்
பளியாக மவுனமெல்லாம் வெட்ட வெளியாகப்
பலுக்காத வித்தையெல்லாம் பாலித் தாரே. 262

## 14. சிந்து லவண வைப்பு

வித்தையாஞ் சிந்துவென்ற லவணந் தன்னை
விளம்பவே வைக்கின்ற விவரங் கேளு
மத்தையா மலைமேலே யுப்பண் டத்தை
வகையாகக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு
சத்தையாங் கலைமானின் கொம்பு தன்னைக்
கணக்காகப் பலம்நூறு நிறுத்துக் கொண்டு
சத்தையா மலையுப்புப் பலந்தா னூறு
தூள்பண்ணிக் கனமான சட்டி தானே. 263

சட்டியிலே கலைக்கொம்பைச் சீவ லாக்கித்
தளமாகப் பரப்பியே நடுவே தானும்
தட்டியே தூள்பண்ணு முப்பை வைத்துத்
துப்புரவாய் மேலுமந்தச் சீவல் மூடி
மெட்டியே மேற்சட்டி பொருந்த வைத்து
மீருமல் மண்செய்த டுப்பி லேற்றி
வெட்டியே விறகிட்டு நாலு சாமம்
விடுக்காதே யெரியிட்டே ஆறப் போடே. 264

ஆறினபின் எடுத்ததையே கல்வத் திட்டு
அதுங்காமற் பொடிபண்ணித் தாழி போட்டு
நீறினபின் ஞென்றுக்கு நாலு தண்ணீர்
நிரப்பிடவே பனித்தண்ணீர் விட்டுக் காய்ச்சி
ஆறிலபின் பதப்பார்த்துப் பலகை மேலே
பாங்காக வூற்றிட்டி ரவியில் வைக்கக்
காறினபின் கடுவுப்பாய்க் கட்டிக் யாகக்
கனமான சிந்துவென்ற லவண மாச்சே. 265

## சிந்து லவணக் கட்டுச் சுண்ணம்

சிந்துவென்ற லவணத்தைக் கட்டக் கேளு
செழுமையாம் வெடியுப்பு நீர்வார்த் தாட்டி
அந்துவென்ற அகலிலிட்டுப் புடத்தைப் போட
ஆச்சரியங் கடுஞ்சுண்ண மாகுங் கண்டாய்.
தந்துவென்ற சாரத்தைச் சமனாய்ச் சேர்த்துத்
தாக்கியதைக் கடுகெட்டாம் பிலக்க ஆட்டிப்
பந்துவென்ற அண்டோட்டிற் புடத்தைப் போட்டுப்
பன்யில்லை பலடலெனச் செயநீ ராமே. 266

செயநீரில் வீரமொடு லிங்கங் கூட்டிச்
சிறப்பாகப் பூரமொன்று பொடித்துப் போட்டுப்
பயநீரில் மனோசிலையில் தோய்த்து வாட்டிற்
பாங்காகச் சுறுக்கிடவே கட்டிப் போகும்
அயநீரி லறுபத்து நாலுங் கட்டும்
அழகான மனோசிலைகா ரீயங் கூட்டித்
தயநீரில் அரைத்திட்டுப் புடத்தைப் போடச்
சார்வான களங்காகும் வேதை கேளே. 267

வேதையென்ன வெள்ளியெட்டுச் செம்பி ரண்டு
மிடுக்காக வுருக்கியே பத்துக் கொன்று
காதையென்ன களங்கதனை யீந்தா யானால்
கண்டிடுமே சத்தகந்தான் கருதிப் பாரு

பாதையென்ன இக்களங்கு தங்கத் தூட்டிப்
பாங்கான சூதமிட்டுக் கெந்தி யிட்டுத்
தாதையென்ற தாளகமுஞ் சிலையும் போட்டுத்
தாக்கியரை பொற்றலையின் சாற்றில் தானே. 268

சாற்றினாலே ரைத்துநன்கு புடத்தைப் போடு
சாங்கமதா யாறவிட்டெ எடுத்துப் பாரு
தேற்றினாற் செந்தூர மாயி ருக்குஞ்
சிறந்தநவ லோகத்தில் நூற்றுக் கொன்றே
ஏற்றினா லிட்டக்கா லெட்டு மாற்று
இறங்குமப்பா காவிக்கும் முப்புக் குந்தான்
பற்றினாற் சிந்துவென்ற லவணந் தன்னிற்
பார்த்தவர்க்குச் சுளுகாகும் வாதந் தானே. 269

## ஞானங் கூறல்

சுளுகாகக் கீழ்கொண்டார் சித்தர் தாமுஞ்
சீக்கிரத்தே விட்டுமெள்ள அறிவில் வந்து
நளுகாகப் பாடெல்லாம் நினைத்துக் கொண்டு
நான்பிழைத்தே னென்றெண்ணி நாட்ட மாகிப்
புளுகாக என்குருபூ ரணத்தே நின்றீர்
புகழாக எனையின்றிவ் வரையோ ஐயா
தளுகாக என்தவத்தை யீந்தே னையா
சாதகமாய் வெறுவெளியில் மேவென் றேனே. 270

மேவென்று சொல்முன்மேற் கொண்டார் போகர்
வேதாந்த சிரோமணியைப் போற்றின் மைந்தா
கோவென்ற குருவுக்கு மவரே சீடர்
கோடிலட்சத் தொருசீட னுண்டோ காணேன்
பாவென்ற வேதாந்தஞ் சித்தாந்தந் தானும்
பறக்கிறதோர் குளிகைமுதல் வாதம் பார்த்துக்
காவென்ற கயிலாய வர்க்க மாகிக்
கருத்துரைத்துச் சித்தராயி ருடியா னாரே. 271

ஆனார்கள் கயிலாய பரம்ப ரையாய்
அனேகமாஞ் சித்தருக்கு முபதே சித்தார்
தேனாக மேருவிலே யனேகங் கோடி
சித்தரா யிருந்தவர்க்கு முபதே சித்தார்
தானார்கள் நாற்பத்து மூன்று பேர்கள்
சாந்தமாக யடியேற்கு முபதே சித்தார்
பானார்கள் பாட்டர் திருமூலர் தாமும்
பரங்கருணை மெய்ஞ்ஞானம் விளம்பி னாரே. 272

விளம்பியதோ ராச்சரியம் மைந்தா கேளு
விதித்தநர சென்மமிவர் கயிலா யரானூர்
அளம்பியரா வதர்க்குமகத் துவந்தா னென்ன
அதிகசிவ விந்துண்ணி லிப்ப யாச்சு
தெளம்பியதோ ரவர்களைப்போற் சித்தர் காணேன்
சித்தர்கட் குபதேசந் தீட்சிப் பேனுன்
முளம்பியதோர் மைந்தர்காள் மயங்க வேண்டாம்
முதிர்ந்தபரா பரமான மவுனந் தானே. 273

தானென்ற மவுனவித்தை மூலர்க் குண்டு
தருக்கியுமே காலாங்கிக் கதுவே சொன்னூர்
கானென்ற காலாங்கி யையர் தாமுங்
கருத்தாக மவுனத்தைக் கருதிச் சொன்னூர்
கோனென்ற நந்திசொன்ன மார்க்கந் தன்னைக்
குறிகாட்டி யருள்செய்தா ரையர் தாமும்
மானென்ற மவுனவித்தை எய்தால் ஞானி
வாய்திறந்து பேசாதே மகாரந் தானே. 274

மகாரத்தை மவுனத்தாற் கடிகை சேர்க்க
மகத்தான நல்வினைதீ வினையும் நீரும்
மகாரத்தை மவுனமென்று நினைக்க முத்தி
வல்லோர்கள் நினைப்பார்கள் மற்றோர் காணூர்
மகாரத்தில் மவுனமல்லோ இருடி சித்தர்
மாசற்ற சொரூபத்தைக் கண்டார் கண்டார்
மகாரத்தில் மவுனமல்லோ சித்தி தோன்றும்
மவுனமென்றே கூப்பிடுது கண்டி வாரே. 275

கூப்பிட்ட மவுனத்தி லனேக சித்தி
கொள்கையையே சொல்லுகிறேன் குறிப்பாய்க் கேளு
மாப்பட்ட மந்திரங்கள் செபிக்கும் போது
மவுனமென்ற திட்சையது முன்னே வேணும்
ஓப்பட்டு வாய்மூடிப் பேச்சு மற்று
ஒருபொழுதோர் சோற்றைதான் சமைத்தே உண்டு
ஏப்பிட்டு எந்நேரஞ் செபித்தா யானல்
எழுகோடி மந்திரமுஞ் சித்தி யாச்சே. 276

மந்திரமுஞ் சித்தியாயெட் டெட்டு மாடும்
மவுனமாக நின்றவர்க்கு மகத்தாஞ் சித்தி
தந்திரமாம் வேதத்தின் மந்தி ரத்தைச்
சளசளெனப் பேசியவர் செபிப்பார் கோடி
கந்திரமாய்க் கத்தியதோர் நாயைப் போலக்
காசுக்கு மாகாது கதியு மில்லை
எந்திரமாம் மவுனம்விட்டால் மனுவும் பாழாம்
ஏதேது செபித்தாலு மெல்லாம் பொய்யே. 277

எல்லாம்பொய் யென்றெண்ணி யுலகங் கேட்டை
எண்ணியத னுலுகங்கள் பேத மாச்சே
மல்லாம்மெய் யோகத்தில் மவுன மூட்ட
மகாசித்தி யறிவுமட்டு மருவித் தாக்கும்
தல்லாமா நிருத்தமப்பா ஆறிற் காணுந்
தளத்தோடு மேல்மூலந் தாண்டி யேறும்
உல்லாமெய் யென்றெண்ணி லவனே யோகி
உலுத்தனிதை யறியாட்டா வுழவு மாடே. 278

மாடான மனுடர்தாம் ஆசா னென்று
மகத்தான வேடமிட்டுக் கோட்டம் போட்டுப்
பாடான பாடுசொல்லிப் பணம் பறித்துப்
பரிந்துவே தாந்தஞ்சித் தாந்த மென்பார்
கேடான வுலகத்தோர் வேடத் தாலே
கெடுமதிகள் தோன்றுமற் கெட்டுப் போனுர்
வேடான சீடருடைப் பாவ மெல்லாம்
விளையாட்டுப் போல்வாங்கி விழுந்திட் டாரே. 279

விழுந்திட்டார் கேளுங்கோள் மக்காள் நீங்கள்
விரிவான வாரிதியில் மேக நீர்போல்
புழுந்திட்ட கிருமியைப்போற் பிறப்புண் டாச்சுப்
பின்பொடுங்கும் விவரமென்ன பேசக் கேளு
நெழுந்திட்ட சந்திரனு நீரை யப்பா
நீங்குகிற சரவியலே நேர்ந்து பாரு
தழுந்திட்ட கோபத்தில் விந்து வன்னி
சேர்த்தூணிப் பாய்ந்ததிலே செனன மாச்சே. 280

செனனமே செனிக்கு மிந்தப் படியே யாகில்
சேர்ந்துமே யக்கினியும் ரவியும் கூடி
வனனமே சந்திரனிற் கலந்து போனல்
மாண்டுபோம் விதமிதுதான் குளிர்ந்து போகும்
துனனமாஞ் செனனமொடு மரணம் ரெண்டுந்
துரிதமா மனேன்மணியைத் தொட்டு மீளும்
எனனமா மிலக்கமில்லை ஏழாந் தோற்றம்
ஏற்றமாம் நாலுவகை யோனி காணே. 281

நாலுவகை யோனியினிற் செனனங் கண்டு
நலங்காம லிருக்கலாம்பார் யுகங்கள் கோடி
தேலுவகைத் தாய்மாட்டே செகசா லங்கள்
சிதைந்துமே யறிவிலுற்று லெல்லாம் பொய்பொய்
தாலுவகைச் சமாதிகொண்டே யுயர வேறித்
தரியாமற் குளிகையிட் டோடிப் பாரு
போலுவகைம் போதமுன்னைப் பொருந்தித் தூக்கும்
பெரியசுழற் காற்றில்தான் துரும்பு மாமே. 282

## 15. காசிலவண வைப்பு

குறிப்பு : மேற்படி காசிலவணத்தின் செய்முறை கூறப்படவில்லை. அது கூறும் பாக்கள் மட்டும் விடுபட்டு விட்டன போலும். பின்னால் வேறு பிரதிகளில் கிடைத்தால் இணைத்து வெளியிடக் கூடும்.

ஆமென்ற லவணத்திற் கார சாரம்
அடங்கலாய்ப் பதினைந்து வைப்புத் தன்னை
வேமென்ற வெகு நூலில் விரைந்து பார்த்து
வேதாந்தி திருச்சித்தர் சொல்லக் கேட்டுத்
தேமென்ற திருமூலர் நாதர் பாட்டர்
செப்பியதோ ருபதேசச் செயலைக் கேட்டே
ஆமென்ற ஐயர்கா லாங்கி சொல்ல
ஆயிசொல்லக் கேட்டுமே யறைந்திட் டேனே. 283

அறைந்திட்டேன் காரசாரத் தின்வைப் பைக்காண்
அடங்கலாய் மூவஞ்சு தன்னைத் தானும்
பறைந்திட்டே னேழுகாண்டம் பாலித் தேன்யான்
பாங்கான இரண்டாகுங் காண்டந் தன்னில்
வரைந்திட்டேன் சரக்கான வைப்பை யெல்லாம்
வளமாகச் சோதித்துக் கண்ட மார்க்கம்
கறைந்திட்ட கயிலாயச் சின்ம யந்தான்
கடாச்சத்தா லடியேனுங் கருதி னேனே. 284

### காரசாரப் பிறப்புப் பத்து

### பிறப்புச் காரசாரங்களின் பெயர்

கருதியே காரசார வைப்பு தம்மைக்
கண்டபின்பு பிறக்கின்ற கார சாரம்
பருதியே பத்துவகைப் பண்பைக் கேளு
பாங்கான சூடனொடு சீனந் தானும்
வருதியே பூநீறு வளைய லுப்பு
மணமுள்ள பச்சைக்கற் பூர மாகும்
பிருதியே கல்லுப்புக் கறியுப் போடு
பொன்னம்பர் மீனம்பர் நுரையு மாமே. 285

### 1வது சூடனுற்பத்தி

ஆமென்ற சூடனுடை யாண்மை கேளு
ஆதியாம் பூநீறி ணங்கன் தானும்
தாமென்ற விரண்டையுந்தான் சமனாய்ச் சேர்த்துத்
தண்ணீர்தான் நால்விட்டுக் கரைத்து வைக்க

நாமென்ற நாலாம்நாள் தெளிவை வாங்கி
நாடியே அடுப்புவைத்துக் காய்ச்சிக் கொண்டு
ஓமென்ற வுப்புறைதல் பருவத் தைப்பார்த்
தூற்றியே மறுசட்டி வைத்துப் போடே. 286

போட்டுமே ரவிவைத்துக் காய்ந்த பின்பு
பொறுமையாய்க் கருவாவின் பட்டை வாங்கிப்
பூட்டுமே பூப்புடத்தில் தயிலம் வாங்கிப்
பொருந்தவே யுப்பிலிட்டுப் பிசறிக் கொண்டு
பாட்டுமே பாண்டத்தில் அரைவா சியிட்டுப்
பட்சந்தான் பூமிதனில் புதைத்துப் போடு
கூட்டுமே குதிரைலத்தி மேலே கொட்டிக்
கூர்ந்தபின்பு எட்டாம்நாள் தீயைப் போடே. 287

## சூடன் சுண்ணம்

தீத்தானும் ஆறினபின் எடுத்துப் பாரு
சூடந்தான் கட்டியாய்த் தானி ருக்கும்
வேத்தானும் விளக்கதனிற் கொளுத்தி விட்டால்
மீண்டுமே நிர்மலம்போ லெரிந்து போகும்
ஆய்த்தானு மிதைக்கட்ட ஆரா லாகும்
அறிந்தவரார் சிவயோகி யல்லால் காணர்
வேய்த்தானும் வெடியுப்பு நீருக் குள்ளே
மூணுநா ளூறவைத்து மூடிப் போடே. 288

மூடியே மூன்றுநா ளான பின்பு
மூர்க்கமாம் ரவிக்குள்ளே தோய்த்துத் தோய்த்தே
ஆடியே ஆறுநாளா னபின்பப் புறந்தான்
அயங்கரையுந் திராவகத்தில் ஊறப் போட்டு
நீடியே ஐந்துநாள் தோய்த்துப் போடு
லேசாக அரைத்துடனே வில்லை கட்டிப்
பாடியே யகலிவிட்டுச் சீலை செய்து
பத்தெருவில் புடம்போடச் சுண்ண மாமே. 289

## சூடச்செயநீர் : தாளகச் சுண்ணம்

சுண்ணத்தி லெடைக்கெடைதான் சாரங் கூட்டித்
துவளவரைத் தண்டோட்டிற் புடத்தைப் போடு
பண்ணத்தைப் பனிவைக்கச் செயநீ ராகும்
பாங்கான இந்நீரில் வீரம் பூரம்
தண்ணத்தைச் சாதிலிங்கம் பொடித்துப் போட்டு
தாளகத்தைப் தோய்த்துமே ரவியில் போடு
எண்ணத்தில் இருபதுநாள் போட்ட பின்பு
ஏற்றமாகச் சுண்ணும்பு சீலை சுற்றே. 290

## கருவங்கச் சுண்ணம்

சுற்றியே கரியோட்டி லூதிப் போடு
சுண்ணும்பு போலவது வெளுப்பு மாகும்
பற்றியே சுண்ணும்பில் வீரம் சேர்த்துப்
பாங்கான வெடியுப்பு நீரா லாட்டி
வற்றியே கருவங்கந் தகடு தட்டி
வரிசையாய் வங்கத்தி னெடையே பூசு
ஒற்றியே ஓட்டிலிட்டு மேலும் மூடி
உறுதியொரு புடம்போடச் சுண்ண மாமே. 291

## நிமிளைச் சுண்ணம், தங்க பற்பம்

உறுதியாய்ப் புடம்போட்ட சுண்ணந் தன்னை
உகந்தரைத்து வீரமிட்டு நிமிளைப் பூசு
அறுதியாய் ஓடுவைத்த தட்டிப் போடு
ஆயியுடை நாதமென்ற நிமிளைச் சுண்ணம்
விறுதியாய் வீரமிட்டு நிமிளை தன்னை
வெடியுப்பு நீர்தன்னு லரைத்து மைபோல்
தறுதியாய்த் தங்கமென்ற தகட்டி லப்பித்
தாக்கியொரு புடம்போடத் தங்கம் நீறே. 292

## சூதக் கட்டும் மணியும்

தங்கத்தி னீறதனைச் சூதத் தூட்டித்
தாக்கியரை மூலைப்பாலாற் சூதங் கட்டும்
பங்கத்தின் சூதச்சா ரணையே செய்து
பறந்தோடிற் கோடிலட்சங் காத மோடும்
சிங்கத்தின் பலமுண்டாம் வாயில் வைக்கிற்
சீரியதோர் மகானுக ஏவல் கேட்டும்
பொங்கத்திற் பூதமெல்லாம் புத்தி கேட்டுப்
பேசினதோர் வேலையெல்லாம் செய்யும் பாரே. 293

செய்யுமே சூட்சத்தி லனந்தம் வித்தை
சேருகின்ற சூடனிலே யனந்தங் கோடி
தையுமே தாளகத்தி லனந்தம் வித்தை
சாருகின்ற வங்கத்திற் குருவோ கோடி
நெய்யுமே நிமிளைதன்னிற் குருவோ கோடி
நேரான தங்கச்சிந் தூரங் கோடி
கொய்யுமே சூதத்தைத் தாக்கச் சொன்னம்
குறியான சூடனுடைப் போக்குத் தானே. 294

போக்கான சூடனது வைப்பு மாகிப்
புகழாகப் பிறக்கின்ற வுப்பி லாச்சு
வாக்கான விரண்டுமொன்ருய்க் கூடி னத்தில்
மருவியதோர் சூடனதுற் பத்தி யாச்சு

நோக்கான தீபத்திற் சிந்தூ ரங்கேள்
நுட்பமாஞ் சரக்கிதுதா னேர்மை மெத்த
வாக்கான ததனுலே யாடும் வித்தை
மருவியதோர் மகத்துவந்தான் மார்க்க மாமே. 295

## பர தத்துவங் கூறல்

மார்க்கமாம் பராபரமே யகண்ட வித்து
மறவாக வதற்கடுத்து மாயி வெளிதான்
ஆர்க்கமா மதற்கடுத்தா காச வெளிதான்
அதின்கீழே வாயுவுடை வெளியு மாச்சு
தீர்க்கமா மதன்கீழே வன்னி யாச்சு
செப்புகிறே னதன்கீழே சலமு மாச்சு
பூர்க்கமா மதன்கீழே பூமி யாச்சு
பிறந்ததோர் சீவனெல்லா முதித்த வாறே. 296

உதித்ததோர் சனங்களுக்கு மஞ்சு பூதம்
ஓங்கியதோர் தேவதைக்கு மஞ்சு பூதம்
கதித்ததோ ரண்டமெல்லாம் மஞ்சு பூதங்
காரணமாஞ் சதாசிவமு மஞ்சு பூதம்
பதித்ததோர் யோனியெல்லா மஞ்சு பூதம்
பஞ்சபூ தியத்தினு லெல்லா மாச்சு
விதித்ததோர் வேடமிட்டு முபதே சித்த
விதியெல்லா மஞ்செழுத்தின் வித்து மாச்சே. 297

## சாநால் - யோக மார்க்கங் கூறல்

வித்துமாய்ப் பொருளறிந்து விரைந்து கூடி
வேதாந்தத் தாலுணர்ந்து விரைந்து தானுய்
முத்துமாய் மூச்சற்ற விடம றிந்து
முன்னற்றுப் பின்னற்று முனேமே லாகிச்
சுத்துமாய் இருவிழியக் கரத்தில் வைத்து
சுழிமுனேயி னெட்டிட்டுச் சுழன் றங் கேறிக்
கத்துமாய்ப் பழம்புசிக்கும் பட்சி போலக்
கலந்தேற வழிசொல்வேன் காணு காணே. 298

ஏறியே லகுவாக மூலம் பார்த்திட்
டேற்றமாய் வாசிகொண் டூதி யூதி
தேறியே சக்கரத்தில் நின்று நின்று
செயலான நந்திகண்டால் வாதங் காணுந்
தூறியே வெறும்பேச்சாய் வார்த்தை சொன்னுர்
சுடுகாட்டிற் பிணமான சொல்லுத் தானும்
ஊன்றியே மூலத்தே யொளிகாண் மட்டும்
உத்தமமாய்ச் சுழிமுனேயுந் திறந்து போமே. 299

சுழிமுனையே திறந்தக்கால் மனமொ டுங்குஞ்
சுழலிலே யகப்பட்ட துரும்பு போலாம்
அழிமுனையே யங்கங்கா தாரந் தோறும்
மட்சரத்தின் சித்தியெல்லா மறிந்தே யாடு
வழிமுனையாஞ் சுழுத்தியுள்ளே யழுத்திப் போடும்
வாசியென்ற குதிரையிலே ஏறி யாடு
இழிமுனையில் இறந்தக்கா லொன்று மில்லை
யோகவெளி கடினமல்ல தேறுந் தானே. 300

## குறிப்புரை

### பாடல் எண் 251 முதல் 300 வரை

பாடல் எண் : 252 :- கனக ரேக்கு = தங்கத்தகடு; மெல்லியத் தகட்டை ரேக்கு என்பது திசைச் சொல்.

பாடல் எண் : 253 :- பூதி = திருநீறு
செகப்பு = சிவப்பு (நிறம்).

பாடல் எண் : 244 :- கோசபீசம் = சூரியன் (சகல அண்டங்களுக்கும் (உண்டாக) வித்தாக இருப்பவன்).
லோகம் = இரும்பு (ஆயுள் வேதியர் வழக்கு).

பாடல் எண் : 255 :- உகம் = யுகம் (இவை நான்காம்) (திரேதா யுகம் 1728000 ஆண்டுகள்; கிருத யுகம் 1296000 ஆண்டுகள்; துவாபர யுகம் 864000 ஆண்டுகள்; கலி யுகம் 432000 ஆண்டுகள். அந்தம் = முடிவு.
கனல் = தீ.

பாடல் எண் : 259 :- இருடியாட்டும், சித்தராட்டும் முதலியவற்றிலுள்ள "ஆட்டும்" என்பது ஆகட்டும் என்பதன் சிதைவு = ஆனாலும் என்பது பொருள்.

பாடல் எண் : 261 :- மிலேச்சன் = கீழோன்.
கரு = உண்மைப் பொருள்.

பாடல் எண் : 262 :- பலுக்காத = (பிறர்) கூறாத. பாலித்தார் = (கை) ஆண்டு காண்பித்தார்.

பாடல் எண் : 263 :- வைக்கின்ற = செய்கின்ற

பாடல் எண் : 264 :- தளமாக = சமமாக.

பாடல் எண் : 265 :- இரவி = வெய்யில்.

பாடல் எண் : 268 :- சத்தகம் = ஏழு.

பாடல் எண் : 273 :- நரசன்மம் = மானிடப் பிறவி.
மகத்துவம் = பெருமை (மகிமை).
சிவவிந்து = இரசம்.

T. 6745

பாடல் எண் : 274 :- எய்தால் = பெற்ருல்.

பாடல் எண் : 276 :- தீட்சை = முன்னேற்பாடான சோதனை முறை

பாடல் எண் : 277 :- மனு = மகாமந்திரம்.

பாடல் எண் : 278 :- உலுத்தன் = மூடன்.

பாடல் எண் : 279 :- ஆசான் = குரு. கோட்டம் = உறத்த சத்தம், பறித்து = வலிந்து பிடுங்கி.

பாடல் எண் : 280 :- வாரிதி = கடல், மேக சலம் = மழை, சரவியல் = சர நூற் கலை (தான் விடும் மூச்சுக் காற்ருல் அறிந்து வினையாற்றுப் கலை), வன்னி = அக்கினி. செனனம் = பிறப்பு.

பாடல் எண் : 281 :- தோற்றம் ஏழாவன; புல், பூடு, புழுக்கள், மரம் ஊர்வன, பறப்பன, நடப்பன. சீவர்கள் பிறப்பு யோனி = பிறப்பிடம்; அண்டஜம் (முட்டை) சுவேதஜம் (வியர்வை) உற்பீஜம் (விந்து) சராயுஜம் (கருப்பை).

பாடல் எண் : 282 :- தரியாமல் = நிற்காமல்.
போதம் = அறிவு.

பாடல் எண் : 284 :- சோதித்து = ஆய்ந்து.

பாடல் எண் : 285 :- பண்பு = குணம்.
நுரை = கடல் நுரை.

பாடல் எண் : 286 :- இணங்கள் = வெடியுப்பு.

பாடல் எண் : 287 :- கருவாவின்பட்டை = இலவங்கப்பட்டை.

பாடல் எண் : 288 :- அயங்கரையுந் திராவகம் = வெடியுப்புத் திராவகம் (பா எண் 206உம் 207 கூறும் முறைப்படி வாங்கியது).

பாடல் எண் : 298 :- முன்னற்று = மூச்சு உள்ளே வாங்கல். பின்னற்று = மூச்சு வெளிவிடல்; முனைமேல் ஆகி = சுழி முனையில் (கும்பகத்தில்) நின்று.

பாடல் எண் : 299 :- மூலம் = மூலாதாரம்.
சக்கரம் = (ஆறு ஆதாரங்களுக்குமான) சக்கரங்கள்.

---

தானென்ற வைம்புலனு முலக்கை யாகத்
தனிப்பெரிய வாங்கார முரலு மாக
ஆனென்ற வாசையதோ உருவ மாக
அழும்பான மனத்தையுள்ளே மாட்டிக் கொண்டு

மோனென்றே யசையாதே யடித்துச் சண்ணி
 மூழமோச மாக்கியல்லோ விழிக்கப் பண்ணும்
ஏனென்ற யோகமுதல் ஞானம் ரெண்டும்
 எய்தாதே இறந்தவர்கள் கோடி தானே. 301

இறந்தார்கள் கோடிசென்ம மண்ணு சையாலும்
 ஏற்றமாந் தீனியுடை யாசை யாலும்
பிறந்தார்கள் மோகத்திற் பெண்ணு சையாலுந்
 பூர்த்தியாய்ப் பூட்டும்பொன் னுசை யாலும்
துறந்தார்கள் சுகபோகச் சுகியி னுலுந்
 துன்பமாம் பாசத்தின் மயக்கத் தாலும்
மறந்தார்க ளுலகமெல்லா மயக்க மாச்சு
 வாய்ப்பேச்சாம் ஞானத்தின் மார்க்கந் தானே. 302

## சோடச கலையிருப்பு

மார்க்கமாம் பேச்சாலே யொன்று மில்லை
 மகத்தான சாத்திரத்தை மருவிப் பார்த்து
மூர்க்கமா மூச்சாலே சனங்கள் சாவர்
 மூச்சடக்கி சாகாத முறையைப் பாரு
நார்க்கமா நடுமூலங் கண்டத் தூன்றி
 நணுகாமல் வாயுவுடை வீட்டிற் கட்டின்
ஊர்க்கமாம் வாசியெங்கு மோடா தப்பா
 உத்தமச்சோ டசத்திற்சீ வகலை யிருப்பே. 303

இருப்பான சிவகலை பாடி வைக்கும்
 இருந்ததனு லுருசியோ டுண்ணப் பண்ணும்
பொருப்பான சீவகலை யெட்டு நாலாய்ப்
 புறப்பட்டுச் செகத்திலே நாலும் பாழாய்
மறுப்பான மதிபோலே தேய்ந்து தேய்ந்து
 மனிதரெல்லாம் நரைதிரையாய்ச் சேர மாண்டு
திருப்பான சிவகலை போக்கைக் காணுர்
 செகசாலத் திரோ தகையின் கூத்து மாமே. 304

ஆமென்ற பரத்தினுடை யடியிற் ருனும்
 அம்முதலாய்ப் பதினறட் ரந்தான் ஆறின்
தாமென்ற தளத்திலே நிற்கும் பாரு
 சமரசமா நாதமும்கண் டத்திற் காணும்
ஓமென்ற வாயுவுக்கே உருகும் வீடு
 உன்னினுற் சோமப்பா லுண்ணு விக்கும்
காமென்ற காமத்தில் வீழ்ந்தா னுகிற்
 கலைமங்கி நாலும்போங் காணு காணே. 305

தாலினுடை விபரத்தைச் சொல்வேன் யானும்
 நாட்டமாஞ் சரியையொன்று கிரியை யொன்று
பூலினுடை யோகமொன்று ஞான மொன்று
 பேசரிய விவைநாலும் பின்பு கேளு
வேலினுடைச் சாந்தியொன்று விசார மொன்று
 மேற்பெரிய சந்தோடஞ் சாது சங்கம்
பாலினுடை மடியாகப் பிறந்து நிற்கும்
 பாங்கான படியெல்லாம் பகரக் கேளே. 306

பகரவே வெளிப்பாழும் ஒளியின் பாழும்
 பாங்காக வெளியொளியாய் நின்ற பாழும்
நிகரவே அப்பாடல்நிர்க் குணத்தின் பாழு
 நேர்மையா மனத்துக்கு மெட்டா தாகி
அகரவே யன்னமயம் பிராண மயமாய்
 அதினின்று மனோமயமாம் வெளியிற் கூடிப்
பகரவே புவியடங்கு மொன்றாய் நின்று
 பூர்த்தியாய் விஞ்ஞான மயமு மாச்சே. 307

மனமாகி யாங்காரம் புத்தி யாகி
 மாச்சலாஞ் சித்தமுமாய் மகிழ்ச்சி யாகித்
தினமாகிச் செல்காலம் வருங்கா லமாகித்
 திருத்தமாய் நிகழ்காலம் மூன்று மாகி
முனமாகி முக்காலத் திரைய மாகி
 மூன்றுலகில் நாலுவகை யோனி யாகிப்
பனமாகி யண்டமெல்லாம் பணராய்ப் பூவாய்ப்
 பரந்துநின்றீ அத்தியிது பார்த் திடாயே. 308

பார்த்திட்ட அத்தியுடைத் காய்தா னென்று
 பரவிநிற்கும் வித்ததாயி ரந்தான் கேளு
சேர்த்திட்ட சிற்றண்டை மாகி நிற்குஞ்
 சிக்கலாய்ப் பணர்கோடி காய்தான் கோடி
ஆர்த்திட்ட அண்டமாயி ரத்தி னெட்டு
 அழகான புவனமொன் றறிந்து கொள்ளு
ஏர்த்திட்ட இருநூற்றி ருபத்து நாலு
 இப்படியே புவனமொன்றி சைத்தி டாயே. 309

இசைந்திந்தப் புவனமெல்லாஞ் சமுத்திர மோவொன்
 றிக்கணக்காய்ச் சமுத்திரமு மேழாய் நிற்கும்
கசைந்திந்தச் சமுத்திரங்க ளேழுங் கேளு
 கைவிட்ட பதமான தொன்று மாச்சு
பசைந்திந்தப் பதங்களெண் பத்து நாலு
 பார்க்கவே ஈதுபரா பரையின் வீடு
அசைந்திந்தக் கூத்தெல்லா மவர்தன் கூத்து
 ஆதியாம் வல்லமையா லாடி னாளே. 310

வல்லமையா மாட்டையெல்லாம் மகிழ்ந்து கேளு
ம்நாவண்ட பதமளவு மழித்துச் சண்ணி
நல்லமையாஞ் சிறுவீட்டைப் போலே தாயும்
நாட்டியே யொருநிமைக்குள் படைத்த ளித்தான்
எல்லமையா யெட்டெட்டாட் டுத்தா னும்பார்
ஏற்றமாம் பரையுடைய கூறு மாச்சே
புல்லமையாம் புவனமுத லவளே யாச்சு
பேரான சிவமென்ன வெளிதான் காணே. 311

காணவே வெளிக்குள்ளே இருண்மூ டாமற்
காரணியாந் தாயுமங்கே யொளியாய் நின்றுள்
ஊணவே ஒளியான நிர்க்கு ணத்தில்
ஒடுக்கினு ருலகமெல்லா மீசன் தானும்
கோணவே தெளிவுவந் துற்ற தானுல்
செகமெல்லாம் வித்தையென்று தெளிந்து போகும்
பாணவே பராபரையை யறிந்தா யானுல்
பரமான யோகமது பலிக்குந் தானே 312

## 2வது சீனத்தின் மகிமை

பலித்திட்ட சீனத்தின் மகிமை கேளு
பாங்காகச் சிவன்தானும் பகர்ந்த வார்த்தை
அலித்திட்ட வுமையவள்தான் நானம் பண்ணி
அதிகமஞ்சள் குங்குமச் சேரு யோடிச்
சலித்திட்ட சவுராட்டிர தேசம் புக்கிச்
சமுத்திரமாய் லவணசலத் துட்க லந்து
கெலித்திலவண மஞ்சள்குங் குமமுங் கூடிக்
கெடியான படிகார மாச்சு தாமே. 313

## சீனச் செயநீர்

ஆச்சுதே வெடியுப்புச் செயநீர் தன்னுல்
அழகான சீனத்தை யரைத்த ரைத்துப்
பாச்சுதே பட்சமொன்றி ரவியிற் போடு
பாங்காக வில்லைகட்டி யூதிப் போடத்
தீச்சுதே கடுஞ்சுண்ண மாகும் பார்த்துச்
செப்பமா யெடைக்கெடைக்குச் சாரஞ் சேர்த்து
ஏச்சுதே யண்டோட்டிற் புடத்தைப் போட்டு
ஏற்றமாய்ப் பனியில்வை செயநீ ராமே. 314

## சீனச் செயநீரில் உபயோகங்கள்

செயநீரில் வீரமொடு பூரம் லிங்கம்
சேர்த்துமே பொடிபண்ணிப் போட்டு வைத்துப்
பயநீரில் நாகத்தை யுருக்கிச் சாய்க்கப்
பதையாமற் கட்டுண்டு கரியி லாடும்

அயநீரி லறுபத்து நாலுங் கட்டும்
ஆண்மையா முபரசங்கள் சத்து மாகும்
கயநீராஞ் சீனத்தின் வேதை தானுங்
கரைகொள்ளா ஏமவித்தை யாடுந் தானே. 315

தத்துவம் கூறல்

வித்தையா மூலத்தில் விந்தாற் றேற்ற
மீறிநின்ற வாயுவினல் லயமு மாச்சு
பித்தையாம் பிறப்பிறப்பி ரண்டும் மங்கே
பேருலகில் செத்தவரைத் தெய்வ மென்பார்
உத்தையாய்ச் சொன்னலு முலகங் கேளு
உண்மைதான் நீசராய்ப் பிறந்து கெட்டார்
சித்தையாய்ச் செகமெல்லாஞ் செனிக்கு மாறு
சொல்லவே நன்ருகச் சூட்சங் கேளே. 316

கேழ்க்கவே மண்ணதுவும் நீரிற் சேருங்
கிளர்ந்தெழுந்த சலமதுவும் தீயிற் சேரும்
வாழ்க்கவே தீவாயு வினிலே சேரும்
வாயுவுமே ஆகாச வெளியில் சேரும்
தாழ்க்கவே சடமாகிச் செத்த பின்பு
தனியான நரகுசொர்க்க மாவ தெங்கே
வேழ்க்கவே வாயுவொன்றே விந்திற் சேரு
மீந்ததோர் நாலுமங்கே விரைந்து போச்சே. 317

விரைந்ததோர் விந்துவினற் பிறக்குங் கோடி
வித்ததினல் மரங்கோடி கவரோ கோடி
திரைந்ததோர் சாகாத காலி துவேதான்
செப்பமாஞ் சமுசயந்தான் செனன மில்லை
புலரந்ததோர் வேகாத தலையை றிந்தால்
பிரிந்தவெளி யானமனம் பிறக்கும் பாரு
கரைந்ததோர் திரோதகையின் மயக்க மானற்
காமமாம் நாதவிந்து பரிச மாமே. 318

பரிசமாம் நாதமென்ன வென்ருல் வாயு
பரந்ததோர் சுக்கிலமே விந்து வாகும்
வரிசமா மிவையிரண்டும் வாசி யாச்சு
வகையாகு மிருப்பிடந்தான் மூல மாச்சு
கரிசமாந் தூரமல்ல மூலம் பாரு
கண்ணெளியிற் சூரியன்போற் காணுஞ் சோதி
பரிசமாம் பாட்டனென்ற மூல நாதர்
பக்குவமாய்ச் சொன்னபடி பார்த்திட் டேனே. 319

### 3வது பூநீற்றின் மகிமை

பார்த்திட்ட பூநீற்றின் பருவங் கேளு
பங்குனியுஞ் சித்திரைவை காசிக் குள்ளே
பூத்திட்டே ரவிசுறுக்கிற் பொங்கி நீறும்
பூப்போன்று மேனிற்கு மதைவா ரிக்கொள்
ஏர்த்திட்ட எலுமிச்சம் பழச்சாற் றைவார்த்
திழுத்துமே கரைத்துநன்ருய்த் தெளிவை வாங்கி
ஆர்த்திட்ட அடுப்புக்குள் வைத்துக் காய்ச்சி
அடங்கியே யுப்பாகும் பருவம் வாங்கே. 320

### பூநீற்றின் செயநீர்

உப்பாக வாங்கியுமே கல்வத் திட்டே
உறுகரைத்துப் பழச்சாறு தன்னி ளுலே
செப்பாக உள்வைத்துப் புடத்தைப் போடச்
சுண்ணும்பா மதற்குநேராய்ச் சாரஞ் சேர்த்துக்
கப்பாகக் கல்வத்தாட்டு னெட்ட டங்கக்
காணவே யண்டோட்டிற் புடத்தைப் போட்டு
உப்பாகப் பனியில்வை செயநீ ராகும்
உகந்ததோர் செயநீரில் வீரம் போடே. 321

வீரமொடு பூரந்தான் லிங்கங் கூட்டி
மேன்மையாய்ப் பொடிபண்ணிச் செயநீர் போட்டு
பாரமொடு காரசாரங் களெல்லாம் சற்றும்
பதையாமற் கட்டுண்டு பாங்கு மாகும்
ஆரமொடு பாடாணம் அறுபான் நாலும்
அடங்கலாகக் கட்டுண்டு மெழுகு மாகும்
காரமொடு முபரசங்கள் சத்து மாகுங்
கண்கொள்ளா வேதையுமாம் பூநீற் றுப்பே. 322

உப்பான ஆதியான பூநீ றதனில்
உசத்தியாம் வித்தையுரை காணப் போகா
அப்பான பழச்சாறும் ஒக்கக் கூடில்
ஆதியாங் குருவாச்சு வழலே யுப்பு
கொப்பான வழலேயுப்பு நீறிற் ருனல்
கோடான கோடிகவர் விரிந்தே ஆடும்
வெப்பான பூநீற்றின் வேகம் பட்டால்
விடுபட்ட சரக்கெல்லாம் வழலே தானே. 323

### பராபரையின் துதி

தானென்ற அம்பரையே ஆதித் தாயே
சாதிவரம் பில்லாத ஆதி யம்மா
நானென்ற சமரசமே ஞான வீதி
நளினமெனுஞ் சச்சிதானந் தத்தா யேயெம்

கோனென்ற நாதாக்கள் கருணை வாழ்வே
குறியென்றும் நெறியென்று மில்லா தாளே
ஊனென்ற வும்பரையே உம்பர்க் கெட்டா
ஓங்காரங் கடந்துநின்ற வொளிதா னென்னே. 324

என்னவே வெளியாகி யுருவு மாகி
ஏகமா யிரண்டாகிச் சகல மாகி
நென்னவே நெறியாகி வானு மாகி
நித்தமுத்த யோகமுதல் ஞான மாகித்
தொன்னவே தெளிவாகித் தெளிவுள் ளுமாகிச்
சித்தாதி இருடிகளின் மனமு மாகித்
துன்னவே சுழியாகி மேல்கீ ழாகிச்
சுருதியாம் பூரணமே என்று சொல்லே. 325

சொல்லியவள் கருணைகொண்டு மேலே பார்க்கிற்
சுருதியாஞ் சத்துசித்தா னந்தங் காணும்
தல்லியவள் சாற்றும்சே தனமாய் நின்றாற்
சத்துசித்தா னந்தம்பூ ரணமுந் தோன்றும்
வல்லியவள் பாவித்த ரூப மாகி
வாக்கான வுள்ளோடு புறம்பு மாகி
எல்லியவ ளொன்றாகிய நேக மாகி
ஏகாந்த நிர்மலத்தா யென்று காணே. 326

என்றுதான் சத்தியமு மாகி நின்று
ஏகமோடி ரண்டுமற்றுக் கருணை யாகித்
தின்றுதான் சத்தாகிச் சித்து மாகித்
திகழான வானந்த மயமு மாகி
நின்றுதான் நித்தசுத்த புத்த மாகி
நீங்கிநின்ற நிர்மலத்தின் ஒளியு மாகி
அன்றுதான் வரைகடந்த வெளியு மாகி
ஆதியந்த மில்லாத வடிவு தானே. 327

இல்லாத வடிவாகி முடிவு மாகி
இருநிலத்தில் உறைகின்ற மயமு மாகி
நல்லாத நானாகி நீயு மாகி
நடுவாகி நெடிதாகி நலியு மாகி
முல்லாத முச்சத்தாய் முடிவு மாகி
மீறிநின்ற அண்டமுமாய் நினைவு மாகி
அல்லாத அட்சரமாய் ரவிம தியுமாய்
ஆனந்தப் பொருளுமாய் நிறைந்த தன்றே. 328

### 4வது வளையலுப்பின் மகிமை

நிறைந்துநின்ற பூரணமொக் கும்பூ நீறு
நேரான வளையலுப்பின் நேர்மை கேளு
குறைந்துநின்ற பூநீற்றைக் காய்ச்சும் போது
குறியகரு மேகம்போல் மேலெ ழும்பும்

உறைந்துநின்ற வுப்பெல்லா மேலெ ழும்பி
உருவாகக் கெல்லுப்போ லுப்பாய் நிற்கும்
வரைந்துநின்ற வளையலுப் பென்றும் பேரு
மகத்தான அக்கினியைச் செயித்த உப்பே. 329

செயித்தவுப்பை வெடியுப்பு நீரா லாட்டிச்
சீராக நாலிலொன்று சாரம் போட்டுத்
தயித்துநின்ற தாளகந்தான் பதினு ரென்று
தாக்கியரை வெடியுப்பு நீரி னுலே
மயித்துநின்ற காரீயந் தகடு தட்டி
வளமாக மருந்தெல்லாங் கவசங் கட்டு
ஒயித்துநின்ற வோட்டிலிட்டு மேலும் மூடி
உயர்கின்ற குக்குடமாம் புடத்தைப் போடே. 330

போடுமே யரைத்தரைத்துக் கவசங் கட்டிப்
புடம்பத்துப் போட்டெடுத்த தையும் வாங்கி
வாடுமே கரியில்வைத் துருக்கிப் பாரு
மணிபோலே கரியில்நின் ருடு மாடும்
தாடுமே தங்கமிட்டு ருக்கிக் கொண்டு
தங்கத்தின் சமனுகச் சூதஞ் சேர்த்துத்
தேடுமே சிலையோடு கெந்தி கூட்டித்
திராவகத்தி லரைத்துமே புடத்தைப் போடே. 331

அரைத்துமே புடம்போடக் களங்க தாகும்
ஆதியாம் வெள்ளியெட்டுச் செம்பி ரண்டு
உரைத்துமே யுருக்கியே களங்க தொன்றே
உட்கொடுக்க மாற்றுறுக் குசத்தி யாகும்
கரைத்துமே காவிக்கு முப்புக் கேகா
கடிசான தொழிலல்ல சுறுக்கி லாகும்
பரைத்துமே பாட்டர்சொல்லக் கேட்டு யானும்
பாடினேனும் வடமொழியைப் பார்த்துத் தானே. 332

### சரியையாதி நான்கின் துறை கூறும்

பார்த்துநின்ற சரியையில்நின் றுசடம் வீழிற்
பதியான கிரியையுள்ளே பந்தம் பண்ணும்
நார்த்துநின்ற கிரியைவிட்டு விழுந்த தானுல்
நலமான வுடலெடுத்து யோகம் பண்ணும்
வேர்த்துநின்ற யோகம்விட்டு விழுந்த தானுல்
வேருக வுயர்ந்துநின்ற ஞானத் தேறும்
பார்த்துநின்ற வச்செனன மவுனம் முற்றிப்
பரிவாகப் பார்த்தறிந்தார் பண்பு மாமே. 333

பண்பான நாலுக்குண் டுவிக்கி னங்கள்
பாழான ஆகாம்ய சஞ்சி தமுமே
துண்பான பிரகாம்ய தொய்தத் தோடு
சுளுக்கான விக்கினங்கள் நாலுக் காச்சு
நண்பான நாவினலே செய்வ தென்ன
நலியான வறுமையுங் கிலேசந் துக்கம்
புண்பான பெண்பொன்னும் மண்ணி ஞலே
புக்கிநின்ற சிலேத்துமத்தி னீப்போ லாமே. 334

ஈப்போலே தியங்கிஞற்கர்ச் சித்துச் சண்ணும்
ஏழையாமி லேச்சரையோ இகத்தி னுள்ளே
நாய்ப்போலே மயங்கிடில்நாற் பதத்தி னுள்ளே
நாடிமனஞ் செம்மையா யறிவ தெப்போ
தாய்ப்போல தயங்கினதால் ஞானம் போச்சு
சாவதுவும் பிறப்பதுவுந் திரிகை யாச்சு
பேய்ப்போலச் சுடுகாட்டி லலேவ தாச்சு
பேயரே ஞானமெல்லாஞ் சுத்தப் பாழே. 335

சுத்தமா மாயைசென் ருெழிவ தெப்போ
சுழன்றமனந் தூய்மைதா ஞவ தெப்போ
பத்தமாம் பசியடங்கும் பருவ மெப்போ
பறந்தோடுங் கூத்தொழிந்து நிற்ப தெப்போ
பித்தமாய்ப் பெண்மாயை தன்னிற் சிக்கும்
பெரிதான மயக்கமற்று நிற்ப தெப்போ
குத்தமாங் கருவிதன்னே யறிந்த றிந்து
குறிப்பாக மேன்மூலந் தன்னேப் பாரே. 336

5வது பச்சைக் கற்பூர மகிமை

பாரென்ற பூரத்தின் பருவங் கேளு
பாங்கான கர்ப்பூர வாழைக் குள்ளே
பூரென்ற பொலுபொலனப் பொருமி நிற்கும்
பெருங்காற்றைக் கண்டதுமே பறந்து போகும்
நேரென்ற நிர்மலம்போ லெரிந்து போகும்
நேராக இதையெடுத்து மிளகி லிட்டு
வாரென்ற வாழையிலே கீழ் மே லிட்டு
வளமாக பெட்டிக்குண் மருவி வையே. 337

மருவவே யதனுடைய மார்க்கங் கேளு
மாசற்ற கண்ணிலிட்டால் கரைந்து போகும்
உருவவே லோகங்கள் தன்னிற் பட்டால்
உமிபோல விண்டதுவா யரிச்சுப் போடும்

துருபவே குருவிற்கே ஆதி யாகுஞ்
சுறுக்கான ரவிபட்டால் மாய மாகும்
அருவவே வாசனைதான் குளிர்ச்சி யாகும்
அடங்காத சரக்கிதுதான் சுண்ண மாக்கே. 338

சுண்ணமே யாக்குதற்குத் துறையைக் கேளு
துடியான பூநீற்றுச் சுண்ணத் தோடே
எண்ணமே யிந்துப்புச் சமனைச் சேர்த்
தீமூத்தரைத்து வெடியுப்பு நீரி னாலே
திண்ணமே யரைத்தஞ்சு புடந்தான் போடு
சிறப்பான மல்லிகைப்பூப் போலாஞ் சுண்ணம்
வண்ணமே சுண்ணவெடை சமனுய்ச் சார
மாட்டியரை அறுசாமம் வெடியுப்பு நீரே. 339

நீராலே யரைத்துமே யிளகி னக்கால்
நேரான ரவியிலிட்டுப் பதமாய்ப் பண்ணிக்
கூராலே யாண்டோட்டுக் குள்ளே யிட்டுக்
கொடிதான கிளிஞ்சிலென்ற சுண்ணச் சீலை
தூராலே சுற்றியே காய வைத்துச்
சுழலவே குக்குடமாம் புடத்தைப் போட்டுத்
தேராலே பனியில்வை செயநீ ராகுஞ்
சிறுகவே வீரலிங்கம் பொடித்துப் போடே 340

பொடிபோட்டுச் செயநீரில் கலக்கிக் கொண்டு
பிலத்ததோர் பீங்கானில் செயநீர் விட்டுப்
படிபோட்டுப் பலம்நிறுத்துச் செயநீர் தன்னைப்
பச்சைக் கர்ப்பூரத்தை யதிலே போட்டு
முடிபோட்டு பலம்நிறுத்துக் கொண்டு தானும்
மூடியே காற்றில்லா விடத்தில் வைத்துத்
துடிபோட்டு ஏழுநாட்கள் சும்மா விட்டு
சுறுக்கான ரவிதன்னிற் பிசறிப் போடே. 341

பிசறியே யெட்டுநாள் சும்மா வைத்துப்
பின்பதனை யரைத்துமேமெ ழுகுப தமாக்கி
மசறியே மறளச்சிப் பிக்குள் வைத்து
மணல்மறைவில் புடந்தானு மைந்து போடு.
அசறியே யாறவிட்டெ டுத்துப் பாரு
அலர்ந்துமே பூப்போலச் சுண்ண மாகும்
தசறியே சாரத்தைச் சமனுய்ச் சேர்த்துத்
தாக்கியரை நெட்டடங்கு மட்டு மாட்டே. 342

ஆட்டியே யண்டோட்டிற் புடத்தைப் போடு
ஆறுபோற் செயநீராம் பனியில் வைக்க
மாட்டியே செயநீரில் வீரம் லிங்கம்
மறவாமற் பொடிபண்ணிப் போட்டுக் கொண்டு

வாட்டியே சரக்குகளேச் சுருக்குப் போடு
மாசற்று ருகியேதான் மணிபோ லாடுந்
தீட்டியே யம்மரத்தைக் கத்தி கொண்டு
செதுக்கியதோர் வாறெருக்கும் பூரத் தாட்டே. 343

ஆட்டான பூரத்தின் வேகஞ் சொல்ல
ஆறுகடல் நதிகளெல்லா மைகிகாப் பாகும்
பூட்டான கெந்தியுடை மஞ்சள் போகும்
பேரான கண்டருமோ சலவை யாகும்
ஆட்டான தாளகந்தான் வெளிறிப் போகும்
அறுபத்து நாலுவகை யான தாதும்
தீட்டான மணியாகுஞ் சுண்ண மாகும்
சிறுகதிர்போற் சிந்தூர மாகுந் தானே. 344

## யோக தத்துவம் கூறல்

தானென்ற மூலமுத லாறுந் தள்ளித்
தனித்துநின்ற மேலாறு மடுத்து நோக்கி
ஊனென்ற வுன்மனேயைத் தாண்டி யேறி
உண்மையாம் ஞானசக்திக் குள்ளே மைந்தா
பானென்ற பராபரமாம் அந்த ஞானம்
பாலமென்ற கேசரியா மவுனத் துன்ன
கானென்ற காலமொடு பிறப்பும் போகும்
கைவிட்ட சூத்திரம்போற் சடமும் போமே. 345

போமொன்ற ஓங்கார மஞ்செழுத்தோ டாறும்
பேரான பஞ்சகர்த்த ரிருந்திடந்தான் பாரு
ஆமென்ற ஆங்கார வாணவமும் போனல்
அப்பவல்லோ அகாரமுத லுகாரந் தோன்றும்
வேமென்ற மகாரமொடு விந்து நாதம்
விளங்கியதன் மேல்நிற்கும் பராபரந்தான் மைந்தா
வாமென்ற மகாரத்தைப் பற்றி யேறு
மனமொன்றி லாகிரியா லொத்துக் காணே. 346

## வேது கல்லுப்பின் பிறப்பு

காணவே கல்லுப்பின் பிறப்புக் கேளு
கடலுக்குள் மலேபோலக் கட்டி யாகத்
தோணவே பாறையைப்போல் வளர்ந்து நிற்குஞ்
சுருதியான மனேன்மணியி னுதைந் தானும்
பூணவே யிந்தவுப்பு கட்டினுக் கால்
பொன்போலே கரியில்நின் றுருகி யாடும்
வேணவே மற்றமற்ற வுப்பெல் லாந்தான்
விரைந்துருகிற் கரிக்குடிக்கு மெதுவாய்ப் போமே. 347

மெதுவாகப் போகாமற் கடற்குருவி யுப்பை
விரைந்து கட்டி லெட்டெட்டுஞ் சித்தி யாகும்
எதுவாகுங் காயசித்தி லோக சித்தி
ஏற்றமாங் கமனசித்தி சுறுக்கா யாடும்
புதுவாகப் புடசெயமுங் கட்டினமு மாகும்
பொன்னுகப் பழுத்தாலும் ஊற லில்லை
அதுவாக வண்டரண்ட மடங்க லாச்சு
ஆத்தாள் தன்மயமான வுப்புத் தானே. 348

உப்பையே கட்டினவன் வாதி யாச்சு
உறுதியாய்க் காட்டாட்டா லுலுத்த ராச்சு
அப்பையே யறிந்தக்கா லுப்புச் சாகும்
அறியாட்டா லுப்பொன்றி லடங்கா தாகும்
செப்பையே கண்டக்காற் சுண்ண மாகுஞ்
சீரறியா ருப்பினுடைத் திறமை காணர்
கப்பையே கட்டினங்க ளுப்பா லாச்சு
கட்டாட்டாற் காயசித்தி கலைந்து போச்சே. 349

போச்சென்று விடுக்காதே யுப்பைக் கட்டு
பொய்யென்று வாதத்தைப் பேசி டாதே
ஆச்சென்று கற்பத்தை யடங்க வுண்ணு
ஆதியான வழலைபண்ணி யுப்பைக் கட்டு
நீச்சென்று யோகத்தை நினைவா யுன்னு
நேர்மையாங் குருவறிந்து நினைவா யுன்னு
பாச்சென்று படுகுழியில் விழாமல் நில்லு
பலநினைவு மறுத்துவிட் டுப்பைப் பாரே. • 350

## குறிப்புரை

### பாடல் எண் 301 முதல் 350 வரை

பாடல் எண் : 301 :- சண்ணி = வருத்தி (தாக்கி)

பாடல் எண் : 302 :- சுகி = சுகிப்பவன்.

பாடல் எண் : 304 :- மறுப்பான மதி = தேய் பிறை. திரோதகை = திரோதானம் (மறைப்பு).

பாடல் எண் : 305 :- அம்முதல் 16 அட்சரங்கள் வடமொழி வழக்குப் படியாம். நாதம் = ஒலி, கண்டம் = கழுத்து (மிடறு). சோமப் பால் = அமுதம்.

பாடல் எண் : 308 :- பணர் = பூங்கொத்து.

பாடல் எண் : 316 :- நீசர் = இழிந்தோர்.

பாடல் எண் : 320 :- சுறுக்கில் = சூட்டால் நீர் சுண்டி நிற்கில்.

பாடல் எண் : 322 :- பதையாமல் = விரைந்திடாமல். (ஓடாமல்)

பாடல் எண் : 323 :- வேகம் = வீரியம், வீறு.

பாடல் எண் : 325 :- சகலமாகி = கண்ணுக்குப் புலப்படும் உருக் கொண்டு. சுழி = சுழிமுனை, ஓங்காரம்.

பாடல் எண் : 326 :- தல்லி = தாய் (ஆந்திரர் வழக்கு). பாவித்த = (மனத்தில்) தியானித்த.

பாடல் எண் : 327 :- வரை = அளவு.

பாடல் எண் : 329 :- கெல்லு = கல் என்பதன் பரவை வழக்கு.

பாடல் எண் : 331 :- தாடுமே = தாள் + து + ம் + ஏ, தாள் = கால் பங்கு (கருவங்கத்துக்குக் கால் கூறு). திராவகம் = வெடியுப்புத் திராவகம் (பாடல் எண். 206 - 207-ல் காண்க).

பாடல் எண் : 332 :- கடிசான = கடினமான

பாடல் எண் : 333 :- வீழில் = விழுந்ததானல், ஆழ்ந்து ஒன்றிற்றுனல்

பாடல் எண் : 334 :- விக்கினம் = தடை. நலி = நோய், கிலேசம் = மன வருத்தம், சிலேத்துமம் = கோழை.

பாடல் எண் : 335 :- தயங்கினதால் = பின்னடைந்ததால்.

பாடல் எண் : 336 :- பத்தம் = கட்டுகள் (பாசங்கள்). சுத்தம் = குற்றம் (ஆணவம், கன்மம், மாயை).

பாடல் எண் : 338 : அரிச்சுப் போடும் = துணுக்குகளாகச் செய்யும், அடங்காத = கட்டுப்படாத.

பாடல் எண் : 339 : பூ நீற்றுச் சுண்ணம் பாடல் எண். 321-ல் செய் முறையைக் காண்க.

பாடல் எண் : 342 :- மறளச்சிப்பி = முத்துச்சிப்பி

பாடல் எண் : 344 :- கண்டர் = மயில் துத்தம், சலவை = வெண்மை. சிறுகதிர் = இளஞ்சூரியன்.

பாடல் எண் : 345 :- சூத்திரம் = கயிறு, சடம் = (சடலம்) உடல்.

பாடல் எண் : 348 :- கடற்குருவி உப்பு = கல்லுப்பு. (பா. எண் 347-ல் கூறியதைக் கொண்டு ஆராய்ந்தால் ஷெ சொல் கடற்கிரி உப்பென்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

பாடல் எண் : 350 :- அறுத்து = நீக்கி.

---

பாரென்ற வுப்புக்கே ழுகுணமு முண்டு
பாங்கான குறியெல்லாம் பகரக் கேளு
காரென்ற கரியில்வைத் துருகும் போது
கம்மினாற் சேறுபோல உருகில் வற்றில்
பூரென்ற புத்தும்நெட் டியும்போ லாகில்
பொங்கினாலும் விரிந்ததானாற் குணமோ இல்லை
ஆரென்ற கட்டுக் கடையா ளந்தான்
அழுந்தியே கனமாகி லுருகிற் கேளே. 351

உருகினாற் பொன்போலே யாட வேணும்
உசத்தியா முத்துப்போ னிறமோ தோணும்
பருகினாற் சுண்ணாம்பு போலத் தானே
பாக்குவெற் றிலையுடனே சிவப்போ காணும்
திருகினாற் கைதனிலே வயிரம் போலே
சிக்கிடா துதிராமற் கனமோ பூணும்
முருகினா லொன்றுக்கு மாகா துப்பு
முதற்றரக் கட்டினுடை முறையு மாமே. 352

முறையாக வுப்பதுவுங் கட்டிற் றானால்
மூர்க்கமாம் வரிப்புலியாம் வேங்கை யாகும்
திறையாகச் சிங்கம்பே ரண்டப் புள்ளு
திலதமாம் வெண்சாரை சிவனா கந்தான்
பறையாகப் பட்சியென்ற ராச னாகும்
பாடாணச் செந்துவுக்குக் கால னாகும்
தறையாகத் தலையாரி கொடுங்கோல் மன்னன்
சாற்றியதோர் கல்லுப்பின் தன்மை தானே. 353

தன்மையாம் உப்பதனைக் கட்டக் கேளு
சந்திரனா மிந்துப்புப் பலமும் நாலு
வெண்மையாம் வெடியுப்புப் பலந்தா னொன்று
மீறுமற் சீனமது பலந்தா னொன்று
உண்மையாங் கறியுப்புப் பலந்தா னொன்று
உறுதியுடைக் காரமொன்று சார மொன்று
பெண்மையாம் பூநீறு பலமி ரண்டு
பேரான துரிசியது பலமி ரண்டே. 354

துரிசியொடு சூடனது பலமுங் கூட்டிச்
சுறுக்கான வெடியுப்பு நீரி னாலே
வரிசியொடு நாளேழும் அரைத்த ரைத்து
மறுபடியும் ரவியினிலிட் டரைத்துப் போடு
முரிசியொடு மூன்றேநாள் சும்மா போடு
மூர்க்கமாங் குருவாகும் பத்து நாளிற்
குரிசியொடு வெடியுப்பு நீரி னாலே
குழம்பாக்கிப் பீங்கானில் வைத்துக் கொள்ளே. 355

வைத்துமே பாறையுப்பைப் பாக்குப்போல் தட்டி
வளமான எலுமிச்சம் பழச்சாறு தன்னில்
மொய்த்துமே மூன்றுநாட்கள் தோய்த்துநன்கு போடு
மூர்க்கமாம் ரவிதனிலே யடிக்கடிக்கப் பாநீ
பொய்த்துமே பின்புதான் குழம்புதனில் தோய்த்துப்
பெரிதான ரவிதனிலே ஏழுநாள்கள் போடு
தைத்துமே பூநீறுங் கடலோர மண்ணுஞ்
சமனுகக் கழுதையுடை யமுரி வாரே. 356

அமுரிதான் வார்த்துமே பிசைந்து கொண்டு
அடிகனத்த சட்டியிலே பாதி போட்டு
உமரிசுட்டுச் சாம்பலாய்த் தானெடுத்து
உப்புக்கு அரைத்துமே கவசங் கட்டு
கமூரிதான் கழுதையுடைக் கத்தத் தாட்டிக்
கலக்கவே பதித்துமே சட்டி தன்னில்
வமுரிதான் மேலுமந்தப் படிமண் ணிட்டு
மறவாதே யெண்சாமந் தீயைப் போடே. 357

தீப்போட்டுக் குளிர்ந்ததன்பின் எடுத்துப் பாரு
சிறந்திருக்கு முப்பதுதான் கவசத் துள்ளே
காய்ப்போட்டுக் கசகாம லுப்பை வாங்கிக்
காரியமாம் பூநீற்றுச் சுண்ணம் வீரம்
வேய்ப்போட்டு வெங்காரம் பலமுங் கால்தான்
வெடியுப்பு நீர்தன்னுல் அரைத்துக் கொண்டு
ஆய்ப்போட்டு உப்புக்குள் பிசறிக் கொண்டு
அகலிலிட்டு ஆயிரந்தா னெருவிற் போடே. 358

எருவிலே புடம்போட்டு எடுத்துப் பாரு
என்னசொல்வேன் வயிரம்போ லிறுகி மின்னும்
திருவிலே முகத்தினின்று சிறந்தி ருப்பாள்
சொல்லுதற் குப்பென்றுல் நாவோ கூசும்
கருவிலே உப்பல்ல கனக மாகுங்
காயசித்தி யொருநொடியிற் பேதி யாகும்
தருவிலே கற்பகம்போற் காம மீயுஞ்
சதகோடி வரையிருத்தித் தரிக்க லாமே. 359

தரிக்கவே உப்பதுசிந் தூர மாகுந்
தங்கமிட்டுச் சிந்தூரம் பண்ண லாகும்
விரிக்கவென்றுல் வெகுபாட்டுச் சுருக்கிச் சொன்னேன்
மேன்மையாங் கட்டிதுதான் விரும்பிப் பாரு
பரிக்கவே யுப்பைமுந்திக் கட்டி யாடு
பாங்காகக் கைகட்டு மடிமை யாகும்
கரிக்கவே யுப்பைவிட்டால் ருசிபோ னுற்போல்
கடினமென்று விட்டக்கால் வாதம் போச்சே. 360

## பஞ்சபூத ஒடுக்கங் கூறல்

வாதமென்ற ஓங்காரம் மண்ணை யுண்ணும்
மருவியந்த மண்சென்று சலத்தை யுண்ணும்
நீதமென்ற செலமதுதான் தீயை யுண்ணுஞ்
செழுமையாந் தீச்சென்று காலை யுண்ணும்
வேதமென்ற கால்சென்றவ் விண்ணை யுண்ணும்
விழுந்ததுகாண் சடமென்று விளங்கும் போதம்
போதமென்ற முத்தியது பெறுவ தெப்போ
பேயனே மதுவுண்டு மூலம் பாரே. 361

## சூக்கும ஐந்தெழுத்தின் ஒடுக்கம்

உண்டுபார் அகாரமுகா ரத்தைக் கொள்ளு
மூண்மையா முகாரமகா ரத்தைக் கொள்ளும்
விண்டுபார் மகாரம்விந் தைத்தான் கொள்ளும்
வேதமாம் விந்துநாதம் தன்னைக் கொள்ளும்
கண்டுபார் நாதஞ்சத் தியைத்தான் கொள்ளும்
கலந்துநின்ற சத்தியல்லோ சிவத்தைக் கொள்ளும்
பண்டுபார் சிவந்தன்னைப் பரந்தான் கொள்ளும்
பரங்கொண்ட விடமறிந்து பார்த்தங் குன்னே. 362

பார்த்துநின்ற மூலமுத லாறுந் தாண்டிப்
பரவிநின்ற சுழிமுனையை யறிந்து கொண்டு
சார்ந்துநின்ற சாம்பவியை மதியில் தாக்கித்
தனித்துநின்ற மனமிறைத்துச் சார்ந்த பின்பு
ஏர்த்துநின்ற இவ்வளவும் யோக மார்க்கம்
இரவுபக லற்றவிடம் ஞான மார்க்கம்
காத்துநின்ற கன்னிதனைக் கண்டால் ஞானி
காட்டுவாள் கேசரியைக் கன்னி தானே. 363

தானென்ற லகிரியுண்ண மேலே ஏற்றுந்
தனித்துவிட்ட லகிரியைத்தான் கீழே தள்ளும்
கோனென்ற குளிகையிட்டால் கணத்துக் குள்ளே
கோதண்ட வழிநடந்த வெளியுந் தோன்றும்
மானென்ற அண்டரண்ட மாலை பூண்டால்
மாசற்ற ஆதிவத்து அனுதி வத்து
தேனென்ற விரண்டு மொன்ருய்ச் சிறந்து காணும்
இரட்டியே அமுதமள்ளி யீவாள் தானே. 364

அமுதமள்ளித் தந்திடுவாள் ஞான சக்தி
அழும்பர்தாம் வாமத்தைத் தூசிப் பார்கள்
குமுதமள்ளி திரோதாயி சமயந் தோறும்
கூடவல்லோ மாயவலை தன்னிற் கூட்டிக்

கமுதமள்ளி ஞானமெல்லா மயக்கித் தள்ளிக்
கலங்காதே சமுசார வலையைப் போட்டாள்
புமுதமள்ளி வாமத்தால் ஞான மாச்சு
பூண்டவரார் சிவயோகி வாசி யோரே. 653

### 7-வது கறியுப்பின் மகிமை

வாசியாங் கறியுப்பின் வண்மை கேளு
வாருதியி லுப்புநீரி றைத்துக் கட்டில்
வேசியாய் விளைந்துகறி யுப்பே யாச்சு
விநயமா யிதைக்கட்டில் வெகுவாம் வித்தை
தூசியாம் ஞானிகட்கோ எடுத்த வுப்புச்
சுழன்றலைவா ரிதைக்கட்ட யாரா லாகும்
பாசியாம் வாதிகள்தாம் பாங்கைக் காணார்
பகுந்தவிதன் மகிமையைத்தான் பகரக் கேளே. 366

பகரவே கறியுப்புப் பலமோ பத்துப்
பாங்கான கழுதையுடை யமுரி தானும்
நெகுரவே இரண்டுபத்துப் பலத்தை வார்த்து
நேர்பாக அடுப்பிலிட்டுக் குழம்பாய்க் காய்ச்சிப்
பகுரவே பலகையின்மே லூற்றிப் போடு
பரிதிமுன்னே காயவைக்க உப்பு மாகும்
நகுரவே யடிகனத்த கலத்திற் போட்டு
நாற்சாமஞ் சுருக்கிடவே சாறு கேளே. 367

சாறுபேய்க் கொம்மட்டி கொண்டு வந்து
சதையெடுத்துத் துவைத்துமே தண்ணீர் வாங்கி
வாறுதான் வடிகட்டிச் சுருக்குப் போடு
மறவாமல் நாற்சாம மான பின்பு
வேறுதா னுப்பெல்லா மெடுத்து வாங்கி
வெடியுப்பு நீர்தன்னிற் பிசறிக் கொண்டு
தூறுதா னேழுநாட்கள் ரவியிற் போடு
தோய்த்துமே சுடுரவியிற் காயப் போடே. 368

போட்டுமே கொம்மட்டிக் காய ரிஞ்சு
புகழான வுப்பையதற் குள்ளே வைத்து
மீட்டுமே மேல்மூடிச் சட்டிக்குள் வைத்து
மேலுமொரு சட்டியினுல் விரைந்து மூடி
ஆட்டுமே யெண்சாம மடுப்பில் வைத்து
அசையாம லெரியிட்டே ஆற விட்டுத்
தீட்டியே கரியில்வைத் துருக்கிப் பாரு
சிவந்தபொன்போ லக்கண்விட் டுருக்கி நாட்டே. 369

நாட்டியே நாகங்கா னுமுன்னே சொல்லும்
நளினமாஞ் சூதத்தை யிறுக்கும் பாரு
தாட்டியே யண்டத்தின் கருவா லாட்டிச்
சாதிலிங்கக் கட்டிக்குத் தடவிக் காய்ச்சி
ஊட்டியே யுமிப்புடமாய்ப் போட்டு வாங்கி
உருகுகின்ற தங்கத்தி லெடைக்கெடையேயீயப்
பூட்டியே நவலோகம் நூற்றுக் கீயப்
பொன்னாகும் வெள்ளியுமாம் பூட்டிப் பாரே. 370

பாரப்பா இந்தவுப்பிற் சட்டை கக்கும்
பாலையாம் உன்தேகம் அருணன் போலாம்
ஆரப்பா இதனுடைய ஆட்டைக் காண்பார்
அடங்காதாம் ஓலையிலே எழுத வென்றால்
சீரப்பா சிவயோகி ஞானிக் காகச்
செய்தபடி சாத்திரத்தில் செப்பி னேன்யான்
போரப்பா குவிக்கலாம் ஏமந் தானும்
பொன்னாகும் வெள்ளியுமாம் பூண்டு பாரே. 371

பூண்டுகொண்ட வுப்பையல்லோ உலகத் தோர்கள்
போசனத்திற் கறிகளிலே போட்டுத் தின்பார்
ஆண்டுகொண்ட வுப்பென்றே எளிதாய்ச் சொல்வார்
அதனுடைய ஓர்மணியி னுண்மை கேளு
மீண்டுகொண்ட மூவுலகும் விலையொப் பல்ல
மேதினியெல் லாநிறைந்த பூரணத் தொக்கும்
ஈண்டுகொண்ட காலாங்கி நாதர் சொன்னார்
எளிதிலே சித்தியுண்டாம் வாசி பூட்டே. 372

## வாசியின் பெருமை

வாசியென்றும் மவுனமென்றும் வித்தை ரெண்டு
மாசற்ற சாம்பவிகே சரியு மிரண்டு
தேசியென்று லாதிவித்தை யோகத் துக்குத்
திடமான மவுனவித்தை ஞானத் துக்குத்
தூசியற்ற மனமுடைத்தா லிரண்டு மாகுஞ்
சொரூபத்தி னறிவறிந்தா லிரண்டு மொக்கும்
ஆசிநின்ற வெளியல்லோ அகண்ட வீதி
அடங்கியே லகிரிகொண்டு சொரூபம் பாரே. 373

கொண்டுமே பரிசத்தாற் கொசுகிறந்து போச்சுக்
கூர்மையாம் ரூபத்தால் வண்டிறந்து போச்சு
விண்டுமே மணியொலியால் மானிறந்து போச்சு
விவரமாம் உருசையினால் மீனிறந்து போச்சு

பண்டுமே கெந்தியினல் எறும்புகளும் ஈண்டிப்
பாங்காக மாண்டுதடா இவ்வஞ்சும் பாரு
கண்டுமே இந்திரிய விடயத்துள் ளேதாம்
கலந்துமனஞ் சிக்கியல்லோ பட்டொழிந்த வாறே. 374

படுகுவா ருலகத்தே மனுசர் கோடி
பணிபூண்டு உண்டுடுத்துச் சையோ கித்துக்
கெடுகுவார் கெசதுரக சிவிகை யேறிக்
கெர்ச்சித்து இறுமாந்து தரித்து விம்மி
வடுகுவார் வாழ்வுடைத்தா ராரி ருந்தார்
மாயமாம் வாழ்வென்றே மாண்டார் கோடி
கடுகுவார் சிவயோகம் ஞானம் வந்தால்
காயந்தா னழியாது கடுக வுன்னே. 375

உன்னுவது அம்பரமோ கேசரமோ வென்னில்
ஒப்பற்ற நிர்க்குணமோ நிர்மலமோ வென்னில்
பன்னுவது அகண்டமோ அதீதந்தா னேயோ
பாங்கான நிர்மலமோ நிரஞ்சனமோ வென்னில்
புன்னுவது பதங்கடந்த பூரணமோ வென்னிற்
பேரான பகலிரவு மற்றிடமோ வென்னில்
துன்னுவதெங் கேயென்றாற் சொல்லக்கே ளப்பா
துடியாக உம்மென்ற மவுனவெள்ளத் துன்னே. 376

## 8-வது பொன்னம்பர் மார்க்கம்

மவுனமாம் பொன்னம்பர் மார்க்கங் கேளு
மகத்தான பட்சியதன் மலக்க னந்தான்
கவனமாம் பட்சியதா ஆகாசம் நின்று
கபளித்த மலக்கனம் பொன்னம் பராச்சு
புவனமாங் கடலில்நின்று கரையிற் றங்கிப்
பேராகக் கட்டியா யொதுங்கிப் போகும்
தவனமாம் பலமொன்று நிறுத்துக் கொண்டு
சார்வான துரிசியது பலமு மொன்றே. 377

பலமான பூநீறு பலமு மொன்று
பாங்காக விலைதிராவ கத்தா லாட்டிப்
பிலமான ரவிதன்னில் எழுநாள் போடு
பெலத்தரைத் தடிக்கடிக்குத் திராவ கத்தால்
குலமான குருவாகு மகலி லிட்டுக்
குக்குடமாம் புடம்போடச் சுண்ண மாகும்
தலமாகு மெடைக் கெடைக்குச் சாரங் கூட்டித்
தாக்கியரை நெட்டடங்கு மட்டுந் தானே. 378

மட்டாக அண்டோட்டுக் குள்ளே வைத்து
    மார்க்கமாய்ப் புடம்போட்டு வாங்கிக் கொண்டு
பட்டாகப் பனிவைக்கச் செயநீ ராகும்
    பாங்காக இந்நீரில் வீரம் பூரம்
திட்டாகப் பொடிபண்ணிச் சிறுகப் போட்டுச்
    சூதத்தை விட்டுமே சுருக்குப் போடு
புட்டாக இட்டலிபோற் கட்டி யாகும்
    போக்கிதிலே மெத்தவுண்டு பிரித்தே ஆடே. 379

பிரித்துமே யாடவென்றுற் கவிகை கொஞ்சம்
    பேயரே யடிக்கடிக்குச் சொல்லப் போமோ
குறித்துமே யொருகளங்கிற் சொன்ன மார்க்கங்
    கோடான கோடிக்குங் குறித்துக் கொள்ளு
தெறித்துமே போகாமற் கோச பீசஞ்
    சேரவே களங்குசிந் தூர மெல்லாம்
தறித்துமே சொன்னபடி சாதித் தேறு
    சர்க்கெல்லாம் நற்சரக்காய்ச் சாதித் தேறே. 380

ஞானங் கூறல்

சாதித்த வுரலுக்குள் மனந்தான் சிக்கிச்
    சலியாம லிடிப்பதற்கைம் புலனுங் கோல்தான்
சோதித்த கோபமஃது ருவமாய் நின்று
    சுழலவே சண்ணித்த துலக மெல்லாம்
வேதித்த ஞானம்வந்தா லென்ன செய்யும்
    மிகையான இந்திரியச் சார்பி னாலே
போதித்த மனமுடைத்து லாகிரி கொண்டு
    போதத்தி லுன்னிநிற்க வெளியாய்ப் போமே. 381

போமென்ற ஒளியேது வெளியங் கேது
    போதாந்த வெளிகடந்த வெளியங் கேது
ஆமென்ற அளியேத ளிகடந் ததேது
    அப்புறத்தே தோற்றுகிற சோதி யேது
நேமென்ற நினைவேது நிர்க்குண சமேது
    நேரான பூரணத்தி னனந்த மேது
தோமென்ற சுழியேது சூட்ச மேது
    தோற்றுமப்பா பானத்தைச் சூட்டி நோக்கே. 382

நோக்குகின்ற சரியையொடு கிரியை ரெண்டும்
    நுணுக்கமாம் ஊர்வாதி செய்வ தாகும்
ஆக்கிநின்ற யோகமொடும் ஞானம் ரெண்டும்
    அடுத்ததுவே சித்தருக்கு அறிந்து கொள்ளு

தாக்கிநின்ற ஆகாமியம்சஞ்சி தம்ரா ரத்தந்
தருகுமடா யோகவரை தளர்ந்தே ஏறிப்
போக்கிநின்ற ஞானத்திற் புக்கி னோர்க்குப்
பிரபஞ்சம் மூன்றற்றுப் புழுதி யாச்சே. 383

புழுதியாய் முக்காலம் பிறகே நின்று
புரிமுறுக்குப் போலேறிப் புணர்ந்து கொல்லும்
விழுதியாய்க் காலமென்ன வென்று சொல்லி
மொலுமொலெனச் செபஞ்செய்வா ரறிந்த மட்டுங்
கழுதியாங் காமவெள்ளம் கடப்பா ரார்சொல்
காரணமாம் ஞானியல்லோ கடந்து நின்றார்
முழுதியாம் மூச்சென்ற தற்றிடத் தேகாண்
மூட்டுவிக்கும் முடிந்தவிடம் ஞானத் தீயே. 384

9-வது மீனம்பர் மார்க்கம்

தீயென்ற மீனம்பர் செயலைக் கேளு
சேர்ந்தபட்சி மலக்கனந்தான் கடலில் வீழ்ந்து
பாயென்ற மீன்புசித்து மீனம் பராச்சு
பாங்கான மீனம்பர் பலந்தா னென்று
தாயென்ற பூநீற்றுச் சுண்ண மொன்று
சமரசமாம் வெங்காரம் பலந்தா னென்று
வேயென்ற வெடியுப்பு நீரா லாட்டி
மிடுக்காக ஏழுநாள் ரவியிற் போடே. 385

ரவிதனிலே போட்டுமே காய்ந்த பின்பு
நலமாக வகலிவிட்டுப் புடத்தைப் போடு
புவிதனிலே சுண்ணும்பு போலே யாகும்
பேராக வெடைக்கெடைக்குச் சாரஞ் சேர்த்து
அவிதனிலே யண்டோட்டிற் புடத்தைப் போடு
ஆறவிட்டுப் பனியில்வைக்கச் செயநீ ராகும்
கவிதனிலே வீரமொடு பூரம் லிங்கங்
கணக்காகப் பொடித்திட்டந் நீரிற் போடே. 386

நீரினாற் சுருக்கிடவே ரசங்கட் டாகும்
நேர்மையாம் பாடாணங் கட்டிப் போகும்
தூரினாற் சத்தெல்லாம் மெதுசத் தாகுந்
துரிசியது சுண்ணும்பு தானு மாகும்
கூரினல் நவலோகந் தண்ணீ ராகுங்
கொடுஞ்சிவப்பாம் லிங்கமது மெழுகு மாகும்
பாரினாற் பாறையுப்பு கணத்திற் கட்டும்
பாங்கான சாரமது கட்டிப் போமே. 387

### யோகங் கூறல்

கட்டியே கண்டவரார் சிவசித் தயோகி
கடிதான ஞானியென்பார் திருட்டு ஞானம்
உட்டியே யுன்மனைத்தாய் கேசரிக்குள் நிற்பாள்
உன்னியே மவுனம்வைத் தூதா துநன்கு
அட்டியே நிர்க்குணந்தா னதிலே கேளு
ஆச்சரிய மவுனமொன் றதிலே யுண்டு
திட்டிவிடம் ஒன்றுமில்லை நிராகா ரந்தான்
செப்புவதா றறிவுகொண்டு சேர்ந்து காணே. 388

சேர்ந்துநின்ற உலகத்தோர் ஞானம் பார்த்துத்
தீனிக்குக் கிடைக்காமல் புரட்டுப் பேசி
வேர்ந்துநின்ற மோகத்தாற் பெண்ணைக் கூடி
விகாரமாந் திரோதாயி வலையிற் சிக்கிக்
கூர்ந்துநின்ற இடம்பார்க்கக் கண்ணை மூடிக்
கும்மென்றி ருள்காணுங் குறியும் பொய்யாம்
மார்ந்துநின்ற லாகிரியி னுற்சென் றேற
மாட்டார்க ளறுசமய மனுடர் தாமே 389

சமையமெல்லாஞ் சத்தியுண்டு சிவமு முண்டு
சண்டாளர் பிரித்தல்லோ தள்ளி னார்கள்
குமையமெல்லாம் நாதமுண்டு விந்து வுண்டு
கூட்டாமற் கெட்டார்கள் யோகத் தோர்கள்
திமையமெல்லாம் வேதாந்த சித்தாந் தமுண்டு
சீராகப் பாராமல் தியங்கி னார்கள்
தமையமெல்லாம் அம்பரமாம் ஞான முண்டு
தாயைவிட்டு மறந்ததால் தவறிப் போச்சே. 390

தவறிச்சு அறுசமயம் பானம் விட்டே
சண்டாளர் குணமல்லோ திரோதா யிமாயம்
உவறிச்ச நாதாக்கள் ரிசிகள் சித்தர்
உசந்தவரைக் கண்டதென்ன பானத் தாலே
கவறிச்ச காய்த்தமரம் பட்ட தென்ன
கசடரே வேரற்றுப் போன தாலே
மவறிச்ச வாமத்தைத் தூசித்த பாவி
மயங்கியல்லோ கணந்தோறும் மாளு வானே. 391

மாளாமல் குண்டலிக்குள் மூல மொன்று
மதித்தபரா பரங்கண்ட மூல மொன்று
கேளாமல் புருவமைய மூல மொன்று
கெடியான விந்துவிலே மூல மொன்று

வாளாமல் சத்தியிலே மூல மொன்று
மருவிநின்ற பராபரத்தில் மூல மொன்று
ஆளாம லிவையாறுங் கண்டோன் ஞானி
அழுந்திநின்ற மும்மூல யோகி யாமே. 392

ஆமென்ற நம்முதல்யவ் வரையில் நிற்கும்
அந்தமட்டும் யோகத்தின் மூல மாச்சு
வேமென்ற அகாரமுதல் உகாரந் தொட்டு
விளங்கியதோர் மகாரவரை ஞான மூலம்
தாமென்ற திசைநாதம் மவுனத்திற் காணுஞ்
சாதகமாய் உற்றேற அகண்ட வீதி
காமென்ற காமப்பா லுணயோ கசித்தி
கடுங்கானற் பாலுண்ண ஞான மாச்சே. 393

## 10-வது கடல்நுரையின் மகிமை

ஆச்சுதே கடல்நுரையி னுண்மை கேளு
அனேகநாள் முதலையது கடலுக் குள்ளே
வாச்சுதே வயததுவு மிகமு திர்ந்து
மகத்தான க்ஷீணத்தை யடையும் போது
தேச்சுதே யதன்வயிற்றி லங்கி செனித்துத்
திரிந்துகொள்ள மாட்டாமல் வாயாற் கக்கி
மாச்சுதே சீவனைத்தா னுயிர்போம் போது
வாயினாற் கோழைகக்கி மாண்டு போச்சே. 394

மாண்டுமே கோழையது கடலில் வீழ்ந்து
மகத்தான அலையோடே கரையொ துங்கித்
தீண்டுமே பரிதியுடைக் கிரணத் தாலே
செழுமையாய் வெந்துலர்ந்து கிடக்கும் பாரு
காண்டுமே கைபடாதெ டுக்க வேணுங்
கறுப்புவெள்ளை சிவப்புமஞ்சள் நாலு வண்ணம்
பூண்டுமே சிவப்பதுதான் மெத்த நன்று
பெரிதான கடல்நுரைதான் பெருத்த பேச்சே. 395

பெருத்ததோர் கடல்நுரையைப் பேசக் கேளு
பேணியே பலமொன்று கல்வத் திட்டுக்
குருத்ததோர் பூநீற்றுச் சுண்ண மொன்று
கொடிசான சத்தியென்ற சார மொன்று
வெருத்ததோர் வெடியுப்பு நீரா லாட்டி
மிக்காக ஏழுநாள் ரவியில் போட்டுத்
திருத்ததோர் செப்பிலிட்டுப் புடத்தைப் போடு
சிறந்ததோர் சுண்ணம்பாம் பனியில் வையே. 396

வைத்துடனே செயநீராம் வீரம் பூரம்
    வாகான லிங்கமது பொடித்துப் போட்டுத்
தைத்துடனே லிங்கத்திற் சுருக்குப் போடு
    தங்கத்தி லீந்துடனே களங்கு மாகும்
ஒய்த்துடனே லோகமொன் பதிலும் வேதை
    ஓடுமே யொருநூற்றுக் கொன்று தானும்
மைத்துடனே பத்தரையே மாற்றுக் காணும்
    வளமாகும் லிங்கத்தின் வேதை தானே. 397

லிங்கத்தின் வேதையைத்தான் சொல்லக் கேளு
    நேராகப் பொடித்தயக் குழலி லிட்டுப்
பங்கத்தின் சேர்ரசஞ்சுத் தித்துக் கொண்டு
    பாங்கான அயக்குழலுக் குள்ளே யூற்றித்
தங்கத்தின் ரேக்கதுவும் வராகன் ரெண்டு
    சாதிலிங்கப் பொடிதானும் பலமும் ஒன்று
அங்கத்தின் அயக்குழலுக் குள்ளே யிட்டு
    அடைத்திடுவாய் வச்சிரமா மண்ணுற் றுனே. 398

அடைத்துமே யுலரவிட்டு வாலுகையில் வைத்து
    அமரவே தீயிடுவாய் கமலம் போலே
படைத்துமே முச்சாம மெரித்து வாங்கிப்
    பாங்காக ஆறவிட்டெ டுத்துப் பார்க்க
உடைத்துமே யெடுத்தக்கால் கட்டி யாக
    உருகியே சூதமது மணியு மாகுந்
தடைத்துமே சாரணையைத் தீர்த்தா யானல்
    சணத்திலே இலக்கந்தான் காதம் போமே. 399

## சித்தி வகை கூறல்

போமென்ற குளிகையிற்சிந் தூரஞ் சுண்ணம்
    பேரான களங்கோடு குருவும் தானும்
கோமென்ற கோடிகவ ராட லாகுங்
    கூறுன அட்டமகா சித்தி யாகும்
வேமென்ற வசிகரதம் பனமோ கனங்கள்
    மேன்மையாக ருடணங்கள் வித்வே டணங்கள்
தோமென்ற மாரணவுச் சாட னங்கள்
    சொல்லாத பேதனங்க ளெட்டு மாச்சே. 400

## குறிப்புரை

பாடல் எண் 351 முதல் 400 வரை

பாடல் எண் : 353 :- அண்டரண்டப் பட்சி=சரபம் என்னும் பறவை (சிங்கவுடல், யானைத் துதிக்கை, பெரிய சிறகுடைய எண்கால் பறவையெனக் கூறப்படும்.)

பாடல் எண் : 354 :- செந்து = பிராணி (சீவன்); காரம் = வெங்காரம்; சாரம் = நவச்சாரம்.

பாடல் எண் : 356 :- தட்டி = உடைத்து, அமுரி = சிறுநீர்.

பாடல் எண் : 357 :- உமரி = நத்தை.

பாடல் எண் : 358 :- பிசறி = கலந்து.

பாடல் எண் : 359 :- பேதி = வேதை.

பாடல் எண் : 361 :- கால் = காற்று (ஐம்பூதத்திலொன்று) மது = மதி வெளியில் சொட்டும் அமுதம்.

பாடல் எண் : 363 :- மதியில் = சிதாகாசச் சந்திர மண்டலத்தில்; தாக்கி நிலைபெறச் செய்து.

பாடல் எண் : 364 : லாகிரி = அக விண்ணிலுண்டாகும் அமுததாரை

பாடல் எண் : 366 .- வெகுவாம் = அநேகமாம். வாருதி = கடல், பாங்கு = வழி.

பாடல் எண் : 367 :- கலம் = பாண்டம் (சட்டி)

பாடல் எண் : 368 :- கொம்மட்டிக்காய் = ஆற்றுத் தும்மட்டிக்காய்.

பாடல் எண் : 369 :- ஆட்டு = தீயாட்டு (அ) அடுப்பிலோ புடத்திலோ தீயிடுதல்.

பாடல் எண் : 374 :- கெந்தி = மணம், நாற்றம்; ஈண்டி = குழுமி, பட்டொழிந்தவாறு = இறந்தொழிந்த விதம்.

பாடல் எண் : 375 :- பணி = தொழில்; கெசம் = யானை; துரகம் = குதிரை, சிவிகை = பல்லாக்கு, இறுமாந்து = கர்வம் கொண்டு; கடுகுவார் = விரைவார்,

பாடல் எண் : 380 :- தெறித்து = (கழற்று) சிதறி, கோசம் = தங்கும் இடம், பீசம் = விதை (உற்பத்தியின் முதல்)

பாடல் எண் : 388 :- திட்டிவிடம் = இது ஒரு பாம்பு; இது பார்த்தாலே விடங்கொண்டிறப்பர்.

பாடல் எண் : 390 :- தியங்கினர்கள் = மயங்கினர்கள்.

பாடல் எண் : 391 :- கசடன் = அறிவிலி, குற்றம் புரிவோன்.

பாடல் எண் : 394 :- ஆண்மை = (கை)யாளும் முறை, க்ஷீணம் = கேடு, அங்கி = தீ, மாச்சுதே = மாய்த்ததே என்னும் சொல்லின் பரவை வழக்கு.

பாடல் எண் : 399 :- இலக்கம் = லட்சம் (1,00,000)

பாடல் எண் : 400 :- அட்டமகாசித்தி = எண்பெருஞ்சித்திகள் : அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம். வசிகரம் = தன்வயப்படுத்தல், தம்பனம் = இயங்கவொட்

டாமல் செய்தல், மோகனம்=மனத்தை இலயப் படுத்தல், ஆகர்டணம்=ஈர்த்து வைத்தல், வித் வேடணம்=எல்லாராலும் வெறுக்கச் செய்தல், மாரணம்=இறக்கச் செய்தல், உச்சாடனம்=ஏவி விடல், பேதனம்=கலைத்துவிடல்.

---

ஆசிசென்ற வரிசைவிட்டு லகத்தி லாசான்
ஆதியொன்றந் தமொன்றிரவி மதியே யென்பார்
மூச்சற்ற விடங்காட்டத் தெரியா நின்று
முன்னேது பின்னேது சாங்க மென்பார்
ஓச்சிந்த மாயத்தா லுலகோர் கெட்டார்
உசந்தேறும் மதுவைவிட்டுச் சமயி கெட்டார்
கூச்சிந்த விதமறிந்தோன் யோகி ஞானி
கும்மென்றால் உம்மென்ற நாத மாமே. 401

நாதமென்ற வுப்புவகை யிருபத் தஞ்சின்
நலமாகு முற்பத்தி வைப்புஞ் சொன்னேன்
வாதமென்ற தொழில்முறையுங் கட்டுஞ் சொன்னேன்
வளப்பமாம் பேரின்வகை நிகண்டிற் சொன்னேன்
போதமென்ற களங்குகட்டு வகைகள் சொன்னேன்
பேரான நாதர்தாள் சிரசில் வைத்து
வேதமென்ற வுப்புவகை முற்றுஞ் சொன்னேன்
விளங்கியதோர் நானூற்றின் விருத்தப் பாவே. 402

### பாடாணத்தின் தொகை வகை

பாவென்ற பாடாணம் அறுபான் நாலில்
பாங்காக வைப்புவகை முப்பத் திரண்டு
ஓவென்ற பிறப்பதுவு முப்பத் திரண்டு
உத்தமமாம் வைப்புவகை உரைக்கக் கேளு
கோவென்ற பாட்டர்திரு மூல நாதர்
குருவேந்தன் பதஞ்சிரசில் வைத்துக் கொண்டு
சேவென்ற காலாங்கி ஐயரைக் கேட்டுச்
செப்பினேன் வைப்பாகுந் தாது தானே. 403

### பாடாணவைப்பு

## 32. வைப்புப் பாடாணங்களின் பெயர்கள்

தாதுதான் தந்திரமாய்ச் சித்தர் வைத்த
சாங்கமாம் பேரையினிச் சாற்றக் கேளு
தூதுதான் தொட்டியது புத்தோட்டுத் தொட்டி
சுருதியாம் பொற்றொட்டி செப்புத் தொட்டி

ஏதுதான் எருமைநாத் தொட்டி யோடு
ஏற்றமாம் நாலுவகைத் தோட்டி யாச்சு
வாதுதான் சிங்கிவகை மூன்றுங் கேளு
மகாஏம சிங்கிரத்தச் சிங்கி யாமே. 404

சிங்கியென்ற மிருதாரு சிங்கி யோடு
திறமான மூன்றுவகைச் சிங்கி யாச்சு.
தங்கியென்ற சாதிலிங்கம் கருமு கிற்றூன்
தாக்கான தீமுறுகல் வெள்ளை யாகும்
கொங்கியென்ற சவ்வீரங் கோழித்தலைக் கெந்தி
கொடிவாணக் கெந்தியரி தார வைப்பாம்
பங்கிபவளப் புத்துடனே கோடா சோரி
பஞ்சபட்சி குங்குமப்பா டாணந் தானே. 405

தானென்ற ரத்தபா டாணந் துத்தந்
தாயான துரிசியொடு ரசிதந் தைலந்
தேனென்ற சூதபா டாணம் நீலம்
தேவிகெந்த கஞ்சோர பாடாணங் காகம்
நானென்ற லவணமொடு நாகபா டாணம்
நல்லிந்திர பாடாணம் முப்பத் திரண்டும்
கோனென்ற சித்தர்சொற் கேட்டு யானுங்
குறிப்பறிந்தே மூாயிரத்திற் பாடி னேனே. 406

புத்தோட்டுத் தொட்டிப்பாடாண வைப்பு

பாடினேன் புத்தோட்டுத் தொட்டி தன்னைப்
பலபலவாம் வெகுநூலை யாய்ந்து பார்த்துத்
தேடினேன் அண்டங்கள் குவடு தன்னில்
சித்தருடை நூல்தனிலே இல்லை இல்லை
ஓடினே னூற்றறுப தாமண் டத்தில்
உயர்குருவாம் நந்திபக்கல் சென்று யானும்
வாடினேன் சரக்கினுடை வைப்புத் தன்னை
வகையாகச் சொல்லவென்று பணிந்தேன் காணே. 407

பணியவே கைதொட்டெ டுத்தென் றனையே
பாரமாம் புத்தியுள்ள போக ரேநீர்
அணியவே தென்பாகம் அரசின் கீழ்த்தாம்
ஆதியாந் திருமூலர் பக்கற் சென்று
தணியவே சரக்குவைப்பே டுகடம் மைதிதாம்
சாங்கமாய்ப் போகருக் கீயு மென்று
துணியவே கையெழுத்துச் சீட்டு மீந்தார்
தெண்டனிட்டேன் விடைகொடுத்தார் திரும்பி னேனே. 408

திரும்பியே தென்பாகம் பாட்டர் பக்கல்
திருமூல நாதனர் பதம் பணிந்து
விரும்பியே விண்ணப்பப் பத்தி ரத்தை
விரைந்துகையிற் கொடுக்கலுமே சீட்டை வாங்கி
அரும்பியே பார்த்துமே சிரசில் வைத்து
அளிகூர்ந்து அடக்கமாம் புத்த கத்தைப்
பொரும்பியே கைகொடுக்கச் சிரசில் வைத்துப்
போற்றிசெய்தேன் பாட்டரைத்தான் போவென் ருரே. 409

போவென்று சொன்னமொழி கேட்டு யானும்
புளகித்துப் பாட்டர்கையி லனுப்பிக் கொண்டு
கோவென்ற ஐயர்காலாங் கிபாதம் அடியேன்
தெண்டனிட்டுக் கைகுவித்துக் குழைந்து நின்றேன்
வாவென்றே யெனையழைத்து மோந்து கொண்டு
மைந்தனுடை வரலாறு தன்னைக் கேட்கத்
தேவென்று சேதிசொல்லி ஏட்டை ஈந்தேன்
தெண்டனிட்டுச் சிரம்வைத்துப் பார்த்திட் டாரே. 410

பார்த்திட்டார் நூலினுடைப் பாங்கை யெல்லாம்
பரிவாகப் புத்தகத்தைக் கட்டிப் பின்பு
நாத்திட்ட நந்திக்குச் சிவன் சொன்ன மார்க்கம்
நால்வேதந் தனக்கொப்பிந் நூல்தான் முன்னர்
ஆர்த்திட்ட ஐயர்திரு மூல நாதர்க்
கருளியதோர் சரக்குவைப் பேடா மென்றே
ஏத்திட்டுக் கைகொடுத்தார் காலாங் கிநாதர்
இரண்டுகையால் வாங்கியுமே வைத்திட் டேனே. 411

வைத்தபின் பையருந்தான் மனம கிழ்ந்து
வைப்புக்கு வரம்பெல்லாஞ் சொல்லிக் காட்டி
அய்த்தபின் படக்கியே சரக்கு வைப்பை
ஆராய்ந்து பாருமென்று செப்பி விட்டார்
துய்த்தபின்பு நிருதியாம் மூலைக் குள்ளே
சொல்லுகின்ற சுணங்கமாம் விருட்சத் தின்கீழ்
பொய்த்தபின்பு புத்தகத்தை விரித்துப் பார்த்துப்
புளகித்து மனதுதனி லடக்கி னேனே. 412

அடக்கியே ஆயிரமாம் வருடந் தானு
மாராய்ந்து சரக்குவைத்துச் சோதித் தேறித்
துடக்கியே சகலருந்தான் பிழைக்க வென்று
சொல்முறைகள் மறவாமல் ஏழு காண்டம்

மடக்கியே ஏழாயி ரந்தான் பாவாய்
மறையாம விரண்டான காண்டத் துள்ளே
உடக்கியே லவணவைப்பைப் பாடாண வைப்பை
உரைகல்லாய்ச் சொல்லி வைத்தேனுண்மை தானே. 413

சரக்கு வைப்புகளுக்கு வெடியுப்புச் செயநீர்

தானென்ற சரக்குவைப்புச் சகலத் துக்கும்
சாங்கமாம் வெடியுப்புச் செயநீர் கேளு
கானென்ற வெடியுப்புப் பலந்தான் நூறு
கள்ளிசுட்ட சாம்பலது பலமும் நூறு
பானென்ற பரும்பாண்டந் தன்னில் விட்டுப்
பனங்கள்ளு மொன்றுக்கு நாலு தானும்
ஊனென்ற ஒக்கவிட்டுக் கரைத்து வைத்து
உயர்கின்ற நாலாம்நாள் கொதிக்க வையே 414

கொதிக்கவே உப்பெலாந்தண் ணீரிற் சேருங்
குறிபார்த்து வடிகட்டிப் பாண்டத்தி விட்டு
அதிக்கவே யடுப்பில்பொங் காமற் காய்ச்சி
அப்புறைதல் பதம்பார்த்தோ லைதனிற் குத்துப்
பதிக்கவே பருப்புப்போல் உறைதல் கண்டால்
பதமென்று மறுசட்டி தன்னில் ஊற்ற
உதிக்கவே ஆறினபின் தண்ணீர் நிற்கும்
ஊற்றியே தண்ணீரைக் காய்ச்சிக் கொள்ளே. 415

காய்ச்சியே முன்பதம்போற் குத்திப் பார்த்துக்
கதிர்முன்னங் காயவைத்துக் கணக்காய்த் தூக்கிப்
பாய்ச்சியே பழம்புளிதான் சமனாய்ச் சேர்த்துப்
பாங்கான கல்லுரலி லிடித்து நையத்
தாச்சியே பூநீறு பலமு மொன்று
சத்தியென்ற சாரமது பலந்தா னென்று
மாச்சியே மதியுப்புப் பலந்தா னென்று
மாட்டியே முன்மருந்தி லிடித்துக் கொள்ளே. 416

இடித்துமே புதுச்சட்டி தன்னில் வைத்தங்
கெரியிடுவா யிருசாமஞ் சுண்ண மாகும்
பிடித்துமே பெரும்பீங்கான் தன்னில் வைத்துப்
பேரான பனியில்வைக்கச் செயநீ ராகும்
வடித்துமே பரணிதனி லடைத்துக் கொண்டு
மறவாமல் வீரமொடு பூரம் லிங்கம்
குடித்துமே பொடிபண்ணிக் கூடப் போட்டுக்
குறியான சாரத்தில் விட்டடங் காட்டே. 417

ஆட்டியே சாரவெடை காரம் போட்டே
யரைத்திடுவாய் வெடியுப்பு நீரி னாலே
மூட்டியே மூன்றுநாள் மைபோ லாட்டி
முட்டைக்குள் வைத்துமே புடத்தைப் போடு
தீட்டியே யாறவிட்டுப் பனியில் வைக்கச்
செயநீராம் நீருக்குள் வீரம் பூரம்
நீட்டியே லிங்கமொடு பொடித்துப் போட்டு
நெறியான பரணிதனி லடைத்துக் கொள்ளே. 418

## சரக்கு வைப்புகளுக்குத் திராவகம்

கொள்ளென்ற சரக்குவைப்பின் குறிப்புக் கெல்லாங்
கூர்மையாந் திராவகத்தைச் சொல்லக் கேளு
வெள்ளென்ற வெடியுப்புப் பலமு நூறு
மிடுக்கான சீனமது நூற்றுப் பத்து
துள்ளென்ற துரிசிபலம் நாற்பத் தைந்து
துருசான பூநீறு பலமும் பத்து
கள்ளென்ற கறியுப்புப் பலமு மெட்டுக்
காரணமா மிவையெல்லாம் பொடியாய்ப் பண்ணே. 419

பொடிபண்ணிக் கெட்டியாங் கலயத் திட்டுப்
பெரிசான சக்கரமாம் வாலே மூடி
உடிபண்ணி யுளுந்தினால் மண்ணைப் பூசி
யுயர்ந்திட்ட வடுப்புவைத்துத் தீயைப் போடு
கெடிபண்ணிக் கெட்டியாந் திராவம் வாங்கிக்
கேண்மையாம் பரணிக்கு ளடைத்து வைத்துத்
தடிபண்ணிச் சரக்குவைக்கு முறைமை தன்னைச்
சாற்றுவேன் வெளியாகச் சாற்று வேனே. 420

சாற்றுவேன் சூதமது பலந்தா னெடுத்துத்
தரிக்கவே கல்வத்தி னிறுத்து விட்டுப்
போற்றுவேன் கல்லுப்புக் கற்றாழஞ் சோறு
போட்டரைத்து நாற்சாமங் கழுவி வாங்கி
ஆற்றுவே னயக்கரண்டிக் குள்ளே விட்டு
அடுப்பில் வைத்து வெடியுப்புச் செயநீர் தானும்
தூற்றுவேன் சாரநீ ரண்டுஞ் சேர்த்துச்
சுருக்கிடவே சூதமது சுத்தி யாமே. 421

## 1-ஆவது புத்தோட்டுத் தொட்டி வைப்பு

சுத்தித்த சூதத்தைப் பீங்கான் விட்டுத்
தூய்மையாங் கெந்தகந்தான் சேர்தா னென்று
அத்தித்த வயக்கரண்டிக் குள்ளே விட்டங்
காவின்நெய் விட்டுருக்கிக் காற்றாழஞ் சோற்றில்

கத்தித்த கடுக்காய்த்தூள் பொடித்துப் போட்டுச்
காரியமாய் நீராக்கி யதிலே சாய்ப்பாய்
பத்தித்த பதினொருக்கால் சாய்த்து ருக்கிப்
பசுவின்பால் படிபதினே ருக்கால் சாயே. 422

சாய்த்தபின்பு அரிதாரம் பலமு நாலு
சாங்கமாய்ச் சுண்ணும்பிற் சுத்தி பண்ணி
மாய்த்தபின்பு மனுடருடை யமுரி தன்னில்
மறவாமல் நாற்சாமஞ் சுருக்குப் போடு
காய்த்தபின்பு கமுவியே யப்பால் வைத்துக்
காரியமாங் கெந்தகத்தை யோட்டி லுருக்கித்
தோய்த்தபின்பு பலமிரண்டு நிறுத்துப் போடு
சுத்தமாஞ் சூதமது பலந்தா னெட்டே. 423

எட்டான சூதத்தைக் கெந்தி உருக்கி
இட்டுமே கிண்டிடுவாய் கத்தி யாலே
கட்டான கரிப்போலத் தூளு மாகுங்
கல்வத்தி லிதையிட்டு வெடியுப் புத்தான்
துட்டான பலமிரண்டு கூடப் போட்டுச்
சுத்தித்த தாளகந்தான் பலமு மொண்ணு
வெட்டான வெடியுப்பு நீரா லாட்டி
மிடுக்காகுந் திராவகமுங் கூட்டி யாட்டே. 424

ஆட்டியே மூன்றுநாள் ரவியிற் றுனிட்
டாண்மையாய்ப் பொடியாக வைத்துக் கொண்டு
வேட்டியே சரிகைவெள்ளி பலந்தா னுலு
மேருபோல் வார்த்துமே மண்ணைச் செய்து
தூட்டியே தூளரைதான் வாசி யிட்டுச்
சூட்சமாம் வாலுகையின் மேலே வைத்துக்
காட்டியே கமலம்போற் றீயைப் போடு
காரியமாய் முத்தீயுங் கலர வாட்டே. 425

கலரவே யாட்டிடுபன் னிரண்டு சாமங்
காய்ந்தபின்பு தீமாற்றி யாறப் போடு
உலரவே குப்பியைத்தான் குறட்டால் வாங்கி
உற்பனமாய்த் தண்ணீரைத் தெளித்தே யாற்று
அலரவே குப்பியிட மண்ணைத் தட்டி
யப்புறத்தே போட்டுவிட்டுச் சரக்கைப் பார்த்தால்
தலரவே வெள்ளியுடைக் குப்பி தானுஞ்
சரக்கோடு கரைந்தெல்லாம் ஓட தாமே. 426

ஒடுபோல் இருக்கும்புத் தோட்டுத் தொட்டி
உசத்தியாஞ் சரக்கிதுதா னுறுதி யாகும்
ஆடுபோற் சதையெல்லா மரிஞ்சி வாங்கி
யாக்கியே யுண்பவர்க்குச் சமைத்து வைத்தேன்

ஏடு போ லெலும் பெல்லாம் வீசிப் போட்டேன்
ஏற்றமாஞ் சித்தர்கடா மெடுத்துப் போனார்
பாடுதான் வெகுபாடு ரிசிசித் தர் நூல்
பாலகன்றன் பார்க்கலாம் பதித்த நூலே. 427

நூலான புத்தோட்டுத் தொட்டி தன்னை
நுட்பமாய் வேதையிட மார்க்கங் கேளு
தேலான தேவதாளி விதையை வாங்கிச்
செம்மையாங் கூத்தனுடைக் குதம்பைச் சாற்றில்
மேலான மூன்றுநா ளூற வைத்து
மிடுக்காக வரைத்துமே வில்லை கட்டிப்
பூவான பூப்புடத்திற் றயிலம் வாங்கிப்
புனுகொடுசவ் வாதிரண்டு மர்த்திப் பாயே. 428

மர்த்திப்பாய் பணவெடைதா னிரண்டு தானும்
வளமான புத்தோட்டுத் தகடு தன்னைத்
திர்த்தியாய்ப் பலந்தானொன் றயத்தில் வைத்துச்
சுருக்கிடுவாய் நாற்சாமந் தைலந் தானும்
பர்த்தியாய்ப் பின்புதான் சார காரம்
பொட்டலையு முப்போடு படிகா ரந்தான்
திர்த்தியாந் தைலத்தால் குழம்பா யாட்டி
நேரான இருப்பகலில் வைத்தி டாயே. 429

இருப்பகலில் நடுவேபுத் தோட்டுத் தொட்டி
இசையவே முன்மருந்தால் மேலும் மூடி
மருப்பகலில் மண்செய்தைம் பதெரு வடுக்கி
மார்க்கமாய்ப் புடமதுபோட் டெடுத்துக் கொண்டு
தருப்பகலில் தங்கத்தை வராகன் உருக்கிச்
சரியாகப் புத்தோட்டுத் தொட்டி யீய
கருப்பகலில் களங்காகும் நூற்றுக் கொன்று
காட்டிடவே கனகமயங் கண்டு கொள்ளே. 430

மயமான மருந்தையெடுத் தநுபா னத்தில்
மண்டலந்தான் கொண்டிடவே பத்தி யந்தான்
புயமான வஃதிரண்டுங் கற்றா ளுகுங்
பூரணசந் திரன்போலே முகமே காணும்
பயமான தொன்றுமில்லை நமனு மில்லை
பாழ்போன வாசியெல்லாம் பாய்ந்தொ டுங்குங்
கயமான தொருநாளிற் கழன்று போகுங்
கண்ணிரண்டுங் கருடனைப்போ லொளியுண் டாமே. 431

உண்டான புத்தோட்டுத் தொட்டி தன்னை
ஒளியாமற் சொல்லிவிட்டே னுள்ள மார்க்கம்
கண்டான பேருடனே பேச வேண்டாங்
காட்சியைநீ கண்டுமே மனத டக்கு

பண்டான முன்தொழிலைப் பண்பபடுத்திப்
பசிதனக்கு வறுமைபோற் பாந்தம் பண்ணு
திண்டான சிவசொத்தைக் கைதீண் டாதே
திடாகரித்துத் தொட்டக்கால் நரகந் தானே. 432

ஞான போதனை

நரகந்தான் சிவன்சொத்து உலகோர்க் காகா
நாட்டிலுள்ள செனந் தொட்டால் மிகைவந் தெய்தும்
உரகந்தான் சிவயோகி ஞானிக் காக
உண்மையாந் தொழிலெல்லாம் வெளியிற் போட்டேன்
பரகந்தான் பரதேசி பசிக்கே யாகப்
பாடுபட்டங் கோவ்வொன்றாய்ப் பார்த்துத் தேர்ந்து
விரகந்தான் வெகுவாகப் பாடில் லாமல்
வித்தையெல்லாஞ் சுருக்கமாய் விளம்பி னேனே. 433

விளம்பினேன் வெளியேது ஒளியங் கேது
விண்ணிந்த மூன்றுமல்லோ கேசரி தானுச்சு
களம்பினேன் கண்காது மூக்கங் கேது
கண்டிப்பாய் கண்டவெல்லா மழிந்து போச்சு
உளம்பினே னென்றிரண்டு மாசந் தானே
உற்றுப்பார் வெட்டவெளி யொன்று மில்லை
இளம்பினே னெண்ணேது அறிவங் கேது
ஏகமாய்க் கலந்திடந்தா னெண்ணிக் காணே. 434

எண்ணியே ஞானநூல் தன்னைப் பார்த்தே
ஏற்றமாம் ஞானமெல்லாம் வந்ததென்று
பண்ணியே யலைவார்கள் விண்ணைப் பார்த்துப்
பலபலவாஞ் சிந்தையற்றங் கொன்றாய்க் காணார்
முண்ணியே முத்தியெங்கே யென்று காட்டி
மூச்சற்று நின்றிடத்தே முன்பின் தோணார்
தண்ணியே பின்னேது சாங்க மென்பார்
சமயமெல்லாங் கெட்டழிந்து போன வாறே. 435

வாறான வாணவத்தை நீக்க மாட்டார்
மகத்தான சண்டாளக் கோபந் தள்ளார்
தூறான சுகபோக மொழிக்க மாட்டார்
துறுசான சையோகம் விடுக்க மாட்டார்
தேறான ஞானவெள்ள முண்ண மாட்டார்
சிந்தையற்று மவுனமா யிருக்க மாட்டார்
ஏறான பொருளென்ன வெளிதோ வையா
வேகமாய் மனமடங்க எய்யுங் காணே. 436

எய்யுகின்ற வுலகத்தே மாயக் கூத்து
மிந்திரியக் கண்மூக்கின் செவியின் கூத்துந்
தெய்யுகின்ற வாசையினால் வறுமைக் கூத்துந்
திரளான செனனமொடு மரணக் கூத்தும்

அய்யுகின்ற வண்டமெல்லாம் படைத்த கூத்து
மாங்கார மனம்புத்தி யான கூத்தும்
துய்யுகின்ற படிபடைத்த பராப ரமேயாம்
சோதிசொற்பேர் பூரணத்தைத் தொழுதி றைஞ்சே. 437

## 2-ஆவது பொற்றெட்டி வைப்பு

தொழுதுமே பொற்றெட்டி வைப்பைக் கேளு
சுத்தமாந் தங்கத்தால் மேரு பண்ணி
விழுதுமே மண்கட்டி யுலர வைத்து
மேன்மையாஞ் சரக்கினிதான் சொல்லக் கேளு
உழுதுமே சூதமது பலந்தா னெட்டு
ஒருசேரு மேருவுக் கிதுதான் திட்டம்
முழுதுமுன்போல் சுருக்குக்கு வெடியுப் புநீரும்
மூர்க்கமாஞ் சாரைநீர்கற் றுழை தானே. 438

தானென்ற திதுமுன்போற் சுருக்குப் போட்டுத்
தழும்பாமற் கழுவியே வாங்கிக் கொண்டு
ஆனென்ற வப்புறத்தே யசையா மல்வைத்
தாவின்பால் தனிலேகெந் தகந்தான் சுத்தி
மோனென்ற முன்போலே சுத்தி பண்ணி
மூசியாம லப்புறத்தே வைத்துக் கொண்டு
கோனென்ற தாளகம்முன் போற்சுத் தித்துக்
கொடிதான மஞேசிலைத்தா ளகம்போற் செய்யே. 439

செய்துமே நாகத்தை யிலுப்பை நெய்யிற்
றிறமாகச் சாய்பதின் மூன்று தரந்தான்
கைதுமே கல்லுப்புப் பலந்தா னெட்டுக்
கழுதையுடை மூத்திரத்திற் கலக்கிக் காய்ச்சி
உய்துமே உப்பாக்கி முன்மூத் திரத்தில்
அரைதுமேயைந்து புடம் போட்டெடுத்து
நைதுமே நாகத்தைத் தகடாய் வார்த்து
நலமாகுங் கல்லுப்பைக் கவசங் கட்டே. 440

கட்டியே ஓட்டில்வைத்துக் கனப்பு டந்தான்
காரியமாய்ப் போட்டெடுக்க நாக மாய்ந்து
ஒட்டியே யுப்போடே சேர்ந்து கொண்டங்
குருகியே நாகமது நடுவே நிற்கும்
புட்டியே யுப்பெடுத்து முன்மூத் திரத்திற்
பேராக வரைத்துமுன்போற் கவசங் கட்டு
எட்டியே யெருப்போட்டுப் புடத்தைப் போட
ஏழுபுடந் தனிலிரண்டுஞ் செகப்ப தாமே. 441

செகப்பான பொடியதனை வேறே வைத்துச்
சூதத்தைக் கெந்தகத்தில் விட்டுக் கிண்டித்
துகப்பான கரிபோலே தூளாய்ப் பண்ணிச்
சூதமெட்டுக் கெந்தகந்தா னிரண்டு மாகும்

உகப்பான தாளகமும் சிலை யிரண்டு
உப்பான நாகத்தூள் பலமும் நாலு
தகப்பான சவ்வீரம் பலமு மொன்று
தாக்கியரை திராவகத்தால் மூணு நாளே. 442

மூணுநா ளரைத்திட்டுக் கதிர்முன் பரப்பி
முதிரவே தூள்பண்ணி மேருக் கிட்டு
வாணுநாள் வாலுகையின் மேலே வைத்து
மறவாதே யொருசாமந் தீயை மாட்டு
ஆணுநா ளாறவிட்டு மறுநாள் தானும்
அக்கினிதான் தீபம்போ லிரண்டு சாமம்
தோணுநாள் மூன்றுநாள் முச்சா மந்தான்
துடியாகக் கமலம்போற் றீயைப் போடே. 443

தீதானும் நாலாநாள் நாற்சா மந்தான்
துருசாகப் போட்டுமே தீயை மாற்று
ஆய்தானுங் குறட்டாலே மேரை வாங்கி
யகலவைத்துத் தண்ணீரைத் தெளித்தே யாற்று
பாய்தானும் மேல்வைத்து மண்ணைத் தள்ளிப்
பக்குவமாய் உடைத்தெடுக்கப் பலகை போலாம்
தாய்தானும் பலகைபோற் றெட்டி யாளுற்
றங்கமென்ற மலைதனிலே சார லாமே. 444

குணசலத் தைலம்

சாரவே பொற்றெட்டி பலந்தான் வாங்கிச்
சமத்தான திரிகுண சலத்தைலந் தானும்
கோரவே குணசலென்ற தைலங் கேளு
குணமான மனோசிலையு மரிதா ரந்தான்
நேரவே கெந்திநிறைச் சரியாய்க் கூட்டி
நெகிழவே மஞ்சளாங் கருவா லாட்டித்
திரவே வில்லைகட்டி யுலரப் போட்டுச்
சிறக்கவே ஓட்டிலிட்டு ருக்கிக் கொள்ளே. 445

உருக்கியே பரணிதனி லடைத்து வைத்து
உறைந்ததென்று லக்கினியி லிளக்கிக் கொள்ளு
துருக்கியே பொற்றெட்டி தன்னிற் றேய்த்துச்
சூடன்தீ தனில்வாட்டி முச்சா மந்தான்
பருக்கியே நவலோக மாயிரத் தீய
பத்தரைதான் மாற்றுகும் பாரு ளோர்க்கு
நெருக்கியே ரிசிசித்தர் ஞானிக் குத்தான்
நிறைந்ததோர் மாற்றதுவு நூற தாமே. 446

மாற்றதுவு நூறுனல் வர்ணங் கேளு
மாசற்ற செம்புபோல் நிறமோ காணும்
சேத்ததுவுஞ் செம்பொன்னு யிரந்தான் வெள்ளி
சேர்ந்துடனே தசமாற்று வர்ணங் காணும்

பார்த்ததுவுஞ் சொன்னபடி பாவுக் குள்ளே
பாடினேன் பலபேர்க்கு முதவி யாகக்
கோர்த்ததுவும் வகையாமே மூாயிரத்திற்
கொட்டினேன் குருவருளாற் கூர்ந்து பாரே. 447

பாரப்பா பொற்றெட்டி வைப்புத் தானும்
பலபலவாஞ் சாத்திரத்திற் சொன்னு ரில்லை
நேரப்பா காலாங்கி யையர் சொல்ல
நினைவாக வுன்னியே பாட்டர் சொல்லத்
தாரப்பா தாய்சொல்லச் சிவன்தான் சொல்லச்
சாங்கமாய்ச் சாதித்துப் பார்த்த பின்பு
கோரப்பா எழுகண்டம் பிற்கண் டத்துள்
கொட்டினேன் வைப்புமுறை கூர்ந்து தானே. 448

கூர்ந்துமே குன்றியெடை பொற்றெட் டிதன்னைக்
குறிப்பாக வனுபானந் தன்னிற் கொள்ள
மார்ந்துமே மண்டலந்தான் பத்தி யமாயுண்
மாசற்று நரைதிரைகள் எல்லாம் மாறும்
தேர்ந்துமே கூனதுவுஞ் செம்மை யாகுந்
திரண்டுமே வீழ்ந்த தனஞ் செண்டுபோலாம்
சோர்ந்துமே கண்மயங்கித் தெரியா தார்க்குந்
தூரத்து யோசனைதான் தெரியக் காணே. 449

## ஆத்தாளின் பெருமை

காணயிலே யாத்தாளைக் கண்டு கூவு
கருணையினுற் றயவோடே திரும்பிப் பார்த்து
பூணயிலே பிள்ளையைத்தான் ருயார் சென்று
பேராசை தன்னுலே யெடுத்த துபோல்
ஏணயிலே யெடுத்தணைத்து மோந்து கொண்டு
ஏற்றமுற உயரவைப்பா ளீன்ற தாய்தான்
பாணயிலே மனமுன்னிப் பரவா விட்டாற்
பார்க்காது போலிருப்பாள் பிராக்காய்த் தானே. 450

## குறிப்புரை

பாடல் எண் 401 முதல் 450 வரை

பாடல் எண் : 401 :- சமயி = சமயத்தவர் (மதங்களைப் பின்பற்று பவர்)

பாடல் எண் : 402 :- தாள் = பாதங்கள்

பாடல் எண் : 403 ;- அறுபான் நாலில் = அறுபத்து நான்கில்

பாடல் எண் : 407 :- குவடு = உச்சி (மேலிடம்)

பாடல் எண் : 408 :- அரசின் = அரசமரத்தின்; சாங்கமாய் = முழுமை யுமாய்

பாடல் எண் : 409 :- அளிகூர்ந்து = அன்பு கூர்ந்து

பாடல் எண் : 410 :- மோந்து = உச்சி மோந்து

பாடல் எண் : 412 :- நிருதிமூலை = தென்மேற்கு மூலை; சுணங்கமாம் விருட்சம் = நாய் மரம்; புளகித்து = மயிர்ப் பொடிப்புக் கொண்டு

பாடல் எண் : 413 :- கள்ளி சுட்ட சாம்பல் = திருகு கள்ளி சுட்ட சாம்பல்

பாடல் எண் : 415 :- அப்புறைதல் = நீர் சுண்டிக் கெட்டியாகி வரும் போது; உதிக்கவே = மறுநாட்காலை

பாடல் எண் : 416 :- தூக்கி = எடை போட்டு; மதியுப்பு = இந்துப்பு;

பாடல் எண் : 420 :- திராவம் = (குறுக்கல்) திராவகம் செய்நீர்

பாடல் எண் : 422 :- காரியமாய் = தேவையென்றே

பாடல் எண் : 425 :- முத்தீ = தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி என்பர்

பாடல் எண் : 426 :- தீமாற்றி = தீயையணைத்து

பாடல் எண் : 427 :- அரிஞ்சி = நறுக்கி; வீசிப் போட்டேன் = எறிந்து விட்டேன்; (கற்பார்க்கு உபயோகமும் சுவையு முள்ளதைத் தக்கபடி எடுத்தெழுதி, வேண்டா தவை, கடினமானவை, சுவையற்றவைகளை நீக்கியதை ஆட்டுக் கறி செய்ததற்கு ஒப்பிடு கிறார்)

பாடல் எண் : 428 :- மர்த்திப்பாயே = அரைப்பாயே.

பாடல் எண் : 429 :- தகடு = வில்லை; அயத்தில் = இரும்பு ஓட்டில்; பொட்டலையுமுப்போடு = பொட்டிலுப்பு; இருப் பகல் = இரும்பாலான அகல்

பாடல் எண் : 431 :- கயம் = ஈளைநோய் (க்ஷயம்)

பாடல் எண் : 432 :- திடாகரித்து = உறுதியாகத் தனக்கென்று எடுத் துச் செலவு செய்து கொண்டால்

பாடல் எண் : 433 :- மிகை = பஞ்சம் (மங்கல வழக்கு)

பாடல் எண் : 435 :- சிந்தையற்று = மனம் அடங்கி

பாடல் எண் : 438 :- சேரு = சேர் = 8 பலங் கொண்ட அளவு; சாரை நீர் = சாரச் செய்நீர்.

பாடல் எண் : 441 :- மாய்ந்து = மடிந்து; செகப்பதாமே = செந்தூர மாகும்

பாடல் எண் : 442 :- சிலை = மனோசிலை

பாடல் எண் : 444 :- துருசாக=வேகமாக (காடாக்கினியாகப் போட வேணுமென்று பொருள்படுகிறது)

பாடல் எண் : 449 :- செண்டு=பந்து; வீழ்ந்த தனம்=படுத்த முலை

பாடல் எண் : 450 :- பரவாவிட்டால்=வணங்காவிட்டால்; பிராக் காய்=வேடிக்கையாய்

பிராக்காகச் செகத்தொடண்டப் பதங்க ளெல்லாம்
பேரான குச்சியில்வைத் திருந்த கன்னி
பிராக்காக விவளைவிட்டு யோகம் பார்த்தென்
பேயர்கான் அகண்டத்தில் ஞானம் பார்த்தென்
பிராக்காக ஒன்றுமில்லை மனம்பே யாச்சு
பேயான கூத்தைவிட்டுத் தேற மாட்டார்
பிராக்காக அவளைவிட்டார் ஞானங் கண்டார்
பெலத்தழிக்கு மாசையென்ற பாம்பு தானே. 451

ஆசையாய்ப் பாம்பையல்லோ பூண்டா ரீசன்
அறுகோடு மதியதுவுங் கொன்றை சூடி
மோசையாய்ப் பாம்பையல்லோ முன்னூ லார்த்தார்
முயல்மிதித்துக் கரியுரித்த பினுக பாணி
வாசையாய்ப் பாம்பைக்கங் கணமாத் தரித்தார்
வரியுழுவைத் தோ லுடுத்துப் பாதந் தூக்கி
ஓசையா யுன்மனைக்கு மோதிரமாய்ப் போட்டார்
உயரவே ஒருகாலா லாடி னாரே. 452

ஒருகாலின் கூத்தையல்லோ ஆத்தாள் மெச்சி
உளுக்காத்தி அரனையண்டை வைத்துக் கொண்டாள்
அருகாலின வளருகே யரனு மேய்வார்
அவனவளும் ஒன்றென்று அறிவார் கண்டாய்
எருகாலி னிடமெங்கே ஒலிகேட் டதெங்கே
ஏகமாய்க் காணுகின்ற நடன மெங்கே
குருகாலின் கண்டத்தின் சோதி யெங்கே
கூசாமல் மவுனத்தில் கூடிக் காணே. 453

3-ஆவது செப்புத் தொட்டி வைப்பு

கூடியே செம்பினுடைத் தொட்டி தன்னைக்
குறியாக வைப்பதுவுங் கூர்ந்து கேளு
தேடியே செம்பாலே மேரு பண்ணிச்
சூதத்தைச் சுத்திபண்ணிச் சுருக்குப் போட்டு
நீடியே கெந்தியரி தாரஞ் சிலையை
நேர்ப்பாக முன்போலே சுத்தி பண்ணிப்
பேடியே கல்லுப்புச் சேர்தா னென்று
பூநீறு பலமிரண்டு கத்தம் வாரே. 454

கத்தத்தை யொன்றுக்கு நான்கு வாரு
காய்ச்சியிடு நீரெல்லாம் வற்று மட்டும்
பத்தத்தைச் சுரண்டியே கல்வத் திட்டுப்
பாங்காகக் கத்தம்விட் டரைத்து மைபோற்
சுத்தத்தை வில்லைபண்ணிக் காய வைத்துச்
சூட்டிடவே புடந்தான்போட் டெடுத்த ரைத்து
அத்தத்தை யைந்துபுடம் போட்டெ டுத்தே
அந்தநிறைக் காரீயந் தகடு தட்டே. 455

### காரீயச் சிந்தூரம்

தட்டியே யுப்புக்கு நடுவே வைத்துச்
சாங்கமாய்ச் கத்தத்தா லரைத்துக் கட்டி
அட்டியே யைம்பதெரு வடுக்கிப் போடு
அரைத்தரைத்துக் கட்டியேயைந் துபுடம் போடு
பட்டியே சிந்தூர மாகும் பாரு
பாங்காக வெடுத்தப்பால் வைத்துக் கொண்டு
துட்டியே சூதத்தைத் தூளாய்க் கிண்டித்
தூய்தான கல்வத்திற் போட்டி டாயே. 456

தூய்தான தாளகந்தான் பலமு மொன்று
துப்புரவா மனோசிலையும் பலமு மொன்று
தாய்தான சவ்வீரம் பலமு மொன்று
தளுக்கான வெடியுப்புப் பலமு மொன்று
காய்தான காரீயம் உப்புக் கூட
கலந்ததோர் சிந்தூரம் பலமு நாலு
ஆய்தான திராவகத்தா லரைத்து மைபோல்
அழகான ரவிபுடத்தே காயப் போடே. 457

காய்ந்தபின்பு பொடிபண்ணிச் செம்பு மேரு
கனமாக மண்கட்டிக் காயப் போட்டு
ஆய்ந்தபின்பு அரைவாசி மருந்தை யிட்டு
அப்படியே வாலுகையின் மேலே வைத்துப்
பாய்ந்தபின் பொருசாமம் விளக்குப் போலே
பாங்காக எரியிட்டே யாறப் போடு
மாய்ந்தபின் பிரண்டா நா ளிரண்டு சாமம்
மறவாதே தீப்போட்டங் காறப் போடே. 458

மறவாதே மூன்றுநாள் மூன்று சாமம்
மசகாமல் கமலம்போல் மாட்டிப் போடு
திறவாதே நாலாநாள் நா லுசாமம்
செப்பமாய்த் தீயைப்போட் டடுப்பை மாற்றி
இறவாதே யிளஞ்சூடு பருவந் தன்னில்
எடுத்துமே குறட்டாலே தண்ணீர் வீசு
பிறவாதே மண்தள்ளி யப்பாற் போட்டுப்
பின்புபார் செம்பான தொட்டி யாச்சே. 459

## புனமுருங்கைத் தைலம்

செம்பான தொட்டியது பலந்தா னென்று
சிவக்கவே காய்ச்சியே பழச்சாற்றிற் றேய்த்துப்
பம்பான பதினொருக்கால் மறவாதே தோய்த்துப்
பாங்கான புரசம்வித்து சேங்கொட்டை யோடு
தெம்பான புனமுருங்கை விதைசமனாய்ச் சேர்த்துச்
செப்பியதோர் புனமுருங்கைச் சாறு தன்னில்
உம்பான மூன்றுநாள் ஊற வைத்து
உயர்கின்ற வெடியுப்புப் பலமு மொன்றே. 460

பலமொன்று சீனந்தான் துரிசிபல மொன்று
பாங்கான கல்லுப்புப் பலமு மொன்று
தலமொன்று தாளகந்தான் மனோசிலையு மொன்று
தாக்கான கெந்தகமும் பலமு மொன்று
குலமொன்று இவையெல்லாங் கல்வத்திட்டுக்
கொடிதான புனமுருங்கைச் சாற்றி னாலே
நலமொன்று மூன்றுநாள ரைத்து மைபோல்
நாட்டமாந் தெல்லுப்போல் வில்லை கட்டே. 461

வில்லைகட்டி யுலரவிட்டுப் பூப்புடத்திற் றைலம்
விதைவகைதான் சேருக்குலவ ணவகை பலந்தான்
தொல்லைகட்டித் தொட்டிக்குச் சுருக்குப் போடு
சுயம்பாக நாற்சாம மான பின்பு
கல்லைகட்டிக் கறியுப்புக் கவசங் கட்டிக்
காரியமாந் தைலத்தா லாட்டித் தானும்
புல்லைகட்டிப் புடம்போட்டு மதினூற் றுக்குப்
போட்டிடவே காசெடைதான் பொன்னு மாமே. 462

பொன்னாக வேண்டினால் செப்புத் தொட்டி
பெரிசாகப் பண்ணியே தொழிலைப் பாரு
பண்ணாக நூல்தனையே பயிற்றப பாரு
பாங்காகக் கற்பத்தைப் பரிந்தே யுண்ணு
முன்னாகச் சொன்னபடி யோகம் பாரு
முட்கரமா மைம்புலனை முறித்துச் சாடு
மன்னாக மனதுதன்னிற் சிகாரந் தன்னை
வாய்திறக்கா தொருவருடன் மகிழ்ச்சி கூரே. 463

## மந்திர சாத்திரம் கூறல்

மகிழ்ச்சியா யொருவருடன் வாய்பே சாதே
மனதுதனி லாங்காரந் தனையெண் ணாதே
நெகிழ்ச்சியா யொருவருக்கு மிடங்கொ டாதே
நீர்மையாய் நடந்துகொள்ளு பொய்சொல் லாதே

இகழ்ச்சிதா னொருவர்சொன் னலேங் கிடாதே
எத்தனைதான் சொன்னலும் குற்றம் வேண்டாம்
தகழ்ச்சியாய்த் தண்மைசொல்லு சத்ரா திக்குஞ்
சாங்கமாய் ஏழையைப்போல் தரித்தி டாதே. 464

தரித்திட்ட மகாரவரை நாத ஓசை
தாயார்க்குப் பீடமது மவுன ஞானம்
உரித்திட்டே யூணப்பா நாதத் தோடே
யொருமுனையா யொருவழியா யொன்ரு யோடும்
அரித்திட்டுத் தோற்றுவதங் கொன்று மில்லை
யகண்டவெளி ரவிகோடி சூழ வன்னி
கரித்திட்ட மதிகோடி கண்டுகொள் ளாது
காரணமா மகாரமென்ற மார்க்கங் காணே 465

காணவே மகாரமல்லோ வாசா னலே
காட்டுகின்ற முறையதுதான் ஞான யோகம்
ஆணவே மகாரமது நாதந் தாண்டி
யடங்கிநின்ற இடமல்லோ கேசரி தானும்
மாணவே மாலெழுத் தென்று சொல்வார்
மாட்டுவது மூன்றெழுத்தே யென்று காணுர்
தோணவே மகாரவித்தை யதீத வித்தை
துட்டருடன் சொல்லாதே மவுன மாகே, 466

சொல்லாத மவுனத்தை மூன்றெழுத் தென்பார்
சூட்டுகிற வினங்காணுர் துறவு காணுர்
மல்லாத மவுனத்தை வாய்மூட வென்பார்
மாடானை குதிரையினு லாவ தென்ன
குல்லாத மவுனவித்தை கூடுவது காணுர்
குவிந்துவாய் மூடியே நாதங் கேளார்
தெல்லாத மவுனவித்தை யாசான் காட்டில்
தெசநாதஞ் செயகண்டி கேட்குங் காணே. 467

காணவே மதியினுடை யமுதஞ் சிந்துங்
கடிசான துவாதசமுங் கடந்து தோன்றும்
வாணவே யாசையறுந்தா னெனலும் போகும்
வாருதிபோ லண்ணுக்கி லமுத மோடும்
தாணவே ரவிகோடி காந்தி தோன்றுஞ்
சச்சிதா னந்தவெளி மூன்னே காணும்
மூணவே மேலமுத லகிரி மீறி
மூன்றுகமு நாளாகு மூட்டி யாடே. 468

ஆடவே யுலகத்து லகிரியுண்டு மூட்டு
அடங்கியபின் விண்ணுக்குள் லகிரிவந்து தூக்கும்
கூடவே மகாரத்தை யறிந்து கூடு
கும்மென்ற நாதத்தி லுன்னி யேறு

நாடவே யறிவோடு மனத்தை நாட்டு
நணுகாமல் நாதத்தைக் கூர்ந்து கேளு
ஓடவே யொருவழியா யோடிற் ருனல்
உற்றசன்ம மச்சனன மூத்தி தானே. 469

## 4ஆ-வது எருமைநாத் தொட்டி வைப்பு

(இதையே அயத்தொட்டிப் பாடாணமென்பர்)

முத்தியா மெருமைநாத் தொட்டி கேளு
முனையான கல்லுப்புப் பருங்கட்டி வாங்கி
எத்தியா மெருமைப்பால் படிதானென்று
மேற்றமாங் கல்லுப்புப் பலந்தான் பத்துந்
தத்தியாஞ் சட்டிவைத்துச் சுருக்குப் போடு
சதிராக நாற்சாம மான பின்பு
வெத்தியாங் கலயத்தி லுப்பை வைத்து
வியனுன எருமைப்பால் படியும் வாரே. 470

படிவார்த்துக் கலயத்தி லெழும்பாமற் காய்ச்சிப்
பாலெல்லாம் வற்றியபின் ஞேடு போட்டு
மடிவார்த்து மண்செய்து காய வைத்து
மகத்தான கெசபுடமாய் மாட்டிப் போடு
அடிவார்த்து ஆறியபின் னெடுத்துக் கொண்டு
அயத்தாலே காசியென்ற மேரு பண்ணி
துடிவார்த்த மேரதுதான் பலமு மெட்டுச்
சுத்தித்த சூதமது பலமு மெட்டே. 471

எட்டான கெந்தியது பலமி ரண்டோ
டிசைவான தாளகமும் பலமி ரண்டு
குட்டான குதிரைப்பல் பாடா ணந்தான்
குறிப்பாக நாலுபலங் கட்டி வாங்கித்
திட்டான சுண்ணும்பில் சுத்தி பண்ணிச்
சிறுநீரில் டோஷேகட்டி யெரிப்பாய் சாமம்
மட்டான வாழைப்பா லிருசாமஞ் சுருக்கு
மகத்தான சேங்கொட்டைத் தயிலம் வாங்கே. 472

தயிலத்தா லிருசாமஞ் சுறுக்குப் போட்டுச்
சாங்கமாய் வாழையுடைக் கிழங்கில் வைத்து
மயிலத்தால் மண்செய்து காய வைத்து
மகாபுடமாய்ப் போட்டுமே யெடுத்துக் கொள்ளு
துயிலத்தாற் கெந்தியிட்டுச் சூதத்துள் வறுத்துச்
சுத்தியாஞ் சரக்கெல்லாங் கூடப் போட்டு
உயிலத்தா லுப்பதுவும் பலந்தானு லோடு
உறுதியாங் குதிரைப்பல் பலமு நாலே. 473

நாலான சரக்கெல்லாங் கூடப் போட்டு
நமனுகும் வெடியுப்பு நீராற் றுனும்
சேலான மூன்றுநாள ரைத்து லர்த்து
செயசார நீராலே மூன்று நாள்தான்
கோலான திராவகத்தால் மூன்று நாள்தான்
குறிப்பாக வரைத்துலர்த்தி யயமே ருக்குள்
மாலான வாலுகையின் மேலே வைத்து
மறவாதே முன்போலத் தீயைப் போடே. 474

முன்போலத் திப்போட்டங் காறப் போடு
முகுளிதமாய்க் குறட்டாலே வாங்கித் தண்ணீர்
பின்போல வீசியே மண்ணைத் தள்ளிப்
பேரான வயக்குப்பி தன்னைப் பார்த்தால்
பொன்போல மருந்தெல்லா முருகிப் பாய்ந்து
பொறிப்பொறியா யோடுபோல் தானி ருக்கும்
மின்போல வெருமைநாத் தொட்டி யென்பார்
மிச்சமா மயத்தொட்டி யென்றும் பேரே. 475

பேரான கவுதும்பை விதைபடிதா னென்று
பேய்ப்பீர்க்கம் விதையதுவும் படிதானென்று
நாரான நாய்வேளை விதைபடிதா னென்று
நற்றும்பைச் சாறதனி லூற வைத்துச்
காரான கல்வத்தி லரைத்து மைபோற்
கடுத்தமாந் தெல்லுப்போல் வில்லை பண்ணிப்
பூரான பூப்புடத்தில் தைலம் வாங்கிப்
பெரிதான பரணிதன்னி லடைத்துக் கொள்ளே. 476

கொள்ளென்ற முன்போலக் கார சாரங்
குமட்டியரைத் திடும்போது போட்டுக் கொள்ளு
தள்ளென்ற அயத்தொட்டி பலமு மொன்று
சாங்கமா யயத்தில்வைத்துத் தைலங் குத்திப்
புள்ளென்ற நாற்சாமஞ் சுருக்குப் போட்டுப்
போட்டவுப்பு முன்னுலே தைலத்தாற் கவசம்
வள்ளென்ற புடம்போட்டு எடுத்துக் கொண்டு
மறவாலே நவலோகம் நூற்றுக் கொன்றே. 477

நூற்றுக்கொன் றீந்திடவே கனக மாகும்
நேரான புடசெயமாம் வித்தை கண்டாய்
பார்த்துக்கோ பாடாணம் படுமுன் கட்டும்
பாங்கான லிங்கமது படுத்துக் கொள்ளும்
வேத்துக்கோ வீரமது மெழுகு மாகும்
மிடுக்காகுங் காயசித்தி விரைய வாகும்
நாற்றுக்கு விட்டவிதை போலத் தானும்
நன்மார்க்கர் சிவசித்த யோகிக் காமே. 478

## யோகம் பற்றிக் கூறல்

யோகியே குருவான வகண்ட மூர்த்தி
யுண்மையாம் ஞானமெல்லா மருளி யாச்சு
தாகியே யேறுதற்குச் சாதகத்தைக் கேளு
சமரசமாம் லட்சியத்தை விளங்கச் சொல்லும்
நீகியே நிலைதோறு மெழுத்தைச் சொல்லும்
நிலைத்துநின்ற பிராணாய நிலைமை சொல்லும்
நாகியே நடனமென்ற நிருத்தஞ் சொல்லும்
நலம்பெரிய லட்சியத்தை நல்கி டீரே. 479

நல்குமென்று கேட்டுரைத்த மைந்த னேகேள்
நன்றாகச் சாற்றுகிறே னுட்டங் கேளு
வல்குமென்ற மூலத்தில் வாசி வைத்து
வாகாகப் பிராணாயம் பண்ணித் தீரு
அல்குமென்ற குண்டலிக்குள் நடனங் கண்டு
ஆதித்தன் கோடிபோற் காந்தி காணும்
மல்குமென்ற கண்டத்தில் அங்ஙென் றானு
வாய்திறக்க வொட்டாது வழிசெவ் வாமே. 480

செவ்வையாய் நின்றுரைத்துப் பழக்க மானாற்
சீரான மனோன்மணிதான் புருவமை யநிற்பாள்
உவ்வையாய் மவுனத்தை யொட்டி யூதி
உயரவே சாம்பவியைக் கண்டு கொள்வாய்
தெவ்வையாய் இவ்வளவும் யோக மார்க்கம்
நின்றவரார் சிவயோகி நிலைத்தே யுன்னு
குவ்வையாய் விந்துவென்ற குருப தத்திற்
கூட்டவே மவுனத்தைத் தாரை யாமே. 481

தாரையாம் விந்துவிலே ரவிமதியோ கோடி
தனுக்காகக் கண்கூசி மயக்க மாகும்
ஓரையாம் நாதத்திற் செவிடு பட்டு
ஊமையென்ற வெழுத்தினிடை யுருவு தோற்றும்
வாரையாஞ் சத்தியிலே வன்னி யோடு
மதிகோடி ரவிகோடி ஒவ்வா ஒவ்வா
நாரையாம் வாமப்பா லுண் டவர்க்குக் காணும்
நலிவான ஞானிக்கு மாயந் தானே. 482

மாயமாஞ் சிவத்துக்குள் மவுனஞ் சென்றால்
மதிகோடி வன்னிரவி சோமன் கோடி
பாயமாம் பரத்தின்கீழ் முப்பா முண்டு
பாருற்ற காரமொன்று கார மொன்று
தாயமா மகாரமொன்று முப்பா மூாகத்
தங்கிற்ற அவற்றொளியைச் சொல்லப் போகா
தேயமா மொழியுடைய வுன்ம நூதை
தேவியவள் பதமன்றோ கேசரிதான் காணே. 483

கேசரியின் தாயான காந்தி தானுங்
கெடியான விண்கொள்ளா கரையுங் கொள்ளா
பாசரியின் பரையென் பரம்பரந்தா னென்பர்
பாரிதற்குள் மவுன முண்டறிவு கொண்டு
ஊசரியின் மவுனத்தே நிட்களமே யாவா
உயர்கின்ற வம்பரத்தி லேதோ வேதோ
நேசரியா யிப்படிதான் லட்சியத்தி னேர்மை
நேருவது மப்புறத்தே சோதி தானே. 484

தானென்ற பராபரத்தி லாறுவரை யுண்டு
சமரசமாய்க் கேட்டிருப்போஞ் சொக்கிக் காணும்
மோனென்ற மூலகுருப் பிள்ளை தானும்
மூர்க்கமாங் காலாங்கி நாதர் தாமும்
வானென்ற வாதியவர் ஞான வாதி
மகத்தான குளிகையிட்ட சித்த வாதி
மேனென்ற மேருவெல்லாம் பொன்னே யாக்கி
மிக்கான ரசவாதப் பேருள் ளோரே. 485

ரசவாதப் பேருள்ளோர் குளிகை யிட்டு
நாடியே பூரணத்தி லைந்துவரை கண்டார்
பிசவாத உலகத்தே யவரைப் போலப்
பெருமையாய்ச் சித்தருக்குக் கீர்த்தி வைத்தார்
நிசவாத ரிசிகளோடு முனிவர் சித்தர்
நேராகச் சமாதியிலே யிருந்து கண்டார்
தசவாத சடத்தோடே சென்றோ ரில்லை
சமர்த்தான, மனசினுடைச் சத்தி தானே. 486

மனசினுட வாசனையாங் குரங்கு கேளு
மாட்டியல்லோ விந்திரியக் கொம்புக் குள்ளே
தனசினுட னடித்தடித்துப் பேய்க்கூத் தாகித்
தளர்ச்சியாய் மனசையல்லோ சின்னம் பண்ணி
முனசினுடன் முத்திதனக் கேறொட் டாமல்
புழுமோசஞ் சனியனென்ற மனசு தானும்
அனசினுட வாசனையை யடக்கித் தள்ளி
அந்தகர்க்கும் ஞானவழி யணுகுங் காணே. 487

அணுகவே யெப்படித்தா னென்றுற் கேளு
அகலுவதற்குக் குரங்கைவிட்டு வழியைச் சொல்லும்
நணுகவே யுலகத்தில் வாதம் வந்தால்
நன்மனசு முண்டானாற் சாத்திரத்தில் செல்வார்
தணுகவே சாதுசங்கம் வேதாந்தம் பார்த்தாற்
சமரசமாம் வாசனையாற் குரங்கு போகும்
இணுகவே யத்துவித வாசனையி லேற்று
மெத்தவேயோ உலகத்தி லனேகம் பேரே. 488

அனேகமாஞ் சாத்திரத்தை அளைந்து பார்த்தே
ஆண்மையாந் தொட்டிவகை நாலுஞ் சொன்னேன்
சினேகமாஞ் சித்தர்க்கும் முறைகள் தம்மைச்
செப்பமாய் வழிவகையாய்ச் சீராய்ச் சொன்னேன்
வினேகமாம் வைப்புமுறை யுலகோர்க் காகா
விகாரமாய்ப் பெண்மாயை தன்னி லுற்றால்
நனேகமாம் வெறிகொண்ட நாய்போற் றானும்
நலங்கியே நினைவழிந்து மாறு வானே. 489

## 5-ஆவது மிருதாருசிங்கி வைப்பு

மாளாமற் சிங்கியது மூன்று தானும்
வழியோடே சொல்லுகிறேன் வண்மை கேளு
காளாமற் காரீயஞ் சேர்தா னெட்டுக்
கலந்திடவே சுரைக்கெந்தி சேரி ரண்டு
மீளாமற் காரீய முருக்கிக் கொண்டு
மிடுக்கான கெந்தியிட்டு வறுத்திட் டக்கால்
வேளாமற் காரீயந் தூளு மாகும்
மிடுக்கான கல்வத்தி லிதனைப் போடே. 490

இதனோடே கூடவிடு மருந்து கேளு
ஏற்றமாம் வெடியுப்புப் பலமு மெட்டுப்
பதனோடே தாளகமும் பலமு மெட்டுப்
பாங்காக இவையெல்லாம் பொடியாய்ப் பண்ணி
பதனோடே கண்குவிந்த கலயந் தன்னில்
போட்டுமே வாலுகையின் மேலே வைத்துக்
கதனோடே மூன்றுநாள் தீயைப் போடு
காரியமாய் விடாமலே யெரித்தி டாயே. 491

எரித்திட்டு மூன்றுநா ளாறப் போடு
எளிதாகக் கலயத்தை யுடைத்துப் பார்த்தால்
கரித்திட்டுக் கட்டியாக யேமநிறமாய்
கனமாக மிருதாரு சிங்கி யாச்சு
பரித்திட்ட மிருதாரு பதங்கத் தாதி
பலநாலு நிறுத்துமே வைத்துக் கொண்டு
வரித்திட்டு வெடியுப்பு நீரா லாட்டி
வளமான சாரநீர் விட்டங் காட்டே. 492

விட்டுமே துரிசியது பலமி ரண்டும்
வெங்காரம் பலமிரண்டுங் கூடப் போட்டுத்
தொட்டுமே யாட்டியே சுடுகை யிலிட்டுத்
திருத்தியிரண் டிட்டுமே யூதி னக்கால்

பட்டுமே சுழன்றுருகிச் சத்து மாகும்
பதம்பார்த்துப் பழமாகுந் தண்ணீர் மீட்டான்
தட்டுமே பழச்சாற்றில் சாய்த்து விட்டுச்
சத்தெல்லாம் பொறுக்கியே வேறே வையே. 493

வேறேதான் வைத்துமே பிஷ்டி தன்னை
வெடியுப்புச் சாரநீர் விட்டே யாட்டிப்
பேறேதான் குகையினிலிட் டுருக்கிக் கொண்டு
பேணியே சாய்த்திடுவாய் பழச்சாறு தன்னில்
சாறேதான் வடிகட்டிச் சத்தைப் பொறுக்கிச்
சமரசமா முன்போலே யுருக்கி யாட்டுக்
காறேதான் சத்தெல்லா மொன்றாய்க் கூட்டிக்
கபளித்துக் காரமிட்டு ருக்கி டாயே. 494

## மிருதாருசிங்கிச் செந்தூரம்

உருக்கியே பழச்சாற்றிற் சாய்த்தெ டுத்தே
யொருபலந்தான் சத்துக்குப் பலங்கால் தங்கம்
பெருக்கியே யொன்றாக உருக்கிக் கொண்டு
பொலிவான சவ்வீரம் பலந்தா னென்று
பருக்கியே விந்துவினில் தோச்சுத் தோச்சுப்
பருதிமுன்னே காயவைப்பாய் ஏழு நாள்தான்
அடுக்கியே யனுபவித்துப் பீங்கானில் வாங்கி
யழுந்தவே தோச்சுமே ரவியிற் போடே. 495

தோச்சுமே விந்துவினிற் சீலை சுற்றி
துப்புரவாய்க் கட்டியஃ தழுந்து மட்டும்
கூச்சுமே குழிகெல்லி ஆறங் குலந்தான்
கொடிதான மணலதுபோட் டதன்மேல் வைத்து
மாச்சுமே மேலுமந்த மணலால் மூடி
மாசற்ற நாலெருவில் புடத்தைப் போட்டு
நாச்சுதே யாறவிட்டெ டுத்துக் கொண்டு
நாகத்தின் கிண்ணியிட்டுப் பனியில் வையே. 496

பனியிலே வைத்தவுடன் செயநீ ராகும்
பாங்கான விந்நீரில் வீரம் போட்டுக்
கனியில்வைத்துக் கல்வத்திற் கடிதா யாட்டிக்
கதிர்முன்னம் வில்லைபண்ணிக் காய வைப்பாய்
நனியில்வைத் துலகுபுட மாய்ப்போட் டெடுத்து
நாதாந்த மிருதாரு சத்துத் தன்னைத்
தனியில்வைத்து இக்குருவைச் சமனாய்ச் சேர்த்துச்
சமரசமாய்ப் புடம்போட்டுப் பனியில் வையே. 497

## சூதக்கட்டு

வைப்பதுவும் நாகமாங் கிண்ணிக் குள்ளே
வளமாகச் செயநீரை வாங்கிக் கொண்டு
துய்ப்பதுவு மயக்கரண்டி துருவு போக்கிச்
சுத்தமதா யானபின்பு சூதம் விட்டு
நய்ப்பதுவும் நாற்சாமஞ் சுருக்குப் போடே
நலமாகக் கட்டுண்டு கரியி லாடும்
தைப்பதுவுந் தங்கமிட்டுக் கெந்தி யிட்டுத்
தாளகமு மனோசிலையுந் தணியச் சேரே. 498

தணியவே சேர்த்துமே குப்பிக் கிட்டுச்
சமர்த்தாக வாலுகையின் மேலே வைத்து
அணியவே யறுசாமம் தீயை யாட்ட
அருணன்போற் செந்தூர மாகும் பாரு
தணியவே பணவெடைசாக் கரையிற் கொள்ள
சயரூன்ம மகோதரங்கள் தாழ்ந்து போகும்
மணியவேமண் டலத்தினரை திரையு மாறி
மாசற்ற சந்திரன்போ லொளியு மாமே. 499

ஒளியுமா மொருநூற்றுக் கொன்று தானும்
ஒன்பதிலு மிட்டக்கா லுயர்ந்த மாற்று
வெளியுமாம் மிருதார்சத் துச்செந் தூரம்
விடக்கடிகள் குட்டங்கள் விரண மெல்லாம்
தெளியுமே சித்தரைப்போல் உடல மாகுஞ்
செயமாகும் காயந்தான் வயிர மாகும்
நெளியுமா மாயிரமாம் வருட ந் தானும்
நேராகச் சமாதியிலே இருக்க லாமே. 500

## குறிப்புரை

### பாடல் எண் : 451 முதல் 500 வரை

பாடல் எண் : 451 :- குச்சி = குக்ஷி = வயிறு;
பெலததழிக்கும் = விரைந்து போக்கிடும்.

பாடல் எண் : 452 :- முந்நூல் = பூணூல்; முயல் = முயலகன்;
உழுவை = புலி; உன்பனே = சத்தி (உமை)
483 ஆம் பாடற் குறிப்பிலும் காண்க;
உன் மணித்தாய் என்பர் பிறரும்.

பாடல் எண் : 453 :- ஏய்வார் = பொருந்துவார்.

பாடல் எண் : 454 :- அரிதாரம் = தாளகம்; கத்தம் = (கழுதையின் சிறுநீர்)

பாடல் எண் : 460 :- புரசவித்து = பலாச விதை

பாடல் எண் : 462 :- மதி = வெள்ளி

பாடல் எண் : 464 :- சத்ராதிக்கும்=சத்துரு; ஆதியர்க்கும்=விரோதிக்கும்.

பாடல் எண் : 468 :- துவாதசாந்தம்=பரவெளி.

பாடல் எண் : 471 :- எழும்பாமல்=பொங்காமல்.

பாடல் எண் : 472 :- டோலை=சரக்கைப் பாத்திரத்திலுள்ள திரவத்தில் தோயும்படியோ அல்லது, ஆவி மட்டும் படுபடியாகவோ தொங்கவிட்டு மேல்மூடி எரித்தல்,

பாடல் எண் : 476 :- தெல்=சிறிய சன்னமான அகல்,

பாடல் எண் : 483 :- முப்பாழ்=வெளிப்பாழ், ஒளிப்பாழ், வெளியொளிப்பாழ். கொங்கணர் 500இல் 154 ஆம் பாடல் கூறியபடி:—"மேலான பரைமேலே முப்பாழ் சேளும் விளங்கியொன்று வெளிப்பாழா மதற்கு மேலே, சேலான வொளிப்பாழாய் நிற்கும் பாரு சேர்ந்துமெல்ல அதைத்தாண்டில் செப்பக் கேளும், கோலான வெளியொளிப்பாழ் கூடிப் போகும் குறிமூன்று வரைதாண்ட உன்மணித்தாய் நிற்பாள், பாலான மொழியுடையாள் தமரின் வாசல் பரமவள்தான் போதமவள் பாரு பாரே". உன்மனுந்தை=உன்மணித்தாய் என்பது திரிந்துள்ளது. பா எண் 452இன் குறிப்பிலும் காண்க.

பாடல் எண் : 484 :- அம்பரம்=ஆகாசம்.

பாடல் எண் : 486 :- தசவாத சடம்=பத்து வாயுக்கள் பணி புரியும் உடல்: (பிராணன், அபானன், சமானன், வியானன், உதானன், நாகன், கூர்மன், தேவதத்தன், தனஞ்சயன், கிருகரன் என்பன தசவாயுக்களாம்.)

பாடல் எண் : 487 :- அந்தகர்=குருடர்.

பாடல் எண் : 488 :- அளைந்து=உட்புகுந்து ஆழ்ந்து.

பாடல் எண் : 490 :- சுரைக்கந்தி=இது ஒரு வைப்புச்சரக்கு; இதன் செய்புறையை மச்சமுனி திருமந்திரம் சரக்கு வைப்பு எண்ணூறு எனும் நூலில் 223, 224, 225 பாக்களில் பரக்கக் காணலாம்.

மிடுக்கான கெந்தி என்பது, சுரைக்கந்தியைத் தான் குறிக்கும்.

பாடல் எண் : 493 :- சுடுகையில்=கரி நெருப்பிலிட்டுச் சுடும்போது.

பாடல் எண் : 494 :- பிஷ்டி=சத்து.

பாடல் எண் : 495 :- கெல்லி=தோண்டி.

பாடல் எண் : 498 :- துநவு=துந. (இநம்பில் நீரும் காற்றும் சூரிய ஒளியும் பட்டால் இயல்பாக ஏற்படும் ஒரு வகைக் களிம்பு)

## ஞானங் கூறல்

இருக்கவே யுலகத்தோர் ஞானத் தூடு
ஏகமன தாயிருந்தோர் பேறு கேளு
வருக்கவே பொதிகையினிலி லிங்க மாகி
வாருதிக்கும் மேருவுக்கும் நடுவே கோடி
கருக்கவே காமத்தாற் சுரபாண்டி லிங்கம்
கைவிட்ட சமாதியினுற் சுந்தரமாம் லிங்கம்
பெருக்கவே மலைதோறும் பூமி தோறும்
பேசரிது வெகுபேர்கள் பேணிப் பாரே. 501

பேணியே சுயம்பில்வந்து பிச்சை யேற்ருல்
பூணுமப்போ மவுனசித்தி ஞான சித்தி
ஊணியே ஒன்பதுபே ரிதிலே யாறு
உறுதியாய்ப் பலிகொண்டோ ருன்னி மூவர்
வேணியே விண்ணை யென்ருர் காவார் காவார்
விரைந்தல்லோ ஞானசித்தி வெளியாய்க் காணும்
வாணியே யுலகத்து வாதி போல
வகைகெட்டா லுலுத்தரென்பார் சித்தி தானே. 502

சித்திக்கி ரசயோகம் வைத்தா ரீசன்
திரிவதற்கோ வுண்டுடுத்துச் சொன்ன ரையர்
புத்திக்கு லகிரிகொள்ளு மென்று சொன்னர்
பொறியான வாசனையைத் தள்ளு தற்கு
நித்திக்கு யோகமுதல் ஞானஞ் சொன்னர்
நீக்கவிட மற்றுநின்ற நிர்மலமாஞ் சோதி
எத்திக்கு மிறைக்கிறதோர் கேணி போல
வெடுக்கவே வாசனைதா னெழும்புந் தானே. 503

வாசனைதா னெழும்பாமல் கொன்ருேன் ஞானி
வாசிதனை நிறுத்தினவன் யோகி சித்தன்
தூசினைதான் கருவிகளை யிடுப்பைச் சாடித்
தரத்தினவன் சிவயோகி வாத யோகி
யோசனைதா னெழுப்பாமல் சூட்சஞ் சொல்வேன்
உறுதியாய் மனத்தே யிருந்தாற் போகும்
கேசனைதான் வாசனைகள் கிண்டிற் ருனல்
கெட்டியில்லை யாகையினுல் இருளாய்ப் போச்சே. 504

## 6-ஆவது இரத்தசிங்கி வைப்பு

போச்சென்ற விரத்தசிங்கி வைப்புக் கேளு
பெரிதான உடும்புதனைக் கொண்டு வந்து
நாச்சென்ற நாவினுடன் தலைய றுத்து
நலமாக ரத்தத்தைப் பீங்கானில் விட்டு

வேச்சென்ற மிருதார்சிங் கிபல மெட்டு
விரைந்துமே பொடிபண்ணி யதிலே போட்டுப்
பாச்சென்ற பத்துநாள் கிண்டிக் கிண்டிப்
படுரவியில் வைத்துமே வைத்துக் கொள்ளே. 505

## அயச்செம்பு செய்தல்

வைத்துமே யுடும்பினுடைக் கொழுப்புத் தன்னை
வளமாக வெடுத்துமே யெண்ணெய்ச் சட்டி
அய்த்துமே பொடிப்பொடியா யரிந்து போட்டங்
கதிலிட்டுக் கருக்கினுற் றைதல மாகும்
பொய்த்துமே போகாமல் பீங்கான் வாங்கிப்
புதிதாகு மரப்பொடிதான் பலத்தைத் தானும்
எய்த்துமே பழச்சாற்றில் முந்நாள் போட்டே
இதமாகக் கழுவியே யுலரப் போடே. 506

உலர்ந்தபின் உடும்பினுடைத் தைலத்திற் புறட்டி
உறுதியாய்க் காரமது சமனுய்க் கூட்டிப்
புலர்ந்தபின்பு குகையிலிட்டு ருக்கி யாட்டிற்
பொன்போலே கண்விட்டங் குருகி யாடும்
கலந்தபின்னர் அயஞ்செம்பாங் கனக மாகுங்
கண்கொள்ளா வேதையிதிற் கண்டு கொள்ளு
அலர்ந்தபின்னர் அயச்செம்பால் மேரு பண்ணி
யசகாமல் மண்கட்டிக் காயப் போடே. 507

காய்ந்தபின்பு மிருதாரு சிங்கி தன்னைக்
கல்வத்தி லிட்டுமே பொடியாய்ப் பண்ணி
மாய்ந்தபின்பு தாளகந்தான் பலமு மொன்று
மனேசிலையும் பலமொன்று சவ்வீ ரமொன்று
பாய்ந்தபின்பு குதிரைப்பல் பாடா ணமொன்று
பரிந்திவற்றை முன்போலப் பண்ணிக் கொள்ளு
கூய்ந்தவிட்டுக் கூட்விட்டுப் பொடியாய்ப் பண்ணிக்
கூர்மையாம் வெடியுப்பு நீரா லாட்டே. 508

நீரோடு சாரநீர் விட்டே யாட்டி
நிலவரமாய்க் கடிசான திராவகத்தை வாரு
பூரோடு பொடியாக்கி மேருக் கிட்டுப்
பின்புதான் வாலுகையின் மேலே வைத்து
ஆரோட டங்கல்வைப்புச் சரக்குக் கெல்லாம்
ஆண்மைதான் மேல்வைக்கும் படிதான் கேளு
மேரோடு வெண்கலத்தால் பண்ணக் கேளு
மிடுக்கான மண்ணிலே மேரு பண்ணே. 509

மேருத்தான் பண்ணியே மூக்கு வைத்து
மிக்கான மூக்குநுனி விரலுக் கப்பால்
கோருத்தான் தண்ணீர்நிற்கக் குடைவிரித்தாற் போலக்
கோணமல் மெழுகிட்டு மேருக் குள்ளே
காருத்தான் தண்ணியது விழுகாப் படிக்குக்
கனமாக மெழுகுகட்டி மண்ணைக் கட்டு
போருத்தான் மெழுககற்றி வெண்கலத்தால் வார்த்தும்
பின்புதான் மருந்திட்ட குப்பியதிற் செருகே. 510

செருகியிரண் டங்குலந்தா னிறங்க மூக்குத்
தொங்கவிட்டு மேற்குடையில் தண்ணீ ரூற்று
பருகியிந்த நீரிறங்கக் குடைக்குள் மூக்குப்
பாங்காகக் கெண்டிகைபோல் வைத்துப் போடு
அருகியிந்த நீரிறங்கச் சட்டி வைத்து
அடுப்பெரிப்பாய் சரக்குவைத்து ஆன மட்டும்
திருகியேமே லெடுத்துப்பதம் பார்த்துக் கொள்ளு
சிவக்காட்டால் திரும்பியுந்தான் சொருகிப் போடே. 511

சொருகுமேலில் லாட்டால்வைப் புமுறை யெல்லாந்
தூமந்தான் மேலெழும்பி யோடிப் போகும்
பருகுமேல் தோடமில்லை சொல்லிப் போட்டேன்
பாடாண வைப்புக்குத் திறவு தன்னைத்
திருகுமே சித்தர்சொன்ன நூலி லில்லை.
சிரம்வைத்து பாட்டர்பதஞ் செப்பி னேன்யான்
அருகுமே யையர்வைத்துச் சொன்ன மார்க்கம்
அறைந்திட்டேன் பிற்கண்டந் தன்னிற் றனே. 512

தன்னில்வைத்து வாலுகைமுன் சொன்ன மார்க்கஞ்
சாங்கமாய் யெரியிட்டுத் தணியப் போட்டு
பின்னில் வைத்துக் குறட்டாலே பிடுங்கி வாங்கிப்
பொறுத்ததோர் சூடுதன்னில் தண்ணீர் ஊற்று
மன்னிவைத்து மண்தட்டி எடுத்துப் பார்த்தால்
மதியைப்போல் ரவியைப்போல் ரத்த சிங்கு
பன்னில்வைத்த இதன்மகிமை பகர மாட்டேன்
பராபரத்துக் கொக்குமிந்தப் பரிசு தானே 513

பரிசான குருக்கத்தி விதையை வாங்கிப்
படியளந்து பொன்மத்தைப் படிய ளந்து
தரிசான கிலுகிலுப்பைப் படிய ளந்து
சட்டியிலே போட்டுகிலுப் கிலுப்பைச் சாற்றில்
உரிசான தூறவைத்து மூன்று நாள்தான்
உறுதியாங் கெந்தகமுந் தாளகமுஞ் சிலையுந்
துரிசான துரிசியொடு கல்லுப்புச் சாரந்
துடியான இணங்கலொடு பலமு மொண்ணே. 514

ஒண்ணுக இவையெல்லா மொக்கப் போட்டு
உறவரைத்து வில்லைபண்ணிப் பூப்புடத் தயிலம்
பண்ணுக வாங்கியே யிரத்த சிங்கி
பலம்வைத்துத் தைலத்தைச் சுருக்குப் போடு
உண்ணுகக் கட்டுப்புக் கவசங் கட்டி
உறுதியாய்ப் புடம்போட்டு நூற்றுக் கொன்று
எண்ணுக வீந்திடவே யேம மாகு
மெளிசிலே இரத்தசிங்கி வேதை யாமே. 515

ஞானங் கூறல்

வேதையா யிருக்கிறதோர் ஞானத் துக்கு
மிக்கான வல்லமைதா னென்ன சொல்லு
வாதையாய்க் கண்டத்துள் வரைக ளாலும்
மருவினுற் சடத்தோடே யவனே சித்தன்
நாதையா யொருவரையில் நாத வோசை
நலமான ஒளியினுள்ளே மயக்க மாகும்
காதையா மறுவரையி லிடியோ கோடி
கண்கெட்டேன் மதிகெட்டேன் காதும் போச்சே. 516

போச்சென்ற சூதமுண்டு மவுனத் தாக்கப்
பொருமியே யேழுசட்டை கக்கிப் போகும்
காச்சென்ற வச்செடந்தான் கயிலா சதேகங்
கடுநிமைக்குள் சித்தியாம் நினைவே உன்னில்
தோச்சென்ற பலநூலைப் பார்த்துப் பார்த்துத்
தோணுமல் சித்தாந்தம் வேதாந் தமென்று
ஒச்சென்ற ஒன்றுதனில் நினைவுன் ஞமல்
உளறியே கெட்டவர்கள் கோடி தானே. 517

7வது ஏமசிங்கி வைப்பு

கோடியென்ற ஏமசிங்கி வைப்புக் கேளு
குறிப்பாகத் தங்கமென்ற மேரு பண்ணி
ஏடியென்ற லேசாகப் பெருக்கப் பண்ணி
இரத்தசிங்கி பலமெட்டுக் கல்வத் திட்டுப்
பேடியென்ற பொடிபண்ணி சோறுரி வெட்டுப்
பேரான பலம்வாங்கி வெடியுப்பு நீரில்
தூடியே தோய்த்துமே ரவியில் போட்டே
சுத்தியாஞ் சாரநீர் தோச்சுப் போடே. 518

தோச்சுமே ரவியிலிட்டுத் தினந்தா னேழு
துரிசான திராவகத்தால் பொரிச்சண் டோடு
ஆச்சுமே யரைத்தடையி லேசாய்த் தட்டி
அனலேற வூதியுமே சுண்ணம் பண்ணிக்

காச்சுமே திராவகத்தி லரைத்து மைபோல்
கவசமாய்க் கட்டியுமே துரிசி மேலே
போச்சுமே புடம்போடச் சுண்ண மாகும்
பேரான சுண்ணமிது பூட்டி யாடே. 519

ஆடவே யிரத்தசிங்கி பொடிக்குக் கால்தான்
ஆண்மையாந் துரிசியுடைச் சுண்ணம் போடு
நாடவே நாகவுப்புப் பலமி ரண்டு
நாடியே காரீய உப்பி ரண்டு
தூடவே சூதத்துள் பலமி ரண்டு
சூட்டியெல்லாம் வெடியுப்பு நீரா லாட்டிச்
சாடவே சாரநீரொரு நாளே யாட்டு
தனித்துமே திராவகத்தி லொருநாள் தானே. 520

ஒருநாள்தான் அரைத்துமே யுலர்த்திக் கொண்டு
உறுதியாய்ப் பொடியாக்கி மேருக் கிட்டு
மறுநாள்தான் வாலுகையின் மேலே வைத்து
மறவாதே மேலாக மேரு வைத்துத்
திருநாள்தான் தீபம்போல் தீயை யாட்டு
சொல்லியதோர் சாமமெல்லாம் ஆன பின்பு
பெருநாள்தான் பேத்துமே தண்ணீர் குத்திப்
பின்புதான் மண்ணகற்றிப் பிட்டுப் பாரே. 521

பார்க்கவே மேருத்தான் சரக்கோ டொன்றிப்
பாய்ந்துமே சிவந்தநிற மாயி ருக்கும்
ஏர்க்கவே யேமசிங்கி யென்ற நாமம்
இதினுடைய மகிமைசொல்ல என்னா லாகா
தீர்க்கவே பாட்டர்திரு மூல நாதர்
திருவடியென் சிரசில்வைத்துச் சொன்ன மார்க்கம்
காக்கவே சொன்னக்கால் கடற்புளுகோ வென்பார்
கண்டபடி சொல்லுகிறேன் கருவாய்த் தானே. 522

கருவான வாலுளுவை யரிசிபடி ஒன்று
கனகமணித் தக்காளிச் சாறு வார்த்து
முருவான மூன்றுநா ளூற லைத்து
முனையான கெந்தகந்தான் பலமு மொன்று
தருவான சாறுவிட்ட ரைத்து வில்லை
சக்கரம்போற் கட்டியேபூப் புடத்தில் தயிலம்
உருவான பொற்சிங்கி சுருக்குப் போட்டு
உப்பரைத்து மேலாகக் கவசங் கட்டே. 523

கட்டியே குக்குடமாம் புடத்தைப் போட்டுக்
காரியமாம் லோகமாயி ரத்துக் கீயே
முட்டியே பதினறு மாற்று மாகும்
முனையான வறுபத்து நாலுங் கட்டும்

சுட்டியே முகத்துக்குக் கட்டி னக்கால்
தூமமாஞ் சரக்கெல்லாம் துரத்திச் சாடும்
எட்டியே வெகுதொந்த மேறி யாடும்
எடுக்கெடுக்க வூறுகின்ற கேணி யாமே. 524

ஆமென்ற ஏமசிங்கி யார்க்குக் கிட்டும்
ஆத்தாளைப் பூசித்த வர்க்குக் கிட்டும்
சேமென்ற சிவயோகி ராச யோகி
சித்தருக்கும் ஞானிகட்குந் திரட்டி வைத்தேன்
பாமென்ற பாவிகட்கும் பொய் சொல் வோர்க்கும்
பரமறியா மூடருக்குந் தூசிப் போர்க்கும்
பாமென்ற பானத்தை யிகழ்ச்சி யாகப்
பாராமல் சொல்வோர்க்கும் பலித்தி டாதே. 525

## ஞானங் கூறல்

பலித்திடாப் பலநூலைப் பார்த்துப் பார்த்துப்
பத்தியாய் வேதாந்த சித்தாந் தமென்று
கெலித்திடா மனமுன்னிப் பாரா மற்றுன்
கெட்டலைந்தே யுருண்டோர்கள் கோடா கோடி
அலித்திடா இடமெங்கே யறிவ தெங்கே
அசையாத மவுனமெங்கே ஞான மெங்கே
சொலித்துநின்ற மேல்மூலத் துரிய மெங்கே
சூட்சாதி தனைக்கூடில் ஞான மாமே. 526

ஞானமாம் வாசனையாந் தொய்தத் தோடு
நாடாமல் நின்றக்கால் ஞான மெய்தும்
மோனமா மறையேது அந்தமேது
மீறிநின்ற வெளியேது சோதி யேது
தூனமாந் துறையேது சூழ்ச்சி யேது
சூட்டியிந்த விபரமெல்லாம் ஞானம் பாரு
தானமாம் அல்லவென்று சமுசா ரத்துள்
தள்ளுமப்பா தொய்த்ததி ஞண்மை தானே. 527

தானென்ற தொய்தத்தி னாலே யல்லோ
சராசரங்கள் அண்டமெல்லாம் பரவி நின்று
நானென்ற வாய்ப்பேச்சாம் ஞானி தன்னை
நாக்கறுத்து வாய்கிழித்து மண்ணைப் போடு
ஊனென்ற வுலகத்தோர்க்கு பதேசம் பண்ணி
உண்மையிது தானென்று கெடுத்தே ஆட்டிப்
பேனென்ற பெண்பொன்னு மண்ணி னாலே
பிறந்ததப்பா சண்டாளத் தொய்தத் தாலே, 528

## 8வது சாதிலிங்க வைப்பு

தொய்தமாஞ் சிங்கிவைப்பு மூன்று மாச்சு
சுருதியாஞ் சாதிலிங்க வைப்புக் கேளு
துய்தமாஞ் சுத்தரசம் பலந்தா னெட்டுத்
தெளிவான கெந்தகந்தான் பலமி ரண்டு
வெய்தமாம் வெடியுப்புப் பலமி ரண்டு
முன்போலச் சூதம்கெந் தகத்தால் வறுத்துக்
கைதமாம் வெடியுப்பைக் கலந்து கொண்டு
காசியென்ற மேருக்கே யெடுத்தி டாயே. 529

எடுத்திட்டு வாலுகையின் மேலே வைத்து
இதமாகத் தீயிடுவா யறுசா மந்தான்
கடுத்திட்டு ஆறவிட்டுக் குப்பி வாங்கி
கருகாமல் தண்ணீரைத் தெளித்தே யாற்று
உடுத்திட்டு மண்ணுடைத்துக் குப்பி தன்னில்
உயர்கம்பி லிங்கத்தை யெடுத்துக் கொள்வாய்
படுத்திட்டு மேல்மூடி மூட வேண்டாம்
பத்திரமாய் மண்கட்டு கிழ்க்குப் பிக்கே. 530

## இலிங்கக் கட்டு

சட்டுதற்கு லிங்கத்தைச் சொல்லக் கேளு
கம்பியென்ற லிங்கத்தைப் பலமுந் தூக்கி
எட்டுதற் கெலுமிச்சம் பழச்சா றுசுக்கும்
ஏற்றமா முலைப்பா லுஞ் சுருக்குப் போடு
மட்டுதற்கு வயல் வேளைச் சாறுஞ் சுருக்கு
வகையான வெடியுப்பு நீருஞ் சுருக்கு
தட்டுதற்குச் சாரமென்ற நீருஞ் சுருக்குச்
சாமந்தா னெவ்வொன்று தனித்துப் போடே. 531

தனித்தனியாய் போட்டபின்பு சொல்லக் கேளு
சாங்கமாஞ் சாரம்வெங் காரஞ் சீனம்
வினித்தனியாய் வெடியுப்பு வகைக்கோர் பலந்தான்
வெண்கருவை விட்டரைத்துக் கவசங் கட்டி
உனித்தனியாக் கூடையுமி நடுவே வைத்து
ஒடுக்கமாங் குகைக்குள்ளே வைத்துப் போடு
தனித்தனியாய்த் தீயிடவே வெந்தே யாறிச்
சீதளமா யானபின்னர் எடுத்துக் கொள்ளே. 532

எடுத்துமே யெடைக்கெடைதான் தங்கஞ் சேர்த்து
ஏகமாய்க் காரமிட்டு ருக்கி யாட்டிக்
கடுத்துமே களங்காகும் நூற்றுக் கொன்று
காட்டிடவே கனகமய மாகும் பாரு

படுத்துமே பணவெடைதான் தேனி லுண்ணு
பவளம்போல் மேனியுமாம் பால ளுவாய்
வடுத்துமே வன்னிகெர்ப்பஞ் சிவஞ்சத் தியாச்சு
மார்க்கமது மெத்தவுண்டு மருவி யாடே. 533

அறிவுரை கூறல்

ஆடவே யுறைப்புவந்தா லுபாயங் கேளு
அனுசரித்துக் குண்டலிக்குள் வாசி வைத்துப்
போடவே பிராணயம் பண்ணித் தீரு
பேசரிய செயகண்டி சிலம்பொலி காணும்
நாடவே கண்டத்தே அங்னென் றாணு
நாட்டமாம் புருவமையந் திறந்து போகும்
காடவே கனிபோலே யமுதம் வீழுங்
கண்கண்ட காயசித்தி கண்டு பாரே. 534

கண்டுமே மதியான விந்து மட்டுங்
கடிசான யோகமிது கண்டு கொள்ளு
விண்டிந்த விந்துமுத ளுதைஞ் சத்தி
மேலான சிவத்தோடு பரந்தான் கேளு
பண்டுமே பராபரத்தோ டாறு தானும்
பாங்கான மவுனம்வைத் தூதிக் காணு
உண்டுமே ஞானத்தின் யோக மாயிற்
றுன்னியே மவுனவித்தை யுண்டு பாரே. 535

பார்க்கவே பராபரத்தின் மேலே யாறு
பதமான வகண்டந்தான் நிர்க்கு ணந்தான்
நோக்கவே நிட்களந்தான் நிராகா ரந்தான்
நேரான நிர்மலந்தான் போதத் தந்தம்
காக்கவே இவையாறுங் காணப் போகா
காண்பவர்தான் சொல்லக்கேள் கைகடந் தயோகி
தார்க்கவே சடம்விட்டங் கறிவு விட்டுச்
சார்ந்துமே யகண்டத்தை யறிந்து கொள்ளே. 536

கொள்ளுமே மதியளவும் பிண்டத் துள்ளே
கூடியே யாறுதலங் குறித்துக் காணு
விள்ளுமே விந்துமேமேற் பரத்தின் மட்டும்
மேலான அறிவினுடைச் சக்கரந் தானும்
தெள்ளுமே பரத்தின்மேற் போத மட்டும்
சிவசிவா நிர்மலத்தின் வரைக ளாறுந்
தள்ளுமே மேலாறுஞ் சாரப் போகா
சச்சிதா னந்தமென்ற பாட்டர் காணே, 537

பாட்டரென்ற திருமூலர் சூத்திரத்தைக் காட்ட
பரிவான தசதீட்சை கடந்த பின்பு
தேட்டரென்ற மவுனமஃ துண்மை ஞானஞ்
செப்புவார் அகாரமுதல் உகார மென்பார்

வேட்டரென்ற சிரசுக்குள் வேதாந்தக் காட்சி
விரைந்ததிலே உம்மென்றால் நாத மாமோ
நாட்டரென்ற கைகாட்டில் நாதங் காணும்
நலமறியான் ஞானியல்ல சிகண்டி தானே. 538

## ஒவது கருமுகிற்பாடாண வைப்பு

சிகண்டியாங் கருமுற்றான் செப்பக் கேளு
செம்பாலே காசியென்ற மேரு பண்ணி
அகண்டியா மண்கட்டிக் காயப் போடு
அதிற்போடும் மருந்தையினி அறையக் கேளு
துகண்டியாய்ச் சுத்தித்த சூத மெட்டுச்
சுத்தித்த கெந்தகந்தான் பலமி ரண்டு
பகண்டியாய்க் கெந்தியிட்டு வறுத்துக் கொண்டு
பாங்கான வெடியுப்புப் பலமி ரண்டே. 539

பலமிரண்டு துரிசியது வறுத்துப் போடு
பாங்கான தாளகமும் பலந்தா னென்று
கலமிரண்டிங் கிவையெல்லாங் கல்வத் திட்டுக்
காணவே யவுரியின் சாற்றி னாலே
நலமிரண்டு நாலுநாள் நைய ஆட்டி
நன்றாகக் காய்ந்தபின்பு பொடியாய்ப் பண்ணி
வலமிரண்டு மேருக்கே யெடுத்திட் டேதான்
வாலுகையின் மேல்வைத்துத் தீயைப் போடே. 540

தீப்போட்டங் கொருநாள்தா னெருசா மந்தித்
திறந்துமே போட்டுமே மறுநாள் தானும்
வாய்ப்போட்டு முன்சொன்ன மேரைத் தானும்
மாட்டியே மறுநாள்தான் தீயைப் போடு
தாய்ப்போட்டுத் தண்ணீரை வார்த்து வாநீ
சாமமெலா மானபின்பு தணியப் போட்டுக்
காய்ப்போட்டுக் குறட்டான்மேல் மேரு வாங்கிக்
கனமான கீழ்மேரிற் கணக்கைக் கேளே. 541

கேளுமே யவுரியென்ற சாறு வாங்கிக்
கெடியாகத் தெளித்துமே யாறப் போடு
வாளுமே மண்தன்னைத் தட்டிப் போடு
மருந்தையெடுத் துடைத்தக்காற் கட்டி யாகத்
தேளுமே செம்பெல்லாங் கரைந்தே யொக்கச்
சிவந்த கறுப்பாகவே யிருக்கும் பாரு
காளுமே கருமுகிற் பாடா ணமாகுங்
காரியங்கள் மெத்தவுண்டு காணொ ணாதே. 542

காணுணுக் கருமுகிலின் வர்மங் கேளு
கனமான கட்டியொரு பலத்தை வைத்துப்
பூணுணுப் புளிப்புமா தளம்ப ழத்தைப்
பிசைந்தந்தச் சாறெடுத்துச் சுருக்குப் போடு
நாணுணு நால்சாமம் போட்ட பின்பு
நலமான கல்லுப்புக் கவசங் கட்டி
ஊணுணு உமிப்புடத்தில் வைத்தெ டுத்தே
யொருநூற்றுக் கொன்றிடவே யுயர்ந்த மாற்றே. 543

மாற்றுத்தான் கறுப்பாகத் தானி ருக்கும்
மாசற்ற மதிதனில்பத் துக்கொன் றூட்டி
ஊத்துத்தான் லேசாக வூதிப் போட
ஒன்பதுதா ணுணிக்கு முயர்ந்தி ருக்கும்
காற்றுத்தா னுள்ளடங்கி காற்றூ ணுகுங்
கருவண்டு போலாகும் நரைத்த ரோமம்
போத்துத்தான் விட்டதுபோ லிதனின் வேதை
பொன்னுகும் வெகுவிரிவு பிறிச்சே ஆடே; 544

## யோகம் கூறல்

பிறிச்சறிந்த விடங்காட்டி நாதங் காட்டிப்
பேசாத மவுனத்தின் பெருமை காட்டிக்
குறிச்சறிந்த வெளிகாட்டி யாறுதலங் காட்டிக்
குறியாகத் தோற்றுவிக்குங் குணமுங் காட்டி
நெறிச்சறிந்த வுடம்பைவிட்டுக் கேசரியுங் காட்டி
நிறையாக ஊமைநின்ற விடமுங் காட்டிப்
பறிச்சறிந்த வாய்ப்பேச்சா லாமோ சொல்லு
பாட்டாரென்ற குருசொல்ல வெல்லா மாச்சே. 545

எல்லாமா முலகத்தோர் யோக ஞான
மெடுத்தேறிக் கூடுவதங் கரிது மெத்த
குல்லாமாங் குண்டலியைத் தொட்டங் கேறிக்
கூடுவது யோகமெத்த கடின மார்க்கம்
வல்லாமாம் வாமத்திற் புக்கு நின்று
வத்துண்ணக் கற்பமுண்ண வாய்க்கும் ரெண்டும்
சொல்லாமாஞ் சோமிந்தைச் சடையில் வைத்த
சின்மயத்தைக் காட்டுவிக்குந் திறமாய்த் தானே. 546

## 10ஆவது தீமுறுகற்பாடாண வைப்பு

திறமான தீமுறுகல் செப்பக் கேளு
செம்பாலே கனமாக மேரு பண்ணிக்
கறமான மண்கட்டிக் காயப் போட்டுக்
கட்டுகிற தெப்படித்தான் கண்டு கொள்ளு

உறமான உமிகருக்கல் கரம்பை மண்ணும்
ஒக்கவிட்டுச் சரிசமனு யிடித்து நையப்
பிறமான மேருக்கு மண்ணைக் கட்டில்
பிலத்திருக்கும் நெருப்புக்கங் கசையா தென்னே. 547

அசையாத சூதமது பலமு மெட்டு
அடைவான கெந்தகந்தான் பலமும் ரெண்டு
தசையாத தாளகந்தான் பலமு மொன்று
தாயான கவுரியஃத ரைப்ப லந்தான்
இசையாத விணங்கனது பலமும் ரெண்டு
வேகமாய் வெடியுப்பு நீரா லாட்டித்
தசையாத சாரநீர் விட்டே யாட்டிச்
சாங்கமாந் திராவகத்தால் தனித்தே ஆட்டே. 548

ஆட்டுவது எப்படிதா னென்றூற் கேளு
ஆண்மைா யொருநீரை விட்டே யாட்டிப்
பூட்டுவது ரவியில் விட்டுப் பொடியாய்ப் பண்ணிப்
பின்புதான் பின்னென்றை வார்த்தே யாட்டு
மூட்டுவது ஒருநீர்க்கு மூன்று நாள்தான்
முழித்துமே ராமாறு அரைப்பைப் பூட்டி
வேட்டுவது விடிந்தபின்பு வெயிலிற் போடு
மிடுக்காகப் பொடிபண்ணி மேருக் கேற்றே. 549

மேருக்கே யேற்றுவது அரைவாசி மட்டும்
மேன்மையாய்ப் பொடிபண்ணி வாலுகையிலே
தேருக்கே தீபம்போல் நெருப்புப் போட்டுத்
திடுமிடியற் பண்ணுதே சிறுதீப் போடு
வேருக்கே விறற்பருமன் விறகு போடு
மிடுக்கான விறகிட்டால் புகைமேற் கொள்ளும்
வாருக்கே யாவியெல்லாம் போன பின்பு
மறுநாள் தான் மேல்மேரு மூடிப் போடே. 550

---

## குறிப்புரை

பாடல் எண் : 551 முதல் 600 வரை

பாடல் எண் : 503 :- வாசனை = இது இயல்பாக மணத்தைக் குறிக்கும் ஆனால் ஞானிகள் அதைக் குறிக்கவில்லை. முன் பிறவியில் எவ்வுருவில் இச்சீவன் இருந்ததோ அதையறிய இப்பிறப்பில் அச்சீவன் தன் பஞ்சேந்திரிய விளாபாரத்தால் தன்னை அறியாமல் வெளிப்படுத்தும் குண்மும் குறிகளுமாம்.

பாடல் எண் : 514 :- இணங்கன் = வெடியுப்பு. கிலு கிலுப்பை = இரட்டைப் பேய்மருட்டி.

பாடல் எண் : 521 :- திரிநாள் = மூன்று நாள்.

பாடல் எண் : 522 :- கடற் புளுகு = கடல்போலப் பரந்த பெரும் பொய்.

பாடல் எண் : 523 :- கனக மணித்தக்காளி = செம்மை நிறப் பழம் தரும் மணித்தக்காளி.

பாடல் எண் : 525 :- பானம் = யோகியர் அருந்தும் அமுத பானம்.

பாடல் எண் : 527 :- அந்தம் = வேதாந்தம் (உபநிடதம்). தொய்தம் = துவிதம் என்ற சொல் மருவி இவ்வண்ணமாய்நின்றுள்ளது. இரண்டு விதம் என்பதுஇதன் பொருள் மாறுபாடான இரண்ா ஒருமித்தால் நலனேதும் தராது என்பது இப் பாட்டின் கருத்து.

பாடல் எண் : 530 :- இதமாகத் தீயிடு = தீபாக்கினி, கமலாக்கினியாய்த் தீயிடவும்.

பாடல் எண் : 534 :- உறைப்பு = சினம் = அகங்காரம்.

பாடல் எண் : 535 :- ஆறு = ஆறு ஆதாரங்கள்.

பாடல் எண் : 549 :- ராமாறு = ஆறு இரவுகள் (இரா என்பது குறுக்கல் விகாரமாயது.

---

மூடியே முன்கணக்காய்த் தீயைப் போட்டு
முசியாம லாறவிட்டுக் குறட்டால் வாங்கி
நீடியே நீராலே யவித்தே யாற்றி
நேராக மண்ணகற்றிச் சரக்கைப் பார்த்தால்
ஆடியே மழமழத்துப் பனங்கம் பிப்போல்
யடுக்காகக் கருஞ்சிவப்ப தாகக் காணும்
தூடியே துருத்திதனக் கசையா தாகுஞ்
சூட்சந்தான் மெத்தவிதிற் சூட்டிப் பாரே. 551

## குதிரைப்பல் பாடாணக் கட்டு

சூட்டியே தீமுறுகல் பலந்தா னுலு
சுளுக்காகப் பொடிபண்ணிப் பீங்கான் வைத்துத்
தாட்டியே குதிரைப்பல் பலந்தா னென்று
தளுக்காகச் சுண்ணும்பில் கொதிப்பாய்ச் சாமம்
மாட்டியே மனுஷனுடை யமுரி சாமம்
மறவாதே பாகலிலைச் சாறு சாமம்
தேட்டியே செங்கொட்டைத் தைலஞ் சாமந்
தெளிவான வாழைப்பால் சாமந் தானே. 552

சாமந்தான் வெடியுப்பு நீரிற் சுருக்குச்
சாரநீர் சாமந்தான் சுருக்குப் போடு
காமந்தான் கடிசான திராவ கத்தில்
கல்லுப்புக் கவசமுமிப் புடமாய்ப் போடு
வேமந்தான் வெடியுப்பு நீரா லாட்டி
வெங்காரம் பலமொன்று துரிசி யொன்று
ஓமந்தான் ஒருசாமங் கல்வத் தாட்டி
ஒக்கவே தீமுறுகல் பொடியைப் போடே. 553

பொடிபோட்டு மதித்துச்சுட்ட குகைக் கிட்டுப்
பெரியதோர் துருத்திரெண்டு மாட்டி யூது
துடிபோட்டுக் குகைதூக்கிக் கரியை யிட்டுச்
சுறுக்காக வூதிடவே சத்து மாகும்
பிடிபோட்ட சத்தெல்லாம் பொறுக்கிக் கொண்டு
பிஷ்டிக்கு முன்போல மருந்து கூட்டிக்
குடிபோட்ட குகைக்குள்வைத் துருக்கிச் சாய்க்கக்
கொப்பளித்துச் சத்துத்தான் செம்பு மாமே. 554

## தம்பனக் குளிகை

செம்பான தீமுறுகல் சத்துக் குள்ளே
சேர்த்திடுவாய் நாலுக்கங் கொன்று தங்கம்
கொம்பான கிண்ணிபோற் கொட்டிக் கொண்டு
குறிப்பாக வடித்தூரில் மண்ணைக் கட்டு
வம்பான வாலுகையின் மேலே வைத்து
மறவாதே பொன்மத்தைச் சாறு விட்டுத்
தும்பான சுத்தித்த சூதம் வார்த்துச்
சூட்சமாய் நாற்சாம மெரித்தி டாயே. 555

எரித்திடவே யிறுகியது வெண்ணெய் யாகும்
ஏற்றமாம் பொன்மத்தங் காய்க்குள் வாட்டு
அரித்திடவே ஆரையிலைக் குள்ளே வாட்டு
அரசிலையிற் பிராயிலையி லமர வாட்டு
விரித்திடவே விராலியிலைக் குள்ளே வாட்டு
வெண்சூடன் தீதன்னி ல்டுக்க வாட்டு
உரித்திடவே விளக்கெண்ணெய் தானுங் குத்து
உருகியபின் கடுஞ்சுருக்குச் சாராயங் குத்தே. 556

சாராயஞ் சாமந்தான் சுருக்குப் போடு
தனிப்பின்ப பினரைத்துச் சாரா யத்தால்
தோராயஞ் சாமந்தான் சுருக்குப் போடு
துணையான சடைக்கஞ்சா துவைத்துக் கொண்டு
பாராயைஞ் சாமந்தான் சுருக்குப் போடு
பனங்கள்ளு சாமந்தான் சுருக்குப் போடு
பூராயம் புதுத்தேன்தான் சுருக்குப் போடு
பின்புந்தான் பால்வார்த்துக் கழுவிப் போடே. 557

கழுவியே சிரசில் வைக்க ஆயுதந் தையாது
கடிசாகும் ஸ்த்ரீதனக் கரையிற் கட்டு
தழுவியே சுக்கிலத்தம் பனையு மாகுந்
தங்கமிட்டுச் சிந்தூரம் பண்ணித் தின்னு
விழுவியே போகாது கற்பாந்த காலம்
மேதினியுங் கொள்ளாது கற்பாந்த காலம்
தழுவியே சத்துக்குள்ளே வேதை கோடி
சாற்றவரி தென்னலுஞ் சிந்தூரந் தானே. 558

தானான சாதிலிங்க மேருக் குள்ளே
தனித்தனியே யெட்டுவிதச் சரக்குண் டாகும்
வானான வாலுகையிற் குப்பி வைத்து
வளப்பத்தா னுவிமுக்கில் சாதி லிங்கம்
பானான பக்கத்தில் தொட்டி யாகும்
பற்பரமாம் பக்கத்தின் கீழே தானும்
வானான வதின்கீழே தாம்பிர சூடம்
மணிராக மதின்கீழே வன்னிகெர்ப்ப மாச்சே. 559

வன்னிகெர்ப்பந் தன்கீழே கருமு கிற்றான்
மகத்தான வடிதனிலே தீமுறுக லாகும்
தன்னிகெர்ப்பச் சரக்காலு மெரிப்பி னாலுஞ்
சாதகமாய்க் கைமுறையின் சமர்த்தி னாலும்
பன்னிகெர்ப்பம் வைக்கின்ற பந்தத் தாலும்
பக்கத்தில் சிலாகையிட்ட பரிசி னாலும்
தென்னிகர்ப்பத் தீபார்த்து விட்டு விட்டுச்
சிலாகையிட்ட திறத்தாலு மெட்டு மாச்சே. 560

எட்டுந்தா னெருமேரிற் றெண்ண லாகும்
ஏற்றமாய்க் குடம்போலே மேரு பண்ணித்
தட்டுந்தான் சரக்கதவு மரைவா சியிட்டுச்
சாடையா யெரியிட்டே யெடுக்க லாகும்
உட்டுந்தா னுலகோர்க்குத் தெரியா தென்றே
ஒவ்வொன்றாய்ப் பிரித்துமே யுரைத்தேன் பாரு
வெட்டுந்தான் கல்வெட்டு வெட்டவெளி காணும்
விளவரியாய் பிள்ளைகட்காய் வெளியிட் டேனே. 561

வெளியாக வைப்புமுறை சொல்லா விட்டால்
மேதினியோர் தங்களுக்கு வருத்தந் தீரக்
களியாகக் காயசித்தி கடிசி லாகக்
கனமான வியாதியெல்லா மகன்று போக
வளியாக வாதமுறை யெளிசி லாக
வயஸ்தம்ப வித்தைவந்து வணங்கிக் கேட்க
அளியாக வஞ்சனமாக் கருஷ ணங்கள்
அடங்கலுந்தான் தாதுக்கு ளடக்க மாமே. 562

அடக்கமாங் குருவினதி சயத்தைக் கேளு
ஆதியாய்ச் சடையின்மேல் மதியும் வைத்துத்
திடக்கமாய் நெற்றியிற் றீக்கண்ணை வைத்துச்
சேடனைத்தான் ஆபரண மாகப் பூண்டு
கடக்கமாங் கரியையுரித் திடையில் தரித்துக்
கனமான புலித்தோலை மேலே போர்த்துத்
துடக்கமாஞ் சுடுகாட்டிற் குடியு மாகிச்
சூடியே பலியெடுத்துச் சொக்கி னாரே. 563

சொக்கியதோர் குருவினுடை வாம பாகஞ்
சூழ்ந்துநின்ற என்தாயார் சித்தி கேளு
அக்கியதோ ரட்டமா சித்தி நிற்க
ஆதியாம் ரிசிசித்தர் அடங்க லாக
சிக்கியதோர் நவகோடி தேவர் சித்தர்
சிறந்துநின்று போற்றியே கொலுவின் சேவை
புக்கியதோர் நிர்க்குணத்தின் பதத்தைப் போற்றப்
பொருளோடே யருள்கொடுப்பாள் பூண்டு பாரே. 564

## 11-வது வெள்ளைப்பாடாண வைப்பு

பூண்டுமே வெள்ளைப்பா டாண வைப்பைப்
பிரித்துமே சொல்லுகிறேன் புத்தி யோர்க்குக்
கூண்டுமே குதிரைப்பல் பாடா ணந்தான்
குமட்டியே பொடிபண்ணிச் சேரு நாலு
வேண்டுமே வெள்ளையாங் கறியுப் பைத்தான்
மிடுக்கான சட்டியிட்டு வறுத்துக் கொள்ளு
தீண்டுமே தெறிப்படங்கி மாப்போ லான
திறம்பார்த்து நாலுசேர்தா னுக்கக் கூட்டே. 565

கூட்டவே யிதனோடே கிளிஞ்சிற் சுண்ணங்
கேண்மையாய்ப் பொடிதானுஞ் சேரு கூட்டு
ஊட்டவே யொன்றாகக் கலந்து கொண்டங்
குறுதியாய்த் தோண்டிரெண்டு ரஞ்சிச் சேர்த்து
மீட்டவே மேற்றோண்டி யதனுக் குள்ளே
மேன்மையா மத்தஞ்சா றேழு தரம்பூசு
ஆட்டவே யடித்தோண்டி யதனுக் குள்ளே
யழுத்தியே மருந்திட்டுத் தோண்டி மூடே. 566

மூடியே முன்சொன்ன மண்ணைப் பூசு
மீறுமல் சக்கரமா மடுப்பில் வைத்து
நாடியே நாற்சாம மைந்து விறகால்
நலங்காம லெரித்திட்டே யாறப் போடு
பாடியே அசையாது படுக்கப் போட்டுப்
பாங்கான கழிநுனியில் மயிர்க்குச் சிகட்டித்
தூடியே பரவாமற் குச்சியால் வாங்கு
தூள்தானும் மாப்போலா மொன்றில் வாங்கே. 567

வாங்கையிலே தோண்டிமண்ணைத் தண்ணீர் குத்தி
மலங்காதே கத்தியினுல் மதித்து வாங்கு
வீங்கையிலே மேற்றோண்டி மருந்து தானும்
மூக்கிலே வாய்கண்ணிற் பட்டால் வீங்கும்
தாங்கையிலே தூரநின்று சுறண்டி வாங்கித்
தாக்கான காசியென்ற மேருக் கிட்டு
ஓங்கையிலே வாலுகையின் மேலே வைத்து
உறுதியாய் வாய்தன்னைத் திறந்து போடே. 568

திறந்திட்டு முன்சாமந் தீயை யாட்டு
செப்பினேன் காசியென்ற மேருக் கெல்லாம்
மறந்திட்டு மேல்மேரு வைத்தால் மோசம்
மாசற்ற லோகமென்ற மேருக் கெல்லாம்
கறந்திட்டு மேல்மேரு மூட வேணுங்
காசியென்ற மேருக்கு மூட லாகா
பிறந்திட்ட பிள்ளைகட்கு மறிவு தோன்றும்
பேய்ப்பாட்டாய் மறைப்பில்லை பிடுங்க லாச்சே. 569

பிடுங்கலாய் வாலுகைக்கு மண்ணைக் கேளு
பெரிசான சலங்கை மண்ணுய் யெடுத்து வந்து
குடுங்கலாய்க் கற்கட்டி யில்லா மற்றூன்
கொழித்துமே சட்டிக்குட் போடு போடு
துடுங்கலாய்த் தூசிமண்ணைப் போட்டு வைத்தாற்
சூடுதா னேருது புகையோ காணும்
தடுங்கலாய்ச் சரக்கினுடைப் புகையோ வென்று
சமுசயங்கள் வாராது சலங்கை மண்ணே. 570

சலங்கைமண்ணிற் புகைகண்டாற் சரக்கின் புகைதான்
தளராதே மேருவிற்குள் விரிசல் கண்டாய்
குலங்கையாஞ் சூலமென்ற குறட்டால் வாங்கிக்
கொட்டிடுவாய் யாறவிட்டு பின்னெனன் றிற்றூன்
வலங்கையா முன்போலே வைத்துப் போடு
மறுகுப்பி யிரண்டொன்று இருந்தா னீயும்
விலங்கையாம் விரற்கதுமம் மண்ணை வாங்கில்
வெளிப்படுங்காண் தூமமெத்த விரைந்து வாங்கே. 571

விரைந்துமே வாங்கையிலே வெடிப்பில்லா மேரை
விடுவிக்க வொண்ணாது மெதுத்தீப் போட்டு
திரைந்துமே மறுகுப்பி தனில டைத்துச்
சீக்கிரமாய் முன்போல வைத்துப் போடு
பரைந்துமே பழங்குப்பி தனிலே மருந்து
பாச்சினுற் சரக்கதுவும் பட்டுப் போகும்
புரைந்துமே புதுக்குப்பி தன்னில் வைத்தால்
பிலத்துமே யெடைசரியாய் நிற்கும் பாரே. 572

பாரென்ற வாலுகைக்குச் சட்டி தானும்
பதியவே யடுப்பகலஞ் சரியாய்ப் பார்த்தே
ஆரென்ற அங்குலந்தா னரைக்கு றைச்சலாய்
மண்ணரைத் தைந்தாறு பண்ணி வாங்கி
வேரென்ற வேக்காடு வேகப் பண்ணி
விரைந்தல்லோ வாங்கியே வைத்துக் கொள்ளு
தூரென்ற சித்தர்சொன்ன நூலி லெல்லாஞ்
சூட்சங்கள் சொல்லாதே பாடி னுரே. 573

பாரென்ற வாலுகையில் வைத்தெ ரித்துப்
பாங்காக முன்சொன்ன சாம மானல்
ஆரென்ற வடுப்போடே யாறப் போடு
அதன்பின்பு மண்ணகற்றிக் கையால் வாங்கு
தேரென்ற தண்ணீர்தான் தெறித்தால் மோசஞ்
சூதமது சேர்ந்துநின்ற சிவப்புக் கெல்லாம்
தாரென்ற தண்ணீர்தான் தெளிக்க வேணுஞ்
சாந்தமா மற்றதற்கு ஆகா தென்னே. 574

வெள்ளைப்பாடாணக் கட்டு

என்னவே வெள்ளையென்ற பாடா ணந்தான்
ஏற்றமாஞ் சரக்கிதுதான் கல்லோ டுருகுங்
கன்னவே யிதைக்கட்டில் வெகுவாம் வித்தை
காசினியில் வாதிகள்தாம் கட்ட மாட்டார்
தென்னவே இருடிசித்தர் ஞானி யோர்க்குக்
கணத்திலே சித்திக்கும் செயமு மாகும்
முன்னவே யிதைக்கட்டி லெல்லாங் கட்டும்
மூர்க்கமாஞ் சரக்கிதனின் முறையைக் கேளே. 575

முறையாக வெள்ளையொரு பலத்தை வாங்கி
முனிந்ததோர் சுண்ணும்புக் கல்லைச் சுட்டு
அறையாகச் சிலைக்குள் பரப்பி வைத்தாங்
கதுமேலே பாடாணக் கட்டி வைப்பாய்
குறையாகச் சுண்ணும்புக் கல்லு மூடிக்
குறையாதே பதினெருக்காற் பனங்கள் ளிற்றேய்
நிறையாகக் கல்வைத்துத் தோய்த்த பின்பு
நேரான வெள்ளைமந் தாரப் பூவே. 576

பூவென்ற சாறதுவும் நாலு சாமம்
பிசகாதே யனலேறச் சுருக்குப் போடு
தேவென்ற சிறுபீளைச் சாறு தானுஞ்
செப்பமா யொருசாமஞ் சுருக்குப் போடு
கோவென்ற கொட்டைப்பா சிலையின் சாறு
கூசாதே யொருசாமம் சுருக்குப் போடு
மாவென்ற மனிதனுடை யமுரி தன்னில்
மாட்டியே பூநீறு கரைத்துக் கொள்ளே. 577

கரைத்துமே தெளிவிறுத்து நாலாம் நாள்தான்
கடுஞ்சுருக்கா யொருசாமஞ் சுருக்குப் போடு
விரைத்துமே வெடியுப்புநீர் சாமஞ் சுருக்கு
வேகமாஞ் சாரநீர் சாம மாகும்
திரைத்துமே கடிசான திராவ கத்தால்
செப்பமா யொருசாமஞ் சுருக்குப் போடு
பரைத்துமே கட்டியதோர் கல்லுப்புக் கவசம்
பாங்காக வுமிப்புடத்திற் போட்டு வாங்கே. 578

வாங்கியே யுப்பினுடைக் கவச நீக்க
வயிரமே தானும் மற்றென் றெவ்வா
ஓங்கியே சூரியன்போல் ஒளியே தோணும்
உருக்கியே எடைக்கெடைக்கு வங்கஞ் சேர்த்து
நீங்கியே யுடைத்தக்காற் றாளு மாகும்
நேருட்டு வங்கவெடை வெள்ளி தானும்
ஏங்கியே யெடைக்கெல்லாஞ் சூதந் தான்சேர்த்
திழுத்தரைத்து முலைப்பாலில் புடத்தைப் போடே. 579

முலைப்பாலிற் சாமந்தா நேக வரைத்து
முனிந்துமே யகலிலிட்டு மண்ணைப் பூசிக்
கலைப்பாகக் கவுதாரிப் புடமே போடக்
களங்காகும் வெள்ளீயஞ் செப்பிற் றுக்கு
நிலையாகப் பதினைந்து மாற்று மாகும்
நீக்கரிதாம் வெள்ளியது நிலத்த வித்தை
துலைப்பாகக் குழிவெட்டி யிரைத்தாற் போலத்
தொலையாது ரசிதமது சுறுக்குத் தானே. 580

பர தத்துவங் கூறல்

சுறுக்காகுந் தாயார்தான் துரைப்பெண் ணுகுஞ்
சிவந்தானுஞ் சேவேறுஞ் சடைய னேழை
குறுக்காக விவள்முன்னே யையர் வந்து
குணமாகக் கேட்டதெல்லாம் கொடுப்பாள் தாயும்
நறுக்காக வகண்டத்தே ஞான சுத்தி
நலமாகப் பூசித்தா லாறுபத்து மீவாள்
தறுக்காகச் சடமெல்லாம் அவன்தன் கூறு
தகப்பனுக் கெலும்போடு நரம்பி ரண்டே. 581

நரம்பான வாசிரெண்டி லொன்று சத்தி
நலமாகச் சிவமொன்று பிராண வாயு
நிரம்பான தொன்றிநின்றூற் சுழியு மாச்சு
நேரான யோகமுமாம் ஞான மாகும்
தரம்பான தண்டாகுஞ் சுழியின் னடுவே
நிற்குமிதற் குள்ளேமுக் கிரந்தி யுண்டு
துரம்பான சுழிமுனையிற் பிராண னேறில்
சுருதியா நாதாந்த யோகங் காணே. 582

நேரமா நெஞ்சினுள்ளே பிராண யோகம்
ஒற்றையான் தாமரையின் நூல்போ லாகும்
ஆகமா மதிலிரட்டி யபான வாயு
அடங்கிநின்ற விரண்டையுநீ கண்டா யானல்
போகமா மதுக்குள்ளே ஞான யோகம்
புசண்டருக்குச் சித்தியிது கயிலா சதேகம்
தூகமா நவகோடி மாலைக் கண்டார்
சுகயோக மாவதிந்தத் துறையைப் பாரே. 583

கௌரி வைப்பு

துறையான கௌரிவைப்பைச் சொல்லக் கேளு
சுத்தவெள்ளைப் பாடாணம் பலமும் பத்துத்
திறையான கெந்திரெண் டரைப்ப லந்தான்
செப்பமாய்த் தாளகந்தான் பலமென் றேகால்
மறையான மனேசிலைதா ளகத்திற் பாதி
மார்க்கமாய்க் கல்வத்தில் பொடியாய்ப் பண்ணி
நிறையான வெடியுப்பு நீர்விட் டாட்டி
நீச்சான சாரத்தின் நீரி லாட்டே. 584

ஆட்டியே பின்புகடுந் திராவ கத்தி
லரைத்துமே பொடியாக்கிக் காசி மேரு
மாட்டியே மண்கட்டி நிழலு லர்த்தி
மார்க்கமாய் மூக்கடைக்கும் வண்மை கேளு
தீட்டியே முன்சொன்ன மண்ணைத் தானுஞ்
சிக்கெனவே கட்டியே யுலர்ந்த பின்பு
நாட்டியே ஒருநாள்தான் ரவியிற் போட்டு
நலமாகக் காய்ந்தபின்பு ரஞ்சி டாயே. 585

உரஞ்சுவது சொறியான கருங்கற் குள்ளே
யொப்பமா யரைத்துமே வைத்துக் கொள்ளு
கரஞ்சுவது மேருதனக் கரைவா சியிட்டுக்
கனமான வாலுகையில் வைக்கும் போது
திரஞ்சுவது சீலைசுற்றி வாயடைப் பாய்ச்
செம்மியபின் தீயிடுகி லெடுத்துப் போடு
மரஞ்சுவது மருந்திடுகிற் கண்கொட் டாச்சி
வைத்துமே மருந்திட்டு வைத்தி டாயே. 586

வைத்துமே முன்போலத் தீயெ ரித்து
மார்க்கமாம் பதங்கண்டா லாறப் போட்டுத்
தேய்த்துமே சீதளமா யான பின்பு
தேய்த்துமே தண்ணீரா லூற வைத்து
மைத்துமே மண்தன்னை வாங்கிப் போட்டு
மறுபடிதான் குப்பிதன்னை யுடைத்துப் பாரு
கைத்துமே கட்டியாயச் செம்மஞ் சள்தான்
கனமாகத் தானிருக்குங் கண்டு பாரே. 587

## கௌரிபாடாணக் கட்டு

கண்டுமே கௌரியென்ற பாடா ணத்தைக்
கட்டுதற்குக் கருவேதென் ருயா னுக்கால்
மண்டுமே மனோன்மணிதன் பேரு மான
மாசற்ற கௌரிகட்டில் மார்க்க மெத்த
விண்டுமுன்போல் வெள்ளைகட்டு மார்க்கம் போலே
விதமறிந்து கட்டினுற் புட்ப ராகம்
பண்டுமே யிரண்டுமது சரியாய்க் காணும்
பார்ப்போர்க்குப் புட்பராகந் தானு மாமே. 588

புட்பராகம் போன்றமணி தன்னை வாங்கிப்
பொன்தன்னைச் சரியெடையாய் யுருக்கிச் சேர்க்க
உட்பராகம் போலவது வுடைந்து தூளாம்
உகந்துமே யிந்தெடைக்குச் சூதங் கூட்டித்
தட்பராகம் போன்ற லிங்கந் தானுந்
தாளகமும் சிலையொடுகால் வாசி கூட்டிக்
குட்பராகங் குலாமல்லிச் சாற்றிற் சேர்த்துக்
குமட்டியரைத் தேமூன்று நாளுந் தானே. 589

மூன்றுநா ளரைத்திட்டு வில்லை கட்டி
முயற்சியா யகலிலிட்டுப் புடத்தைப் போடக்
கான்றுநாள் களங்காகும் இரவி தன்னில்
கண்டிடுமே திசைமாற்றுக் கொடுத்துப் பாரு,
பூன்றுநாள் கௌரியுடைக் களங்க மெல்லாம்
பொன்னுகப் பழுத்தா லுங் கருப்புக் காணும்
ஆன்றுநா ளூதிடவே களங்க மற்று
அலரிப்பூ நிறமாகு மேமந் தானே. 590

## அறிவு கூறல்

ஏமத்தி னுசையுடை யேற்றங் கேளு
எல்லாந்தா னெண்ணியே யறிந்து பாரு
சேமத்தின் திரோதாயி யாரென் றக்கால்
செகமெல்லாம் பெண்ணுசை மண்ணுசை
பூமத்தின் பொன்னுசை வாசனை யினுசை
பொங்கிநின்ற விந்திரிய மயக்கத் தாசை
நாமத்தின் நாமப்பா வென்ற வாண்மை
நல்வினைக்குந் தீவினைக்கும் வித்த தாமே. 591

வித்தான பெண்ணுசை நீங்கிற் ருனல்
மேலான திரோதாயி மாயை போச்சு
சித்தான வேதாந்த வெளியிற் சென்ருல்
சுகஞ்சொல்லிச் சொல்லுதற்கு நாவோ கூசும்

பித்தான பெண்மாயை தன்னிற் சிக்கிப்
பெரியோர்கள் ரிசிசித்தர் கோடி கெட்டார்
பத்தான சித்தரொடு பஞ்ச கர்த்தர்
பட்டதோர் பாடுமெத்த வுண்டு தானே. 592

உண்டான வித்துக்குள் புண்ணி யபாவம்
ஒருகோடி புண்ணியத்தால் புருட சன்மம்
பண்டான வெகுகோடி பாவம் பண்ணிப்
பாழான பெண்சன்மம் எடுத்து மாண்டார்
குண்டான திதையறிந்து பாவ மான
குழியிலே விழுவாரோ மனுடர் தாமும்
விண்டான பெண்ணாசை தனைம றந்து
பூரணத்தி லாசையுற்றுப் பேய்போ வில்லே. 593

நில்லென்ற பூரணமே யகண்டத் தந்த
நிறைந்துநின்ற நிற்குணமே நீங்கித் தானய்
உல்லென்ற உலகிற்பெண் ணாசை போல
ஒருக்காலும் சுகமில்லை யென்பார் மாண்பர்
அல்லென்ற வகண்டத்தி லாசை யென்ன
வட்டமா சித்தியினு லாவ தென்ன
வல்லென்ற குவிமுலையா ளாசை விட்டால்
மகத்தான மூவுலகும் விட்டுப் போச்சே. 594

12 வது சவ்வீர வைப்பு

போச்சென்ற சவ்வீர வைப்புக் கேளு
பொட்டுலுப்புப் பலமிரண்டு சாரம் ரெண்டு
காச்சென்ற கல்லுப்புப் பலந்தா னுலு
கடிசான துரிசியது பலமும் நாலு
ஆச்சென்ற அன்னமென்ற பேதி ரெண்டு
ஆதியாம் பூநீறு பலமும் ரெண்டு
தோச்சென்ற சீனம்ரெண்டு கல்வத் திட்டுச்
சுழற்றியரை வெடியுப்பு நீரிற் றுனே. 595

அரைத்திடுவாய் சாரநீர் மூன்று நாள்தான்
அதின்பின்பு திராவகத்தில் மூன்று நாள்தான்
விரைந்திடுவாய் சீனத்தை வேறே வைத்து
வெடியுப்புப் பலமிரெண்டு கல்வத் திட்டுத்
தரைத்திடுவாய் வெடியுப்புச் சார நீருந்
தாக்கான திராவகத்தி லரைத்துக் கொள்வாய்
துரைத்திடுவாய் துரிசியொரு பலந்தா னுலு
சுண்ணும்புச் சீலைதன்னைச் சுற்றி டாயே. 596

சுண்ணும்பங் கேதென்றால் சொல்லக் கேளு
துடியான வண்டத்தோற் சுண்ணும் பாகும்
வெண்ணும்புக் குகையில்வெள் ளீய முருக்கி
விளங்கவே குறட்டாலே பிடித்துக் கொண்டு
பண்ணும்பு பதினொருக்கால் தோய்த்தெடுத்துப்
பாங்கான சுண்ணும்புச் சீலை வாங்கிக்
கண்ணும்புக் கழுதையுடைக் கத்தந் தோய்த்துக்
கடுரவியில் மூன்றுநாள் போட்டி டாயே. 597

மூன்றுநாள் வெடியுப்பு நீரிற் றோய்ப்பாய்
மூர்க்கமாஞ் சாரநீர் மூன்று நாள்தான்
தோன்றுநாள் திராவகத்தில் மூன்று நாள்தான்
துருசான ரவியிலிட் டெடுத்து வைப்பாய்
கான்றுநாள் கல்லுப்புப் பலந்தா றுறு
கானகத்துப் புங்கம்வேர் பாலை யூட்டு
ஏன்றுநா னெலுமிச்சம் பழச்சா றூட்டு
ஏற்றமாம் வெடியுப்புச் செயநீ ரூட்டே. 598

ஊட்டுவாய் சாரநீர்மும் மூன்று நாள்தான்
உறுதியாந் திராவகதிதை நாள்மூன் றூட்டு
தீட்டுவாய் யிந்துகல் லுப்பைச் சமனுய்ச்
சிறக்கவரை மேனிச்சா றதனி னுலே
காட்டுவாய் கல்லுப்பிற் கவசங் கட்டிக்
காய்ந்தபின்பு சட்டிதனில் வைக்கக் கேளு
பூட்டுவா யுவர்மண்ணு படிதான் ரெண்டு
பொங்காமல் தேசியுடைக் கத்தம் வாரே. 599

கத்தந்தான் வார்த்ததுமே பிசைந்து கொண்டு
கனமான சட்டியிலே பாதி வைத்துப்
பத்தந்தான் வசித்திட்ட வுப்பை வைத்துப்
பரப்பியே மேலுமந்தப் படியே போட்டு
அத்தந்தான் முத்திநன்றாய் நாலு சாமம்
அசகாம லெரியிட்டே ஆறப் போட்டுச்
சுத்தந்தான் சுப்பிரமாய்த் தானி ருக்குந்
தூசில்லா தெடுத்துமே வைத்துக் கொள்ளே. 600

## குறிப்புரை

### பாடல் எண் : 551 முதல் 600 வரை

**பாடல் எண் : 555 :-** பொன்மத்தை = பொன்னூமத்தை.

**பாடல் எண் ; 558 :-** சுக்கிலத்தம்பனை = விந்துவிடாது கட்டி நிற்கும்; கற்பாந்த காலம் = ஒரு பிரம்ம தேவனின் ஆயுட் காலமாகிய நூறாண்டுகள்; 143 ஆம் பாடலின் குறிப்பையும் காண்க.

பாடல் எண் : 562 :- வயஸ்தம்பம் = வயதைக் கட்டுப்படுத்தும், (மார்க்கண்டேயர் என்றும் பதினாறாகவும், தேவர்கள் என்றும் முப்பதாண்டுடையாராகவும் இருத்தல் போன்ற காயகற்பம்).

பாடல் எண் : 563 :- சிவனுடைய ஆடையைப் போர்வையாகவும்; போர்வையை ஆடையாகவும் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

பாடல் எண் : 564 :- அடங்கலாக = மொத்தமாக.

பாடல் எண் : 565 :- தெறிப்படங்கி = வெடிப்பது அடங்கி.

பாடல் எண் : 566 :- உரஞ்சி = வாய்ப்புறத்தை ஒரு மட்டமாய்த் தேய்த்து

பாடல் எண் : 567 :- கழி = தடி, கொம்பு; மயிர்க்குச்சி = உரோமத்தை கத்தையாய்க் கட்டி வைத்தல்.

பாடல் எண் : 569 :- பிடுங்கல் = தொந்தரவு.

பாடல் எண் : 570 :- தூசிமண் = தூசிகள் கலந்த மெல்லிய மண்.

பாடல் எண் : 571 :- விரற்கதுமம் = விரற்பருமன்; தூமம் = புகை.

பாடல் எண் : 575 :- மூர்க்கமாய் = மிக்க வீரியமுள்ள.

பாடல் எண் : 577 :- கொட்டைப்பாசிலே = கொட்டைக் கரந்தை.

பாடல் எண் : 580 :- கவுதாரிப் புடம் = 5 வரட்டியில் புடமிடல்; ரசிதம் = வெள்ளி.

பாடல் எண் : 581 :- சேவு = காளை = இடபம். ஆறுபத்து = (உம்மைத் தொகை) பதினாறு பேறு

பாடல் எண் : 582 :- சுழி = சுழிமுனை.

பாடல் எண் : 590 :- பழுத்தாலும் = வேதையானாலும். களங்கம் = முதலது களங்கு பிந்தியது குற்றம்.

பாடல் எண் : 594 :- வல் = சூதாடு கருவியில் ஒன்று.

பாடல் எண் : 597 :- கத்தம் = கட்டம் = சிறுநீர்

பாடல் எண் : 598 :- ஊட்டு = சுருக்கிடு.

பாடல் எண் : 599 :- தேசி = கழுதை.

பாடல் எண் : 600 :- வசித்திட்ட = கட்டப்பட்ட; முத்தீ = (குறுக்கல்) தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி என்ற மூன்று வித எரிப்பு.

### சாரக்கட்டு

எடுத்துமே சாரமது பலந்தான் ரெண்டும்
எண்ணெயில்லா வெங்காரம் பலந்தானாலும்
பொடுத்துமே பொட்டுலுப்புப் பலந்தானெட்டும்
பொடிபண்ணி வெவ்வேறே வைத்துக் கொள்ளு

கடுத்துமே கல்லுப்புப் பலமீ ராறு
சுத்தத்தில் பொடிபண்ணிக் காய்ச்சிக் கொண்டு
விடுத்துமே வெடியுப்புச் செயநீர் தன்னில்
மூன்றுநாள் தோய்த்துமே ரவியிற் போடே. 601

ரவியிலே போடுவது சாரந் தன்னை
நாளொன்றுக் கேழுவிசை தோய்ச்சுப் போட்டுப்
புவியிலே முன்சொன்ன சரக்குக் கெல்லாம்
பிரித்து நாளொன்றுக் கேழு விசைதோய்
அவியிலே சாரநீர் தோய்த்துப் போடு
ஆண்மையாந் திராவகத்திற் தோய்த்துப் போடு
தவியிலே கல்லுப்புச் சட்டி தனிற் பரப்பித்
தனிப்பாதி யெடுத்துமே யப்பால் வையே. 602

வையுமே யதின்மேலே பொட்டுலுப்புப் பாதி
வைத்திடுவா யதின்மேலே வெங்காரம் பாதி
நையுமே காஞ்சநவச் சாரம் வைத்து
நடுவான வெங்காரம் பாதி வைப்பாய்
செய்யுமே யதின்மேலே பொட்டு லுப்புத்
திறமாக வைத்துக்கல் லுப்புப் போடு
மையுமே மண்பிசைந் தடைபோற் றட்டி
மருவவே தீபம்போ லெரித்திட் டாயே. 603

எரித்துமே தீபம்போல் நாலு சாமம்
இதமாக ஆறவிட்டெ டுத்துப் பார்த்து
மரித்துமே மண்ணெல்லாம் வாங்கிப் போட்டு
வளமான உளிகொண்டு கவசம் நீக்கித்
தரித்துமே சாரத்தை யெடுத்துப் பார்த்தால்
தந்தம்போல் கட்டியாய்த் தானி ருக்கும்
பிரித்துமே பீங்கானில் பதனம் பண்ணிப்
பூநீறு பலமிரண்டு கல்வத் தூட்டே. 604

ஊட்டியே வெடியுப்பு நீரா லாட்டி
யுறவரைத்துப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
ஆட்டியே யன்னமென்ற பேதி தன்னை
யரைத்துமே வெடியுப்பு நீராற் றுனும்
மூட்டியே புடம்போட்டு எடுத்து வைத்து
முனிவான சூதத்தைச் சுத்தி பண்ணிக்
காட்டியே பீங்கானிற் சேர விட்டுக்
கடிசான திராவகத்தி னீற்றி டாயே. 605

நீற்றியதோர் சூதமது பலந்தா னெட்டு
நேராகக் கட்டியதோர் கல்லுப் பாறு
தூற்றியதோர் துரிசியது பலந்தா னாலு
சுப்பிரமாஞ் சீனமது பலமி ரண்டு

ஏத்தியதோ ரிணங்கனது பலமி ரண்டு
ஏற்றமா நவச்சாரம் பலமி ரண்டு
ஆற்றியதோர் பூநீறு பலமி ரண்டு
அன்னமென்ற பேதியது பலமி ரண்டே. 606

பலமான விவையெல்லாங் கல்வத் திட்டுப்
பாங்கான திராவகத்தால் நாள்மூன் ருட்டிப்
பிலமான பீங்கானில் வாரி யிட்டுப்
பெருமையாந் தீயிவிட்டு வறுத்துக் கொள்ளு
புலமான பொடியாக்கிக் காசி மேரு
பிலக்கவே மண்செய்து பொடியைப் போடு
வலமான வாலுகையின் மேலே வைத்து
மறவாதே பன்னிரண்டு சாமந் தீயே. 607

தீயிட்டு முன்போலே யாற விட்டுச்
சிதருதே மண்ணகற்றி யுடைத்துப் பார்த்தால்
பாங்கிட்டுப் பதங்கிச்சுப் பலகை போலப்
பாரமாய் வெளுப்பாகத் தானி ருக்கும்
வேயிட்டு இதுவல்லோ வீர ராசன்
மேதினிக்குள் வாதத்திற் றளவா யாகும்
தாயிட்ட களங்குக்குஞ் சிந்தூரத் துக்குந்
தாக்கினல் வீரத்தைச் சண்ணும் பாரே. 608

வீரக்கட்டு

பாரிந்த வீரத்தைக் கட்டக் கேளு
பயின்றெடுத்த வண்டத்தி னேடு தன்னை
நேரிந்தப் பலம்நாலு நிறுத்திக் கொண்டு
நீட்டியரை திராவகத்தில் மைபோற் ருனும்
வேரிந்த வில்லை பண்ணிக் காயப் போட்டு
மிடுக்காகத் துருத்தியிட் டூதி னக்கால்
தூரிந்தச் சுண்ணும்பாம் பலமும் ரெண்டும்
துடியாமுன் சொன்னநவச் சாரம் ரெண்டே. 609

ரெண்டையுந்தா னரைத்திட்டுத் திராவ கத்தால்
நேர்ப்பாகப் புடம்போட்டுப் பனியில் வைக்கப்
பண்டையுந்தான் பலபலெனச் செயநீ ராகும்
பாங்கான விந்நீரில் பூரம் லிங்கம்
ஒண்டையுந்தான் விட்டொக்கப் பொடித்துப் போட்டு
உயர்கோழி முட்டைக்கெல் குதந்தி யாலே
உண்டையுந் தானுறிகட்டிக் கருவூற்றிப் போட்டு
உற்பனமாய் வட்டமிட்டுத் தூக்கிப் போடே. 610

தூக்கியே உஞ்சல்போ லிருவிரலின் கீழே
சுருக்கான கரிநெருப்பை யூதிக் கொட்டு
விக்கியதோர் வீரமது வராகனெடை நாலு
மெல்லியதாம் பரிரேக்கு வராகனெடை யொன்று
ஆக்கியே யண்டோட்டுக் குள்ளே யிட்டு
ஆண்மையாஞ் செயநீரைக் குத்தி வந்து
வீக்கியே நால்சாமஞ் சுருக்குப் போட்டால்
மெழுகாகும் வீரந்தான் மேன்மை யாமே. 611

மேன்மையா மெழுகெடுத் திரும்பில் மாட்டி
விரவியே புடம்போட ஏம மாகும்
வான்மையாஞ் சாரத்தில் அனந்தம் வித்தை
மாசற்ற செயநீரிற் கோடி வித்தை
பான்மையாம் வீரத்தின் மெழுகு பட்டால்
படுமுன்னே நவலோகஞ் சவளை யாகும்
தான்மையா மறுபத்து நாலுங் கட்டுஞ்
சமுசயங்க ளொன்றுமில்லை வீரத் தாட்டே. 612

வீரந்தான் வைக்கையிலே சேர்க்குப் பலங்கால்
விரவியே தாளகத்தைப் பொடித்துப் போட்டுப்
பாரந்தான் பதங்கமஃ தேறிற் றானால்
பலகைபோ லுறப்பாகச் சிவப்பாய்க் காணும்
வாரந்தா னின்நீரிற் றேய்த்துப் போட்டு
மறவாதே கற்பூர தீபம் வாட்டு
தாரந்தான் தங்கத்தின் ரேக்குச் சுற்றித்
தணலிலே வாட்டினால் சிவந்து போமே. 613

சிவந்ததோர் வீரத்தில் வேதை கோடி
செப்பமாய் முன்வீரம் மெழுகுக் காகும்
புலந்ததோர் பின்வீரம் வாட்டுக் காகும்
பொலிவான முன்வீரங் கரைந்து போகும்
தவழ்ந்ததோர் பிள்ளைசென்று நடந்தாற் போலச்
சரக்கான வீரத்தி லனந்தம் போக்கு
முவந்ததோர் வாதிகட் கிதுமுன் வேணும்
மூட்டாட்டால் சாரணையுங் கமனம் போச்சே. 614

### அறவுரை கூறல்

போச்சென்ற வீதியிலே படுகுழி தானென்று
பேராகப் புல்லோடு செடியும் மூடில்
நாச்சென்ற வீதியென்று விழுந்த வன்றன்
நாட்டமொக்கும் பெண்ணென மாயக் காமம்
தாச்சென்று தள்ளினால் தள்ளப் போகா
சரசமாம் பெண்ணரவு தன்னைத் தொட்டால்
காச்சென்று காமமது கருத்த ழிக்கும்
கடுகுமே பொல்லாத காமந் தானே. 615

காமமென்ன பொங்குகிற சிவத்தின் கூறு
கடிதான வாசையென்ன மாலின் கூறு
பூமமென்ன மோகமயேஸ் வரத்தின் கூறு
போகுமிந்த மூன்றுலும் உலகம் பாழாய்
நாமமென்ன யோகம்போய் ஞானப் பாழாய்
நாடியதோர் சமாதியெல்லாம் பாச மூடித்
தாமென்ன மோட்சத்தின் தாரைப் போல
தாழ்ச்சியாய் ஞானமெலாந் தறுகிப் போச்சே. 616

தறுகியே பெண்ணுசை விட்டே னென்பார்
தனிப்பட்டால் பாதத்தில் சரணஞ் செய்வார்
கறுகியே கிடையாட்டா லாசை பூண்பார்
கனவினில் காயப்பெண் கலப்பாள் பாரு
பறுகியே பஞ்சகர்த்தர் காமத் தாலே
பரிகரிக்க மாட்டார்கள் மற்ருேர்க் கேது
இறுகியே விந்துவிடக் கோப மோக
மிடுப்பழிக்காக் கையைத்தா னிழக்குங் காணே. 617

இழக்காமல் வெட்டினுர் விந்துப் பாம்பை
யேற்றமாம் வேதாந்த வாளினுலே
வழக்காமல் மாயையைத்தான் மடித்துப் போட்டார்
மருவியதோர் பூரணத்தின் மார்க்கத் தாலே
நிழக்காமல் ஓட்டினுர் நிர்க் குணத்தின் மட்டும்
நேராக வதுவல்லோ ஞான வீதி
கிழக்காமல் சகசால வித்தை யொன்று
தெளிந்திட்டார் சிவயோகி முனிவர் தாமே. 618

முனிவதுதா னெளிதலவாய்ப் பேச்சால் ஞானம்
மோகமாய்ப் பெண்கண்டால் ஞானம் போச்சு
கனிவதுதா னுடலுக்கங் கடுத்த கர்மங்
கனித்ததர முண்ணுவது யோக மென்பார்
பனிவதுதான் காலேது வாசி யேது
மார்க்கமாய் மவுனத்தில் மருவ லேது
பனிவதுதான் எந்நாளோ வென்று லோகர்
பரதவித்து மாண்டார்கள் கோடி தானே. 619

தானுன பிறப்பிறப்பும் பெண்ணினுலே
தழுவிநின்ற மாயமெல்லாம் பெண்ணினுலே
ஏனுன விந்திரியம் பெண்ணினுலே
யேற்றமாம் வாசனையும் பெண்ணினுலே
மானுன மனம்புத்தி யாங்கா ரத்தில்
மக்கிற்றுப் பெண்ணுலே மருவிப் பாரு
ஊனுன விஷதுண்மை உறைக்கச் சொன்னேன்
உலகத்தில் திரியாமல் மலையில் ஏறே. 620

மலையிலே இருக்கிறதோர் சித்த ருக்கு
மாரீக்கமா யிந்தவைப்பு முறைதா னில்லை
தலையிலே முன்னமமைப் பிருந்த பேர்க்குச்
சரக்காகும் வைப்புமுறை தனித்துக் கிட்டும்
உலையிலே வைத்தகறி சோறு போல
உண்பதற்குச் சமைத்துவைத்தே ஞெளிப்பில் லாமல்
விலையில்லா ரத்தினத்தை வெளியிற் போட்டேன்
வியாக்கிரமர் சொன்னவுப தேசந் தானே. 621

## 13-வது கோழித்தலைக்கெந்தி வைப்பு

உபதேச மானதோர் சிவப்புக் கெந்தி
யுரைக்கவரிது லகர்க்குச்சி வயோகிக் கோசம்
பபதேச சித்தருக்குப் பசிய டக்கப்
பாலனுப் பதினாறு வயதி ருக்க
அபதேச மானவரா தனைக்கு மப்பா
ஆயியுடை முதல்நா தஞ் சுகதுண் டகெந்திக்
குபதேசக் கோழித்தலைச் சூடு தன்னைக்
கொட்டினேன் பிற்கண்டந் தன்னிற் றானே. 622

தானென்ற கெந்தகந்தான் பலமும் நூறு
சாதியாம் நெல்லிக்காய் தன்னைப் போல
ஆனென்ற ஆவின்பா லதனிற் சுத்தித்
தப்புறந்தான் செங்கீரைச் சாற்றின் மூன்று
மானென்ற மாந்தளிரின் சாற்றின் மூன்று
மருவியதோர் செவ்வல்லிச் செம்ப ருத்தி
போனென்ற புரசோடு செவ்வ கத்தி
பேரான முள்முருக்குப் பூச்சா றுதானே. 623

சாறதனில் மும்மூன்று வரிசை யாகத்
தப்பாமற் சுத்திபண்ணு மார்க்கங் கேளு
நூறுதனிற் சட்டிக்குள் அரைவா சிச்சா
றடியிலேதான் வார்த்துமேற் சீலை கட்டி
வேறுதனிற் கெந்தகத்தை மேற்ப ரப்பி
மேலேதான் சட்டியாற் கவிழ்த்து மூடு
வாறுதனிற் சுற்றிலுமே மண்ணைச் செய்து
மறுசட்டி தன்னையுமே புதைத்துப் போடே. 624

புதைத்துமே சாறிருந்த சட்டி தன்னைப்
புடம்போடு மேற்சட்டி தன்னிற் றானும்
உதைத்துமே யொருசாற்றில் புடமூன் றாகும்
உயர்சாறு வாராத பூவுக் கெல்லாம்

பதைத்துமே பழச்சாறு விட்டி டித்துப்
பாங்காகச் சாறுதனை வாங்கிக் கொள்ளு
சதைத்துமே புடம்போட்டாற் சாறு வற்றுந்
தனிச்சாறு பின்புபின்பு வார்த்துக் கொள்ளே. 625

வார்த்துமே புடத்துக்கு முப்பா னெருவு
வரிசையாய்ச் சட்டிமேற் புடத்தைப் போடு
ஏர்த்துமே செம்பரத்தைப் பூச்சாற் றூடே
இனியதோர் கோவையொடு குறட்டை தானும்
மாத்துமே மாம்பழமும் முன்னிரெண்டு பழமும்
மருவியே சாறெடுத்துப் புடத்தைப் போடு
பாத்துமே சாணுக்கி மணித்தக் காளி
பாங்கான சிவந்தநா யுருவி யாமே. 626

ஆமென்ற சாறதனில் மும்மூன் றுபுடம்
ஆனபின்பு எடுத்துமே கல்வத் திட்டு
வேமென்ற வெடியுப்பு நீரி னாலே
மிடுக்காக வரைத்துமே மூன்று நாள்தான்
தாமென்ற சாரநீர் மூன்று நாள்தான்
தாக்கியரைத் தேபொடியா யெடுத்துக் கொண்டு
பாமென்ற பன்றிநெய்யை விட்டே யாட்டிப்
பக்குவமாங் கற்றாழஞ் சோறு வாங்கே. 627

சோறிலே கடுக்காய்த்தூள் பண்ணிப் போட்டுச்
சீலைவடி கொண்டந்தச் சாறு தன்னை
வாறுதான் முன்போலே சட்டி தன்னில்
வார்த்துமே சீலைகட்டி மருந்து வைத்து
மீறிலே புடத்தைப்போட் டெடுத்துக் கொண்டு
மிடுக்கான மயினெய்யா லரைத்து வைத்து
ஆறிலே யயக்குப்பி தன்னில் விட்டங்
ஆதியாம் வாலுகையி லெடுத்தி டாயே. 628

எடுத்திட்டுத் தீபம்போ லெரித்துப் போட்டங்
கேகநாள் போனபின்மேல் மேரு மூடித்
தடுத்திட்டு நீர்விட்டு முத்தீப் போட்டுச்
சாமமெலாம் ஆனபின்பு தளர விட்டுக்
குடுத்திட்டுக் குறட்டாலே பிடுங்கித் தானுங்
கொப்பளியா தேதானு நீர்தெ ளித்து
மடுத்திட்டு மண்ணகற்றி யெடுத்துப் பார்த்தால்
மாதளம்பூ நிறமாக விருக்குந் தானே. 629

இருக்கின்ற சரக்குப் பேரே தென்னில்
ஏற்றமாங் கோழித்தலைக் கெந்தி யென்பார்
திருக்கின்ற குச்குடசீசூட் டென்றும் பேரு
சுகதுண்ட கெந்தியென்று மிதற்குப் பேரு

நருக்கிட்ட ரத்தமாங் கெந்தி யென்றும்
நாதாந்த மனோன்மணியி னுதை மென்றும்
பெருக்கின்ற பேரெல்லா மிதற்கே பேரு
பேசொணு திதன்பெருமை புளுவென் பாரே. 630

புளுவென்பார் கெந்தியுடை மகிமை சொன்னல்
பேரான நவலோக மாயிரத்துக் கோடும்
நளுவென்பார் மாற்றதுவும் நூற தாகும்
நாடினல் நவலோகம் செம்பாய்ப் போகும்
துளுவென்பார் சூதத்தைக் கனத்திற் கொல்லுஞ்
சுத்தியாஞ் சரக்கெல்லாந் தொடுமுன் கட்டும்
மளுவென்பா ராயியுடை நாதந் தன்னை
மழுவேந்தி பார்த்துமே மயங்கி னனே. 631

மயங்கின னிதனுடைய ஆட்டைப் பார்த்து
மாலையென்ற கொன்றைதனைத் தரித்த சிவனும்
தியங்கினர் இருடிகித்தர் தேவ ரெல்லாஞ்
செப்பரிய கெந்தகத்தின் மகிமை தன்னை
முயங்கினர் வியாக்கிரமர் சொல்லக் கேட்டு
மேன்மையாஞ் சரக்கிதனை வைத்துப் பார்த்து
இயங்கியே மூாயிரமாம் பாட்டு தன்னில்
எனைப்போலே யாகவென் றியம்பி னேனே. 632

நல்லுபதேசம்

இயம்பினதோர் விண்ணுக்குள் சித்தர் கோடி
ஏற்றமா மலைகளின தாக்கள் கோடி
அயம்பினதோர் அண்டத்தில் முனிவர் கோடி
யகண்டுநின்ற பதந்தனிலே ரிசிகள் கோடி
வியம்பினதோ ரனுதினம்வே தாந்தத் தோடு
விளங்கிநின்று பேசையிலே தெளிவாய்ச் சொல்வாய்
மயம்பினதோ ரெந்நேரம் மவுன முன்னு
வாசனைதான் நாசமாம் மருவிப் பாரே. 633

பார்க்கையிலே யிதைவிட்டே யுலக ஞானி
படும்பாடு சொல்லுகிறேன் பார்த்துக் கேளு
தோர்க்கவே சகமெல்லாம் ஞான மென்பார்
துரிதமாய் நூல்பார்ப்பார் தீட்சை யாவார்
வேர்க்கவே மவுனமென்பார் விண்ணைப் பார்ப்பார்
விசாரணையை விட்டுச்சீ வனத்திற் செல்வார்
தார்க்கவே நாள்தோறுந் தருக்கம் பேசிக்
கருவியே பெண்ணோடு தயங்கு வாரே. 634

தயங்குவார் பெண்ணுக்காய் வெகுபொய் பேசிச்
சமர்த்தான ஞானமெல்லாம் வந்த தென்பார்
மயங்குவார் மண்ணுலே சார்வோ வில்லே
மகத்தான யோகத்திற் சார்ந்தே மென்பார்
தியங்குவார் வருத்தமுற்முற் சிவனே யென்பார்
செகசாலத் திரோதாயி சிரிப்பாள் கண்டாய்
முயங்குவார் சமாதிவிட்டேன் மோச மாச்சு
முழுமோக மாயையிலே மூழ்கு வாரே. 635

## 14-வது வாணகெந்தி வைப்பு

மூழ்கவே மஃே தனிலே நாற்ற முண்டாய்
முழக்கமாய்ப் பொருமியே யுதிருங் கீழே
வீழ்கவே மண்ணெல்லாம் பெரும்பாண் டத்திட்டு
மேன்மையாய்க் கரண்டியினுற் றுழாவிக் காய்ச்சித்
தாழ்கவே குழிவெட்டி யதிலே சாய்க்கத்
ததும்பாமற் கட்டியாய்த் தானி ருக்கும்
ஆழ்கவே யடியிலே மண்தா னிற்கும்
அப்புறத்தே வீசிவிடு அசடாய்த் தானே. 636

## 15-வது அரிதார வைப்பு

தானென்ற கந்தகந்தான் படைகட் காதி
சத்துருவாய்த் தானிருக்குஞ் சரக்குக் கெல்லாம்
பானென்ற தாளகமிப் படியே காய்ச்சு
பாங்கான வருணத்துக் காகுங் கண்டாய்
கானென்ற சரக்குக்குக் காலன் காலன்
காட்டினுற் கெடுத்தழிக்குங் கடினம் மெத்த
வேனென்ற சரக்குக்கு டோரி யாகும்
மிடுக்கான வூறலென்ற சரக்குத் தானே. 637

## 16-வது பவழப்புற்றுப் பாடாண வைப்பு

சரக்கான பவழப்புற்றுத் தன்னைத் தானுந்
தாயார்க்கன் றருள்செய்தான் சதாசி வன்ருன்
இரக்கான இமயபரு வதத்தின் கீழே
யேற்றமாம் பூமியிலே புற்றுக் கண்போல்
வரக்கான கொழுந்துபோல் வளர்ந்து தானும்
மாசற்ற நிறமூன்ருய்த் தானி ருக்கும்
தரக்கான தங்கநிறம் புற்றுக் கண்போல்
தனித்தனியே துவாரமது தானு மென்றே. 638

என்றதோர் இரண்டுவகைச் சம்புத் தீவில்
ஏற்றமாந் தேசங்கள் தன்னிற் பிறக்கும்
பன்றதோர் பச்சைசெம்மை மஞ்சள் வெண்மை
பலபலவா நிறமாகிக் கனத்து நெய்த்து

மன்றதோர் மழமழத்துச் சத்துண் டாகி
மகத்தான தாதுவாய்த் தேசு மாகி
வென்றதோ ருலகோர்க்குக் கிட்டா தாகும்
மிக்கான குளிகையிட்டோர்க் கெய்துங் காணே. 639

எய்யவே மனுடர்தமக் கெளிதி லாகா
ஏற்றமாம் இச்சரக்கு வைப்புச் சொன்னேன்
பையவே கரடான பவழந் தானும்
பாங்கான சேரொன்று கல்வத் திட்டுச்
செய்யவே வெடியுப்பு நீரி னாலே
தினந்தான்மூன் றரைத்திட்டே யகலி லிட்டு
உய்யவே புடம்போட்டங் கெடுத்துக் கொண்டு
உறுதியாய் முன்கட்டுங் கௌரி தானே. 640

கௌரிதான் பலம்நாலு கூட இட்டுக்
கெட்டிரச கர்ப்பூரம் பலந்தா னுலு
சவரிதான் சுத்தித்த கெந்தி ரெண்டு
தாக்கியரை வெடியுப்பு நீரி னாலே
யவுலிதான் சாரநீர் தன்னா லாட்டிப்
பற்றியதோர் திராவகத்தா லாட்டிப் பின்பு
பவுரிதான் பொடியாக்கிக் காசி மேரிற்
போட்டுமே யெரித்திடவே புற்று மாமே. 641

புற்றுந்தான் குழலாக ஏமம் போலே
பூத்துமே கட்டியாய்த் தானி ருக்கும்
அத்துத்தான் முச்சாம மெரிப்பு மாகும்
அடிக்கடிக்குச் சொல்வதற் காராற் கூடும்
குத்துத்தான் பட்டவுயிர் கணத்தில் மீளுங்
கொடியவிடம் சூலைகுன்மம் குதித்தே யோடும்
பத்துத்தான் போட்டிடவே யேம மாகும்
பணபேதி சணபேதி பவழப் புற்றே. 642

பவழபுற்றுப் பாடாணம் பலந்தா னென்று
பாங்கான வாலுளுவைத் தைலம் வாங்கித்
துவழமாஞ் சுருக்கொருசா மந்தான் போட்டுத்
துடியான கல்லுப்புக் கவசங் கட்டிப்
புவழமாம் புடம்போட்டே யெடுத்துக் கொண்டு
பொன்தான்பத் தருகையிலே யொன்று போட
குவழமாங் குருவாமா யிரத்துக் கொன்று
கொடியநவ லோகத்தில் வேதை யாமே. 643

வேதையா முன்பிறக்கும் பவழப் புற்று
வேகத்தி லிதுரெட்டி விளக்க மாகும்
தாதையா மன்னைபோற் சடம்ரட் சிக்குந்
தங்கத்தை நொறுக்கியே தவள மாக்கும்

பாதையாம் வெகுதூர மெட்டியோடும்
பறிமேலே வாதாடிப் புலிபோற் பாயும்
சூதையாஞ் சோதித்துக் கண்ட மார்க்கஞ்
சொல்லிவிட்டேன் சித்தரென்மேற் கோப மாச்சே. 644

ஆச்சென்ற சரீரமது சமாதிக் காகா
ஆகாது தூலமஃ தென்பார் கோடி
ஊச்சென்ற உலகத்தில் ஞானி யுண்டோ
உட்புகுந்து நான்பார்த்தே னென்று மில்லை
வாச்சென்ற வாதம்வந்தால் ஞான மாகும்
வாராதே இராவிட்டால் வாதை யாகும்
ஏச்சென்ற உழுதால்வே ளாண்மை யாகும்
ஏரில்லா னறுத்தடித்த ஏத்த மாச்சே. 645

அறவுரை கூறல்

ஏத்தமாம் பேச்சாச்சு வாத ஞானம்
எளிதிலே சித்தியுண்டோ யோகந் தானும்
காத்தமாங் கைகண்டால் கற்போல் நெஞ்சாங்
கண்டேனு னென்றுசொன்னு லொன்று மில்லை
ஊத்தமா மரனுடனே தொழிலே நித்த
மூதுவான வன்வாதி யுண்மை பூண்பான்
தேத்தமாஞ் சிவயோகி முனிவர் தாமுஞ்
சிதரூமற் பொங்கியுள்ளம் ரசயோ கியாமே. 646

யோகியாம் வாதியிலே ரெண்டு விதமுண்
டுலுத்தராம் வாதியுண்டு டுத்துப் பொங்கி
வேகியாம் யோகமென்னவே தைகண்ட பின்பு
மிரட்சியாம் பெண்ணோடே கூடி மாய்வான்
பாகியாம் பெண்ணென்ற பக்கற் சென்று
பாட்டோடு கேளிக்கை களித்துப் பார்த்து
நாகியாம் நாய்போற்கண் டபெண்ணைக் கருதி
நரகத்துக் கேதுவாய் மாளு வானே. 647

மாளாமற் பெண்மேலே மயக்கம் விட்டு
மாசற்ற சித்தாந்த வேதாந்தம் பார்த்து
நாளாமற் சகசால நரக மென்று
நாட்டமாந் தேவியுடைக் கிரியையிலே நின்று
தேளாமற் சடமுதலாய் நாமல் லவென்று
செகத்துள்ளே தசதீட்சை கடைந்தே ஏறி
வாளாமற் சிவசொத்தை வறுமை போற்றி
வகையறியோம் வாதமென்ற வண்மை தானே. 648

வண்மையாய்ச் சதகோடி தொழிலே செய்வார்
வகையேது பொருளில்லை வறுமைக் கென்பார்
உண்மையாய்ச் சிந்தூரஞ் செயநீர் சுண்ணம்
ஒருவருந்தா னறியாம லடக்கி வைப்பார்

அண்மையாய்த் தொழிலெடுப்பா ரார்க்குங் காட்டார்
அபூர்வந்தான் வாதமென்பா ரனேகம் பேர்கள்
தண்மையாய்ச் சகநித்த மறிவி லூடிச்
சாந்தமாய் இருப்பார்கள் ஞானி தாமே. 649

ஞானியாம் வாதியென்றால் மவுன வாதி
நாட்டமாம் பிரபஞ்சத் திருந்தா லென்ன
வானியாம் ரசவாதி யோக வாதி
வாங்காமற் சமாதியிலே யிருந்த வாதி
பானியாம் நிசவாதி நிர்மலத்தின் வாதி
பாங்கான வகண்டத்தே மனதுற்ற வாதி
தேனியா மவரிடத்தே சித்தர் செல்வார்
செகச்சாலச் சின்னமில்லை முத்தி தானே. 650

## குறிப்புரை

### 601 முதல் 650 வரை

பாடல் எண் : 608 :- தளவாய் = சேலையில் ஓர் அதிபதியின் பெயர்.
பாடல் எண் : 615 :- நாட்டம் = கண்.
பாடல் எண் : 616 :- பாசம் = மிக்க வேட்கையால் ஏற்படும் பிணிப்பு. தறுகி = பாழாக.
பாடல் எண் : 617 :- கலப்பாள் = கூடுவாள். பரிகரிக்க = தீர்வு செய்ய.
பாடல் எண் : 619 :- அதரம் = உதடு.
பாடல் எண் : 620 :- மக்கிற்று = கெட்டுவிட்டது. மலையேறு = யோக சாதனத்தில் மேலேயேறு; உறைக்க = நன்றாக மனத்தில் படும்படியாக.
பாடல் எண் : 621 :- வியாக்கிரமர் = புலிக்கால் முனிவர் (புலிப்பாணீ என்னும் சித்தர்).
பாடல் எண் : 622 :- கோழித் தலைச்சூடு = கோழித் தலையிலுள்ள கொண்டை (சூடு = அணி அல்லது ஆபரணம்.)
பாடல் எண் : 623 :- சாதியாம் = உயர்ந்ததான. செங்கீரை = செங் கீரைத்தண்டின் இலை; புரசு = முருக்கு அல்லது பலாசு.
பாடல் எண் : 626 :- மருவி = சேர்த்து.
பாடல் எண் : 630 :- புளு = பொய் (புளுகு) (கடைக்குறை).
பாடல் எண் : 631 :- மழுவேந்தி = சிவன்.
பாடல் எண் : 639 :- தேசு = ஒளி.
பாடல் எண் : 640 :- கரடான பவழம் = பவழப்புற்று.
பாடல் எண் : 641 :- கெட்டி = கட்டப்பட்ட.

பாடல் எண் : 645 :- ஏச்சம் = கேலிக்கூத்து.

பாடல் எண் : 648 :- வாளாமல் = வாழாமல் என்பது சொல். (எதுகை நோக்கி 'ழ'வுக்குப் பதில் 'ள'வைக் கொண்டு பாவை யரத்துள்ளார்) சிவசொத்தை வாளாமல் என்று மாற்றின் சிவன் சொத்தால் வாழாமல் என்று ஆகும். (வெற்றுமை வழுவமைதி); வறுமை போற்றி = தரித்திரத்தை வளர்த்து.

பாடல் எண் : 649 :- சதம் = நூறு; அடக்கி = மறைத்து.

பாடல் எண் : 650 :- சின்னம் = அடையாளம்.

---

சின்னமில்லை முத்தியாம் வாதிக் கென்று
சிவன்தானு மொத்தமென்று செப்பி னர்காண்
புன்னமில்லை சிவசொத்தைப் பெண்ணுக் கீந்து
பெரிசான விரயமெல்லாம் பண்ணி னக்கால்
நன்னமில்லை நரகெய்தும் பாவி யோர்க்கு
நாய்போலத் திரிந்துமே வேதை போட்டால்
அன்னமில்லை நரகெய்தி மாளு வார்காண்
அனேகசென்மம் பிசாசுபோ லலைவார் பாரே. 651

அலையாம லிருக்கவல்லோ வாதஞ் சொன்னேன்
அகண்டத்தி லயிக்கவல்லோ குளிகை சொன்னேன்
குலையாம லிருக்கவல்லோ ஞானஞ் சொன்னேன்
குணத்தோடே மனம்பிடிப்பான் வாதி யானால்
நிலையாம லருளாமோ பொருளா மோதான்
நிலைத்துமே நின்றவனே வாத யோகி
தொலையாம லிருளாமோ பொருளாமோ வென்றால்
சுழன்றுமே சுத்தவிரு ளாகப் போமே. 652

## 17-வது கோடாரசோரி வைப்பு

இருளாகப் போகாமல் கோடா சோரி
ஏற்றமாம் வைப்புமுறை யெங்கு மில்லை
மருளாக வாதிக்குக் காட்ட வேண்டாம்
மகத்தான சிவயோகி ஞானிக் காகும்
தெருளாகச் சிவசொத்தை யுலகோர் தாமுஞ்
செலவழித்தால் கணத்தினிலே மிகைவந் தெய்தும்
பொருளாகவைத்து வைத்தேன் சித்தர் ஞானி
பொருட்டாக விளக்கத்தைப் புகன்றிட் டேனே. 653

புகன்றிட்ட கல்லுப்புப் படிதா னென்று
பெரியகுப்பை மேனிச்சா றுபடினாலு
பகன்றிட்ட பழம்புளிதான் சேரி ரண்டு
பச்சிலைச் சாறதிலே கரைத்துக் கொண்டு

தகன்றிட்ட சட்டிதனிற் சீலே வடித்துச்
சாங்கமா யடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சித்
தகன்றிட்ட கட்டியாய்ப் பாறை யாகுந்
தன்பருவம் பார்த்துமே யிறக்கி டாயே. 654

இறக்கியே கட்டியாக உடைத்துக் கொண்டு
எலுமிச்சம் பழச்சாற்றிற் தோய்த்துப் போடு
விறக்கியே வெடிப்பு நீரிற் றோய்ப்பாய்
மிடுக்கான சாரநீர் தன்னிற் றோய்ப்பாய்
கறக்கியே கடிசான திராவகத்திற் றோய்ப்பாய்
கல்லுப்பு மேற்கவசங் கருதக் கேளு
பறக்கியே யிந்துப்புப் பத்துக் கொன்று
பாடாணம் போட்டரைத்து வெடியுப்பு நீரே. 655

நீராலே யரைத்திட்டுக் கவசங் கட்டி
நெருப்பான பூநீற்றுக் குள்ள மர்த்தி
நாராலே நாற்சாம மடுப்பெரித்து
நலமாக ஆறவிட்டே யுப்பை வாங்கிப்
பேராலே பீங்கானிற் பதனம் பண்ணிப்
பொட்டுலுப்பு நாற்பலந்தான் கம்பி வாங்கி
மாராலே மான்கொம்பு சீவற் பண்ணி
மார்க்கமாய்ப் பூப்புடத்திற் தைலம் வாங்கே. 656

தயிலத்தில் பொட்டுலுப்பு கம்பி தோய்த்துத்
தழல்மேலே யுயரமாய்த் தூக்கி வாட்டு
நயிலத்தில் நாற்சாமம் வாட்டிப் பின்பு
நலமாகும் வெடியுப்பு நீரில் வாட்டிப்
டயிலத்தில் சாரநீர் தோய்த்து வாட்டிப்
பாங்கான தீநீரா லடுக்க வாட்டிப்
புயிலத்தில் புளிப்புறணிச் சாம்பற்குள் வைத்துப்
பீசகாமற் றீபம்போற் சாமந் தீயே. 657

தியிட்டு ஆறியபின் எடுத்து வைத்துச்
சீனமது பலம் நாலு நிறுத்துக் கொண்டு
ஆயிட்டே ஆதளம்பால் தன்னிற் றோய்த்து
ஆதித்தன் படவேநாள் மூன்று தோய்த்து
வேயிட்டு வெடியுப்பு நீரிற் றோய்ப்பாய்
மிடுக்கான சாரநீர் தன்னிற் றோய்ப்பாய்
காயிட்டுக் கடுந்திராவ கத்திற் றோய்ப்பாய்
காய்ந்தபின்பு சுவருதிர்ந்த மண்ணில் வையே. 658

வைத்துமே சாமந்தா னெரியிட் டிறக்கி
மறவாம லெடுத்துவைத்துப் பீங்கான் தன்னில்
தொய்த்துமே துரிசியது பலந்தா னெட்டுத்
தோய்த்துமே வங்கத்தி லெடுத்துக் கொண்டு

வெய்த்துமே வெடியுப்பு நீரிற் றேய்த்து
மிடுக்கான சாரநீர் தன்னிற் றேய்ப்பாய்
கைத்துமே கடுந்திராவ கத்தில் தோய்த்துக்
காய்ந்தபின்பு கருநாபி பலந்தா னுலே. 659

நாலையுந்தான் சாரநீர் தன்னி லாட்டி
நலமான துருசிக்குக் கவசங் கட்டித்
தாலைசட்டி யடிதனிலே பூநீறு வைத்துச்
சாங்கமாய தின்மேலே துரிசி வைத்து
மேலையுந்தான் பூநீறு போட்ட முத்தி
மேவிரு சாமந்தா னெரித்த பின்பு
காலையுந்தா னுறவிட்டடங் கெடுத்துப் பார்க்கக்
கண்டரது குருவாகுங் கனக மாமே 660

கனகமாஞ் சாரமது பலமு நாலு
கடிசான வெடியுப்பு நீரிற் றேய்ப்பாய்
தனகமாஞ் சாரநீர் தன்னிற் றேய்ப்பாய்
தாட்டியாய் திராவகத்தில் மூன்று நாள்தான்
அனகமாம் அண்டமஞ்சட் கருவு தன்னை
அதைக்கருக்கத் தயிலமுமா மண்டச் சுண்ணம்
பனகமாங் குழப்பியே பலந்தா னென்று
பாங்காகச் சுருக்கிடுவாய்ச் சாமந் தானே. 661

சாமந்தான் கடிசாகச் சுருக்குப் போட்டுச்
சமர்த்தாகப் பொட்டிலுப்புக் கல்லுப்புக் காரம்
பாமந்தான் முன்சொன்ன படியே வைத்துப்
பாங்காக எரியிட்டு நாலு சாமம்
ஆமந்தான் ஆறவிட்டெ டுத்துப் பார்த்தால்
அழுத்தமாய்ச் சாரமது கட்டி யாகும்
பூமந்தான் பீங்கானில் எடுத்து வைத்துப்
பூநீறு பலம்நாலு கல்வத் தூட்டே. 662

ஊட்டியே வெடியுப்பு நீரா லாட்டி
உறுதியாய் மூன்றுபுடம் போட்டெ டுப்பாய்
ஆட்டியே யன்னமென்ற பேதி தானும்
ஆண்மையாய் வெடியுப்பு நீரா லாட்டித்
தீட்டியே மூன்றுபுடம் போட்டெ டுத்துத்
திறமாக எடுத்துமே யப்பால் வைத்துக்
கூட்டியே அயப்பொடிதான் சேரு ஒன்று
குறிப்பான பழச்சாற் றிற் கழுவி டாயே. 663

கழுவியே உலர்ந்தபின்பு கட்டின கல்லுப்புக்
கனமாகப் பலநாலு வெங்காரம் நாலு
விழுவியே வெடியுப்பு நீரி லாட்டி
மிக்கான அரப்பொடியில் பிசறிக் கொண்டு

உழிகியே குகையிலிட்டு ருக்கி யாட்டி
 உத்தமமாய் மூன்றுவிசை யான பின்பு
துழிகியே துருசிதானும் பலந்தான் நாலு
 தூசில்லா வெங்காரம் பலமும் நாலே. 664

நாலான வெடியுப்பு நீரா லாட்டி
 நலமாக அயந்தன்னில் பிசறி வைத்து
மாலான மூன்றுநா ளான பின்பு
 மார்க்கமாய் மூன்றுவிசை யுருக்கித் தீரு
தாலான சத்தெல்லாம் பொறுக்கிக் கொண்டு
 சமரசமாய்க் காரமிட்டு ருக்கி யாட்டித்
தேலான சத்தெடைக்குச் செம்பு சேர்த்துச்
 சேகரித்துக் காசியென்ற மேரு பண்ணே. 665

மேருக்கு மண்கட்டிச் சொல்லக் கேளு
 முன்சொன்ன சவ்வீரம் பலந்தா னெட்டுக்
காருக்கே முன்கட்டுங் கல்லுப் பாறு
 கடியதோர் துரிசியது நாலு மாகும்
பேருக்கே பொட்டிலுப்பு பலமும் ரெண்டு
 பேராகக் கட்டியதோர் சாரம் ரெண்டு
தேருக்கே சீனமது பலமும் ரெண்டு
 செப்பரிய பூநீறு பலமும் ரெண்டே. 666

பலமிரண்டு அன்னமென்ற பேதி தானும்
 பாங்காக விவையெல்லாங் கல்வத் திட்டுப்
பிலமான வெடியுப்பு நீர்விட் டாட்டிப்
 பின்புதான் சாரநீர் விட்டே ஆட்டு
குலமான திராவகத்தா லாட்டிப் பின்பு
 கூர்மையாய்ப் பொடிபண்ணி வறுமீங் கானில்
பலமான பரும்பிங்கான் தன்னிற் போட்டுப்
 பாரமா முமிநெருப்பில் வறுத்தி டாயே. 667

நெருப்பிலே வறுத்திட்டு மேரிற் போட்டு
 நிலவரமாய் வாலுகையின் மேலே வைத்துத்
தெருப்பிலே தீப்போட்டு ஒருசா மந்தான்
 சிக்கெனவே மேல்மேரு மூடிப் போடு
இருப்பிலே இரண்டாம்நா ளிரண்டு சாமம்
 ஏகமாய் மூன்றும்நாள் மூன்று சாமம்
நருப்பிலே நாலாம்நாள் நாலு சாமம்
 நாயகமா மைந்தாம்நாள் சாம மஞ்சே. 668

அஞ்சாநாள் தீயிட்டா றப்போட் டான
 அப்புறந்தான் காசியென்ற மேரு வாங்கி
உஞ்சாநா ளொருபக்க முடைத்துப் பாரு
 உறுதியாம் வெண்பளிங்கு போல வாகும்

இஞ்சாநாள் கீற்றுவிழுஞ் செகப்புத் தானுங்
கோடிக்கு வேதையுமாங் கோடா சோரி
துஞ்சாநாள் சித்தருடை மரபி வில்லை
செப்பினேன் பழிக்கோசஞ் செப்பி னேனே. 669

செப்பியதோர் என்னூலிற் கோடா சோரி
தேவிமெச்சுஞ் சிவன்மெச்சுஞ் சித்தர் மெச்சும்
அப்பியதோர் காலாங்கி யையர் பார்த்து
அடியேன்றன் கையெடுத்துக் கண்ணி லொத்தி
ஒப்பியென்னை யுட்கார்த்தி வைத்துக் கொண்டு
உச்சியிட்டு மோந்துகொண்டு போக ரேநீர்
தப்பியதோர் தாயார்தன் கருணை யாலே
சதகோடி யுகமட்டுஞ் சாதிப் பீரே. 670

சாதிப்பீ ரென்றுசொல்லி யையர் வாழ்த்தித்
தயவோடே குளிகைதந் தனுப்பி விட்டார்
போதிப்பீ ரென்றுசொல்லிச் சித்த ரெல்லாம்
பின்தொடர்ந்து வெகுநாளா யனுச ரித்தார்
வேதிப்பா ரென்னேரம் என்று தானும்
வேறொன்று சுளுக்காகச் சொல்லி விட்டேன்
நாதிப்பீர் யோகிக்கு ஞானிக் குத்தான்
நடக்கக்கோ டாச்சோரி நாட்டி னேனே. 671

நாட்டினகோ டாசோரி யுலகோர்க் கெய்தில்
நாய்கையிற் தேங்காய்போல் நலங்கிப் போகும்
மாட்டினதோர் துறையெல்லாம் வழியா யோடும்
வாதம்வந்து வணங்கிவாய் புதைத்து நிற்கும்
பூட்டினதோர் பூட்டுக்குத் திறவு கோலாம்
பொன்னுன மலைதானும் போரு மாகும்
பாட்டினதோர் பச்சைக்குள் வேதை யாகும்
பாரமாஞ் சரக்கிதுதான் பரிந்தே ஆடே. 672

ஆடவே சரக்கான அறுபான் நாலும்
அடங்கலாய்க் கட்டுவிக்கும் கோடா சோரி
பாடவே பதினறு வயசு மாக்கும்
பரிதிபோ லொளியாக்கும் பாலை யாவான்
தாடவே தங்கத்தை மெண்ணு வாங்குஞ்
சமர்த்தான சரக்கெல்லாம் குருவே யாகும்
ஓடவே கமனமது சுறுக்கா யோடு
முற்றகோ டாசோரி யுண்மை தானே. 673

தானென்ற சோரியது பலந்தா னென்று
தங்கமா மூமத்தஞ் சாறு தன்னை
வானென்ற பிழிந்துவடி கட்டிக் கொண்டு
மறுபடியும் சட்டிதனிற் சீலைதொங்க விட்டுத்

தானென்ற தாழவொரு சட்டி வைத்துச்
சாய்த்துவைக்கத் தெளிவாகச் சாறு வீழும்
சூனென்ற சோரிக்குச் சுருக்குப் போடச்
சுயமான குருவாகுஞ் சுருக்குத் தானே. 674

சுறுக்காக நவலோகத் தீந்தா யானுற்
சிவந்துமே மாற்றதுவும் நூற்றுப் பத்துக்
கறுக்காகக் கோடிக்குத் தாண்டி யோடுங்
குணமாகுங் காயசித்தி கற்பாந்த காலம்
நறுக்காகக் காயமது வயிரம் போலாம்
நமன்வெருண்டு நாட்டமுற் றோடிப் போவான்
உறுக்காகச் சரக்கெல்லா முருவாய்க் கட்டும்
ஒன்றும்பொய் போகாது உறுதி யாமே. 675

உறுதிகோ டாசோரி வைப்புத் தன்னை
உலகத்தோர்க் குரைக்கவரி துண்மை யாக
அறுதியாய் மனமடங்கு மவுனிக் காகும்
ஆத்தாளைப் பூசித்த வாமிக் காகும்
நிறுதியாய்ச் சிவயோகி தனக்கு மாகும்
நிட்களங்க மானதோர் ஞானிக் காகும்
இறுதியாஞ் சிவதூடர் கபடர் பொய்யர்
சிந்தையிலே இந்தவுப்பை நினைக்கா காதே. 676

## 18-வது பஞ்சபட்சிப் பாடாண வைப்பு

வைப்பான பஞ்சபட்சி மார்க்கங் கேளு
மார்க்கமாம் ஐம்புலனும் மருவல் தன்னை
மெய்ப்பான மேரதுவும் பஞ்ச பூதம்
விரவியதோர் சரக்கெல்லாம் பஞ்ச பூதம்
துய்ப்பான சுருக்குக்கும் பஞ்ச பூதந்
துடியான தைலந்தான் பஞ்ச பூதம்
கைப்பான வேதையிலும் பஞ்ச பூதங்
காட்டினதோர் களங்குபஞ்ச பூதந் தானே. 677

பூதத்தின் பிரபலத்தைச் சொல்லக் கேளு
பிருதிவியின் கூறுன தங்கந் தானும்
வாதத்தின் தாயாரும் பலந்தா னென்று
மார்க்கமா நிமிளையது பலந்தா னென்று
போதத்தின் தீநீரால் நிமிளை யரைத்துப்
பொருந்தவே மூன்றுநாள் கடிசா யாட்டிச்
சேதத்தின் வில்லைபண்ணிக் காயப் போட்டுத்
திறமான புடமதுபோட் டெடுத்துக் கொள்ளே. 678

எடுத்துமே தங்கத்தைத் தகடு தட்டி
ஏற்றமாம் நிமினைதன்னைத் திராவகத்திற் குழப்பி
படுத்துமே தகட்டுக்குப் பூசியோடு
பக்குவமாய் வைத்துமே புடத்தைப் போடு
நடுத்துமே தங்கமது குருவு மாகும்
நாட்டமாங் குருவெடுத்துச் செம்பி லூட்டு
கொடுத்துமே செம்பதுவுங் குருவு மாகுங்
கூட்டிடுவாய் காரியம் பலத்தா னென்றே. 679

ஒன்றான காரிய முடையுந் தூளாய்
உகந்தெடுத்து நாகந்தான் பலத்தை யூட்டு
பன்றான புகையடங்கிப் படுத்துக்கொள்ளும்
பாரமாம் உருகினதோ ரிரும்பு தானும்
குன்றான தொருபலந்தான் கூடப் போடு
குமிழிவிட்டு ருகியொன்றாய்க் கூடிப் போகும்
கன்றான காசியென்ற மேரு வார்த்துக்
கட்டியே மண்தானுங் காயப் போடே. 680

காய்ந்தபின்பு கௌரியது பலந்தா னென்று
கசப்பான பேய்ப்பீர்க்கின் சாறு வாங்கி
நாய்ந்தபின்பு நாற்சாமஞ் சுருக்குப் போடு
நாட்டமாம் வெடியுப்பு நீர்சு ருக்கு
தோய்ந்தபின்பு சாரநீர் சுருக்குப் போடு
துடியான திராவகமுஞ் சுருக்குப் போடு
தேய்ந்தபின்பு சேங்கோட்டைத் தைலமுஞ் சுருக்கு
சிறப்பாக எடுத்தப்பால் வைத்துக் கொள்ளே. 681

வைத்துமே முன்சொன்ன சரக்கெல் லாந்தான்
வளமாகச் சுத்திபண்ணி வைத்துக் கொள்ளு
அய்த்துமே அடிக்கடிக்குச் சொல்லு கைக்கிங்
காராலும் கூடாது என்னு லாகா
பொய்த்துமே போகாமற் சுத்தி பண்ணு
பேரான வூரலினுற் கெட்டுப் போகும்
எய்த்துமே மால்தேவி பலந்தா னென்று
ஏற்றதோர் கருவூமத் தஞ்சாறு தானே. 682

சாறுதான் சுருக்கிட்டு நாலு சாமஞ்
சாங்கமாய் வெடியுப்பு நீர்சு ருக்கு
தூறுதான் சாரநீர் சுருக்குப் போடு
திராவகந்தான் சுருக்கிட்டுச் சிற்றே ரண்டம்
ஏறுத்தா னெண்ணெயிலே சாமஞ் சருக்கிட்
டெடுத்துவைத்து லிங்கத்தைச் சுத்தி பண்ணிப்
பாலுதான் பொன்மத்தஞ் சாறு தானும்
பாங்காக நாற்சாமம் சுருக்குப் போடே. 683

நால்சாமஞ் சுருக்கிட்டே ஆன பின்பு
நலமான வெடியுப்பு நீர்சு ருக்கு
நால்சாமஞ் சுருக்கிடுவாய் சார நீர்தான்
தனிப்பின்பு புகைநீர்தான் சுருக்குப் போடு
ஏல்சாமம் மெலியாலம் பாற்சு ருக்கு
எடுத்துவைத்துக் கெந்தகந்தான் பலமும் நாலு
பாலாவின் தன்னுக்குள் சுத்தி பண்ணிப்
பசரையதன் சிவப்பான சாறு வாங்கே. 684

வாங்கியே பதினொருக்கா லுருக்கிச் சாய்த்து
மறுபடியும் பொன்மத்தஞ் சாற்றிற் சாய்ப்பாய்
வீங்குமிள வெற்றிலையை யிடித்துச் சாறு
மேம்பாடாய்ப் பதினொருக்கா லுருக்கிச் சாய்ப்பாய்
பாங்கியே வெடியுப்பு நீரிற் சாய்ப்பாய்
பத்தமாஞ் சாரநீர் தன்னிற் சாய்ப்பாய்
தீங்கியே தீநீரி லுருக்கிச் சாய்த்துச்
சிதரும லெடுத்துமே வைத்துக் கொள்ளே. 685

வைத்துமே மனோசிலைதான் பலமும் நாலு
வளமாகச் சுத்திபண்ணும் மார்க்கங் கேளு
கொய்த்துமே கொம்மட்டி மாதுளைச் சாற்றைக்
கொடுத்துவர நாற்சாமஞ் சுருக்குத் தானும்
எய்த்துமே யெட்டிவிதைத் தயிலம் வாங்கி
ஏற்றமா யொருசாமஞ் சுருக்குப் போடு
வைத்துமே வெடியுப்பு நீரால் சுருக்கு
மிரளாதே சாரநீர் சுருக்குத் தானே. 686

சுருக்கான திராவகத்திற் சுருக்குப் போடு
தொந்தமாங் கௌரியது பலமி ரண்டு
மருக்கான மால்தேவி பல மிரண்டு
மகத்தான லிங்கமது பலமி ரண்டு
முறுக்கான கெந்தியது பலமி ரண்டு
முனையான மனோசிலைதான் பலமி ரண்டு
கறுக்கான விவையெல்லாங் கல்வத் திட்டுக்
கடுந்திரா வகந்தன்னாற் கரைய ஆட்டே. 687

கரையவே பொடிபண்ணி மேருக் கிட்டுக்
கனமான வாலுகையிற் பதித்து வைத்துத்
திரையவே தீமூட்டி யொருநாள் சென்றாற்
றிக்கெனவே மேல்மேரு மூடிப் போடு
பறையவே பதினைந்து சாம மான
பக்குவத்திற் பார்த்துமே ஆறப் போடு
குறையவே குப்பியைத்தா னுடைத்துப் பார்த்தால்
கொடும்பஞ்ச நிறமாக விருக்குந் தானே. 688

பஞ்சபட்சி பச்சையிலே வேதை யாகும்
பாங்கான நவலோகம் ஆயிரத்துக் கோடும்
நஞ்சுமே விடங்களெல்லா நடுங்கிப் போகும்
நாயகமாஞ் சரக்கிதுதான் காய சித்தி
கொஞ்சியே வேதாந்தக் கூட்டத் தோடு
கூடியே இருக்கலாம் கோடி காலம்
துஞ்சியே போகாது வாதந் தானுந்
தொட்டசரக் கெல்லாங் கட்டுந் தானே. 689

கட்டுமே பஞ்சபட்சி பாடா ணத்தால்
காயசித்தி லோகசித்தி கடிசி லாகும்
பட்டுமே லோகத்திற் பாய ஏமம்
பாடாணக் குலத்துக்குத் தளவா யாகும்
வெட்டுமே சூதத்தை நிமைக்கு முன்னே
விடுபட்டால் குளிகையது மிடுக்கு மாகும்
தொட்டுமே பொட்டிட்டால் லேம மாகுந்
தூரத்தே எட்டுமிந்தத் தொந்தந் தானே. 690

## வேதாந்தம் கூறல்

தொந்தமாய்க் கன்மமென் றுந் தன்ம மென்றுந்
தொகையில்லாப் பிறப்பிறப் புண்டென் பார்கள்
கந்தமாய்க் கருச்சொல்வேன் கருதிக் கேளு
கருத்தூணி பெரியோர்கள் கண்டு சொல்லார்
பந்தமாய்ச் சந்துக்கள் பிறந்த தெங்கே
பாந்தமா யிறந்ததெங்கே யெங்கே போச்சு
உந்தமாய்ச் சொல்லுதற் குலகம் பொய்யாம்
உண்மையாய்த் தெளிவாக உரைக்கின் றேனே. 691

உரைக்கிறேன் சராசரங்கள் சீவ ராசி
உற்றபதம் புவனமோ டண்ட மெல்லாம்
புரைக்கிறேன் பூரணத்திற் பிறந்த தாகும்
பிறந்தவிதம் ஏதென்றால் புகலக் கேளு
விரைக்கிறேன் ஏழுவகை யோனி நாலு
மிக்கான விந்துவதாய் விளங்கும் போதம்
கரைக்கிறேன் மேகசலங் கடலில் நீர்போல்
கவிந்துநின்ற சகமெல்லாம் போத மாச்சே. 692

ஆச்சுதே போதமெங்கு நிறைந்த தென்றால்
அகண்டத்திற் சனனவகை போக்கங் கேது
ஓச்சுதே நாதத்தி லோங்கி நிற்க
ஒன்றினால் நல்வினைதீ வினையும் போச்சே

போச்சுதே பெண்ணோடே கூடி யாடிப்
புரண்டதோர் பேய்களுக்குப் பிறப்புண் டாகும்
வாச்சுதே வாருதியிற் சலத்தை மேகம்
வாங்கியே யிறைத்ததுபோற் பிறப்புண் டாமே. 693

பிறப்பதுவு முண்டாகி மாண்ட தாலுல்
பூரணத்திற் றுன்லயித்துப் பின்பு மீளும்
திறப்பதுவும் பூரணத்தில் லயித்து நோக்கத்
திரும்பியே பிறக்கவொட்டா தன்னிற் சேர்க்கும்
மறப்பதுவும் வண்டதுதான் மதுவை யுண்டு
மயங்கியது பறந்தாற்போல் செனன மார்க்கம்
பறப்பதுவும் மதுவுண்டு சண்ப கத்துள்
பற்றிநின்று செத்ததுபோற் செனனம் போச்சே. 694

செனனத்தை நீக்கவென்றுற் பூரணத்திற் சேரு
சீராகப் பிறக்கவென்று லுலகத் திற்சேர்
இனனத்தை இரண்டையுங் காண வென்றுல்
ஏற்றமாங் காயசித்தி எளிதிற் பண்ணு
புனனத்தைக் குளிகையிட்டுப் பூரணத் தைப்பார்
பூதலமாஞ் சகமெல்லாம் பிரித்துப் பாரு
மனனத்தை மயக்கமெல்லாம் வெளியாய்ப் போகும்
மருவலாம் பூரணத்தில் வாழ லாமே. 695

## 19-வது குங்குமப் பாடாண வைப்பு

வாடிவே குங்குமப்பா டாணந் தன்னை
வைக்கிறதோர் முறையதுவு மருவிக் கேளு
ஆழவே பலமெட்டு ரசகற் பூரம்
அடைவாய்க்கொம் மட்டிமாத ளைச்சாற் றுலே.
தாழவே சுருக்கிடுவாய் நாலு சாமஞ்
சாரநீரோர் சாமம்வெடி யுப்புச் சாமம்
சூழவே கடுந்திநீர் சாமம் சுருக்கே
துப்புரவாங் கெந்தகந்தான் பலமும் ரெண்டே. 696

இரெண்டையுந்தான் ஓடுதனில் உருக்கிக் கொண்டு
நேகவே பொடிபண்ணிக் கர்ப்பூ ரத்தைப்
பண்டையுந்தான் முன்கட்டுந் தாள கந்தான்
பாங்காகப் பொடிபண்ணிப் பீங்கா னிலிட்டு
உண்டையுந்தா ஞகாமற் பொடிபோல் வறுத்து
உறுதியாய்ச் சொருவைத்த மேரு பண்ணி
அண்டையுந்தான் அரைவாசி மேருக் கிட்டு
அடுக்காக வாலுகையில் வைத்தி டாயே. 697

வாலுகைக்கே வைத்துமூ வைந்து சாமம்
மறவாதே தீமூட்டு முன்சொன் னற்போல்
தேலுகைக்கே மேல்மேகு மூடிப் போடு
சிவந்தமஞ்சள் நிறமாகத் தானி ருக்கும்
கோ லுகைக்கே பதங்கண்டு தண்ணீர் குத்து
குளிர்ந்தபின் பெடுத்துமேயா யிரத்துக் கொன்று
ஏறுகைக்கே ஈந்திடவே யுயர்ந்த மாற்று
இசைத்துமே தொந்தத்திற் குறைத்துக் கொள்ளே. 698

குறைத்திட்ட குங்குமப்பா டாணந் தன்னிற்
கோடிக்கே வேதையுமாங் குறைத்துக் கொள்ளு
மமைத்திட்ட காயசித்தி மகத்தாஞ் சித்தி
வாசுகிக்குக் காட்டவிட மிறங்கிப் போகும்
இறைத்திட்ட கேணியஃ தூறி னற்போல்
எடுக்கெடுக்கத் தொலையாது ஏம மார்க்கம்
நிறைத்திட்ட பூரணம்போ விறைந்தே யோங்கும்
நேரான குங்குமப்பா டாணந் தானே. 699

### யோகம், ஞானம் கூறல்

தானென்ற முன்சொன்ன தோற்றம் போலத்
தனியான குங்குமப்பா டாணத் தாட்டு
ஊனென்ற மூலத்தி னுளியே கண்டால்
உகந்துமே நந்திவந் துபதே சிப்பார்
கானென்ற வாசியைநீ வைத்தே யூதிக்
கவிந்துநின்ற புருவமையந் தன்னில் நின்று
வானென்ற விராட்டியனைத் தாண்டி யேறி
மணியான மனோன்மணியைக் கண்டு தேறே. 700

## குறிப்புரை

### பாடல் எண் : 651 முதல் 700 வரை

பாடல் எண் : 651 :- விரயம் = செலவு.

பாடல் எண் : 652 :- மனம் பிடிப்பன் = மனம் (ஓடாமல்) கட்டி வைப்பவன்.

பாடல் எண் : 658 :- ஆதளம் = வெள்ளைக் காட்டாமணக்கு.

பாடல் எண் : 661 :- அண்டமஞ்சட் கருவு = கோழிமுட்டை மஞ்சள் கரு.

பாடல் எண் : 671 :- அநுசரித்தார் = உடனிருந்து தொண்டுகள் பல செய்து வாழ்ந்தவர்.

பாடல் எண் : 674 :- தங்கமாமூமத்தைச்சாறு = பொன்னூமத்தைச் சாறு; சோரி = கோடா சோரி (குறுக்கல் விகாரம்).

பாடல் எண் : 676 :- வாமி = வாமாசாரப் பூசை செய்யும் சாத்தேயர்கள்.

பாடல் எண் : 677 :- சிவதூடர் = சிவநிந்தை செய்பவர்; கபடர் = வஞ்சனை செய்பவர்.

பாடல் எண் : 678 :- போதத்தின் தீநீர் = வெடியுப்புத் தீநீர்

பாடல் எண் : 682 :- மால்தேவி = அரிதாரம் (தாளகம்).

பாடல் எண் : 683 :- சிற்றேரண்டம் = சிற்றாமணக்கு.

பாடல் எண் : 684 :- புகைநீர் = வெடியுப்புத் திராவகம்; பசரை = கொடிப்பசலை.

பாடல் எண் : 686 :- கொம்மட்டி மாதளை = மாதுலுங்கம் (கணபதி நாரங்கமென்பர் மலையாளிகள்) மிரளாதே = பயப்படாதே.

பாடல் எண் : 688 :- பஞ்ச நிறம் = ஐந்து வண்ணம்.

பாடல் எண் : 692 :- ஏழுவகைத் தோற்றம்; நால்வகை யோனி = இதன் விளக்கம் 281ஆம் பாடலின் குறிப்பில் காண்க.

பாடல் எண் : 694 :- சண்பகத்துள் பற்றிநின்று செத்தது = (மற்ற மலரில் தேனுண்ட வண்டு) சண்பக மலரைப் பற்றியவுடன் இறந்தது. (சண்பகமலரில் வண்டு மொய்ப்பதில்லை. அது வண்டுணா மலரெனப்படும்).

பாடல் எண் : 696 :- வெடியுப்பு = இங்கு வெடியுப்புச் செயநீர்

பாடல் எண் : 700 :- விராட்டியன் = விராட்புருடன் (விச்சுவ ரூபங் கொண்ட பரம்பொருள்).

---

மனோன்மணியாந் தாயாரைப் பணிந்து போற்றி
மாயியுடை வரைதனக்கோ இருவினையி னூட்டு
இனோன்மணியாம் பிறப்பிறப்பு ரெண்டி னாலே
ஏற்றமாம் வலைவிசிறி பெண்பொன் காட்டிப்
பினோன்மணியாம் வறுமைரெண்டாய்ப் பெண்ணாண் ரெண்டாய்ப்
பேரின்பஞ் சிற்றின்பம் பிரிந்து ரெண்டாய்த்
தினோன் மணியாஞ் சீவசெந்து செயலு மாகித்
திரையற்ற ஏழுவகைத் தோற்றந் தானே: 701

தோற்றமா யுணையறிந்தால் பிறவி போச்சு
தொடிசான சிற்றின்பந் தொலைந்து போச்சு
தாற்றமா நிலையறிந்து பூரணப் பாலுண்டு
சச்சிதானந் தவெள்ளந் தன்னில் மூழ்கிப்

பேற்றமா நின்றலைந்த பிறவி மாற்றிப்
பெருமையாம் பூரணத்தி லுயர வேற்றித்
தாற்றமாந் தடங்காட்டித் தமரி னுள்ளே
தாயான மனோன்மணியைத் தனித்துப் போற்றே. 702

மணியைத்தான் தெட்சிணத்தாற் போற்ற வேண்டாம்
வாமத்தால் போற்றியே வகையாய்ப் பூசி
பிணியைத்தான் ஆற்றுவ தெங்கே யென்றால்
பூரணத்தில் இருந்துமே இளைப்பை யாற்று
தினியைத்தா னென்றுமில்லை யெல்லாம் போச்சு
சினப் போச்சு மனம்போச்சு தியக்கம் போச்சு
குணியைத்தா னுறுதலம் வெளியாய்ப் போச்சு
குறித்துநின் றொன்றுக்குள் கூட லாச்சே. 703

கூடவே ரெண்டோடே யைந்து மாச்சு
குவிந்துமே யெட்டாச்சு பனிரெண் டாச்சு
பாடயே பழங்கதைபோற் கோடி யாச்சு
பலகலையாய்ப் பலநினைவாய்ப் பரப்பு மாச்சே
மூடவே குன்றாகி மேரு வாகி
மீறியதோர் கொடுமுடியாய்ப் பாறை யாகித்
தாடவே தண்டாகிச் சராச மதாகிச்
சதகோடி சீவனெல்லா முதித்த வாறே. 704

வாறான குங்குமப்பா டாணத் தாட்டு
மாயியுடை வடிவுக்கு மொப்பு மாகும்
கூறான துறைகோடி கட்டுக் கோடி
குவிந்தவிடம் யானிதானுங் கண்ட தில்லை
தாறான திராவகத்தி னுண்மை போலச்
சாந்தமாம் ஞானத்தின் கருவு மாகும்
வீறான வாதிகள்தான் தருக்கம் பேசி
விழுந்திறந்து போனார்கள் கோடி தானே. 705

கொடிதான வறுமைவந்தால் ஞானம் போச்சு
குறியான வேதாந்தஞ் சித்தாந்தம் போச்சு
மடிதான வறுமையினால் மனம்பே யாச்சு
மாசிபோற் கருவிவந்து மருவிப் போச்சு
கடிதான வறுமையினா லறிவு போச்சு
காரணமா மாசைவந்து கலந்து போச்சே
நெடிதான வறுமையினால் நிட்டை போச்சு
நிலையற்ற மரம்போலே நெகிழ்ச்சி யாச்சே. 706

20-வது இரத்த பாடாண வைப்பு

ஆச்சென்ற ரத்தபா டாணந் தன்னை
அறைகிறேனி லகுவாக அறிந்த மட்டும்

தாச்சென்ற தங்கத்தால் மேரு பண்ணித்
தளராமல் மண்கட்டிக் காயப் போடு
நாச்சென்ற கட்டுரச கருப்பூ ரந்தான்
நலமாகப் பலமெட்டு நிறுத்துக் கொண்டு
பாச்சென்ற முன்கட்டுக் கெந்த கந்தான்
பலம்நாலு நிறுத்துமே பாங்காய்த் தானும்
ஓச்சென்ற கெந்தகத்தை யுருக்கிக் கொண்டு
உயர்ந்த ரசகருப்பூரம் பொடியாய்ப் பண்ணே. 707

பொடிபண்ணி ஓட்டிலிட்டு வறுத்துக் கொண்டு
பேரான முன்கௌரி பலமும் ரெண்டு
அடிபண்ணிக் கட்டரி தார மொன்றும்
ஆதியாம் மனோசிலைதான் பலமு மொன்று
திடிபண்ணித் தங்கமென்ற மேருக் கிட்டுச்
சிறப்பான வாலுகையிற் றிறமாய் வைத்திப்
படிப்பண்ணி பதினைந்து சாமந் தீதான்
பக்குவமாய் மேல்மேரு மூடிப் போடே. 708

பக்குவமாய்ப் பதம்பார்த்துத் தண்ணீர் குத்திப்
பாங்காக எடுத்துமே யுடைத்துப் பார்த்தால்
மக்குவாய் மாதளம்பூ நிறமாய்க் காணும்
மகத்தான தங்கத்திற் பிறந்த கன்னி
அக்குவமா யணுவைமக மேரு வாக்கி
ஆயியுடை வடிவான அதிட்டசி செல்வி
சிக்குவமாய்க் கற்பாந்த காலந் தானுந்
தேகத்தை நிறுத்துகின்ற தீர்க்கந் தானே. 709

தீர்க்கமாய் நவலோகங் கோடிக் கோடுஞ்
செப்பரிது சிவப்பாகுஞ் செம்பு போலாம்
கார்க்கமாம் வெள்ளியிலே பத்துத் தொந்தங்
காண்பித்தாற் கடைசியிலே ஏம மாகும்
ஊர்க்கமாஞ் சூதத்திற் படுமுன் காட்டும்
உபரசத்தி லணுகுமுன்னே சவளை யாகும்
நார்க்கமாம் லவணமஃ திருபத் தைந்து
நடுங்குமே வேங்கைகையி லாடு போன்றே 710

யோகங் கூறல்

வேங்கைகையி லாடுபோல் நடுங்கிப் போகும்
வெகுவித்தை யாராலும் விள்ளொண் ணாது
பாங்கையொன்று கண்டவனே வாத யோகி
பருவத்தை யறியாதான் பசாசோ டொக்கும்
தீங்கையன்றோ சிறுபாட்டர் வியாக்கி ரமர்தாம்
செப்பினதோ ருபதேசந் திறந்திட் டேன்யான்
தாங்கையன்றோ காலாங்கி ஐயர் பெற்ற
சமர்த்தெல்லா மடியேற்குச் சாற்றி னாரே. 711

சாற்றியதோர் வாசிகண்டு மும்மூ லமது
    சருவிநின்ற பூரணத்தை யுற்றுப் பாரு
ஊற்றியதோர் கருவறிந்தா லவனே யோகி
    உற்றுணர்ந்து பாரீத்தக்கால் வாத மாகும்
வாத்தியதோர் வாதத்தில் சூத மூலம்
    வரிசையாங் குருவுக்குப் பேதான் மூலப்
போற்றியதோர் பொருள்காண வடிமூ லந்தான்
    பெரிதான நடுமூலங் கண்ட மாமே. 712

கண்டத்தின் மேற்புருவ மேலா மூலங்
    கருதியதோர் வேறொன்று தவிர்தா னென்று
மண்டத்தின் மரமொன்று மூன்றி னாலே
    மகத்தான பொருள்காணு மடிமூ லந்தான்
பண்டத்தின் போதத்தில் மனந்தான் சேரும்
    பாழான மாயத்தால்வா சனைவந் தேற்கும்
விண்டத்தின் மதியாலே மாயத்தைத் தள்ளி
    விளங்கியதோர் போதத்தில் மனந்தான் சொக்கே 713

## 21-வது துத்தவைப்பு

சொக்கியதோர் துத்தத்தை சொல்லக் கேளு
    தேவியவள் சரீரத்தி லணியப் பட்ட
அக்கியதோர் குங்கும த்தின் பொடிக ளெல்லாம்
    அழலேறதோர் வேர்வையி னிற்றான் கலந்து
புக்கியதோர் பூமியிலே தான்வி ழுந்து
    புரண்டுமே கபரியுற் பத்தி யாச்சு
மக்கியதோர் மண்டூகத் துத்த மென்றும்
    மகத்தான அசுவ துத்தம் பேரு ரெண்டே. 714

அசுவதுத்தம் வெள்ளைநிற மாயி ருக்கும்
    ஆதியா நாகந்தைக் கொண்டு வந்து
பசுவமாஞ் சட்டியினில் வைத்து ருக்கிப்
    பரும்பிரண்டைச் சாறுவிட்டு வறுத்துக் கொண்டு
கசுவமாங் கனமான பாண்டத் திட்டுக்
    கனமாக வடுப்பேற்றிப் பனிரெண் டுசாமம்
மூசுவமா மூத்தியு மெரித்தெ டுத்தால்
    மூர்க்கமாங் கபரியது துத்த மாச்சே. 715

கபரியாந் துத்தத்தைக் கொண்டு வந்து
    கனமான வெள்ளுள்ளித் தயிலம் வாங்கி
உபரியா யூறவைத்துப் பத்து நாள்தான்
    உறுகின்ற துத்தத்தில் நாலுக் கொன்று

குபரியாய்க் குதிரைப்பல் பாடாணம் போட்டுக்
கொடிதான வெங்கார மிதற்குப் பாதி
விபரியாய் வெள்ளுள்ளித் தயிலத் தாட்டி
மிடுக்கான குகையில்வைத் துருக்கி டாயே. 716

உருக்கிடவே மணிமணியாய்ச் சத்து வீழும்
உறுகின்ற கறடெடுத்து நறுக்கிக் கொண்டு
முருக்கிடவே முன்போல மருந்து கூட்டி
மூன்றுவிசை யுருக்கியே சத்து வாங்கித்
தருக்கிடவே நாலுக்கொன் றுந்தங் கத்தைத்
தாக்கியே உருகையிலே நாகம் போடு
பருக்கிடவே சத்தெடைக்குச் சூதங்கெந்தி
பாங்காகப் பொடியாக்கி மேருக் கேற்றே. 717

ஞானயோகம் கூறல் (பாதி செய்யுளுக்கு மேல்)

ஏற்றியே பனிரெண்டு சாமந் தீதான்
இதமாகப் போட்டிடவே சிந்தூ ரமாகும்
தேற்றியே செம்புதனில் நூற்றுக் கொன்று
சிறப்பாகப் போட்டிடவே யேம மாகும்.
கூத்திக்கே யீந்தக்கால் ரவிகோடி நரகங்
கொடுத்திடுவாய் சிவயோகி தனக்கே ஊணு
பேத்தியோ ககாயசித்தி பிலக்கு மெத்த
பெரிசான சித்தியுண்டு பிரித்தங் காடே. 718

ஆடவே வகைசொல்வேன் நன்றாய்க் கேளு
அழுத்தியே மூலத்தி லிருத்தி யூது
நாடவே நடுமூலங் கண்டத் தூணு
நலியாமல் நாலதனை யெட்டித் சேரு
போடவே மேல்மூலம் புருமையத் தூணு
பூரணத்தின் கீழடங்கிப் போதஞ் சொக்கு
தேடவே இதைவிட்டால் ஞான மில்லை
திருட்டான யோகிக்குச் சேரப் பொய்யே. 719

பொய்யாகப் போச்சென்பார் ஞான மெல்லாம்
பொன்னாசை பெண்ணாசை மெய்யென் றெண்ணி
மெய்யாக உலகத்தி லென்ன ஞானம்
மிகுந்துணர வேணுமென்றால் வாசி யேறு
கொய்யாகப் பொறியாசை நிலையாமற் கொல்லுங்
குறியான பதியைவிட்டுப் பாச மூடும்
ஐயாக வைம்புலனைக் குத்திக் கொல்லும்
தலியாமல் பூதத்தை யொன்றாய் நாட்டே. 720

## 22-வது துரிவைப்பு

நாட்டியதோர் துரிசியுடைப் பிறப்புக் கேளு
நற்கெருட பகவான்தான் நாட்ட மாகத்
தீட்டியதோர் தெய்வலோகத்திற் போந்து
தெய்விக வமிர்தபா னத்தைப் பண்ணி
மூட்டியதோர் லாகிரியாய் மூர்ச்சை யாகி
மோகித்துக் கிடக்கையிலே கோழை தானும்
வாட்டியதோர் வாயினூற் கக்கும் போது
மரகதமாங் கிரிதனிலே விழுந்த வாறே. 721

விழுந்துமே மயிற்கழுத்து நிறமாய்த் தானும்
விளைந்துமே துரிசியுற் பத்தி யாச்சு
பழுந்துமே பொடிசெய்தால் பசுவின் பாலில்
பாங்கான நிறம்போன்று தானிருக்கும்
புழுந்துமே புளிப்புவிட்டால் மயிற்க ழுத்துப்
பொறியான வண்ணம்போற் றானிருக்கும்
கெழுந்துமே கிடையாது இச்ச ரக்கு
கிடைக்கவே சரக்கான வைப்புக் கேளே. 722

சரக்கென்ற கல்லுப்புப் பலந்தா னூறு
சமரசமாய் வெடியுப்புப் பலமும் பத்து
திரக்கென்ற சீனமது பலமும் பத்து
தீர்க்கமாய்ப் பொடிபண்ணி செம்புப் பானை
முரக்கென்ற மிடாத்தன்னில் அரைவா சியிட்டு
முதிர்ந்துநின்ற பழச்சாறுந் தயிருங் கூட்டி
குரக்கென்ற குறைப்பானை நரம்ப விட்டுக்
குழிகெல்லி யதுக்குள்வைதுச்சட்டி மூடே. 723

மூடியே யாறுதிங்கள் குதிரை லத்தி
முனைந்துமே போட்டுத்தான் மூடிப் போடு
ஆடியே யப்புறந்தா னெடுத்துப் பார்த்தால்
அரிமேனி போலவே பச்சை யாகும்
நீடியே குருவாகுங் களங்கு மாகும்
நிசமாகும் வாதமெல்லா மிதனு லாச்சு
வாடியே யிளையாதே மயக்க மாக
மகத்தான வித்தையிதில் மருவி யாடே. 724

ஆடவே துரிசியொரு பலந்தான் நாலு
அதிகமாம் வெடியுப்பு நீரிற் றேய்த்து
நாடவே நவச்சார நீரிற் றேய்ப்பாய்
நலத்தகடுந் திராவகத்தில் மூன்று நாள்தாள்

பாடவே வெள்வங்கம் பலமும் நான்கு
பரிவான சூதமது பலமு மொன்று
தூடவே தொந்தித்துச் செய்நீ ரிலாட்டித்
துரிசின்மேல் கவசமிட்டுக் காயப் போடே. 725

காயவே மூன்றுநாள் போட்ட பின்பு
கடுங்கார மானதோர் பூநீற் றுக்குள்
மாயவே கழுதையுடைக் கத்தம் வார்த்துக்
மாப்போலப் பிசைந்துமே சட்டி தன்னில்
நாயவே நடுவைத்துக் கவசந் தன்னை
நலமாக மேலுமந்தப் படியே போட்டே
ஓயவே முச்சாமங் கமலம் போலே
உருகவே யெரியிட்டங் காறப் போடே. 726

ஆறவிட்டு எடுத்துமே கவச நீக்கி
அதிலிருந்த குருவெடுத்துப் பாலிற் போடே
நீறவிட்டுப் முத்துப்போல் தண்ணீ ராகும்
நீச்சான சூதத்தை விட்டுக் காய்ச்ச
ஏறவிட்டு இட்டலிபோற் கட்டி யாகும்
ஏற்றமாங் குளிகைக்காஞ் சரணைக் குமாகும்
தேறவிட்ட இதின்வேதை செப்பக் கூடா
சொல்லலரி திதன்வேதை சூட்சந் தானே. 727

அறிவுரை (அரைப் பாட்டுக்குமேல்)

தானென்ற இக்குருவா லெல்லாங் கட்டுஞ்
சமுசயங்க ளறிந்தவனே வாத யோகி
மானென்ற மனத்தைமெள்ளப் பூரணத்திற் சேர்க்க
வாக்கடங்காப் பூரணத்தில் வாழ லாகும்
நானென்ற பூரணமே யென்று நாடி
நத்தாமற் சடம்விட்டு வேறாய் நின்று
கானென்ற காரணத்தே நாமி ருந்தோங்
கலந்துநின்ற பிரபஞ்சமெலா நாமென் றெண்ண. 728

எண்ணியே பெரியோர்க்கு வாதஞ் சொன்னேன்
ஏற்றமாங் காமுகர்க்குத் தொழிலைச் சொன்னேன்
புண்ணியமாஞ் சீடருக்குப் புத்தி சொன்னேன்
பூரணத்தி லிருக்கவல்லோ ஞானஞ் சொன்னேன்
நிண்ணயமாம் யோகியர்க்குப் பரத்தைச் சொன்னேன்
நிலையில்லாக் கருமிகளுக் கறிவு சொன்னேன்
வண்ணியமாம் வைப்புமுறை வரிசை சொன்னேன்
வாதிகளுக் கித்துரிசின் வளப்பந் தானே. 729

வளப்பமாந் துரிசிவிட்டால் வாதம் போச்சு
வைப்புமுறை யில்லாட்டால் வேதை போச்சு
இளப்பமாப் யோகம்விட்டால் ஞானம் போச்சு
எடுத்தோடுங் குளிகைக்குச் சோரி யூட்டு
தளப்பமாந் தங்கம்விட்டால் புடசெயங்கள் போச்சு
தனிக்காய சித்திவிட்டால் தளர்ந்து போச்சு
அளப்பமாய்த் தீநீரில் கட்டு மாச்சு
ஆகாதங் குப்பைவிட்டால் வாதந் தானே. 730

வாதம்விட்டால் யோகமில்லை ஞானம் போச்சு
மகத்தான பசியுற்று மயக்க மாச்சு
காதம்விட்டால் மனக்குரங்கு பசித்தே ளாலே
களைத்துமே மனமலைந்து தவிர்மெத் தாகும்
பாதம்விட்டால் பராபரத்தாய் முகத்தைப் பாராள்
பானம்விட்டா லேமவித்தை பலித்தி டாது
நீதம்விட்டால் மந்திரங்கள் சித்தி யில்லை
நிலைவிட்டால் நீச்சாச்சு நினைவாற் பாரே. 731

## 23-வது இரசிதபாடாண வைப்பு

நீச்சான ரசிதபா டாண வைப்பு
நிண்ணயமாய்ச் சொல்லுகிறேன் வெள்ளி யாலே
கூச்சான காசியென்ற மேருத் தானுங்
கொட்டியே யொருசேரிற் பண்ணிக் கொள்ளு
விச்சான மனுடனுடை யமுரி தானும்
விரும்பியே படிதான்பத் தளந்து கொண்டு
பூச்சான தினைப்புல்நா யுருவிச் சாம்பல்
பேரான கொடிக்கள்ளிச் சாம்பற் றுனே. 732

## அமுரித் தண்ணீர்

சாம்பலோரு புளிப்புறணி யுமிரி கூடத்
தனித்தனியே சுட்டெடுத்து வகைக்கரைப் படிதான்
ஆம்பலொடு அமுரிதனிற் கலக்கி விட்டு
அண்டோட்டுச் சாம்பலது பலமும் ரெண்டு
பூம்பலொடு பூநீறு பலமும் ரெண்டு
பொட்டுலுப்புப் பலம்ரெண்டு சீனம் ரெண்டு
காம்பலொடு கல்லுப்புப் பலமும் ரெண்டு
கண்டரது பலம்ரெண்டு சாரம் ரெண்டே. 733

சாரம்ரெண்டு சத்தியது கூடப் போட்டுத்
தகர்த்துமே பொடியாக்கி யொக்க விட்டு
வாரமொடு மூன்றுநா ளான பின்பு
மகத்தான வடுப்பெரித்து நாலொன் றுக்கிக்

கூரமுடன் வடிகட்டிக் குப்பிதனில் வார்த்துக்
குடிலமாம் வெள்ளையென்ற பாடா ணந்தான்
பாரமொடு பலம்நாலு நிறுத்துக் கொண்டு
பாங்காக வோட்டிவிட்டுச் சுருக்குப் போடே. 734

போட்டுமே நால்சாம மான பின்பு
பொட்டுலுப்புச் செயநீர்தான் சுருக்குப் போடு
சாட்டுமே சாரநீர் சுருக்குப் போடு
தணிப்பின்பு திராவகமுஞ் சுருக்குப் போடு
தூட்டுமே சூதமது பலமி ரண்டு
சுத்தமாம் வெள்ளீயம் பலமி ரண்டு
நீட்டுமே யிரண்டையுந்தான் தொத்திக் கொண்டு
நேராக வழுரியினுற் சுருக்குப் போடே. 735

சுருக்கிடுவா யயக்கரண்டிக் குள்ளே வைத்துத்
தூசகற்றி நாற்சாமஞ் சுருக்குப் போடு
முருக்கிடுவாய் வெடியுப்பு நீராற் சுருக்கு
மூர்க்கமாஞ் சாரநீர் சுருக்குப் போடு
திருக்கிடுவாய் தீநீர்தான் சுருக்குப் போடு
செப்பமாய் வாங்கியே வைத்துக் கொண்டு
சுருக்கிடுவாய் கல்லுப்புப் பலமு நாலு
கடிசான வழுரியிலே தோச்சுப் போடே. 736

தோச்சுமே பத்துநாள் ரவியிற் போடு
சுத்தமாம் வெடியுப்பு நீரில் மூன்று
சாச்சுமே சாரநீர் மூன்று நாள்தான்
தாழலான தீநீரில் மூன்று நாள்தான்
பூச்சுமே பூநீறு கழுதைக் கத்தம்
பிசைந்ததற்குள் வைத்துமே யெரித்துப் போடு
நாச்சுமே நாற்சாம மான பின்பு
நலமாக ஆறவிட்டெ டுத்துக் கொள்ளே. 737

எடுத்துமே யப்பாலே வைத்துக் கொண்டு
ஏற்றமாஞ் சீனமது பலமு நாலு
அடுத்துமே யழுரியிலே தோய்த்துப் போடு
ஆதளம்பால் தன்னிலே தோய்த்துப் போடு
விடுத்துமே வெடியுப்பு நீரிற் றேய்ப்பாய்
மிடுக்கான சாரநீர் தன்னிற் றேய்ப்பாய்
கடுத்துமே கடுந்திராவ கத்திற் றேய்ப்பாய்
கனமான கிளிஞ்சினீறு தன்னில் வையே. 738

தன்னில்வைத்துச் சாமமொன் றெரித்த பின்பு
சாங்கமா யாறவிட்டெ டுத்துக் கொள்ளு
முன்னில் வைத்த பாடாணம் பலமு நான்கு
மூர்க்கமாம் வெள்ளீயச் சூதம் நான்கு

பின்னில் வைத்த கல்லுப்புப் பலமிரண்டு
பேரான சீனந்தான் பலமிரண்டு
ஒன்னில் வைத்தொக்கவிட்டுப் பொடியாய்ப் பண்ணி
ஒருமிக்க வெள்ளியென்ற மேரிற் போடே. 739

போட்டுமே யொருநாள்தான் எரிப்புப் போட்டுப்
பின்புதான் மேல்மேரு மூடிப் போடு
பாட்டுமே பதினைந்து சாமந் தீதான்
பக்குவமா யெரியிட்டே யாறப் போடு
வேட்டுமே வெள்ளியென்ற மேரு வாங்கி
மிக்கான மண்தள்ளி யுடைத்துப் பாரு
நாட்டுமே நட்சத்திரம் போலத் தோற்றும்
நாமறியோம் இதுபோகும் போக்குத் தானே. 740

போக்குத்தா னென்னவென்றுற் புகலக் கேளு
பேரான சூதத்தை நிமைக்குள் கொல்லும்
நீக்குத்தான் ரசிதமது வெள்ளிமலை யாகும்
நிலையான செம்பிரும்பு வங்கந் தன்னில்
ஆக்குத்தா னுயிரத்துக் கொன்றே யோடும்
ஆயிரந்தான் மாற்றுகு மடங்கா தேடு
தூக்குத்தான் தலையிறைத்த கேணி போலாஞ்
சுருதியா மனோன்மணித்தாய் சொன்ன போக்கே. 741

## வெள்ளியங்கிரியான வரலாறு

சொன்னாளே சிவகாமி யென்னைப் பெற்றாள்
சுருதிநந்தி யெந்தைக்கு வெள்ளிமலை தானும்
முன்னாளே ரசிதபா டாணம் வைத்து
முரடான மலைதனக்குள் கரியைக் கொட்டி
அந்நாளே யாயிரந்தான் துருத்தி யிட்டங்
கழுகவே யூதியிம் மருந்தை யிட்டார்
இந்நாளே யாயிரத்தோ டெட்டு மாற்றாய்
ஏற்றமாம் வெள்ளியங் கிரியு மாச்சே. 742

## நல்லுபதேசம்

ஆச்சுதே ஆயிசொல்ல நந்திக் குத்தான்
ஆதியாந் திருமூல ருக்குச் சொன்னார்
தேச்சுதே திருமூலர் காலாங்கிக் குரைத்தார்
சிவமான காலாங்கி யடியேற்குச் சொன்னார்
ஏச்சுதே வாதமென்று ரசிதபா டாணத்
தியல்பெல்லாஞ் சோதித்தே யூாயிரத்தில்
பாச்சுதே வெளியாகச் சொல்லிப் போட்டேன்
பயல்முதலாப் பார்க்கலாம் பண்பு தானே. 743

பண்பாக வாதத்துக் கிதுவே போக்குப்
பாங்கான வாதசித்தி ஞான சித்தி
கண்பாகக் காலாங்கி நாதர் சொன்னார்
கருவெல்லா மனதூன்றி விரித்துப் பார்த்தேன்
வெண்பாகக் குருசொல்லக் காண வேணும்
விதவிதமாய்ச் சுட்டாலுங் காண மாட்டார்
நண்பாகத் தூக்கோடே பால்கு டித்த
நாயைப்போற் சுழன்றுமே திரிவர் தாமே. 744

திரிந்துமே சுடுகிறதோர் வாதி கோடி
திடமில்லா மனதான ஞானி கோடி
அறந்துமே யேறாத யோகி கோடி
அதீதமாம் பூசையில்லா வழும்பர் கோடி
விரிந்துமே வேதமில்லா ஞானத் தோர்க்கு
வெளியாகா ரசவாத வித்தை தானும்
புரிந்துமே விட்டகுறை தன்னு லெய்தும்
பேரான விரண்டினமும் புரிந்து காணே. 745

காணவே ரசிதபா டாணந் தன்னாற்
கட்டினபின் சாரணைசெய் குளிகைக் கேதான்
தோணவே கமனம்வெகு சுறுக்கா யோடுஞ்
சுளுக்காகக் காயசித்தாம் யோக சித்தாம்
ஊணவே குளிகையிட்டு வாசி யேறு
ஒருமித்தே யாறுதல முருவாய்க் காணும்
பூணவே சமாதியிலே புக்கு நின்றாற்
பொற்பூவும் வாசனையும் போல வாமே. 746

### தயில பாடாண உற்பத்தி

ஆமென்ற தயிலபா டாணந் தானும்
அவதரித்த இடஞ்சொல்ல வறிந்து கொள்ளு
தாமென்ற சவுராட்டிர தேசந் தன்னிற்
சமீபமாம் பீமோற்பர் வதத்தின் தென்கீழ்
போமென்ற பீமகண்டந் தன்னிற் றானும்
பிறக்கின்ற இடமிதுதான் பின்பு வண்ணம்
தேமென்ற செங்கற்றாள் நிறமே போன்று
திணியனுய்ச்சந் திரகாந்தக் கற்போ லாமே. 747

கற்போலாய்ச் சிவந்துமே இருப்ப தொன்று
கசிந்த கோரோசனையி னிறமே போன்று
விற்போலத் தானிருக்கு மிரண்டு பேராம்
மேதினியிற் கம்பில்ல மென்று மற்றைத்

தற்போலத் தயிலபா டாண மென்றுஞ்
சாங்கமா யிரண்டுபே ரதன்கு ணத்தான்
உற்போல வுபரசங்கள் தன்னி ராகும்
உறுதியாம் நவலோகந் தன்னி ராமே. 748

ஆமென்ற தயிலபா டாணந் தானும்
அபூர்வமாய்த்தான் கிடைக்கும் மிகுதி யில்லை
தாமென்ற சரக்குக்கு மிச்ச மாகச்
சரிக்கட்டி வைத்தார்கள் சித்த ரெல்லாம்
ஓமென்ற தயிலபா டாண வைப்பை
உத்தமித்தாய் சொன்னபடி யானும் வைத்துக்
காமென்ற கைகண்ட படியே சொன்னேன்
காலாங்கி பதஞ்சிரசில் வைத்துத் தானே. 749

## 24-வது தயில பாடாண வைப்பு

தானான முன்கட்டுங் கௌரி பத்துத்
தாளகமுஞ் சிலைகெந்தி லிங்கந் தானும்
கானான முன்போலக் கட்டிக் கொண்டு
கணக்காகப் பொடிபண்ணி யிரும்பு மேரு
ஊனான வொருசேரிற் பண்ணிக் கொண்டு
உள்ளிட்டு மருந்தைவா லுகையில் வைத்துப்
பானான மேல்மூடிப் பதினைந் துசாமம்
பக்குவமா யெரியிட்டங் காறப் போடே. 750

## குறிப்புரை

### 701 முதல் 750 வரை

பாடல் எண் : 702 :- பூரணப்பாலுண்டு = அமுதபானம் செய்து (யோகியர்க்குக் கிட்டும்).

பாடல் எண் : 705 :- தருக்கம் = விவாதம் (வாக்குவாதம்).

பாடல் எண் : 706 :- மாசி = மேகம் (பரவை வழக்கு) நெகிழ்ச்சி = வன்மையும் உறுதிப்பாடும் நீங்கிய நிலை.

பாடல் எண் : 712 :- சருவி நின்ற = சார்ந்துள்ள.

பாடல் எண் : 714 :- அழன்ற = வெம்மைகொண்ட.

பாடல் எண் : 718 :- கூத்தி = பரத்தையர் (கூத்தன் (ஆண்) கூத்தி (பெண்பால்).

பாடல் எண் : 719 :- புருமையம் = புருவமத்தியம்.

பாடல் எண் : 721 :- போந்து = வந்து (வருகை தந்து).

பாடல் எண் : 723 :- மிடா=முடா (மொடா என்பது பரவை வழக்கு) பெரிய பானை என்பது பொருள்.

பாடல் எண் : 724 :- அரிமேனி = மாலின் நிறம். (மேனி = உடல் நிறம்).

பாடல் எண் : 727 :- சரணை = (குறுக்கல்) சாரணை.

பாடல் எண் : 730 :- எடுத்தோடுங் குளிகை = கமனக் குளிகை. சோரி = சாரணை

பாடல் எண் : 735 :- தொத்திக்கொண்டு = தொந்தித்துக்கொண்டு.

பாடல் எண் : 741 :- ஏடு = நூல்.

பாடல் எண் : 747 :- பர்வதம் = மலை; திணியனாய் = அழுத்தமாய்.

பாடல் எண் : 748 :- வில் = ஒளி.

---

ஆறவே யெடுத்தபின் புடைத்துப் பாரு
அழுத்தமாய்க் கருஞ்சிவப்பு மஞ்சள் தானும்
தூறவே துத்தமொரு பலத்துக் குள்ளே
சூட்சமாய்ப் பத்துக்கொன் றாகப் போட்டு
பாறவே பசுநெய்யிற் றான ரைத்துப்
பாங்கான சீலையினிற் பூசி வைத்து
ஏறவே கடுதாசிக் கூட்டில் வைத்து
ஏற்றமாய்த் திரிகொளுத்திப் பின்பு கேளே. 751

தூமம்

பின்புதான் செம்புதனைத் தகடு தட்டிப்
பெரிதான பரணிட்டுப் பரப்பி வைத்து
முன்புதான் திரிகொளுத்தி அகாத தூமம்
முனையாகப் பட்டிடவே யேம மாகும்
அன்புதா னில்லாதா ரிந்த வேதை
யறிந்தக்கால் வெகுபாவங் காட்ட வேண்டாம்
என்புதா னெலும்பி லிட்டா லேம மாகும்.
எடுத்ததுறைக் கெல்லாந்தா னேற்ற மாமே. 752

ஏற்றமாந் தயிலபா டாணந் தன்னை
இரும்பிலிட்டா லெழுபதுதான் மாற்றுக் காணும்
மாற்றமா மிதுக்கொப்போ வொன்று மில்லை
மாடேறிக் காதிவித்தை மருவிப் பாரு
மூற்றமா மூதேவி யிவன்க ணில்லை
மூஷ்கரமாம் புலன்வழி வசமே யாகும்
நாற்றமாஞ் சடந்தானுங் கத்தூ ரிவீசும்
நாடுவிட்டு நமன்வெருட்டும் நடுங்கு வானே. 753

### யோகம் கூறல்

வெருளாமற் சென்றேற அருளுங் காணும்
வெளிதானே தென்றக்கால் விளங்கக் கேளு
பொருளான தயிலபா டாணந் தன்னாற்
பெரும்பசிக்குச் சீவனத்தைப் பண்ணிக் கொண்டு
தெருளான மூலத்தைச் சித்தி பண்ணிச்
சேர்ந்தேறி யாறுதலம் நன்றாய்த் தேறி
மருளான மதியினுள்ளே பானம் பண்ணி
மகத்தான குருபதத்தில் நின்றங் காடே. 754

ஆடியே சமாதியிலுன் மனேயோ டேறி
அருவியாம் நாதவிந்து வராட்டியனுந் தாண்டி
நீடியே நின்றசத்தி பதினென்றுந் தள்ளி
நிர்மலமா முன்மனேக்கு அடுக்கச் சென்று
வீடியே முப்பாழில் விரைந்தே யேறி
மேவினு லதற்கடுக்கப் போதந் தானும்
பூடியே பூரணத்தி லேறிச் சேரு
பொறியைந்துந் தள்ளியே புக்கி யேறே. 755

### ஐந்துவித இரதங்கூறல்

ஏறியே சூதபா டாணந் தன்னை
ஏற்றத்தை யுரைத்திடவே யியம்பக் கேளு
ஆறியே சூதமஃ தைந்து விதமாம்
அதின்விபர மேதென்னி லறையக் கேளு
ஊறியே ரசமென்றும் ரசேந்தி ரமென்றும்
உற்றபா ரதமென்றுஞ் சூத மென்றும்
மீறியே மிசிரகமென் றைந்து மாச்சு
மிடுக்கான சிவவீர்யந் தங்கித் தானே. 756

### இரசத்தின் பண்பு

தங்கியதோர் ரசத்தினுடை வண்ணங் கேளு
தனியிரத்த நிறமாகத் தளுக்குத் தானாய்
மங்கியதோர் தோடமற்று ரசாயனமு மாகி
மகாமேரு பாரிசத்திற் றானி ருக்கும்
தெங்கியதோ ரிச்சூதஞ் சத்த வேதி
தேவர்களும் அசுரர்களும் தரிசித் தேதான்
வொங்கியதோர் பிறப்பிறப் பிரண்டு மற்றுப்
பின்னேபோல் நித்தியராய் இருந்தார் காணே. 757

### ரசேந்திரத்தின் பண்பு

காணவே ரசேந்திரந்தான் பச்சை வண்ணங்
கனத்ததொரு ரோமபுரிக் கடலுக் குள்ளே

தோணவே தென்கிழக்காய்க் கிணற்றுக் குள்ளே
தோடமற்று நிர்மலமாய்ச் சத்த முண்டாம்
பூணவே பூதங்கள் சிவக ணங்கள்
புரிசடையோன் சொற்படிக்கே காத்தி ருப்பார்
ஊணவே யொருவருக்குங் கிட்டா தாகும்
உத்தாரப் படியாணு லெடுக்க லாமே. 758

எடுக்கலாஞ் சிவனுடைய யுதாரப் படிக்கு
எடுத்துவந்தால் தரிசனத்தில் வேதி யாகுந்
தடுக்கலாஞ் சராமரணங் களில்லா மற்றுன்
சந்திரன்போற் பதினறு வயது மாகும்
கொடுக்கலாங் குளிகையிட்டுக் கமன மாகிக்
கொடிதான பூதங்கள் சிவக ணங்கள்
வடுக்கலாம் வசியமந் திரத்தி னுலே
வணங்கவே பண்ணுவித்து வாங்கிக் கொள்ளே. 759

வாங்கையிலே ரசேந்திரந்தா னெழும்பிப் பொங்கி
மகத்தாகச் சுழித்துமே யழித்துக் கொல்லும்.
தாங்கையிலே தம்பனையா மந்தி ரத்தால்
தம்பித்துக் குடுக்கையிலே யடைத்துக் கொள்ளு
தேங்கையிலே குளிகைக்காஞ் சொருப மாகுந்
தெளித்ததுளி சிவனுடைய சுக்கி லந்தான்
ஓங்கையிலே கிணறுயிற் றெவர்க்குங் கிட்டா
தும்பருக்குங் கிட்டாது தெரிசிப் பாரே. 760

பாரதத்தின் பண்பு

தெரிசித்துப் பிணிமூப்புச் சாக்கா டற்றுத்
தேவர்கள் நித்தியரா யிருந்து விட்டார்
பரிசித்துப் பொட்டிட்டா லேம மாகும்
பாரதமாம் ரசந்தானும் சொல்லக் கேளு
முரிசித்து முன்சொன்ன கிணற்றுக் கப்பால்
முக்காத வழிக்குள்ளே கிழக்கே தானும்
கெரிசித்துக் கிணறதுதான் நூறு பாவங்
கெடியான வாழமஃ தகலங் கேளே. 761

ஆழந்தான் ஆயிரமாம் பாவ மாகும்
அக்கிணற்றிற் பாரதமாம் ரசமே நிற்கும்
தோழந்தா னற்றுவெள்ளைச் சுயம்பாய் நிற்குந்
துருசாகப் பரிசனத்தில் வேதி யாகும்
வேழந்தான் குளிகையிட்டுப் பறந்து போகி
வெகுசித்த ரெடுத்துவந்து குளிகை கட்டி
காழந்தான் காயசித்தி பண்ணிக் கொள்வார்
கரவலிவில்லை யெடுப்போர்க்குக் கனகந் தானே. 762

### சூதத்தின் பண்பு

எடுப்போர்க்குச் சூதமென்ற ரசத்தைக் கேளு
எழிலாகப் பொற்கொன்றை நிறமாய்க் காணும்
தொடுப்போர்க்கு ஏழுவிதத் தோடம் நீக்கித்
தூய்மைசெய்து பதினெட்டுப் பின்பு தானும்
கடுப்போற்குக் கட்டினுற் காய சித்தி
கடிசான ஏமசித்தி சரக்கு வைப்பு
அடுப்போர்க்கெல் லாமாமட் டசித்தி யாகும்
ஆடலாம னேகவித்தை யதீத மாமே. 763

### மிசிரகத்தின் பண்பு

அதீதமாம் மிசிரகமென் ரசத்தைக் கேளு
அழகான மயிற்சுட்டி நிறமாய்க் காணும்
பதிதமாம் பதினெட்டுச் சுத்தி செய்து
பாங்காகக் கட்டினுற் சகல சித்தி
கதிதமாம் ஆகாது கமனி யாகுங்
கெட்டியாஞ் சரீரமது வச்சி ரகாயம்
உதிதமாம் உப்புறைப்புக் கசப்பு மாகும்
உட்டினசீ தளமான மிசிரக மென்னே. 764

### இரசக்கிணறு உற்பத்தி

தானுன மகாவிண்டு பூர்வீ கத்தில்
தளுக்கான மோகினியாம் ரூபங் கொள்ள
மானுன மகாதேவர் தாம்மோ கித்து
மதத்துமே இந்திரியக் கலித மானுர்
வேனுன மகாமேரு வின்கீ ழாக
மிக்கான பூமியிலே விழுந்த தப்போ
கோனுன விழுந்தவிடம் யோசனைத் தூரங்
கிணற்றகல மாழமுமப் படியே யாச்சே. 765

ஆச்சென்ற வீரியத்தில் நூற்றி லொன்று
ஆர்த்தெழும்பி மேருவுக்குக் கிழக்கே தானும்
தேச்சென்ற நூறுயோ சனைக்கு மப்பாற்
செண்பகத்தீ வுக்குள்ளே தான்வி ழுந்து
வேச்சென்ற யோசனையாந் தூரந் தானும்
விரிவாகி யாழமுமப் படியே யாச்சு
பாச்சென்ற வீரியத்திற் பத்தி லொன்று
பாய்ந்துமே சமுத்திரத்தில் பரவிற் றன்றே. 766

பரவியே ரோமபுரிக் கடற்குக் கிழக்கே
பாய்ந்துமே கிணருயிற் றகலங் கேளு

அரவியரை யோசனைவித் தீரண மாகும்
ஆடிமுந்தா னப்படியே பரிசிக்க ஏமம்
தரவியே சகலருந்தா னெடுப்பா ரென்று
சதாசிவன்றான் சிவகணத்தைப் பூதந் தன்னை
ஏரவியே யெடுக்காமற் காவல் வைத்தார்
ஏற்றமாம் பாரதமாம் ரசந்தான் காணே 767

காணவே பத்திலொன்று சீனு நாட்டில்
கடிந்துமே மண்தன்னிற் கலந்து போச்சு
நாணவே ரசமென்றுற் சத்த வேதி
ரசேந்திரந்தான் தரிசனமாம் வேதி யாகும்
பாணவே பாரதந்தான் பரிச வேதி
பாங்கான சூதமும்மி சிரகந் தானும்
தோணவே சுத்திசெய்து பத்தம் பண்ணிற்
சுளுக்காக வேதையுமாஞ் சித்தி யாமே. 768

## 25-வது சூதப் பாடாண வைப்பு

சித்தியாஞ் சூதபா டாணந் தன்னைச்
செய்யவே யுலகோர்க்குத் திறமை கேளு
முத்தியா முச்சூத மனுடர்க் கெய்தா
முனிவான ஊர்ச்சூதந் தன்னிற் கேளு
கத்தியாஞ் சேரிரதங் கல்வத் திட்டுக்
கல்லுப்புக் கற்றாழை தன்னிற் சுத்தி
வெத்தியா மயக்கரண்டி தன்னில் வார்த்து
வெடியுப்பு நீர்தானுஞ் சுருக்குப் போடே. 769

சுருக்கிடுவாய் முன்சொன்ன வழுரி தானுஞ்
சுயம்பான சார நீர் சுருக்குப் போடு
முருக்கிடுவாய் முன்சொன்ன துரிசி நீர்தான்
முகிந்தபின்பு திராவகத்தை விட்டு நீற்று
குருக்கிடுவாய் பீங்கானில் வறுத்துக் கொண்டு
கூட்டிடுவாய் செம்பினுடைப் பொடியைக் கேளு
பருக்கிடுவா யிரும்பினுடைப் பொடியுங் கூடப்
பாங்கான நாகத்தின் பொடியும் போடே. 770

பொடியோடு தங்கத்தின் பொடியுந் தானும்
பேரான காரீயப் பொடியுங் கூட
வடியோடு வகைக்கொன்று பலமி ரண்டு
மறவாமற் சுத்தித்துக் கூடக் கொள்ளு
துடியோடு கௌரியது பலமி ரண்டு
சூட்சமாய்முன் கட்டுந்தா ளகமுஞ் சிலையும்
கெடியோடு கெந்தகமும் பலமி ரண்டு
கேசத்தின் தைலத்தா லரைத்தி டாயே. 771

அரைத்திட்டுக் காசியென்ற மேருக் குத்தான்
அரைவாசிக் கிட்டுமேவா லுகையில் வைத்து
பரைத்திட்டுப் பதினைந்து சாமந் தீதான்
பக்குவமா யெரியிட்டே யாறப் போடு
தரைத்திட்டு இளஞ்சூட்டில் தண்ணீ ராட்டிச்
சாங்கமாய் மேல்மண்ணைத் தள்ளிப் போட்டு
உரைத்திட்டு உடைத்தக்கால் ரத்தம் போலாம்
உயர்சூத பாடாணத் துண்மை தானே. 772

உண்மைதான் மகாமேரு கிரியின் கீழே
உயர்ந்திட்ட ரசக்கிணற்றின் வேகத் தாலே
வண்மைதான் மணலெல்லா மேம மாச்சு
மாசற்ற ரசத்துக்குச் சமனுய்த் தானும்
தண்மையாய்ச் சூதபா டாணஞ் சொன்னேன்
தாய்சொல்லக் காலாங்கி தந்தை சொல்ல
வெண்மையாய் விரகறியாப் பிள்ளை கட்கா
விளம்பினேனே மாயிரத்திற் ருனே காணே. 773

## ஞானங் கூறல்

ஆயிரத்து நவலோகத் திந்தா யானுல்
ஐம்பதென்ற மாற்ருகு மழுக்கோ வில்லைக்
காயிரத்துக் காயசித்தி கடிசி லாகுங்
கலைந்திட்ட கற்பமெல்லாங் கடிசிற் கூடும்
மாயிரத்து மந்திரமோ சித்தி யாகும்
மகத்தான வெட்டெட்டுஞ் சித்தி யாகும்
பாயிரத்து நமன்வெருண்டு பதுங்கிப் போவான்
பதினுரு யென்றுந்தா னிருக்க லாமே. 774

இருக்கின்ற அருளாலே பதங்க ளாச்சு
ஈரேழு புவனமுத லண்ட மாச்சு
அருக்கின்ற வாருதியைம் பூத மாச்சு
அனேகமாஞ் சீவசர செந்து வாச்சு
உருக்கின்ற இனந்தோறும் ஆண்பெண் ணுச்சு
ஒடுக்கமோ டுற்பனமு முண்மை யாச்சு
பெருகின்ற சூதபா டாணத் தாட்டுப்
பேசியதோர் முறைபோலப் பிறந்த வாறே. 775

வாருகக் கூற்றனிங்கே யுண்டென் பார்கள்
வைத்ததுமே கொல்லுகிரு னேம னென்பார்
கூருகக் கூற்றனிருந் தவிடங் காணுர்
குறிப்பாக மூலத்தே யிருந்தான் கூற்றன்
ஏருக விடங்கண்டால் கூற்றைக் காண்பார்
எளிதாக ஞானத்தின் கூத்துங் காணும்

விருக யோகத்தில் வெளியுங் காணும்
　　விடுபட்டு யோகத்திற் குழைந்து பாரே. 776

பார்க்கவே வெகுகோடி யாட லாகும்
　　பாராதும் பார்க்கிறது மொக்க வாகும்
கூர்க்கவே குளிகையிதில் நூற்றுப் பத்துக்
　　கொடிதான குளிகையிதாற் பண்ண லாகும்
பூக்கவே பூரணத்திற் சென்றே யாடும்
　　பேரான நிர்க்குணத்தி லுன்னிப் போகும்
தூர்க்கவே நாலுதிக்குஞ் சென்றங் காடிச்
　　சுத்தசை தந்நியத்தி லிருக்க லாமே. 777

### 26-வது நீலப்பாடாண வைப்பு

இருக்கவே நீலபா டாணந் தன்னை
　　இயம்பிடவே துரிசியது பலந்தான் பத்து
வருக்கவே வங்கத்தி லமுத்திப் பின்னை
　　வண்மையா யமுரிதன்னி லெழுகால் தோய்ப்பாய்
தருக்கவே வெடியுப்பு நீரிற் ஞேய்ப்பாய்
　　சாரநீரில் தோய்திராவ கத்திற் ஞேய்ப்பாய்
மருக்கவே மதியுப்புப் பலந்தா னைந்து
　　வாகான பொரிசீனம் பலந்தா னைந்தே. 778

பலம்பத்தும் வெடியுப்பு நீரா லாட்டிப்
　　பாங்கான துமிசிக்குக் கவசங் கட்டிப்
புலமான பூநீற்றுக் குள்ளே வைத்துப்
　　பேராகத் தீயெரிப்பாய் நாலு சாமம்
கலமான கவசத்தை நீக்கிப் போட்டுக்
　　கனம்பார்த்து நிறுத்துமே வைத்துக் கொண்டு
தலமான தாளகந்தான் பலமு மைந்து
　　தனிக்கௌரி பலமைந்து கெந்தி யைந்தே. 779

கெந்திதனைக் கூடவிட்டுப் பொடியாய்ப் பண்ணிக்
　　கிளர்ந்தகா ரீயத்தின் பொடியி ரண்டு
இந்திதனை யிரும்பரப் பொடியி ரண்டு
　　ஏற்றமாஞ் செம்பதவும் பலமி ரண்டு
உந்திதனை யொக்கவிட் டவுரிச் சாற்றில்
　　உறுகரைத் தெண்சாமம் பொடியாய்ப் பண்ணிக்
கந்திதனைக் காசியென்ற மேருக் கிட்டுக்
　　கனமான வாலுகையில் வைத்தி டாயே. 780

வைத்திட்டா லொன்றுக்கு ளடங்கி டாது
　　வண்மையா யிருமூன்றில் மாட்டி வைப்பாய்
தெய்த்திட்டு முன்சொற்சூ தபாடா ணந்தான்
　　தீர்க்கமாம் நீலபா டாணங் கெந்தி

வைத்திட்ட மூன்றுக்கும் வாய்தி றந்து
வைத்துமே வாலுகையி லெரிப்புப் போட்டுப்
வைத்திட்ட பதினைந்து சாம மானுற்
பக்குவமாம் பதமென்று வாங்கி டாயே. 781

வாங்கியே பதந்தன்னில் தண்ணீர் தோய்த்து
மண்ணகற்றி யுடைத்தக்கால் வயிரம் பாய்ந்து
நீங்கியே நீலகிரி பருவ தம்போல்
நிச்சயமாய்த் தானிருக்கும் நிலைக்குஞ் சூதம்
தூங்கியே துலாத்துக்கு வராக னிட்டுச்
சுழற்றியரை பழச்சாற்றுற் சுருண்டு போகும்
திங்கியே சூடனுடைத் தீயில் வாட்டிச்
சிறந்தகுகை தன்னில்வைத் துருக்கி டாயே. 782

உருக்கிட்டுச் சாரணையைத் தீர்த்தா யானல்
ஓடுமே நிமைக்குமுன்னே கோடி காதம்
மருக்கிட்டு வெள்ளியிலே நூற்றுக் கொன்று
மாட்டிடவே நீலத்தை வயிர நீலம்
பருக்கிடவே பத்துமட்டுந் தொந்த மேற்றப்
பழுப்பான நீலம்போற் றெருந்த மேறும்
திருக்கிட்ட செம்புதன்னி லித்தொந் தத்தைச்
சேர்த்திடவே பசும்பொன்னு மாற்று நூறே. 783

நூருன நீலபா டாணந் தன்னை
நுணுக்கியே வீசமெடை தேனி லுண்ணு
வாருன நீலக்கற் போலாந் தேகம்
மண்டலந்தான் கொண்டிட்டால் மகத்தாஞ் சித்தி
வேருன சடந்தானு மருகி ருந்தால்
மிதக்கான ஒளிபாய்ந்து நீலம் போலாம்
காருன கரியமால் கொண்ட கற்பங்
காயசித்தி கடிசிலாங் கண்டு தேறே. 784

## அறவுரை கூறல்

தேறியே நந்தியென்ற நால்வர் பாட்டர்
சிவயோகத் தெவ்வாறி ருப்பா ரென்றால்
தூறியே பூரணத்தி னுள்ளே சொக்கித்
துரியத்தின் சுடர்போலத் தேக மாகி
மாறியே மனதையப்பூ ரணத்தில் மருவி
மற்றதெல்லா மித்தையென்று தெளிந்தார் நால்வர்
வீறியே தருக்கெல்லாம் மனந்தான் காணும்
மிகுந்தருக்கைப் போக்கினவன் ஞானி தானே. 785

ஞானியென்று லகுதன்னி லிருந்து கொண்டு
ஞாயமோ ஞானமெல்லாம் நமக்குண் டென்று
தீனியொன்றுந் தின்னவில்லை மயக்க மில்லை
செகச்சால மானபெண்டு பிள்ளை விட்டேன்
கானியென்ற சீமைவிட்டேன் வீடும் விட்டேன்
கனகங்க ளாபரணங் கண்டு விட்டேன்
சூனியென்று வாய்ப்பேச்சால் சொல்லு மாண்பன்
துரோகியவன் கிட்டநின்று சொற்கே ளாதே. 786

கெளாதே கருவறிந்தோன் விட்டா லென்ன
கிளறுகின்ற மாயைதனி லடுத்தா லென்ன
தாளாதே சடத்துக்குச் சகல முண்டாம்
தணிந்தமனந் தாளுகிக் கோபம் போக்கு
வாளாதே வனக்காட்டி லிருந்தா லென்ன
மகத்தாமுப் பரிகையின் மீதிருந்தா லென்ன
மாளாதே மனதுசெம்மை யாக வேணும்
வாய்ப்பேச்சில் மண்ணுமில்லை மருவிப் பாரே. 787

## 27-வது கந்தப்பாடாண வைப்பு

மருவியதோர் கந்தகப்பா டாணந் தன்னை
வைக்கிறதோர் முறைதன்னை வழுத்தக் கேளு
தருவிய மகாதேவி சகிமா ரோடே
தனித்ததிருப் பாற்கடலிற் சென்று தானும்
வெருவிய சலந்தன்னில் விளையா டுங்கால்
மிக்கான ருதுவாச்சு சோணி தந்தான்
அருவியே யலையோடே கரையிற் றங்கி
அனேகமாந் திவ்வியப் பிரகா சமாச்சே. 7c8

ஆச்சுதே தெய்வீக வாசனை யினோடு
அதிகமா யுயர்ந்திட்ட மலையு மாகி
கேச்சுதே கந்தமாதன மென்று பேராய்
கெந்தமா தனமென்ற பருவதமு மாச்சு
நாச்சுதே இராக்கதரோ டசுரர் தேவர்
நணுகியிதைப் பார்த்தவுடன் நரைதிரையு மற்றுத்
தாச்சுதே சாக்காடு மில்லா மற்றுன்
சகலசித்தாய் சிரஞ்சீவி யானார் காணே. 789

ஆன தெய்வீகந் தேவேந் திரன்தான்
அறிந்திந்தப் பருவதம் வச்சிரா யுதத்தால்
வேனப் பிளந்துவெட்டி வேக நாற்றம்
வேக்காடுண் டாகவென்று சாப மிட்டுத்

தேன திசைநான்கில் யெறிந்துப் போட்டான்
சிதறியங்கே விழுந்திடமுற் பத்தி யாச்சு
தான கந்திநா லு வண்ண சாதி
நற்பஞ்ச நிறமாக நாடிற் றன்றே. 790

## கந்தக வேறுபாடுகள்

நாடியே பிரம்மட்சத் திரிய னோடு
நல்வைசிய சூத்திர நாலு சாதி
பேடியே பிராமணகந் தகந்தான் வெண்மை
பேரான படிகநிறம் போன்றி ருக்கும்
சாடியே சர்வரோ கத்தைத் தீர்க்கும்
சத்திரிய கந்தகந்தான் கிளிமூக் குச்சேப்
போடியே நவலோகம் ஏம மாகும்
உற்பனமாய் வைசியகந் திதனைக் கேளே. 791

வைசியகந் தகம்பொன்மை நிறமாய்க் காணும்
மாசற்ற நெல்லிக்காய்ப் போன்றி ருக்குந்
துசியமாஞ் சூதத்தோ டுறவா கித்தான்
சுத்தமாய்த் தானிருக்குஞ் சூத்திர கந்தி
கெசியமாய்ப் பச்சைக்கிளி யிறகின் சாயல்
கெட்டியாய்க் கறுப்பாகிக் காக்கை யிறகாய்
அசியகந்தி யோயார்க்குங் கிடையா தாகும்
அகப்பட்டால் நரைதிரைக ளற்றுப் போமே. 792

போமென்ற கந்தகபா டாண வைப்புப்
புகலவே கந்தகந்தான் பலமும் பத்து
ஆமென்ற ஆவின்பால் தன்னிற் சுத்தித்
தரைத்திடுவாய் காரைகொட்டி யிலைச்சாற் றாலே
நாமென்ற நாள்மூன்ற ரைத்த பின்பு
நயமாமா வின்பாலிற் திரும்ப வைத்துப்
பாமென்ற பாலதனி லிறக்கிக் கொண்டு
பன்றிநெய்யை விட்டுருக்கி நீரிற் சாயே. 793

நீராவ தேதென்றால் முன்சொல் லமுரி
நிச்சயமா யேழுதரஞ் சாய்த்துக் கொண்டு
வேராவ வெடியுப்பு நீரி லேழு
மிக்கான சாரநீர் தன்னி லேழு
காராவ கடுந்திராவ கத்தி லேழு
கருதியபின் கந்தகத்தை நிறுத்துக் கொண்டு
ஏராவ கல்வத்தி லிதனை யிட்டு
இதனோடே சமபாகங் கௌரி கூட்டே. 794

கூட்டியே யிதிற்பாதி தாள கத்தைக்
குறையாம லிதிற்பாதி சிலையைக் கூட்டு
பூட்டியே சிலையெடைக்கி லிங்கங் கூட்டு
பேராக முன்கட்டுஞ் சரக்கைப் போடு
மூட்டியே செம்பினுடைப் பொடிப லந்தான்
முயற்சியாந் தங்கமஸ்தா ரைப்ப லந்தான்
நாட்டியே நாகத்தின் பொடிப லந்தான்
நாயகமாங் காரீயப் பொடியுந் தானே. 795

பொடியான வரப்பொடிதான் பலமு மூன்று
பேராக இவையெல்லாங் கூடப் போட்டு
நெடியான திராவகத்தா லரைத்து மைபோல்
நேராகப் பொடிபண்ணிக் காசி மேரு
துடியான மண்தான்செய் ததற்கு ளிட்டுத்
தூசான வாலுகையின் மேலே வைத்துப்
படியாகப் பதினைந்து சாமந் தீதான்
பக்குவமா யெரியிட்டு முன்போல் வாங்கே. 796

வாங்கியே குப்பியைத்தா னுடைத்துப் பார்த்தால்
மகத்தான கிளிமூக்கின் சாய லாக
தேங்கியே கந்தகபா டாணந் தானுஞ்
சிறந்திருக்கும் வயிரம்போற் சிவப்பு மெத்த
தூங்கியே தோசைபோற் சூதந் தானுஞ்
சுருண்டுமே மயங்கிப்போம் சரக்கைக் கண்டால்
தாங்கியே சத்திக்குள் சிவந்தான் சொக்குஞ்
சகத்திரமாம் கோடிவழி யோட லாமே. 797

ஓடலாங் கமனத்திற் சுறுக்கு மெத்த
ஒன்பதென்ற நவலோகங் கோடிக் கோடும்
ஆடலாங் காயசித்தி கடிசி லாகும்
அறுபத்து நாலான பாடா ணங்கள்
ஊடலாம் உபரசம்நூற் றிரண்டு பத்தும்
ஒன்பதென்ற நவலோகஞ் சவளை யாகும்
பாடலாம் பரிசத்திற் சரக்கு கட்டும்
பட்டிடவே கல்முதலாய்ப் பழுக்கும் பாரே. 798

### அறிவுரை வழங்கல்

பழுக்கவே வாராதெப் பாடு பட்டும்
பரவியே வருகிறது வந்தே யாகும்
அழுக்கவே மனமலைந்தா லசைந்து போகும்
அறியாது குருசொல்ல வறிய லாகும்

தெழுக்கவே தேனுக்கு ளின்பம் போலத்
தெளிந்தவரே சிவயோகி சித்த ராவார்
தழுக்கவே சாத்திரந்தா னிருமை சொல்லுஞ்
சாதித்து மனமுறைத்தால் யோகி யாமே. 799

யோகியாங் கரையேற வேணு மென்றால்
உற்றுமே சூட்சத்தை யாய்ந்து பார்த்து
வாதியாய் வலுமைக்கென் னவித மென்று
வாதவித்தை யதனாலே வரவே பார்ப்பார்
சாதியாய்ப் பிறயிலே விழலாய்ச் சன்மஞ்
சாங்கமாய் வேதாந்தந் தனிற்ப டிந்து
தேகியாய் மனமுறைத்துச் சித்த னாகிச்
சிவயோகி நாதாந்தி யான வாறே. 800

## குறிப்புரை

### பாடல் எண் : 751 முதல் 800 வரை

பாடல் எண் : 753 :- மாடேறி = இடபவாகனர் (சிவன்).

பாடல் எண் : 757 :- சத்தவேதி = எழுவகை வேதை செய்யும் சரக்கு. (1) பரிச வேதை, (2) தூம வேதை, (3) களங்கு வேதை (4) தரிசன வேதை, (5) சிந்தூர வேதை, (6) சுண்ண வேதை, (7) கல்மண் பழுக்கும் வேதை, (கொங்கணர் 500-ல் 162-ம் பாடலைக் காண்க.)

பாடல் எண் : 758 :- உத்தாரம் = உத்திரவு (அனுமதி).

பாடல் எண் : 759 :- சராமரணம் = நரை திரை மூப்பு சாக்காடு.

பாடல் எண் : 760 :- குடுக்கை = தென்னை, சுரை, பனை முதலானவை களின் காயிலிருந்து செய்யப்படும் பாத்திரம் உம்பர் = தேவர்.

பாடல் எண் : 761 :- நித்தியர் = அழிவில்லாதவர். பாவம் = (நீட்ட லளவை) ஆள் உயரத்தைக் குறிக்கும் (சில இடங்களில் மெட்டு என்று கூறுவதைக் காண லாம்).

பாடல் எண் : 762 :- சுயம்பாய் = தான்தோன்றியாக; போகி = போய் (ஆய் என்பதை ஆகி என்போம் அது போன்ற ஆட்சி), கரவல் = வஞ்சனை (மறைப்பு).

பாடல் எண் : 763 :- தொடுப்போர் – மருந்து (யோகத்தில்) சேர்ப் போர்.

பாடல் எண் : 764 :- மயிற்சுட்டி = மயிலின் கொண்டை; உறைப்பு = காரம்.

பாடல் எண் : 765 :- பூர்வீகம் = மிகப்பழையகாலத்தில்; மகாதேவர் = சிவபெருமான். யோசனை = சிலர் நூறு காதம் (காதம் = 10 மைல்) என்பர்.

பாடல் எண் : 767 :- வித்திரணம் = விஸ்தீர்ணம் = பரப்பளவு.

பாடல் எண் : 768 :- பத்தம் = பதம் (விரித்தல்).

பாடல் எண் : 769 :- எய்தா = கிட்டாது.

பாடல் எண் : 770 :- முகிந்த பின்பு = முடிந்த பின்பு.

பாடல் எண் : 771 :- கேசத்தின் தைலம் = மயிர்க்குழித் தயிலம்.

பாடல் எண் : 772 :- சாங்கம் = முழுவதும்.

பாடல் எண் : 775 :- பதங்கள் = நிலைகள்; (இவை நான்காம் — சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்ஜியம் என்பன).

பாடல் எண் : 776 :- ஏமன் = (நீட்டல்) எமன்.

பாடல் எண் : 778 :- மதியுப்பு = இந்துப்பு; பொரிசீனம் (சீனத்தின் பொரி என்றும் சில பிரதிகளில் காணும்) = பொரித்த படிகாரம்.

பாடல் எண் : 782 :- துலாம் = நூறு பலம் (சிலர் 144 பலம் என்பர்)

பாடல் எண் : 786 :- கானி = காணி என்பது எதுகை நோக்கி கானி என்றுளப்பட்டது.

பாடல் எண் : 787 :- வாளாதே = மௌனமாய்; உப்பரிகை = மாடி வீடு.

பாடல் எண் : 788 :- ருது = வீட்டுவிலக்கு (பகத்தொழுக்கு) சோணிதம் = (வடசொல்) இரத்தம்.

பாடல் எண் : 789 :- சிரஞ்சீவி = எப்போதும் இருப்பவர்கள் (சாவில்லாதவர்).

பாடல் எண் : 791 :- சத்திரிய = (க்ஷத்திரிய) = அரசர் வகுப்பு; சேப்பு = சிவப்பு.

பாடல் எண் ; 793 :- காரைக்கொட்டி = நிலத்தில் வளரும் கொட்டியினச்செடி; இதற்குக் கிழங்குண்டு.

பாடல் எண் ; 799 :- அழுக்கவே மனமலைந்தால் = அழுக்காறு கொண்டு மனம் தடுமாறினால்; அசைந்துபோகும் = தவறிப் போகும்; இருமை = இகம்; பரம் இரண்டுக்குமாகும்; மனமுறைத்தால் = மனத்தைக் கட்டினால்.

வாருக மேவுவதெப் படிதா னென்றால்
மருவலோ டுறக்கஞ் சஞ்சா ரமற்றுத்
தாருக மேல்மூலந் தனிலி ருந்து
சதாநித்தம் பூரணத்தை யடுத்து நோக்கக்
கூருக இரவிகண்ட பனிபோற் றானுங்
கொடிதான கன்மமெல்லா நீங்கிப் போகும்
பூருக் மனத்தையப்பூ ரணத்தி லுன்னு
புழுவதனைக் குளவிவைத்தாற் போலு மாமே. 801

## 28-வது சோரப்பாடாண வைப்பு

ஆமேதான் சோரபா டாணந் தன்னை
அடைவாக வைக்கவே அறியக் கேளு
தாமேதான் சவ்வீரம் பலமு மெட்டுச்
சாரமது நாலுபலந் தன்னைக் கேளு
வேமேதான் மிளகுடனே யபினி பூரம்
மேனிச்சாற் றினிலரைத்து நாலுக் கொன்று
காமேதா னண்டம்போற் சாரஞ் சீவிக்
கவசமாய் மேற்பூசி யுலரப் போடே. 802

## மேற்படி பாடாண வைப்புக்குச் சாரக்கட்டு

உலர்ந்தபின்னர் சாரத்திற் பாதி தானும்
உத்தமமா மரக்கெடுத் திளக்கிக் கொண்டு
அலர்ந்தபின்ன ரனலிலே காய்ச்சிக் காய்ச்சி
அதின்பேரிற் கவசமாய்ப் போட்ட பின்பு
கலந்தபின்ன ரிளங்கன்றின் மலமெ டுத்துக்
கவசமாய் அதின்மேலே கட்டிக் காய்ச்சிப்
புலர்ந்தபின்னர் பூநீற்றுக் குள்ளே வைத்துப்
பேராக நாற்சாம மெரித்தி டாயே. 803

எரித்திட்டுத் தீபம்போ லாறப் போட்டு
எடுத்துமே கவசத்தை வாங்கிப் போடு
விரித்திட்டு முன்னமுரி தன்னிற் றேய்ப்பாய்
மிடுக்கான வெடியுப்பு நீரிற் றேய்ப்பாய்
சரித்திட்டு சாரநீர் தன்னிற் றேய்ப்பாய்
தாக்கான கடுந்திராவ கத்திற் றேய்ப்பாய்
முரித்திட்டு ஒவ்வொன்றில் மூன்று நாள்தான்
முயற்சியாய் நாளுக்கே முதரந் தானே. 804

ஏழுதரந் தோய்த்துமே ரவியிற் போட்டு
ஏற்றமாங் கல்வத்திற் கறியுப் புத்தானே
சூழுமே பொடிபண்ணி வேறே வைத்துச்
சூட்சந்தான் சாரத்துக் கொன்றுக் காறு

வேழுமே வெடியுப்பொன் றுக்கு நாலு
மிக்காகப் பொடிபண்ணி வேறே வைப்பாய்
தாழுமே வெங்கார மொன்றுக் கிரண்டு
தாக்கியரைத் தேபொடியாய் வைத்துக் கொள்ளே. 805

பொடியான மருந்தையெலாம் இரண்டாய்ப் பண்ணிப்
போட்டிடுவாய் சட்டியிலே கறியுப் பைத்தான்
அடியான பொடியைத்தான் வரிசை யாக
அழுத்திவைத் ததின்மேலே வெடியுப் பைத்தான்
படியான பாதியைத்தா னதின்மேல் வைத்துப்
பாதிவெங் காரத்தை யதின்மேல் வைப்பாய்
நொடியான சாரத்தை யதின்மேல் வைத்து
நுணுக்கியதோர் வெங்காரப் பொடியால் மூடே. 806

மூடியே யதின்மேலே பொட்டுலுப்புப் பொடியை
மூர்க்கமாம் அதின்மேலே கல்லுப்புப் போட்டு
ஆடியே யமுத்திட்டே அடுப்பின்மேல் வைத்து
அசகாமற் தீபம்போற் தீயைப் போடு
பூடியே பொங்கிவருங் கடலோர மண்ணைப்
பிசைந்துமே யடைபோல மூடிப் போடு
நாடியே நாற்சாம மெரித்தா யானல்
நற்றந்தம் போலவே கட்டிப் போமே. 807

## வீரக்கட்டு

போமென்ற சவ்வீரந் தன்னைக் கேளு
பெரிதான தகடுதட்டிக் காரீ யத்தைத்
தாமென்ற சவ்வீரந் தனக்குப் பாதி
தகடுதன்னைக் கட்டியே மருவிப் போடு
வேமென்ற கெந்தியுப்பை வெடியுப்பு நீரால்
விதமாக வரைத்துமே கவசங் கட்டு
வாமென்ற மணல்மறைவிற் புடந்தான் மூன்று
மார்க்கமாய்ப் போட்டுமே யெடுத்துக் கொள்ளே. 808

எடுத்துமே கவசமெல்லாந் தள்ளிப் போட்டு
இதமாக முன்னமுரி தன்னிற் றோய்ப்பாய்
விடுத்துமே வெடியுப்பு நீரிற் றோய்ப்பாய்
மிடுக்கான சாரநீர் தன்னிற் றோய்ப்பாய்
கடுத்துமே கடுங்காரச் செயநீரிற் றோய்த்துக்
காணவே முன்போலச் சாரந் தன்னை
உடுத்துமே உப்பில்வைத் தெரித்துப் போட
உத்தமமா நற்கட்டு வீரந் தானே. 809

வீரம்போல் வெள்ளையைத்தான் கட்டிக் கொள்ளும்
மிடுக்காக முன்கட்டுங் கல்லுப்பு நான்கு
தீரம்போல் முன்கட்டுஞ் சீன நான்கு
செயமான சாரமது பலமு நான்கு
தாரம்போல் சவ்வீரம் பலமு மெட்டுத்
தளுக்கான வெள்ளைப்பா டாண நான்கு
காரம்போற் கல்வத்திற் பொடியாய்ப் பண்ணிக்
காசியென்ற மேருக்கே யெடுத்தி டாயே. 810

காசியென்ற மேருவிட்டுப் பதினைந்து சாமங்
கணக்காக எரியிட்டே யாறப் போடு
தாசியென்ற தண்ணீரிற் றேய்க்க வேண்டாஞ்
சாங்கமாய் மண்ணகற்றி யுடைத்துப் பார்த்தால்
வாசியென்ற வயிரம்போல் வெளுப்புத் தானாய்
மகாவழுத்த முண்டாகிக் கனமாய்க் காணும்
பாசியென்ற பச்சைவண்ணம் வெளுப்பு மாகும்
பாங்கான கருந்தேசி வெண்தே சியாமே. 811

தேசியாஞ் சோரமென்ற பாடா ணத்தைச்
செம்பான துட்டுக்கு நாலொன் றுபூசி
வேசியாம் வெள்ளெருக்கம் பாலாற் பூசி
மிடுக்காக அண்டோட்டுக் குள்வைத் தமூடி
தூசியாஞ் சுறுக்கான புடமாய்ப் போடச்
சுப்பிரமாய்க் குருவாகுஞ் செம்பு தானும்
மாசியாந் தாளகத்தின் மஞ்சள் போகும்
மஞ்சளாங் கெந்தியது வெள்ளை யாமே. 812

## அறிவுரை கூறல்

வெள்ளையாந் துரிசியது குருவு மாகும்
மிக்கான கறுப்பெல்லாம் வெள்ளை யாகும்
வெள்ளையாஞ் சிவப்பெல்லாம் வெள்ளை யாகும்
மகத்தான வெள்ளிதனிற் பொன்மை யாகும்
கள்ளையாங் காயசித்தி சுறுக்கி லாகுங்
கண்கெட்டுப் போனதெல்லாங் கடுகிக் கூடுந்
திள்ளையாந் திருட்டுவித்தை திலதம் பண்ணில்
சோரவித்தை சீக்கிரத்தில் சித்தி யாமே. 813

சித்தியாய் மனமொன்று யடுத்து நோக்கச்
செழுமையாம் போதமுன்னைச் சேர்த்துச் கொள்ளும்
நத்தியதோர் நல்வினைதீ வினைக ளெல்லாம்
நாசமாய் வெந்துநீறுய்ப் போகும் பாரே
வெத்தியாய் வெறும்பேச்சுச் சொன்னாற் போமோ
வேதாந்தந் தனையளந்து நிலைத்துக் காணு

கத்தியாய்க் காமப்பா லாசை கொண்டால்
கரையேற்ற மில்லாமற் கலங்கு வாயே. 814

கலங்காமற் குண்டலியைக் காலா லாட்டிக்
கனலோடே யாறுவரை கடந்து ஏறி
அலங்காமல் சபைதனை யறிந்து கூடி
அசைவற்று மதியினுடை யமிர்த முண்டு
இலங்காமல் சபையினி லெட்டைத் தள்ளி
ஏற்றமாங் கடைநாலை யெட்டிப் பாரு
திலங்காமல் மனங்கூட எல்லாங் கூடுந்
தெரியாட்டால் பொறியோடே சேர்ந்து போமே. 815

சேர்ந்துபோம் பொறிவந்து சித்திச் சாலும்
சித்தித்த லட்சியமும் போகும் பொய்யாய்
சார்ந்துபோஞ் சடமலைந் திரண்டுங் கெட்டுச்
சாவுபோல் மயக்கமுண்டாய்த் தளர்ந்தே ஏங்கி
பூர்ந்துபோய் மனம்புண்ணுய்ப் புலம்ப லுற்றுப்
பெரிசான துக்கமுடன் பிர்ம மாகி
ஊர்ந்துபோ யுற்றுணர்ந்து பார்க்கப் பார்க்க
உத்தமமாம் வாதியா யோகி யாமே. 816

யோகியென்றால் சிவயோகி ராச யோகி
உத்தமனும் ரசயோகி சித்து யோகி
பாகியென்ற ஆறுதலங் கண்ட யோகி
பண்பான ஆசையற்ற ஞான யோகி
வேகியென்ற பூமிசுற்றுங் குளிகை யோகி
விதமறிந்து பூரணத்தை யடுத்த யோகி
தாகியென்றாற் குளிகையிட்டு ரோமபுரிக் கடலில்
தம்பித்து ரசமெடுத்த யோகி தானே. 817

தானென்ற குளிகைதனைக் கட்டறிவார் வாதி
சமரசமாய்ச் சாரணையைப் பண்ண மாட்டார்
பானென்ற குளிகைதனைக் கட்டி நல்ல
பருவமாம் பெண்ணோடே லீலை செய்வார்
கூனென்ற குளிகையொடு பரசங்கள் கூட்டிக்
குறியாக வாயில்வைத்த ஞானம் பாரார்
கானென்ற குளிகைதன்னிற் களைய றிந்து
ககனவழி யோடமியார் கடுகத் தானே. 818

29-வது காகப்பாடாண வைப்பு

கடுகவே காகபா டாண வைப்பைக்
கண்டபடி சொல்லுகிறேன் கருதிக் கேளு
தடுகவே சாதிலிங்கம் பலந்தான் பத்துச்
சாங்கமாய்ப் பத்தாகப் பிரித்துக் கொண்டு

படுகவே கெந்தகந்தான் பலமும் பத்துப்
பாங்கான சூடனது பலமும் பத்து
விடுகவே பத்தாகப் பிரித்துக் கொண்டு
மேன்மையாஞ் சூடனொரு பலமுந் தூக்கே. 819

தூக்கியே கெந்தகமும் பலமு மொன்று
தூளாக்கி இரண்டையுந்தான் வைத்துக் கொண்டு
நீக்கியே யண்டத்தை யூற்றிப் போட்டு
நேராக அதற்குள்ளே சூடன் கெந்தி
பாக்கியே பொடியைத்தான் பாதி போட்டுப்
படுக்கவைத் ததின்மேலே லிங்கந் தன்னை
நீக்கியே மறுபாதி பொடியைப் போட்டு
நெருங்கவே யண்டோடு மேலே மூடே. 820

மூடியே சீலைசெய்து குக்குடமாம் புடந்தான்
மீறுமற் போட்டுமே யெடுத்துக் கொள்ளு
பாடியே பலமொன்றண் டத்திட் டுப்பின்
பாங்கான பொடியிரண்டு பலமும் போட்டுப்
சாடியே புடம்வைத்தெ டுத்துக் கொண்டு
தனிலிங்க மெல்லாந்தான் கல்வத் திட்டு
நீடியே கண்டெடைக்குக் கட்டுக் கெந்தி
நிச்சயமாங் கௌரியந்த வெடையைக் கூட்டே. 821

கூட்டியே பொடிபண்ணிச் செம்பு மேரிற்
குறையவே வாரியிட்டு வாலுகையில் வைத்து
ஓட்டியே யெரியிட்டு ஒருநாள் சென்றால்
உசரவே மேற்குப்பி மூடிப் போட்டுத்
தாட்டியே தண்ணீரை விட்டு விட்டுச்
சாமமெல்லா மானபின்பு தளர விட்டு
மாட்டியே மண்தன்னை வாங்கிப் போட்டு
மறுகிநின்ற கீழ்க்குப்பி யுடைத்துப் பாரே. 822

உடைத்துமே பார்த்தக்கால் பனிவயிரம் போல
உறுதியாய்க் கருப்பாகி யிருக்கும் பாரு
நடைத்துமே நவலோக நூற்றி லிட்டால்
நரைமாறிக் கருங்காலி வயிர மாகும்
படைத்துமே வெள்ளியினில் பத்துத் தொந்தம்
பாய்ச்சினாற் கிருஷ்ணவர்ண தார மாகும்
இடைத்துமே இத்தொந்தஞ் செம்பி லீய
ஏமவர்ணந் தானாகு மேற்றந் தானே. 823

ஏற்றமாங் காகபா டணந் தானும்
எந்தெந்தச் சரக்கிலிடக் கறுத்துப் போகும்
மாற்றமாம் வெளுப்புமயிர் கருப்பு மாகும்
வண்டுபோல் மயிரெல்லா முருட்சி யாகும்

சீற்றமாம் புலிக்கண்போல் தானு மாகும்
சிதைந்துநின்ற சடமெல்லாந் திரட்சி யாகும்
கூற்றமாம் எமன்வந்து வழியிற் சேரான்
கோடியென்ற கற்பாந்த காலந் தானே. 824

தானென்ற சூதத்தில் சேர்ந்த போதே
தப்பளைபோல் வீறிட்டுச் சார்ந்து போகும்
ஆனென்ற வாளையைத்தான் குத்திக் கொன்றால்
அவனல்லோ முழுவாதி யவனே சித்தன்
தூனென்ற சூதத்தை யறியான் வாதி
சூட்சத்தில் வாதமென்ற சொல்லும் போச்சு
வானென்ற வாதமெல்லாஞ் சூதத் தாலே
வகையறிவார் சிவயோகர் சித்தர் தாமே. 825

## ஞானங்கூறல்

சித்தருக்குட் சிவயோகி யறிவு மெத்த
திருட்டான வாதிகட்குச் சூதம் எய்யா
பத்தருக்குள் வாதவித்தை யனேக முண்டு
பாழான மனத்தாலே வாதம் போச்சு
மத்தருக்கு வாய்கிழித்து மண்ணைப் போட்டு
வைத்திட்டுச் சரக்கதனை வாதங் காட்டு
மூத்தருக்குள் ஞானத்தில் முயற்சி யூட்டு
மோசமில்லை வாதத்தில் மோட்சங் காணே. 826

வாதத்தில் மோட்சமில்லை யென்று ளுகில்
மகத்தான தறுதறும்பன் பாசாண் டியாகும்
நீதத்திற் கண்ணாரக் கண்ட தானல்
நிலைத்ததுகாண் தொழிலாளி யாரோ வென்பான்
போதத்திற் குறிகளொன்றுங் காண மாட்டான்
பொய்யென்பான் பூட்டுகிற லட்சியத்தைச்
சூதத்திற் குளிகைதனைக் கட்ட மாட்டான்
சுடுகுவான் வெகுபோக்காய்த் துரோகி தானே. 827

## 30-வது லவண பாடாண வைப்பு

வெகுபோக்காம் லவணபா டாண வைப்பு
மேதினியிற் சித்தருக்குச் சொன்ன மார்க்கம்
தகுபோக்காங் கல்லுப்புப் பலமும் பத்துச்
சரியாகுங் கப்பியுப்புப் பலமும் பத்துத்
திருபோக்காங் காடியெலு மிச்சஞ் சாறு
சேர்சம ளுயுப்புக் கொன்று நாலு
விருபோக்காய் கரைத்துமே சிலைவடி கட்டி
மிடுக்கான சட்டிதனி லெரித்தி டாயே. 828

எரித்திட்டுப் பாறையாம் உடைபாக் குப்போல்
தேற்றமா முன்னமுரி தன்னிற் றேய்ப்பாய்
விரித்திட்டு வெடியுப்பு நீரிற் றேய்ப்பாய்
மேன்மையாஞ் சாரநீர் தன்னிற் றேய்ப்பாய்
கரித்திட்டுக் கடுந்திராவ கத்திற் றேய்ப்பாய்
கடந்தபின்பு கடற்றண்ணீர் மண்ணுக் குள்ளே
அரித்திட்டு வரிசையாய்ச் சட்டி நாப்பண்
அமர்த்திட்டு மேலுமந்தப் படியே போடே. 829

பேட்டுமே நாற்சாம முத்தீ யாட்டு
பின்புதா னுறவிட்டெ டுத்துக் கொண்டு
வேட்டுமே வெள்ளையென்ற பாடா ணத்தை
மிடுக்காகப் பாக்குப்போ லுடைத்துக் கொண்டு
தூட்டுமே சுண்ணும்பிற் சுத்தி பண்ணிச்
சுறுக்கிட்டு முன்னமுரித் தன்னிற் றுனும்
பூட்டுமே பொட்டுலுப்பு நீர்ச்சு றுக்கு
பிலமான சாரநீர் சுறுக்குத் தானே. 830

சுறுக்கிட்டுக் கடுந்திராவ கத்திற் றுனுந்
தூசகற்றிக் கல்வமதிற் பொடியாய்ப் பண்ணி
முறுக்கிட்டு முன்கட்டும் உப்பிரண் டுபத்து
மூனையான கட்டுகின்ற பாடாணம் பத்து
விறுக்கிட்டு மேன்மையாய்ப் பொடியாய்ப் பண்ணி
மேருக்கு ளரைவாசி தானு மிட்டு
வறுக்கிட்டு வா லுகையின் மேலே வைத்து
வரிசையாய்த் தீயிட்டுத் திறந்து போடே. 831

திறந்துமே பதினைந்து சாமந் தீதான்
செப்பமா யெரியிட்டே யாறப் போடு
பறந்துமே பழங்குப்பி யதனுக் குள்ளே
பாய்ச்சாதே சரக்கெல்லாம் படுதீப் பற்றும்
அறந்துமே யாறுமா தந்தான் சென்றால்
அலக்கழிந்து மேருவெல்லாம் வீறிப் போகும்
மறந்துமே குப்பிபண்ணி வந்த போதே
வயிரமா மண்ணரைத்துக் கட்டிப் போடே. 832

கட்டியே யெரித்திட்டுக் குளிர்ந்த போது
கடிசான சீலையிலே தண்ணீர் தோய்த்துக்
கொட்டியே கட்டினமண் தன்னைத் தானுங்
குச்சியினுற் றுனகற்றி யுடைத்துப் பாரு
மட்டியே இச்சரக்குத் தண்ணீர் பட்டால்
வயிரம்போ லிருக்காது திச்சிப் போகும்
வெட்டியே சரக்கான வைப்புக் கெல்லாம்
விளக்கினேன் விபரமாய் விரித்தே யாடே. 833

விரித்துமே ஆடவென்றால் அனேகம் போக்கு
விளம்புகிறேன் செம்புநின் றுருகும் போது
பரித்துமே யெடைக்கெடைக்குச் செம்பி லீயப்
பழுத்துசெம்பு கறுப்பாகும் பாங்காம் லோகம்
உரித்துமே யொருநூற்றுக் கொன்றிட் டக்கால்
ஒன்பதென்ற நவலோக மேம மாகும்
சிரித்துமே பரத்தைமார் தனைய டுத்தால்
சிரங்கரித்து வறுமையிலே சுழலு வாரே. 834

வறுமையாய்ப் போகாமற் பழுக்கும் பாரு
மண்ணோடு கல்முதலா ஏம மாகும்
திறமையாய்ச் சணவேதி சத்த வேதி
நேராகத் தொட்டவெல்லாங் கோடா கோடி
இறுமையாய் எம்மட்டோ யானுங் காணேன்
இழுக்குமே வாதமென்ற ஆட்ட தெல்லா
முறுமையாய் முறுக்குவிக்குஞ் சகல ரசத்தை
மூதண்ட மாட்டுவிக்கும் லவணத் தாட்டே. 835

லவணத்தாற் பொன்ஞமோ வென்று சொல்லி
நசித்துமே போனவர்கள் கோடி யுண்டு
தவணத்தாற் சாத்திரந்தான் மெய்யோ வென்று
சஞ்சலமாம் புத்தியிலே தாழ்ந்து போனார்
கவனத்தாற் காயசித்தி பொய்யென் றெண்ணிக்
கற்பத்தைக் கசப்பென்று தள்ளிப் போட்டார்
அவனத்தால் வாதத்தை யசடா யெண்ணி
ஆராய்ந்து பாராமல் அலுத்தார் காணே. 836

அலுக்காமற் சூதத்தைக் கட்டி னக்கால்
அடியேது முடியேது நடுவு மேது
பலுக்காமற் பாசமுற்று லென்ன ஞானம்
பாரமாம் யோகமொன்றும் பலித்தி டாது
குலுக்காமற் சுக்கிலத்தாற் பிள்ளை யாச்சு
சோதியாஞ் சூதத்தால் வாத மாச்சு
குலுக்காமற் குருடன்கை யிரத்தி னம்போற்
கூறுக்கும் நூலில்லாக் கூர்மை தானே. 837

கூர்மையாய்ப் பீசந்தான் தங்கம் பூட்டு
குழைத்தொரு பொட்டிட்டால் மேரு பொன்னும்
வார்மையாய்ச் சூதத்தில் வாத ஆட்டு
வயதுமட்டு மாடுகிலு மார்க்க மெத்த
தீர்மையாய் முறையோடே தொட்டதெல்லாம் வேதை
திருக்கறுத்து முந்திமுந்தி யொன்றே பூட்டு
பூர்மையா யொருபூட்டு முந்திப் பூட்டிற்
பின்புதான் வெகுவாகப் பூட்ட லாமே. 838

பூட்டியதோர் சனித்தவுடல் இறக்கும் போது
பொருந்திமன மெங்குநின்று லங்கே புக்கும்
தீட்டியதோர் செந்துவிலே மனந்தா னென்றில்
செந்துவென்ற சடமாக உற்ப விக்கும்
நாட்டியதோர் பூரணத்தே மனம்லய யிக்கில்
நலமான பூரணத்தே லயித்துப் போகும்
மூட்டியதோர் மோகத்தி லிச்சை யாலல்
மூர்க்கனாய்ப் பறவையென்ற சடமு மாமே. 839

## 31-வது நாகபாடாண வைப்பு

சடமான நாகபா டாண வைப் பைச்
சாற்றவே நாகமது பலமும் பத்துத்
திடமான இலுப்பைநெய்யிற் சாரத்தூ ளிட்டுச்
சிந்தாமல் சாய்த்திடுவாய் இருபத் தொன்று
விடமான பன்றிநெய்யி லிருபத் தொன்று
மிடுக்கான தவளைநெய்யைச் சுறுக்குப் போடு
கடமான முன்கட்டுக் கல் லுப் புத்தான்
கலந்ததோர் வெடியுப்புக் கட்டுத் தானே. 840

கட்டான வெடியுப்புக் கல்லுப்புத் தன்னைக்
கனத்ததோர் நாகத்தி னெடையே தூக்கி
வெட்டான வில்லையாம் நாகம் வார்த்து
வெடியுப்பு நீராலே யுப்ப ரைத்துக்
திட்டான வில்லைக்கு மேலே கட்டிச்
செப்பமா யோட்டிலிட்டுப் புடத்தைப் போடு
கெட்டான கெசபுட மாய்ப் பத்துப் போடு
கீற்றுவிட்டால் முன்போல அரைத்துக் கட்டே. 841

கட்டியே புடம்பத்துத் தீர்ந்த தானல்
கனம்பார்த்து நிறுத்துமே யப்பால் வைத்துத்
துட்டியே சூதமொரு பலந்தான் பத்துச்
சுத்திசெய்து கல்லுப்புக் கற்றுழை தன்னில்
நாட்டியே நாகத்திற் சமனாய்ச் சேர்த்து
நலமான வோட்டிலிட்டுச் சுறுக்குப் போடு
மூட்டியே முன்னமுரி சுறுக்குப் போடு
முனையான வுப்புநீர் சுறுக்குப்போடே. 842

சுருக்கிட்டுச் சாரநீர் பின்பு தானுந்
திராவகத்தில் ஒருசாமஞ் சுருக்குப் போடு
முறுக்கிட்டு முன் நாகக் கவசந் தன்னை
முனிந்தொன்றாய்க் கல்வத்திற் சேர்த்துக் கொண்டு
நறுக்கிட்டு நாகவெடை கெளரி சேர்த்து
நாற்சாம மரைத்துமே பொடியாய்ப் பண்ணிக்

கறுக்கிட்டுக் காசியென்ற மேருக் கிட்டுக்
கனமான வாலுகையில் வைத்தி டாயே. 843

கனமான வாலுகையில் வைரத் தெரித்துக்
கணக்காகப் பதினைந்து சாம மானல்
தினமாறு வாறவிட் டெடுத்துக் கொண்டு
சிந்தாமல் மண்ணகற்றி யுடைத்துப் பார்த்தால்
புனமான புளியம்பூ நிறமாய்க் தானும்
பீலத்துமே நாகபா டாண மாகும்
வனமான நவலோக மாயிரத்துக் கோடும்
மாற்றதுதா னிருபஃதோ டஞ்சு மாமே. 844

இருபத்து அஞ்சான மருந்து தன்னை
ஏற்றமாம் வீசமெடை மண்டலந்தா னுண்ணு
தருபத்துக் காயசித்தாஞ் சந்திரன்போல் முகமாஞ்
சதகோடி வருடமெல்லாம் நாளாய்ப் போகும்
குருபத்துச் சரக்கெல்லாங் கட்டிப் போகுங்
குளிகையது கட்டினல் மிடுக்கு மாகும்
துருபத்தி லேற்றுவிக்கு நிமைக்கு முன்னே
தொடுவேக முண்டாகுங் கொடிது தானே. 845

ஞானயோகங் கூறல்

கொடிதான சனனமில்லை மரண மில்லை
குற்றமற்ற சித்தருக்குஞ் சிவயோ கிக்கும்
நெடிதான சனனமில்லை மரண மில்லை
நேர்ப்பறிந்த வாதிகட்குக் குளிகை தன்னல்
கடிதான சனனமில்லை மரண மில்லை
கடிந்தாறு தலங்கண்ட வாசி யோர்க்குத்
திடிதான சனனமில்லை மரண மில்லை
சித்தியாய்க் காயசித்தி பண்ணும் பேர்க்கே. 846

சித்தியாய்ப் பூரணந்தா னெவ்வா றென்றால்
சிவப்புமல்ல கறுப்புமல்ல வெள்ளை யல்ல
பத்தியாய்ப் பச்சையல்ல மஞ்ச ளல்ல
பாங்கான நீளமல்ல அகல மல்ல
வெத்தியாய் வெட்டவெளி விரகோன் காண்பான்
விவரந்தா னிதுக்கு மனதி தானைக் கட்ட
முத்தியாம் வழிகாண மனந்தான் செம்மை
முதிர்ந்தறிவால் சச்சிதா னந்தம் பாரே. 847

பார்க்கிறதெங் கேயென்றால் முனைமூக்கிற் பாரு
பாழ்மேலே துவாதசத்தின் சார்ந்துப் பாரு
ஏற்கிறது பிடறியிலு மேறிப் பாரு
இடைநடுவாம் நெஞ்சினுள்ளே யிறங்கிப் பாரு

பூக்கிறது மூலத்திற் புகுந்து பாரு
பெருமையாம் அட்டாங்கந் தன்னைச் சேரு
ஆர்க்கிலதஞ் சுதலமணு கிச்சே ருமைந்தா
அசையாமல் வட்சியத்தை யறிந்துச் சேரே. 848

அணுகியஞ்சு தலங்கண்டோன் னதீத யோகி
அஞ்சுதலர் தப்பாதி துவேதான் போக்கு
நணுகியஞ்சு தலங்கண்டட் சரத்தி லொட்டி
நலமறிந்தா லவன்தவசி சகத்திற் சாரான்
பணுகியந்த அட்சரத்தின் பரிசு கண்டு
பராபரமாஞ் சச்சிதானந் தமாவார் பாரே
தணுகியந்த லட்சியத்தில் சார்ந்து சார்ந்து
தாயாகுங் குருவான தாயைப் போற்றே 849

போற்றியே வெகுகடின மேற மாட்டார்
பொறியாலே மனங்கட்டக் கூடா தாகும்
தேற்றியே மனமொன்றிச் செய்ய மாட்டார்
செயலான சரக்கைவைத் தாட மாட்டார்
பூற்றியே பானத்தை யருந்த மாட்டார்
பொங்கியுள்ளே மகிழ்ச்சிதனை யடக்க மாட்டார்
ஏற்றியே யாதார மேற மாட்டார்
எளிதிலே வாதந்தா னுமோ பாரே. 850

## குறிப்புரை

### 801 முதல் 850 வரை

பாடல் எண் : 803 :- காய்ச்சி = உலர்த்தி.

பாடல் எண் : 811 :- தேசி = கழுதை.

பாடல் எண் : 814 :- வெத்தியாய் = வெட்டியாய் என்ற சொல் எதுகை நோக்கி இவ்வண்ணம் கையாளப் பட்டது (அரிய ஆட்சி) = வீணாக.

பாடல் எண் : 815 :- காலால் ஆட்டி = பிராணயாம சக்தியால் கிளப்பி (கால் = காற்று). கனல் = வெம்மை; எட்டைத்தள்ளி = எண்வகை ராகங்களை நீக்கி; கடை நாலை = மணிபூரகம் முதலாயுள்ள நான்கு ஆதாரங்களைச் சுட்டும்.

பாடல் எண் : 818 :- களையறிந்து = களை வெட்டி நீக்கி, (வேண்டா தவை).

பாடல் எண் : 825 :- தப்பனை = (பரவை வழக்கு) தவளை.

பாடல் எண் : 826 :- எய்யா = பொருந்தாது; வைத்திட்டு = வைப்புச் சரக்குகளைச் செய்து.

பாடல் எண் : 827 :- பாசாண்டி = [(பாஷாண்டி) கன்மவாதிகள் சந்நியாசிகளை இப்பேரால் தூற்றுவர்)] நல்ல தெய்வீகப் பணிகளைச் செய்யாதவன் என்பது பொருள்.

பாடல் எண் : 829 :- நாப்பண் = நடுவில்.

பாடல் எண் : 832 :- வீறிப்போகும் = வீறல் விட்டு உடையும்.

பாடல் எண் : 834 :- சிரங்கரித்து = சிரங்குக் குட்டமென்னு நோய் சிறுகச் சிறுக உடலைத் தின்னும்படியாக.

பாடல் எண் : 837 :- பாரமாம் = மாண்பு மிக்க மேன்மையான, கூர்மை = ஆழ்ந்த விளக்கம்.

பாடல் எண் : 841 :- நாகம் வார்த்து = நாகத்தை (உருக்கி) வார்த்து.

---

## 32-இந்திர பாடாண வைப்பு
## இந்திர கோபப்பூச்சி உற்பவம்

எளிசிலே இந்திர பாடாண வைப்பும்
ஏற்றமாஞ் சரக்கிதுதான் வாதத் துக்குத்
தெளிசிலே தேவேந்திர ராசன் றானுந்
தேவசபை நிறைந்திருக்கும் வேளை தன்னில்
நளிசிலே ரம்பையுடை நாட்டியத்தை
நாலுதிக்குஞ் சபைநிறைந்து பார்க்கும் போது
களிசிலே காசிபனென் றோர்காந் தருவன்
கண்ணில்வந் தெதிர்ப்படவே மோகித் தாளே. 851

மோகித்து கந்தருவன் இருவர் கூட
விகாரமாய்க் காமபாணத் தாலே நொந்து
தாகித்துச் சடவுணர்ச்சி தெரியா தபடி
சற்றுமசைவற்றுமே தப்பித் துத்தான்
தோகித்து நாட்டியமா மண்ட பத்துத்
தூணருகே மறைவினிற்போய்த் தொந்தித் தார்கள்
தாகித்து ரம்பைசூ தகமு மானாள்
நயந்தருது வெலாம்வத்தி ரத்தி லாச்சே. 852

ஆச்சேவத் திரங்களெல்லாம் விகுர்தி யாகி
அப்போது தேவசபை தன்னில் வந்தாள்
கோச்சேதே வேந்திரன்தான் கோபித்துக் கொண்டு
கூச்சமாய்த்தள் ளிவிட்டானப் போது ரம்பை
தாச்சேகங் கையில்நானம் பண்ணிப் பின்பு
தன்னுடைய வத்திரத்தி லுதிர மெல்லாம்
போச்சேதான் கசக்கிமே கக்கூட் டத்தில்
பிழிந்தாளே யுதிரமெல்லாம் பெருகத் தானே. 853

பெருக்கவே மேகத்தின் வாயில் வீழ்ந்து
பிள்ளையாய்ச் செந்துக்கள் தான்ச னித்துத்
தருக்கவே மனழத்தாரை யுடனே கூடித்
தரித்துமே பூமியிலே விழுந்துண் டாச்சு
இருக்கவே யிந்திரன்கோ பித்த தாலே
இந்திரகோ பப்பூச்சி யென்றும் பேரு
முருக்கவே மூன்றுவிதம் சிவப்பு வெள்ளை
முழுக்கறுப்பு மூன்ருகச் செந்து வாச்சே. 854

செந்துவென்ற சிவப்பதுவும் ரசவே தைக்காஞ்
செயலான வெளுப்பதுவும் நாக வேதை
கந்துவென்ற கறுப்புமஞ் சனத்துக் காகுங்
காயசித்தி கடிசிலே கடுகு மெத்த
பந்துவென்ற சிவப்பான பூச்சி தன்னைப்
படியளந்து பருப்பீங்கான் தன்னிற் போட்டுச்
சிந்துவென்ற தீநீரை யரைப்படிதான் வார்த்துச்
சிந்தாமல் மூடிவைப்பாய் சாமந் தானே. 855

சாமத்திற் பூச்சியெல்லாம் வெளுப்பாய்ப் போகுந்
தரியாமல் தீநீரை யிறுத்துக் கொண்டு
பாமத்திற் பரணிதனி லடைத்துக் வைத்துப்
பலம்பத்துக் கல்லுப்புப் பூநீ றுபத்து
வேமத்தில் வெடியிப்புப் பலமும் பத்து
மூன்றையுந்தான் தண்ணீரிற் கரைத்துக் கொண்டு
சேமத்தில் தெளிவிறுத்துப் பாய்க்காச் சித்தான்
சிந்தாமல் பழச்சாற்றி லரைத்தி டாயே. 856

அரைத்துமே அகலிலிட்டஞ் சுபுடம் போடு
அதிகமாம் வெள்ளையாய்ச் சுண்ண மாகும்
துரைத்துமே யண்டோடு சுண்ணம் பண்ணிச்
சுத்தமாய் நாலுக்கொன் றுசேர்த் ததனைத்
தரைத்துமே சாரமஃ தொன்று சேரு
சாரவெடை காரத்தைத் தாத்திப் போடு
நிறைத்துமே நாற்சாம நேக வாட்டி
நேராகப் புடம்போட்டுப பனியில் வையே. 857

வைத்துடனே செயநீராம் வீரம் பூரம்
மாட்டியே செயநீரில் கலக்கிக் கொண்டு
பைத்துடனே பரணிதனி லடைத்துக் கொள்ளு
பழச்சா றுபடியளந்து பீங்கான் விட்டு
மொய்த்துடனே முலைப்பாலும் படிதான் விட்டு
முனையான கம்பிலிங்கம் பலந்தான் பத்து
இத்துடனே சாற்சாமஞ் சுருக்குப் போடு
இதமான நல்வேளைச் சாறு தானே. 858

சாறுதான் நாற்சாமஞ் சுருக்குப் போடு
    தனிப்பின்பு செயநீரைச் சுருக்குப் போடு
கூறுதான் தங்கத்தின் ரேக்குத் தானுங்
    கெட்டியாய் மேற்கவசம் பண்ணிப் போடு
தேறுதான் செம்பரப் பொடியைத் தானுஞ்
    சிறப்பாக வதன்மேலே கவசம் போடு
ஆறுதா னரப்பொடியை யுருக்கிக் கொண்டு
    அரைத்துமே மேற்கவசங் கட்டிப் போடே. 859

கவசந்தான் வெண்கருவா லரைத் தரைத்துக்
    காயவைத் தொவ்வொன்றாய்க் கட்டிப் போடு
துவசந்தான் வச்சிரமாஞ் சீலை செய்து
    சுத்தமாயு மியில்வைத்துப் புடத்தைப் போடு
அவசந்தான் அரப்பொடியை யுருக்கச் சேரு
    அஞ்சனக்கல் அரப்பொடிக்குப் பாதி கூட்டிப்
பவசந்தான் பழச்சாற்றில் அரைத்து மைபோல்
    பாங்காக உருக்கியே கவசங் கட்டே. 860

கவசந்தான் எடைசேரு லிங்கத் துக்குக்
    கணக்காக எட்டிலொன்று தங்கங் கூட்டு
திவசந்தான் தங்கத்தில் செப்பி ரட்டி
    செப்பிரட்டி யுருக்கரப் பொடியு மாகும்
அவசந்தான் கௌரியுமே பலமும் பத்து
    அழுந்தாமல் கிழிகட்டிக் கற்சுண் ணத்தில்
உவசந்தான் ஒருசாம மெரித்த பின்பு
    உறுகின்ற வேளைச்சா றுபடி நாலே. 861

படிநாலு சுருக்கிட்டே ஆன பின்பு
    பாங்கான செய்நீரைச் சுருக்குப் போடு
கடிநாலு காரியம் பலந்தா னஞ்சு
    கனமில்லாத் தகடுதட்டிக் கௌரி மேலே
நெடிநாலு லேபித்த தற்கு மேலே
    நேரான வளையலுப்பைக் கவசங் கட்டு
முடிநாலு உமியில்வைத்துப் புடத்தைப் போடு
    முனையாக வளையலுப்பைத் தள்ளிப் போடே. 862

தள்ளியே முன்கவசந் தன்னோ டொக்கச்
    சாங்கமாய்க் கல்வத்திற் பொடியாய்ப் பண்ணிப்
புள்ளியே பூச்சியுடை நீரி னாலே
    பேராக நாள்மூன்ற ரைத்த பின்பு
கள்ளியே பொடிபண்ணிக் காசி மேரு
    கனமாக மண்கட்டிக் காயப் போட்டே
அள்ளியே யதிலிட்டு வாலுகையில் வைத்து
    அசகாம வெரியிட்டா றப்போட் டிடாயே. 863

ஆறியே மண்தள்ளி யுடைத்துப் போடு
அழகாக மாதுளம்பூ நிறமாய்த் தானும்
தேறியே சிறுகதிர்போற் சிறப்பா கத்தான்
செழுமையாய்த் தானிருக்குந் திங்க ளொப்பாம்
பூறியே நவலோகம் ஆயிரத்துக் கோடும்
பொன்னுகப் பழுத்தா லுஞ் சிவந்து போகும்
மீறியே கத்தூரி உடம்பில் வீசும்
மிடுக்காகுங் காயசித்தி கொடுக்குங் காணே. 864

கொடுக்குமே இச்சரக்குத் தாம வேதை
குறுகாது சத்தமுதல் பரிச வேதை
படுக்குமே பத்துமுதல் நூறு மட்டும்
பரவுமே யிதனுலே துறையோ கோடி
நடுக்குமே நாழிகொண்டு குறுணி யாகும்
நாடிய கலமாகுந் தொண்ணூ றாகும்
நெடுக்கு நெற்பயிர்தான் வித்தா ளுற்போல
நேராக விதின்கூறு பாடி லேனே. 865

கூறுன இச்சரக்கால் சொல்லக் கேளு
இரியோடு மண்மரமும் பொன்னே யாகும்
ஆறுன வாய்க்காலில் கோடி கவர்போல்
அளப்பரிய மாட்டேனுன் கவரோ சங்கம்
சுறுன தென்னவினி சொல்லப் போறேன்
இளவயதில் யான்பார்த்தேன் கோடிக் காலம்
தாறுன இச்சரக்குப் போகும் போக்குத்
தாய்காணுள் தந்தையுந்தான் காணூர் காணே. 866

காணுத சரக்குவைப்பு முப்பத் திரண்டுங்
கைலையுறை சிவன்சொல்லத் தாய்தான் சொல்ல
தாணுன குருவான நந்தி சொல்ல
நற்பாட்டர் திருமூல நாதர் சொல்லத்
தோணுத சிறுபாட்டர் பதஞ்சலிமா முநிதான்
சிவயோக மாமுநியும் வியாக்கிரமர் சொல்ல
ஈணுத எனைஈன்ற ஐயர்கா லாங்கி
எடுத்துரைக்க இச்சரக்கை வைத்திட் டேனே. 867

வைத்திட்டேன் நூலெல்லாம் பார்த்துத் தேர்ந்து
வகையெல்லாம் பாட்டர்சொல்லக் கேட்டுக் கேட்டுப்
பொய்த்திட்டேன் போதத்தில் ஆத்தா ளைத்தான்
பிள்ளைக்குச் சொல்லென்று போற்றி செய்ய
மெய்த்திட்ட தாயாரும் முறுவல் செய்ய
விடுக்காமல் பதந்தன்னில் வீழ்க யானும்
கைத்திட்ட ஆத்தாளுங் கருணை கூர்ந்து
கடாட்சிக்க அடியேனுங் களித்திட் டேனே. 868

களித்திட்டு சரக்கைவைத்து ஆடித் தேர்ந்து
கைகண்ட வுண்மைதனைக் கருதப் பாமல்
ஒளித்திட்டு வைத்தக்கால் தோட மென்று
உலகத்தோர் நம்போலே யாகா தென்று
தெளித்திட்டு விரைபோல முளைக்க வென்று
செப்பினே னேழான கண்டாந் தன்னில்
பளித்திட்டுப் பார்த்தவர்கள் சொல்லா மற்றும்
பாடினேன் வெளியாகப் பாடி னேனே. 869

பாடாணப் பிறப்பு முப்பத்திரண்டு-
பிறப்புப் பாடாணத்தின் பெயர்

பாடினேன் பிறக்கின்ற முப்பான் ரெண்டு
பாங்கான தாதுவுடைப் பெயரைக் கேளு
காடினே கறடக பாடாணத் தோடு
கடிசான கோளகபா டாண மாகும்
தூடினேன் சூதபா டாணத் தோடு
சொல்லான அரிதாரங் கெந்தி யாகும்
வீடினேன் வீரமொடு வைகிராந் தந்தான்
விளக்கமாந் தாலம்பம் அமிர்த மாமே. 870

ஆமென்ற சிரபந்தஞ் தொட்டி யோடு
அழகான குதிரைப்பல் சங்கபா டாணம்
தோமென்ற கௌரியொடு துத்தபா டாணஞ்
சொல்லான பலண்டுறுகங் காந்தபா டாணம்
தாமென்ற லிங்கபா டாணத் தோடு
சரக்காண்டந் தாளகந்தான் சிலையு மாகும்
வேமென்ற ஆப்பல்பா டாணத் தோடு
விளக்கமாஞ் சாலாங்கல் கற்பரி யுமாமே. 871

பரியான கற்பாடா ணந்தன் னோடு
பாங்கான அஞ்சன பாடா ணமாகும்
கரியான கச்சாலஞ் சிதாங் கமுடன்
காணவே சிலாபதமாங் கார்முகிற்பா டணம்
அரியான அப்பிரகபா டாணத் தோடு
அடங்காத வெள்ளையென்ற பாடா ணந்தான்
முரியான முப்பத்தி ரண்டு தாதும்
முளைக்கின்ற மிலத்தேயம் விளம்பக் கேளே. 872

தாதுற்பவத் தானங்கள்

விளம்பவே கலியாணி கந்த மாதம்
விரிவான ஏமகூட மாம்பர கூடம்
உளம்பவே ருத்திரமென்ற கூடத் தோடு
உயர்கின்ற கணிகண்டம் பூத கூடந்

தளம்பவே இலக்குமியின் விலாசத் தோடு
தனித்ததோர்பத் திராலயங் சேது பந்தம்
வளப்பவே கொங்கணமும் வடக்கே யாகும்
வசிசையாங் காசிக்குத் தெற்கே கேளே. 873

கேளென்ற விந்தையா ரணியத் தோடு
கெட்டியாஞ் சிந்துவென்ற மேரு வாகும்
தாளென்ற தனசாலக் கிராமத் தோடு
தயங்கியதோர் கிரவுஞ்ச மென்ற மலையும்
வாளென்ற மல்லிகார்ச் சுனத்திற் கேளு
வாதிகள்தான் மெத்தவுண்டு சித்த ருண்டு
தானென்ற கொல்லிமலை பன்றி மலையும்
சதுர்முகபாம் பர்வதமு மடுக்கல் தானே. 874

அடுக்கவே பொதிகையிலே அகத்தியர் வாசம்
அப்பாலே தாடகியா மலைதா னென்று
நெடுக்கவே மகேந்திரா சலந்தா னென்று
நேராக விடைகளிலே குட்டிமலை கோடி
படுக்கவே மலைதோறும் பாடாண முண்டு
பரிசனமா மூலிகையோ கோடி யுண்டு
உடுக்கவே யுதசமுண்டு கல்ருதுவு முண்டு
உசத்தியாஞ் சூதமுமுண் டுண்மை தானே. 875

1-கரடக பாடணேற்பத்தி

உண்மையாய்ச் சறடக பாடாணந் தானும்
உத்தமாம் விந்தியாந் தேயந் தன்னில்
வெண்மையா மலைய்துவு மேற்பக் கத்தில்
மிருந்தகந் தரங்கவுந்தங் கல்லடியின் றன்கீழ்
தண்மையாய்த் தாமரைப்பூப் போலத் தானும்
தனித்திருக்குங் சறடகபா டாணந் தானும்
பெண்மையாய்த் தானிருக்கு மிதன்றன் வேதை
பிரித்துமேயொ ருவர்சொல்லக் கூடா தென்னே. 876

வித்துத் துருதி

கூடாத மார்க்கத்தைக் கூறக் கேளு
குணமான செங்கொட்டை யெட்டிநீ ரெட்டி
ஓடாத மத்தன்கார் போகம் வித்து
உத்தமமாம் வெடியுப்புச் சீன மிந்து
வாடாதமால் தேவி கெந்தி யோடு
வகைக்குமே யிரண்டுபலங் கூட விட்டு
வீடாத விதைவகைகள் வகைக்குக் குறுணி
மிடுக்காக உரவிலிட்டி டித்துக் கொள்ளே. 877

கொள்ளுமே கெட்டியாம் பெரும்பாண் டத்தில்
கொட்டியே யொன்றுக்கு நாலு சேளு
பின்னுமே புளிப்பான பனங்கள் ளுத்தான்
பிசகாமல் வைத்துமே ரவியில் வைக்கப்
பண்ணுமே பட்சந்தான் சென்ற பின்பு
பணிக்கிட்டுச் சக்கரமாம் பாலை மூடித்
தள்ளுமே சக்கரமா மடுப்பில் வைத்துச்
சாங்கமா யெரியிட்டுத் துருதி வாங்கே. 878

## வெடியுப்புச் செய்நீர் (பாதி செய்யுளுக்கு மேல்)

வாங்கியே சீலையிலே தோய்த்துக் கொண்டு
மகத்தான தீபத்தில் கொளுத்திப் பாரு
தேங்கயிலே விளக்குப்போ லெரியுங் கண்டாய்
திட்டமாம் பரணிதனி லடைத்துக் கொள்ளு
ஓங்கயிலே யுப்பான செய்நீ ரொன்று
உறுதியாம் பொட்டுலுப்புப் பலமும் பத்துப்
பாங்கயிலே பழம்புளி நாற்பத்துப் பலந்தான்
படிகாரம் பலமொன்று கல்லுப் பொன்றே. 879

## சாரச் செய்நீர் (ஈற்றடி யிலிருந்து)

ஒன்றான சாரமரை சூடன் கால்தான்
உறுதியா யெருரு சாம மிடித்துக் கொண்டு
தன்றான சட்டியினில் வைத்தெ ரிக்கச்
சாமதால் சுண்ணும்பா மகத்தாங் காரம்
தின்றான பனியில்வைக்கச் செய்நீ ராகும்
செப்பமாம் பரணிதனி லடைத்துக் கொள்ளு
பன்றான சாரநீர் சொல்லக் கேளு
பாங்கான அண்டோட்டுச் சுண்ணம் ஊதே. 880

ஊதியே சத்தியென்ற சாரத் துக்கு
உறுகின்ற புளியரைத்துக் கவசங் கட்டிக்
கோதியே குக்குடமாம் புடத்தைப் போடு
கொப்பளித்துச் சுண்ணும்பாஞ் சீனந் தன்னைத்
தூதியே சுண்ணத்தி னெடைக் கிரட்டி
சீனத்தைக் கூட்டியே வெடியுப்பு நீரால்
வாதியே நீயரைத்துப் புடத்தைப் போடு
மல்லிகைப்பூப் போல்சுண்ண மாகும் பாரே. 881

ஆகின்ற சுண்ணத்துக் கெடைபூ நீறு
அண்டோட்டுச் சுண்ணமந்தப் படியே யாகும்
வேகின்ற வெடியுப்பு நீரா லாட்டி
மிடுக்காகப் புடம்போட்டெ டுத்துக் கொள்ளு

தாகின்ற கல்லுப்புச் சீனத் தெடைதாள்
தாக்கியரை வெடியுப்பு நீரி னாலே
போகின்ற புடம்போட்டெ டுத்துக் கொண்டு
பேராக எடைக்கெடைக்குச் சாரஞ் சேரே: 882

மகோதகம் (பெருநீர்) (பாதி செய்யுளுக்கு மேல்)

சாரத்தைச் சேர்த்துமே வெடியுப்பு நீரால்
தாக்கியரை மூன்றுநாள் நெட் டடங்கு மட்டும்
பாரத்தைப் புடம்போட்டுப் பனியில் வைக்கப்
பலபலெனச் செய்நீராம் பரணி யுடைப்பாய்
காரத்தைப் கழுதையுடைக் கத்தந் தானும்
கலவாமற் படிபத்துப் பாண்டத் திட்டுப்
பூரணத்தைப் பலமொன்று பொடித்துப் போட்டுப்
பொட்டிலுப்புப் பலமிரண்டு சினம் ரெண்டே. 883

ரெண்டோடு கல்லுப்புப் பலமி ரெண்டு
நேரான மதியுப்புப் பலமும் ரெண்டு
அண்டோட்டுச் சுண்ணமது பலமும் ரெண்டு
ஆதியாம் பூநீறு பலமும் ரெண்டு
தண்டோடு சத்தியென்ற சாரம் ரெண்டு
தவளமாஞ் சாரம்ரெண்டு திலைப்புல் சாம்பல்
தண்டோட்டுச் சுண்ணமது பலமும் ரெண்டு.
நாயுருவிச் சாம்பலது பலமும் ரெண்டே. 884

பலமான மருந்தெல்லாம் பொடியாய்ப் பண்ணிப்
பரும்பானை தனிலிட்டுக் கத்தத்திற் கலக்கிப்
பிலமான ரவியிலிட்டுப் பட்சந் தானும்
பெருங்குச்சி தன்னாலே கலக்கி வைப்பாய்
அலமான அரைப்பானை யிருக்கப் பார்த்து
அதன்மேலே சக்கரமாம் பாலை மூடித்
திலமான மண்செய்தும் அடுப்பெ ரித்துத்
திருதியைத்தான் பீங்கானில் வார்த்தி டாயே. 885

வச்சிர கவசம்

பீங்கானில் வார்த்துமே பதனம் பண்ணிப்
பீசகாமல் கவசமொன்று சொல்லக் கேளு
பாங்கானில் வெள்ளீயம் பலந்தான் பத்துப்
பாசகற்றுஞ் செம்பதுவும் பலந்தா னஞ்சு
ஆங்கான அரப்பொடியும் பலந்தா னஞ்சு
அஞ்சனக்கல் பலமஞ்சு நிமிளை அஞ்சு
ஊங்கானில் குகையிலிட்டு ருக்கிக் கொண்டு
உறுதியாங் கல்வத்திற் பொடியாய்ப் பண்ணே. 886

பொடிபண்ணி வளையலுப்புப் பலந்தா னஞ்சு
பேரான மதியுப்புப் பலந் தானஞ்சு
துடிபண்ணிப் பூநீறு பலந்தா னஞ்சு
துப்புரவா யண்டோட்டுப் பொடிதா னஞ்சு
நெடிபண்ணித் துத்தமது பலந்தா னஞ்சு
நேரான கடல்நுரையும் பலந்தா னஞ்சு
கடிபண்ணிக் கடிபணல்தான் பலமு மஞ்சு
கனமில்லா மீனெட்டிப் பலமு மஞ்சே. 887

அஞ்சோடி வையெல்லாம் பொடியாய்ப் பண்ணி
அழகான பழச்சாறு விட்ட ரைத்துக்
குஞ்சோடு குழைத்தபின்பு வில்லை தட்டிக்
கூர்மையாம் ரவிதனிலே போட்டு வைப்பாய்
கஞ்சோடு காய்ந்தபின்பு வைத்துக் கொண்டு
கவசந்தான் போடுகின்ற காரி யத்தில்
எஞ்சோடு எலுமிச்சைச் சாற்று லரைத்து
எங்குமோர் கனமாக இறுக்கிப் போடே. 888

கனமாகக் கட லுக்குட் சொறிதா னுண்டு
கனத்ததோர் சிவப்பான சொறியை வாங்கி
இனமாகப் பெரும்பாண்டந் தன்னிற் போட்டு
இதற்கெட்டி லொன்றுபூ நீறு போட்டுப்
புனமாக அண்ட நீறு பூநீறிற் கால்தான்
பெருத்தநா கரவண்டு சுட்ட சுண்ணம்
வனமாகக் கால்தானுங் கூடப் போட்டு
மர்த்திப்பாய் குச்சியினால் மர்த்திப் பாயே. 889

## சுத்த சயிலோதகம்

மர்த்திப்பாய் கள்ளியது சுட்ட சாம்பல்
வாழையாஞ் சாம்பலொடு நாயுருவிச் சாம்பல்
விர்த்தியாய் வெடியுப்புச் சீனஞ் சூடன்
வெண்கார மிந்துப்பு வகைக்குப் பலந்தான்
புர்த்திப்பாய் பொடிபண்ணிக் கூடப் போட்டுப்
பேரான ரவியில்வை பட்சந் தானும்
சர்த்திப்பாய் சக்கரமாம் பாலை மூடிச்
சாங்கமாய் மண்கட்டித் துருதி வாங்கே. 890

வாங்கியே பரணிதனி லடைத்துக் கொண்டு
வகையாகக் கறடகபா டாணந் தன்னைக்
தேங்கியே கிழிகட்டிக் கற்சுண் ணத்தில்
டோலைகட்டி ஒருசாம மெரித்துக் கொண்டு

ஓங்கியே வெந்நீரில் கழுவிப் போட்டு
ஒருசாமம் வித்துத்துருதி சுருக்குப் போட்டுத்
தாங்கியே வெடியுப்பு நீர் சுருக்குச்
சாரநீரோரு சாமஞ் சுருக்குப் போடே. 891

சுருக்கிட்டு மகதுதகஞ் சாமந் தானும்
சுத்தசயி லோதகமுஞ் சுருக்குப் போடு
திருக்கிட்டுத் தீநீ நஞ் சுருக்குப் போடு
செப்புகிறேன் பின்னுகத் திராவ கந்தான்
வறுக்கிட்டு வச்சிரமாங் கவசங் கட்டி
மணலில்வைத் தெரித்திடுவாய் நாலு சாமம்
அறுக்கிட்டா றவிட்டெடுத்துப் பார்க்கப் பாங்காய்
அடங்கியே சாதிலிங்கம் போல வாமே. 892

ஆமென்ற நவலோக மாபி ரத்தில்
அணு கினல் பதினாறு மாற்று மாகும்
சாமென்ற சாரணைக் கித்தை யூட்டு
தங்கத்தைக் குருவாக்கும் நிமிடத் துள்ளே
காமென்ற காயசித்தி கடிசி லாகுங்
கட்டுவகைச் சரக்கெல்லாங் கணத்திற் கொல்லும்
போமென்ற கறடகபா டாணந் தன்னில்
போக்குமெத்த வுண்டிதிலே பூட்டி யாடே. 893

ஆடையிலே கறடகபா டாணத் தாட்டு
ஆச்சரியந் தர்க்கித்து ஆடிப் பாரு
பாடையிலே யெவரென்காண் பயமும் வேண்டாம்
பாட்டரென்ற மூலகுரு வாத மானல்
ஓடையிலே வெகுதூர முசத்தி மெத்த
உறவான அவருடைய சிட னுந்தான்
நாடையிலே நாதாந்தம் வேதாந்த மொன்று
நவபயின்ற காலாங்கி சொன்னார் காணே. 894

## வேதாந்தம் கூறல்

காணவே அறுபத்து நால்ம ரபுள்ளே
கனமான மடபதிகள் மெத்த வுண்டு
தோணவே பாட்டர்மடம் ஆதி யாகும்
சுருதியுண்டு சித்தரொடு ரிசிகள் கோடி
நீணவே குளிகைமுறை மெத்த வுண்டு
நேர்ந்து நின்றார் பூரணத்தி லயிச்சு மேதான்
பதிகமென்ற சொரூபமணி பண்ண வல்லார்
பார்மகனே சூதவித்தை பலிப்புத் தானே. 895

## புரியட்டகம்

தானான சடமெல்லாம் பிரமன் கூறு
    தனித்து நின்ற விரத்தஞ்சீழ்மாலின் கூறு
பூனான புரியட்டம் புகலக் கேளு
    பேரான சூட்சமென்ற தேகங் காணும்
• தேனான சிகாரமென்ற சிவன்றா னென்று
    சேர்ந்ததுமேல் வகாரமென்ற மகேஸ்வரந்தா னென்று
ஆனான யகாரமென்ற சதாசிவந்தா னென்று
    ஆர்ந்துநின்ற விந்துவதன் மேலு மாச்சே. 896

விந்துவின்மேல் நாதமொன்று சத்தி யொன்று
    விளக்கமா யிதன்மேலே சிவன்றா னென்று
வந்துசிவனா ரென்னில்வி ராட்டு மாகும்
    வாகாக விதன்மேலே பரைதா னென்று
புந்துவிஃ தெட்டல்லோ புரியட் டமாச்சு
    பிரிந்திந்த வெட்டாலே பிறப்பிறப் பாச்சு
சிந்துவிதின் கூத்தல்லோ புரியட்டக் கூறு
    செல்மமென்ற கோடிசென்மந் திறமாய்க் காணே. 897

திறமாக பெரியோர்கள் சகசா லத்தைத்
    தீரனாய் தள்ளிவிட்டு மேலே நிற்பார்
குறமாக ஏழுவகைத் தோற்றத் துள்ளே
    குலாவியிது விரிந்தாடப் பிரபஞ்ச மாச்சு
பரமான பாழான புரியட்டக் கூத்துப்
    பாங்கெல்லாம் பார்த்துணர்ந்து பரிந்து பாரார்
உறமாக இதையெல்லாந் தள்ளி விட்டு
    உற்றுணர்ந்து பார்த்தவனே யோகி யாமே. 898

யோகியே பரைமேலே முப்பா ழுண்டு
    ஒன்றுமே வெளிப்பாழா மதற்கு மேலே
தேகியே ஒளிப்பாழாய் நிற்கும் பாரு
    சேர்ந்துமே அதைத்தாண்டி யப்பாற் கேளு
ஊகியே வெளியொளிப்பாழ் கூடிப் பாரு
    ஒளிமூன்று வரைதாண்ட வுன்மனைதா னிற்பாள்
தாகியே மொழியுடையாள் தமரின் வாசல்
    தாயவள்தான் பரமவள்தான் தாக்கிப் பாரே. 899

தாயென்றும் போதமென்றுந் தாய்க்கே பேரு
    தாபரமா மகண்டமென்ற தவட்கே பேரு
ஆயென்ற வளருகே சேர்ந்தாற் போதம்
    அதீதமாந் தமர்க்குள்ளே சேர லாதும்

தூயென்றூர் கண்டார் கண்ட வீதி
　　தோயமா மாதியில்லை யந்த மில்லை
காயென்றும் ஒருவரால் காணப் போகா
　　காணவென்றால் பொறியைந்தால் காணொட் டாதே. 900

## குறிப்புரை

பாடல் எண் : 851 முதல் 900 வரை

பாடல் எண் : 852 :- தொந்தித்தார்கள் = உடலுறவு கொண்டார்கள்! சூதகம் ஆனர்=ருதுவானர்.

பாடல் எண் : 854 :- செந்து=(ஐந்து) உயிருடன் பிறந்தது; (உயிரினம்).

பாடல் எண் : 862 :- லேபித்து = பூசி.

பாடல் எண் : 863 :- பூச்சியுடைநீர் = இந்திர கோபச் செய்நீர். (முறையை 855-858-ம் பாடல்களில் காண்க.)

பாடல் எண் : 866 :- கிரி=மலை; சங்கம் = பெருந்தொகை (பற்பல கோடிகள்)

பாடல் எண் : 876 :- விந்தியாந்தேயம் = விந்தியமலையும் அதையடுத்த நாடும்.

பாடல் எண் : 877-878 வித்து = விதைகள் துருதி = நெய்

பாடல் எண் : 885 :- திருதியை = (மூன்றுவது) தீநீர் = துருதி

பாடல் எண் : 887 :- துத்தம் = பால் துத்தம்.

---

காணொட்டா தென்றுசொல்லிச் சிவயோ கிதானுங்
　　கருத்தூணிப் பரையளவும் ஓடினனும்
பூணொட்டாய்ப் பிறவிவரு மேதென் றக்கால்
　　பிறந்துவந்து புகுந்தாலுஞ் சிவயோ கியாவான்
மாணொட்டாய் பரையளவும் புரியட் டந்தான்
　　வரைகடந்து வெளிப்பாழை யடுத்த காலம்
ஆணொட்டா வெளிப்பாழை யகண்ட மென்று
　　அணுகினல் திரும்பியே பிறக்கொட் டாதே. 901

ஒட்டாத தற்குள்ளே சுழன்று நின்று
　　உன்னியொரு வரையேறி யிதுவே யென்பான்
மட்டாத தனுக்குள்ளே மயங்கி யேங்கி
　　மற்றுமொரு வரையேறி யிதுதா னென்பான்

மூட்டாது மூன்றுவரை யுன்னி யேறி
மோனமாம் உன்மனையை யிதுதா னென்பான்
வட்டான ரவிகோடி வன்னி கோடி
மதிகோடி வரைகடந்தால் மார்க்கந் தானே. 902

கடந்துநின்ற காந்தியவள் தனக்கொவ் வாது
கண்கொள்ளா விண்கொள்ளா கரையுங் கொள்ளா
படர்ந்துநின்ற வுன்மனையைக் கண்டா யானால்
பரமவள்தான் சிரமவள்தான் பார்த்தே யுன்னு
நிடந்துநின்ற நிர்க்குணத்தி நிர்ம்ம லத்தி
நித்தியமாம் போதத்தி பூர ணத்தி
அடர்ந்துநின்ற அண்டத்தி யண்ட சத்தி
அதீதத்தி ஆயியாம் பரையா மென்றே 903

பரையினுடை யருளாலே மேலே செல்லப்
பரதுரிய மற்றவெளி சொல்லும் போச்சு
புரையினுடை மனம்போச்சு புத்தி போச்சு
புகுமாயம் மூவரையின் கீழே போச்சு
திரையினுடைத் தில்லையம் பலமும் போச்சு
சேரவெட்ட வெளியாகத் திறந்து போச்சு
நிரையினின்ற நிர்க்குணத்தி னேர்மை போச்சு
நேர்மையெல்லா நினைவாக வுன்னிப் பாரே. 904

பாரென்று ஆசைகொண்டால் வருமோ சொல்லு
பணிந்தவர்க்கு விட்டகுறை யாலே யெய்தும்
போரென்று மனங்குவித்துப் பிடித்தா யானால்
பிடித்துமெள்ள வேறெலா மின்றே யில்லை
கேரென்று மனம்பிரிந்தால் கெட்டி யாச்சு
கெடுத்த பெருந் தீமையினு லருமை போச்சு
காரென்று கடைத்தேறப் பசியோட் டாது
கறடகபா டாணத்தைக் கருவாய்ப் பாரே. 905

## 2. கோளகப் பாடாண உற்பத்தி

கருவான கோளகபா டாணந் தானுங்
கனமான குடகங்கூ விளங்கு நதத்தில்
திருவான மகாமேரு தெற்கு மூலை
சிறந்ததோர் கலிங்கதேயந் தன்னிற் றானும்
உருவான மலையின்கீ ழடியிற் றானும்
உத்தமமாய்ப் பளிங்குக்கல் நிறமே போன்று
மருவான வெறித்தவா சனையாய்த் தானும்
வளர்ந்திருக்குங் கோளகபா டாணந் தானே. 906

தானென்ற பாடாணந் தனையெ டுத்துச்
சாங்கமாய்ச் சுத்திபண்ணு சுண்ணம் பிற்றான்

தேனென்ற சிறுகீரைச் சாறு தானுஞ்
செப்பமா யிருசாமம் சுருக்குப் போட்டு
மூனென்ற முன்சொன்ன பாடா ணம்போல்
முதன்மையொன்றுந் தப்பாமற் செய்து கொண்டு
நானென்ற நவலோகத் தீந்தா யானால்
நாற்பதுதான் மாற்றாகும் நாடிப் பாரே. 907

## திராவகம்

நாடியே திராவகத்தைச் சொல்லக் கேளு
நற்கம்பி யுப்பதுவும் பலமு நூறு
தேடியே சீனமஃ திரண்டு நூறு
சீரான துரிசிபல மைம்ப தாகும்
பேடியே பூநீறும் இருபத் தஞ்சு
பெருமையாங் கல்லுப்புப் பலமீ ராறும்
ஊடியே யுரலிலிட்டி டித்து நைய
உறவாகப் பனங்கள்ளில் பிசறித் தானே. 908

பிசறியே தினந்தினமும் பத்து நாள்தான்
பிசறும வஞ்சுநாள் சும்மாப் போடு
நசறியே பெருந்தோண்டி தன்னி லிட்டு
நலமான சக்கரமாம் பாலை மூடி
உசறியே யுளுந்தாலே சீலை செய்து
உற்பனமாய்ச் சக்கரமா மடுப்பில் வைத்துத்
தசறியே திராவகத்தை வாங்கி வாங்கிச்
சமத்தாகப் பரணிதனி லடைத்தி டாயே. 909

அடைத்திட்ட திராவகந்தான் சுருக்கு மெத்த
அறுபத்து நான்காம்பா டாணத் துக்கும்
துடைத்திட்டுச் சுருக்கிடவே கட்டிப் போகும்
சுளுக்காகுந் திராவகத்தில் சுருக்கு வித்தை
தடைத்திட்ட இந்நீரில் சகலம் நிராங்
சரக்கெல்லா நீறியே சுண்ணும் பாகும்
படைத்திட்ட படைப்புப்போ லுற்பத் தியாகும்
பாடாணக் குலமூற லற்றுப் போமே. 910

## நல்லுபதேசம்

அற்றுப்போங் குருசொல்ல அருளும் பொருளும்
அழும்பர் தான் கேள்வியின்றிச் சுடுவார் கோடி
மத்துப்போங் குருசொல்ல லட்சியங் கூடும்
மனத்தாலே பார்ப்பமென்பார் குறும்பர் தாமும்
சித்துப்போம் துறைகுருசொற் றெழிலெல் லாந்தான்
செவிடனுக் கூமைசென்று செப்பு மாறு

நத்துப்போங் குருவேனு மென்பார் நல்லோர்
    நாய்களெல்லாங் குருவழியை நாடார் காணே 911

நாடாமற் சுட்டலைந்து பொய்யே யென்பார்
    நடுத்தெருவில் மண்ணையள்ளி வாயிற் போடு
வாடாமல் வாழ்வதுவும் வருமோ சொல்லு
    வறுமைவந்து மூண்டுதென்றுல் மறைந்து போமோ
தேடாமற் சித்தியது தானுண் டாமோ
    செகசாலத்தே நுழைந்தால் மனஞ்செவ் வாமோ
பாடாமல் நாதமது தானுண் டாமோ
    பரத்தையொடு பழக்கமுற்றுல் பவிசு போச்சு. 912

### 3. சூதப் பாடாண உற்பத்தி

பவிசுற்ற சூதபா டாணந் தன்னைப்
    பகரவே ரோமபுரி கடற்குக் கிழக்கே
நவிசுற்ற லட்சயோ சனைக்கு மிப்பால்
    நலமான மலைமேலே சூதபா டாணம்
திவிசுற்ற கறுப்புமஞ்சள் சிவப்பு போன்று
    திறமான கொழுமையாயுற் பத்தி யாகும்
அவிசுற்ற ஆதியாம் விராட்டி யன்தான்
    அடங்காத பீமன்று னறிந்து பாரே. 913

### மெழுகுக்குப் பால்துருதி

அறிந்துமே சூதபா டாணந் தன்னை
    அடர்ந்தசிப்பிச் சுண்ணத்தில் சுத்தி பண்ணிப்
பரிந்துமே பாகலிலை சாமஞ் சுருக்கு
    பாங்கான முன்சுருக்குக் கவசந் தீர்ந்து
முறிந்துமே மெழுகுக்கு விவரங் கேளு
    முனையான கள்ளிப்பால் படிதா னென்று
செறிந்துமே தில்லைப்பால் படிதா னென்று
    சிறப்பான எருக்கம்பால் படிதா னென்றே. 914

ஒன்றான சதிர்க்கள்ளிப் படிதா னென்று
    உயர்கின்ற வாழைப்பால் படிதா னென்று
தின்றான சேங்கொட்டை முகினைப் போக்கிச்
    செப்பமாய்க் கடுக்காயின் விதையைத் தள்ளிப்
புன்றான சேங்கொட்டை பலமூ வாறு
    புகர்கடுக்காய் யீரஞ்சு நேர்வா ளந்தான்
துன்றான தோல்போக்கி பலமும் பத்துத்
    துடியான சாரமது பலமு மஞ்சே. 915

சாரமதஞ் சாருங்கல் லுப்பு மஞ்சு
தாக்கியிடித் தேபாலில் கூடப் போட்டுப்
பாரமது மூன்றுநாள்குச் சியினூற் கலக்கிப்
பகர்நாலா நாளெடுத்துப் பாண்டத் திட்டுத்
தாரமது சக்கரமாம் வாலை மூடித்
தனிமாட மண்செய்தே அடுப்பில் வைத்துக்
காரமது துருதியெல்லாம் வாங்கி வாங்கிக்
கனமான பரணிதனி லடைத்தி டாயே. 916

அடைத்திட்டுப் பாடாண மறுபான் நாலு
மடங்கலுந்தான் மெழுகாகுங் கட்டு மாகும்
இடைத்திட்ட வுபரசங்கள் சாரங் காரம்
எல்லாந்தான் மெழுகாகு மேற்ற மெத்த
துடைத்திட்டு பொட்டிடுமே பரம தேவன்
சூட்டிவித்த படைப்பெல்லாம் பொய்யாய்ப் போகும்
புடைத்திட்ட பாடாண குலத்துக் கெல்லாம்
போரான குடோரியிது பூட்டி யாடே. 917

யோகிக்கும் ஞானிக்கும் வேறுபாடு கூறல்

பூட்டான மெய்ஞானி சடத்தை வேண்டான்
பிரபலந்தா னதுவேது சொல்லக் கேளு
தூட்டான தேகத்தில் சூட்ச தேகஞ்
துரிதமாம் புரியட்டந் தன்னிற் சொக்கி
நாட்டான நாலோடே நாடிப் போவாம்
நலமான சடமெனக் கேதுக் கென்பான்
தாட்டான சடங்காப்பான் யோகி யானல்
தருகின்ற சடங்காவான் ஞானி தானே. 918

ஞானிசடங் காவாமற் போனு னல்
நலமான வாதமென்ன காயசித்தி யென்ன
தேனியென்ற சித்தென்ன குளிகை யென்ன
திலதவித்தை செய்கின்ற தியக்க மென்ன
பூனியென்ற இரண்டுக்கும் புகழைக் கேளு
பெரிதுதான் சித்ததிகம் புகழ்ந்து கொள்ளு
சீனியென்ற சடத்தோடே சகமெல்லா மாடிச்
சிற்றண்டம் பேரண்டந் திரிய லாமே. 919

திரிந்துமே சிறுவயதாய்ச் சடத்தோ டொக்கத்
திரேதாயி நிர்க்குணத்துக் கப்பால் சென்று
தரிந்துமே திரும்பிவந்து கோடி கற்பஞ்
சமரசமாய்ச் சமாதியிலே தரித்து வாழ்ந்தார்

பிரிந்துமே சமாதிவிட்டு வாத மாடிப்
பெரியோரைக் கண்டுமே ஞானம் பேசி
மறிந்துமே மகாமேரு கிரியிற் சென்று
மகத்தான பாற்கடலில் வாழ்ந்தார் தானே. 920

வாழ்ந்துமே மனோன்மணிதன் பாதம் போற்றி
வரிசையாய் நால்முகத்துச் சித்தர் கண்டு
தாழ்ந்துகண்டு பதந்தாண்டிச் சதாசிவத்தைப் போற்றித்
தரித்துமே முப்பாழின் தன்மை கண்டு
ஆழ்ந்துமே அறுகுழுனே தமருக்குட் புக்கி
அதீதமாம் பூரணத்திலு காந்தந் தாண்டி
மாழ்ந்துமே சிலம்பொலியில் மருவி நின்று
வருகிறதும் போகிறதுங் மகத்துத் தானே. 921

மகத்தான சித்தருடை வல்லமைக்கு மைந்தா
வாழ்கின்ற ஞானியவன் ஆயிரத்தொன் றுவ்வான்
புகத்தான வெளிகடந்து புக்குவரோ ஞானி
பிடரினின்று பேசுமோ வாய்தான் மூடில்
தகத்தான மூலவர்க்கத் துள்ள சித்தர்
தாண்டியே கொடுஞ்சுருக்காய்ப் பூரணத்திற் சென்று
பகத்தான பானத்தில் தாகந் தீர்ந்து
பாஞ்சுமே மூழ்கியதில் நீஞ்சு வாரே. 922

நீஞ்சுவார் தாமென்று மதுவென் றுந்தான்
இரண்டுமற்றுச் சாங்கமற்றுச் சமாதி யற்று
ஒஞ்சுவார் நிர்க்குணம்போ லொன்றாய் நிற்பார்
உள்ளோடு புறம்புமுத லொன்றாய்ப் பார்ப்பார்
காஞ்சுவார் நின்றவெல்லாங் கண்டிப் பென்பார்
ககனமாம் வெளிமுதலுங் கண்டிப் பென்பார்
மாஞ்சுவார் உம்மென்ற மவுனந் தானும்
மருவிநின்ற கண்டிப்பு நிர்க்குணமொன் றாமே. 923

ஒன்றான நிர்க்குணமோ பொருளென் பார்கள்
ஒன்றியே யாடுகிறார் சித்த ரெல்லாம்
குன்றான வுலகத்தில் குருநா னென்று
கூறியே யுபதேசம் மயக்கு வித்து
மன்றான மனிதருக்கு மாயவலை பூட்டி
மார்க்கமாய்ப் பொருள்வாங்கிக் கெடுத்து விட்டார்
இன்றான இருளிலே கூகை சென்று
இறக்கடித்த காக்காயின் கதைபோ லாச்சே. 924

கதையாகு முலகத்தி லிருந்த ஆசான்
காரியத்தா லென்னுடைந் தோட மூண்டு

மிதையாக நர்டாதால் விவேகம் போச்சு
விரகில்லா மனத்தாலே ஞானம் போச்சு
வதைப்பாக வாயுவினால் யோகம் போச்சு
மாசற்ற குளிகைவிட்டால் கமனம் போச்சு
அதையாக ஆசையினல் சடந்தான் போச்சு
ஆதரவா நூலைவிட்டா லறிவு போச்சு. 925

## 4. அரிதார உற்பத்தி

அறிவான அரிதாரப் போக்குக் கேளு
அண்டநீர் தனில்சுத்தி பண்ணிக் கொண்டு
பொறிவான பூநிறு பலந்தா னெட்டு
பெரும்படியாங் கள்ளதனிற் கலந்து கொண்டே
நறிவான நாற்சாமஞ் சுருக்குப் போடு
நாட்டமா முன்சுருக் கெல்லாந் தீர்த்துக்
கறிவான கவசமிட்டுப் புடத்திற் போட்டுக்
கவசத்தை விடுவித்துக் கரண்டிதனில் வையே. 926

கரண்டியிலே வைத்துமேபால் துருதி தன்னைக்
கடினமாய்ச் சுருக்கிடவே சாமந் தானும்
வரண்டியே பார்த்தக்கால் மெழுகு மாகும்
மகத்தான வேதையினி லெட்டி யோடும்
புரண்டியே வாதமென்று திரிவார்க் கெல்லாம்
பொட்டிட்டுப் பானையென்ற நவலோ கத்தில்
அரண்டியே அடுக்கடுக்காய்க் குவித்து வைத்தே
அதட்டியாய்ப் புடம்போட ஏம மாமே. 927

## புத்தி கூறல்

ஏமாந்தா னென்னவென் றிசைந்திட் டக்கால்
ஏற்றமாஞ் சித்தியில்லை முத்தி யில்லை
வாமந்தா னென்னவென்று சொன்ன ளுனல்
மாண்டுமே நாய்பேயாய்ப் பிறப்பு மாகும்
காமந்தான் முத்தியென்றே கலந்தா ளுகில்
காயசித்தி யோகசித்தி கரியாய்ப் போச்சு
சாமந்தான் சடநிலையோ வென்ரு ளுனல்
சாகிறதும் பிறக்கிறதும் கவலை யாச்சே. 928

## யோகத்தின் உயர்வு கூறல்

ஆச்சென்ற காற்றுப்போல் சுற்றி யாடும்
அலைகடல்போ லுலகமெலாங் கவிழ்ந்து போகும்
வேச்சென்ற வெளிக்காட்டும் விண்ணி லாட்டும்
வேதாந்தம் நாதாந்தம் விடுவித் தோங்கும்

பேச்சென்ற மூலத்திலி லிங்கம் பேசும்
பேரான கண்டத்தி லெட்டும் பேசும்
மேச்சென்ற புருமையமேல் மூலம் பேசும்
விளங்கிநின்ற சந்திரனும் பேசுங் காணே. 929

காணவே குருபதத்தில் அகாரம் நின்று
களங்கில்லா விந்துமுதல் நாதம் பேசும்
தாணவே சத்தியென்ற மாயம் பேசுந்
தாக்கான விராட்டதுவுங் குழைந்து பேசும்
பாணவே பரத்திஞெளி பாங்காய்க் காணும்
பாங்காக விம்மட்டும் புரியட் டமாச்சு
மூணவே முப்பாழுந் திறந்து தானும்
முத்தான வுன்மனேத்தாய் வெளியா வாளே. 930

உன்மனேயை வெளியாகக் கண்டா யானல்
ஒளிதானும் ரவிகோடி வன்னி கோடி
வன்மனேயா மதிகோடி காந்தி காணும்
மாயியைத்தான் நோக்கவென்ருல் கண்கொள் ளாது
துன்மனேயாஞ் சுழியினுள்ளே சொக்கி ஞப்போல்
சொக்குமாங்கே மனஞ்சற்றுஞ் சோர்ந்தி டாது
தன்மனேயாந் தமர்வாசல் தாக்கிப் பாரு
தாயான வுன்மனேயைத் தியானித் தூதே. 931

ஊதியே பூரணத்தி லகண்ட வீதி
ஓங்கியே குளிகையென்ற குதிரை யேறிக்
காதியே கரையில்லே கண்டு பாரு
கண்கொள்ளாப் பூரணத்தி லொளியோ காணும்
சேதியே திரும்பயிலாஞ் செல்ல லாகும்
செம்மையாம் ஞானமெல்லாம் கைக்குள் ளாகும்
சாதியே தூலசட மெப்படியோ வென்னில்
தரியாத வெளிகடந்த சூட்சந் தானே. 932

## 5. கெந்தக பாடாணேற்பத்தி

தானென்ற கெந்தகத்தை நிறுத்துக் கொண்டு
தனியாவின் பால்தன்னில் சுத்தி பண்ணிக்
கானென்ற காரை கொட்டி யிலேச்சா றுதன்னில்
கலந்துமே பூநீறு படியொன் றுக்குத்
தேனென்ற இரண்டுபலங் கரைத்துக் கொண்டு
சிதறுமல் கெந்தகத்தில் பன்றிநெய் விட்டுப்
பானென்ற பதினேழுதரந் தான் சாய்த்துப்
பாங்கான முன்போன்ற பருவ மாமே. 933

பருவமாய்ப் பன்றிநெய்யை விட்டு விட்டுப்
பதினேழு பதினேழு தரந்தான் சாய்ப்பாய்
கருவமாய்க் கட்டியாய் வார்த்துக் கொண்டு
கவசத்தைப் போட்டிலகு புடமாய்ப் போடு
துருவமாய்ப் பால்துருதி சுருக்குப் போடச்
சுயமான மெழுகுபோல் தானிருக்கும்
அருவமாய் ஆயிரத்துக் கொன்றே யோடும்
ஆயியுடை நாதமென்ற கெந்தி தானே. 934

கெந்தியுடை மார்க்கத்தி னுட்டைச் சொல்லக்
கேட்டபேர்க் கெல்லாந்தான் மகிழ்ச்சி யாகும்
உந்தியெல்லாந் தான்குளிர்ந்து டல்பூரிக்கும்
உத்தமமாஞ் சரக்கிதுதான் போக்கு மெத்த
அந்திவண்ணர் தான்மகிழ்ந்து ஆடும் வித்தை
அரன்வார்த்த டங்காதென் றழித்துப் போட்டார்
முந்தியே சொல்லிவிட்டேன் பிறப்புற் பத்தி
மூர்க்கமாம் நாறும்பூ வாட்டு தானே. 935

## யோகம், ஞானங் கூறல்

ஆட்டான கேள்வியினால் வாதஞ் சுட்டு
அறியாமல் பொய்யென்று லாரென் செய்வார்
திட்டான நூல்வேணுங் குருசொல் வேணும்
செய்முறைகள் கைமுறைகள் சீராய் வேணும்
மாட்டான கருக்கொண்டு பார்க்க வேணும்
மறவாமல் கருவுகளை மாட்ட வேணும்
நீட்டான நெறியாக நிற்க வேணும்
நின்றவர்க்கே வாதசித்தி நிலைக்குங் காணே. 936

நிலைப்பான நூலிருந்துங் குருமுறைதான் வேணும்
நேரான கைமுறைகள் பார்க்க வேணும்
மலைப்பான நூலல்ல பூட்டெல்லாஞ் சொன்னேன்
மார்க்கமா யான்பார்த்தே அனுப வித்துக்
கலைப்பான கைகண்ட படியான் சொன்னேன்
காலாங்கி பதஞ்சிரசில் வைத்துக் கொண்டு
தலைப்பான புத்தியென்றால் கண்டு கொள்ளு
தாமதமாம் புத்திக்குச் சித்திக் காதே. 937

சித்தியென்ற ரசத்தாலே திக்கெல்லாங் கட்டுந்
தேசமெங்குந் திரியலாம் வேதை கோடி
அத்தியென்ற அட்டமா சித்தி யாடும்
அதீதமாஞ் சிவயோக வழியுங் காட்டும்
புத்தியென்ற புரியட்டம் வெட்டவெளி யாகும்
பொங்கியதோர் நிர்க்குணத்தில் மேவ லாகும்

பத்தியென்ற வெகுகாலஞ் சமாதி மூட்டும்
பாங்கான சூதவித்தை பண்பு தானே. 938

வித்தையால் ஐம்புலனை வெட்டிப் போடு
விளக்கமா நன்னூலை வினவிப் பாரு
சத்தையால் பரிசமொடு ரூபங் கந்தி
தனித்துநின்ற ருசியோடு சத்த மைந்தைப்
பத்தையா லறுத்துவிட்டு மனதிதை நாட்டு
பரதவித்து விட்டுவிட்டால் மனமே ஏது
முத்தியால் கருவியெல்லாம் நீக்கி விட்டு
மூலத்தி னுன்னினவன் சிவயோகி யாமே. 939

யோகிவிட்டு மற்றதினு லுண்டோ சொல்லு
உட்கார்ந்து பொழுதோட்டும் பேச்சா லேது
தாகிவிட்டுத் தாயேது பெண்டீ ரேது
தனிமாய வரிசையினுல் தயங்கிப் போச்சு
கூகிவிட்ட நிசித்தமாங் கோப மேது
கூறன மைந்தருடைப் பாச மேது
ஆகிவிட்டுச் சையோகச் சுகமங் கேது
அறுத்துவிட்ட மலசலம்போ லெண்ணி டாயே. 940

மலசலம் போ லெண்ணியே மனஞ் சலித்து
வாழ்ந்துமென்ன இருந்துமென்ன ஏவிட மென்ன
கலசலம்போல் மனங்கலந்த யோகி யானல்
கண்டிப்பா யொளிப்பாழி லுருக வேணும்
குலசலமாம் பார்க்கின்ற வாதி யானல்
குறிப்பறிந்து சரக்குவைத்துக் கூட்ட வேணும்
பலசலமா யிருந்தசடப் பாங்கதைக் கேளு
பரிவான வுற்பவமும் லயமும் பாரே. 941

உற்பவமாம் ஞானியென்றால் சடத்தை நீக்கு
யோகியென்றால் கற்பத்தால் சடத்தைப் போற்று
அற்பவமாஞ் சித்தாகி மும்மு லம்பார்
அனுசரிக்க இல்லாட்டால் கிரியை யிலேநில்
துற்பவமாய்க் கொல்லாதே சிவன் தன்னைத்
தோடமில்லை பூசைக்கு மந்திரத்தால் நீக்கு
முற்பவமா மறிந்தவனே விவேக வாதி
முயன்றுமே மனம்உன்னி மீறி யாடே. 942

ஆடுவது வெகுகடினம் அருந்தல் மெத்த
ஆசான்தன் கைகாட்டி லறிய லாகும்
கூடுவது வென்றுக்கால் கூடப் போமோ
குவிந்தவிடங் குருகாட்டில் கூட லாகும்

நாடுவது வென்ருக்கால் நாடப் போமோ
நன்ருகத் தேர்ந்தவர்சொல் நாடலாகும்
ஓடுவது வெகுகடினம் ஓடு வோர்க்கு
உறுதியாங் குளிகையிட்டால் ஓட லாமே. 943

ஓடாமல் லட்சியத்தை உறுதி யாக்கி
உன்னிநின்ருல் மனமதிலே ஒன்றிப போகும்
நாடாமல் உன்னியபின் சடம்வேருய் நின்று
தலையான பூரணமாய்ச் சகலந் தானுய்
ஏடாமல் போதம்நா மென்றே எண்ணி
ஏற்றபிர பஞ்சமெல்லாம் விரிந்த தென்று
நாடாமல் சித்தாட்டம் ஆன ஆட்டு
நாடாமல் நீவேருய் நின்று பாரே. 944

நாடாமல் நின்றவனே ஞானி சித்தன்
நலமுற்ற சிவயோகி வாசி யோகி
நீடாமல் ரசயோகி நேர்ந்த யோகி
நிலையான பிறவியையே ரறுத்த யோகி
ஓடாம லசைவற்று நின்ற யோகி
உறுதியாய் மனமொன்றி யறைந்த யோகி
வாடாமல் நின்றவனு ரென்று பார்க்க
வடிவமாம் போதமது மகிழ்ந்து காணே. 945

மகிழ்ந்துமே பிடித்தலைவர் சரியை மார்க்கம்
மாய்ந்தபின்பு கிரியையினில் மார்க்கஞ் செய்வார்
நெகிழ்ந்துமே நினைவல்லோ யோக மார்க்கம்
நிலைத்தக்கால் ஞானத்தில் நேர்ந்து போவார்
தகழ்ந்துமே குருசொல்ல வாத மாகும்
சரக்குவைத்தால் வெகுதூரம் தாண்டி யோடும்
புகழ்ந்துமே மனத்தாலே கன்ம தன்மம்
பெரிசான பிறவியும்வந் துலைவார் தானே. 946

6-வது வீரோற்பத்தி

பிறவியாம் வீரத்தைச் சொல்லக் கேளு
பேரான மன்மதன் றன் பஞ்ச பாணம்
துறவியாஞ் சிவன்மேலே பெய்யும் போது
சோர்ந்துமே பாணத்தா லுற்றுப் பார்த்தார்
மறவியா மன்மதன்கைப் பாண மென்று
மனதிலே கோபமுற்று நெற்றிக் கண்ணை
எறவியாம் விழித்திடவே யெரிந்து போனுன்
ஏற்றமாம் பொறியாற்று விழுந்த தாமே. 947

விழுந்துமே பொறிதானுஞ் சூத நின்ற
இடந்தன்னிற் பொறிபடவே வீர மாச்சு
வழுந்துமே மலையடியில் அடியில் தன்னில்
வயிரம்போ லுற்பத்தி யங்கங் காச்சு
கொழுந்துமே படர்ந்தாற்போல் வளரும் பாரு
கூரிமை மெத்த வீரத்தின் கொள்கை தானும்
கொழுந்துமே கிடையாது உலகத் தோர்க்குக்
குளிகையிட்ட சித்தருக்குக் கிட்டுந் தானே. 948

தானென்ற வீரத்தின் மகிமை யென்ன
சதாசிவமாம் நெற்றியினிற் கண்ணி னாலே
தூனென்ற பொறி பறந்து சூதந் தன்னில்
தூளைபட்டு வெகுதூரந் தொடர்ந்து பொங்கி
வேனென்ற மிடுக்கான கிரியிற் றங்கி
விளைகின்ற படியாலே வீர மாச்சு
மூனென்ற முக்கணென்றும் பேரு மாச்சு
முழுக்கமாம் வழலையிதிற் கூடிக் காணே. 949

கூடினதால் திக்கண்தா னென்றும் பேரு
குறிப்பான பூரமிதிற் கூடி னக்கால்
ஊடினதால் பூரப்ஃ துயிரு மாச்சு
உடலான பாம்பதவும் வழலை யாச்சு
தாடினதால் வீரமது நஞ்சு மாச்சு
நஞ்சான வீரந்தான் கிடையா தென்று
தேடினதால் சித்தரெல்லாங் கூடிக் கொண்டு
திருமூல ரருகுவந்து பணிந்திட் டாரே. 950

## குறிப்புரை

### 901 முதல் 950 வரை

பாடல் எண் : 902 :- மூன்றுவரை = மும்மூலம் என்று கூறுவர் நூலோர்; (அவை மூலாதாரம், ஆக்ஞை, விசுத்தி என்பன.)

பாடல் எண் : 910 :- ஊறல் = கசிவு. குலம் = கூட்டம்.

பாடல் எண் : 911 :- நத்துப்போம் – (பயன்) இன்றிப் போம்.

பாடல் எண் : 912 :- வாடாமல் = துன்புறாமல்; செவ்வாமோ = செம்மையுறுமோ; நாதம் = இனிய ஒலி (கீதம்); பவிசு = மேன்மை (கண்ணியம்).

பாடல் எண் : 915 :- முகிலை = முனையை.

பாடல் எண் : 916 :- மாடமண் செய்து = உளுந்து மாவால் சீலை மண் செய்து.

பாடல் எண் : 917 :- அடங்கலும் = முழுதும்; குடோரி = கூர்மையான படைக்கலன்; (துண்டு பண்ணி அகற்ற உதவும்).

பாடல் எண் : 920 :- மறிந்து = மறுபடியும்.

பாடல் எண் : 921 :- தமர் = சந்து, தொளை; புக்கி = நுழைந்து.

பாடல் எண் : 924 :- கூகை = ஆந்தை.

பாடல் எண் : 925 :- மிதை = (இடைக்குறை) மித்தை = உலகத்தோற் றம் பொய்.

பாடல் எண் : 926 :- விரகு = ஞான தந்திரம்; வதைப்பு = இன்ன லான; அதையாக = பெரியதான (வீக்கத்தை அதைப்பென்பதும் காண்க).

பாடல் எண் : 927 :- பால்துருதி = பால்திநீர் (செய்முறை 914. 915. 916-ம் பாடல்களில் காண்க).

பாடல் எண் : 931 :- காந்தி = ஒளி.

பாடல் எண் : 935 :- நாறும்பூ = கெந்தி; அந்திவண்ணர் = சிவன்.

பாடல் எண் : 936 :- திட்டான = வரையப்பட்டதான; நெறியாக = அறவழியில்.

பாடல் எண் : 940 :- நிசித்தம் = (நிஷித்தம்) = தள்ளத்தக்கது; ஏற்க இயலாதது.

பாடல் எண் : 946 :- உலைவார் = துன்புறுவார்.

பாடல் எண் : 947 :- மன்மதன் பஞ்சபாணம் — ஐந்து பூக்களே மன் மதனுடைய ஐந்து பாணங்கள் (அவை: தாமரை அசோகம்; மாம்பூ; மல்லிகை; நீலோற்பலம் (கருங்குவளை) என்பவை).

---

அருகில் வந்து கைகட்டித் தொழுது நின்று
அடியேங்கள் குளிகை கட்டிக் ககன மோடக்
நருகில் வந்து சாரணைக்கு வாதத் துக்குக்
கடிசான வீரமது வேணு மென்ன
சருகில்வந்து நாயனுர் கேட்ட போது
நகையுற்றுப் பிறப்பான வீரந் தானும்
திருகில் வந்து சித்தருக்குக் கிட்டா தென்றார்
சொருபமணி வாயிலிட்டார்ல் சொல்லக் கேளே. 951

சொல்லவே கைலாசத் தருகே தானும்
சூழ்ந்ததோர் மலைகளிலுற் பத்தி யாகும்
மல்லவே மணிவாயி லிட்டுக் கொண்டு
மான்தோலி லெடுத்துமே கட்ட லாகும்

வெல்லவே யதற்கொப்பாய் வீரந் தானும்
　　வேதைக்குக் கிராவணந்தான் சார ஸைக்கு
வல்லவே வைத்திடுங்க ளென்று சொல்லி
　　வகையெல்லாஞ் சொல்லியே யனுப்பி னரே. 952

## வெடியுப்புச் செய்நீர்

வகையான வீரத்தை வைத்த பின்பு
　　மலைவீர மிரண்டுக்கும் வண்மை கேளு
மிகையான வெடியுப்புப் பலமும் பத்து
　　மிடுக்கான கல்லுப்புப் பலமுமைந்து
தகையான இந்துப்புப் பலமு மைந்து
　　தளிரில்லாப் பழம் புளியுந் தனிநா லைந்து
மிகையான கல்லுரலி லிடித்து நைய
　　மிடுக்கான சட்டியினி லெரித்தி டாயே. 953

எரித்திட்டி ரண்டுசாம மான பின்னர்
　　எலுமிச்சம் பழச்சாறு தனில ரைத்து
அரித்திட்டு அகலிலிட்டு மேலு மூடி
　　அதட்டியே கெசபுடமாய்ப் போட்டெ டுத்துப்
புரித்திட்டுப் பொடிபண்ணிப் பீங்கானிலிட்டுப்
　　பிணியில்லா மனிதனுடை யமுரி வாங்கி
நிரித்திட்டு நீற்றியே பனியில் வைக்க
　　நிசமான செயநீராம் பெருகத் தானே. 954

## நிருவிடத் தயிலம்

பெருகின்ற செயநீரில் வீரம் லிங்கம்
　　பூரமது பொடித்திட்டு வைத்துக் கொண்டு
அருகின்ற அண்டோடு பழச்சாற் றரைத்து
　　அதட்டிடாய் வில்லைசெய்து தருத்திவைத் தாதி
நிருகின்ற அமுரிவிட்டு நீற்றிக் கொள்ளு
　　நீற்றுதே யமுரியினால் வைத்துக் கொண்டால்
கருகின்ற சுண்ணும்பிற் கார மில்லை
　　கடிசான சுண்ணும்பா மமுரி நீற்றே 955

நீற்றுவது கட்டியாய் நீற்ற வேண்டாம்
　　நீறுபோல் பொடிபண்ணி நீற்றிப் போடு
ஆற்றுவது அண்டோட்டுச் சுண்ணந் தன்னை
　　அரைத்திடுவாய் வெடியுப்பு நீரி னாலே
வேற்றுவது சாரத்தை வெடியுப்பு நீரில்
　　மூன்றுநா ளரைத்துமே வேறே வைத்து
ஏற்றுவதி ரண்டையுந்தான் வெவ்வே றாக
　　இரவிதனில் வைத்துமே யுலர்த் திடாயே. 956

உலர்த்தியே சூடனைத்தான் வெடியுப்பு நீரில்
உறவரைத்து மூன்றுநாள் ரவியிற் போடு
புலர்த்தியே கெந்தகத்தைச் சுத்தி பண்ணிப்
பொட்டுலுப்பு நீர்தன்னாற் றுன ரைத்து
நலர்த்தியே ரவிதன்னில் காயப் போடு
நலமான வெங்காரப் பலகை தன்னை
அலர்த்தியே வெடியுப்பு நீர்தன் னாலே
அரைத்துமே மூணுநாள் ரவியிற் போடே. 957

மூன்றுநாள் ரவிதன்னில் போட்ட பின்பு
மூர்க்கமாந் துரிசிதன்னை வெடியுப் புநீரில்
வாணுநாள் மூன்றுமே அரைத்து மைபோல்
வைத்துமே ரவிதன்னில் உலரப் போடு
நீணுநாள் நிருவிசத்தை வெடியுப் புநீரில்
நேகரைத்து மூன்றுநாள் வைத்துக் கொள்ளு
ஆணுநாள் அண்டோட்டுச் சுண்ண மொன்று
அரைத்ததோர் சாரமது நாலு போடே. 958

நாலுமே போட்டரைத் தொருநாள் சென்றால்
நைந்ததோர் காரத்தை இரண்டு போடு
காலுமே மூன்றுநாள் அரைத்து வைத்துக்
கனமான சூடனது பலமி ரண்டு
தேலுமே கெந்தகந்தான் பலமி ரண்டு
சிறக்கரைத்து நாள்மூன்றும் ஆன பின்பு
ஆலுமே அண்டோடு சாரத் திற்போட்
டைந்துநாள் மைபோல ரைத்தி டாயே. 959

ஐந்துநாள் அரைத்தபின்பு துரிசி தன்னை
அதட்டியரை நிருவிசமும் கூடப் போட்டு
ஐந்துநாள் அரைத்தபின்பு முன்மருந் தோடிட்
ட தட்டியரை எல்லாந்தான் தீநீ ராலே
ஐந்துநாள் அரைத்திட்டு வில்லை பண்ணி
அடர்ந்திரவி தன்னிலே காயப் போடு
ஐந்துநாள் ஆனபின்பு கவுதாரிப் புடமாகி
அடங்கவே போட்டெடுத்துப் பனியில் வையே. 960

பனியில்வைக்கப் பலபலெனச் செயநீ ராகும்
பாங்கான செயநீர்தான் தைலம் போலாம்
தனியில்வைத்துச் சாதிலிங்கம் வீரம் பூரம்
தனித்துமே பொடிபண்ணிக் கூடப் போட்டு
கனியில்வைத்துப் பரணிதன்னில் அடைத்துக் கொண்டு
கட்டியாய் சவ்வீரந் தானெ டுத்துப்
புனியில்வைத்துப் பொன் ரேக்குப் பத்திலொன்று சுற்றிப்
பேரான தயிலத்தில் புரட்டி வாட்டே. 961

வாட்டியே நால்சாமம் ஆன பின்பு
வச்சிரமாம் கவசமிட்டுப் புடமாய்ப் போடு
ஆட்டியே யாறவிட்டெ டுத்துப் பார்க்க
அழுந்தியே வைரம்போல் கட்டிப் போகும்
மாட்டியே பால்துருநி சுருக்குப் போட்டுப்
பார்த்துமே மெழுகான பதத்தில் வாங்கி
ஊட்டியே நவலோகத் தீந்தா யாளுல்
ஒன்பதென்ற மாற்றுகு முசத்தி தானே. 962

## சூதக்கட்டு

உசத்தியாம் இத்தயிலம் சூதம் கட்டும்
உறுகின்ற சூதத்தைச் சுத்தி பண்ணிப்
பசத்தியாம் பனேமட்டைச் சாறு தன்னுல்
பாங்காக நால்சாமம் அரைத்த பின்பு
அசத்தியாம் அயக்கரண்டிக் குள்ளே யிட்டு
ஆதிசயி லோதகத்தைச் சுருக்குப் போடு
கசத்தியாங் காடிவிட்டுச் சூதத்தைக் கழுவி
களிம்பகற்றி கரண்டி தன்னில் வைத்தி டாயே. 963

வைத்திட்டு இத்தைலந் தன்னி ளுலே
வாகாக சுருக்கிடவே மணியு மாகும்
பொய்த்திட்டு பொன்மத்தங் காய்க்குள் வைத்துப்
புடம்போட்டு உருக்கிடவே பொன்போ லாகும்
மைத்திட்டுச் சாரணையைத் தீர்த்தா யாகில்
வையமெல்லாம் ஒருநொடிக்குள் மருவ லாகும்
தெய்த்திட்ட சிந்தூரம் பண்ணித் தின்று
சிறுகதிர்போல் மேனியுமாம் சித்தி யாமே. 964

சித்தான வாரிதியில் சலமொண் டாக்கால்
சிறுகியே வாருதியுங் குறைந்து போமோ
பத்தான தொண்டுபண்ணிற் குருதான் சொல்வார்
பாடுபட்டுத் திரியாதே சும்மா வாமோ
நித்தான தினமொருக்கால் ஏட்டைப் பாரிப்பார்
நிலையேது தலையேது என்று கேட்பார்
உத்தான உலகில்வாதம் இல்லை யென்பார்
உண்மையாய்க் கண்டதில்லை என்பார் காணே. 965

காணவே இச்சூதஞ் சாரணை தா னென்று
கசகாமல் விடுவித்துத் தாவடமாய்க் கோத்து
மூணவே வசிநமய வென்று சொல்லி
முட்டவே பஞ்கர்த்தர் நிற்பார் பாரு

ஆணவே கேட்டதெல்லாம் ஈவார் ஈசன்
அட்டமா சித்தியெல்லாம் ஆட லாகும்
தோணவே கங்கைமதி கொன்றை சூடி
துடியாக முன்நின்று பேசு வாரே. 966

## 7. வைக்கிராந்த பாடாண உற்பத்தி

பேசவே வயிக்கிராந்த பாடா ணத்தின்
பிறப்பதனைச் சிவன்றானுந் தேவிக்குச் சொன்னார்
வாசவே வயிக்கிராந்த மகா்ர சந்தான்
மகத்தான உற்பத்தி எப்படிதா னென்றால்
பூசவே பூருவத்தில் விஷ்ணு விடமாய்ப்
பிறந்ததான சரீரத்தில் வேர்வை தன்னால்
ஆசவே யசுரன்றான் மகிடா சூரன்
அதிபலமா யவதரித்துற் பவித்தான் காணே. 967

அவதரித்து அங்கங்கே யிருக்கப் பட்ட
இயக்கராக்க ததேவகந் தருவர் தம்மைச்
சவதரித்துப் பட்சித்து அடித்துக் கொன்று
தனிச்சூறை யாடிமகா கலகம் பண்ணில்
உவதரித்துச் சகலருந்தான் ஓல மிட்டு
உபத்திரவம் பொறுக்காமல் சிவனண் டைக்குச்
சுவதரித்துச் சொல்லலுமே சிவனும் கேட்டுச்
சோதியாம் மனோன்மணிக்குச் சொன்னார் காணே. 968

சொன்னாரே யசுரனைத்தான் சங்கா ரித்துச்
சீக்கிரத்தில் வாருமென்று தேவிக் குத்தான்
அந்நேர மகாகோர ரூபி யாகி
ஆயுதந்தான் பதினெட்டத் தந்தாங் கியுமே
மின்னாரே தர்க்கையென்ற ரூபங் கொண்டு
மீறிமகி டாசுரனைச் சூலத் தாலே
பின்னாரக் குத்தியே சங்க ரித்தாள்
பீறிட்டி ரத்தங்கள் போகிற் றன்றே. 969

போகியே மலைகளிலே தெறித்தவிட மெல்லாம்
பிறந்துவச்சி ராகாரமாய் வயிக்கிராந்த மாச்சு
மாகியே மகாரசமாய் வயிரத்துக் கொப்பாய்
மகாகுலிசா யுதசமமா யாயுரு விருத்தி
சோகியே சூதபத்த காரி யாகிச்
சுக்கிலிகம் போலவெள்ளி வித்தை யாகும்
ஏகியே கருப்புவெண்மை யிருபி றப்பால்
இருக்குமே வயிக்கிராந்தத் தாது தானே. 970

தாதுவென்ற வயிக்கிராந்தம் பலந்தான் பத்துத்
தனிக்காட்டுக் கருணையுடைக் கிழங்குச் சாற்றில்
ஏதுவென்ற இருசாம மெரித்துக் கொண்டு
ஏற்றமாம் வெடியுப்பு நீரில் தானும்
வேதுவென்ற வெங்காரம் பலந்தா னஞ்சு
மிடுக்காக மூன்றுநாள் தான ரைத்துச்
சேதுவென்ற வெள்ளீயம் பலமும் பத்துத்
திரளவே யுருக்கியெல்லாம் வாங்கிக் கொள்ளே. 971

வாங்கியே யுடைத்தக்கால் நொறுங்கும் பாரு
மறுபடியும் வெள்ளியொன்று உருக்கி ரண்டு
தேங்கியே குகையில்வைத் துருக்கிக் கொண்டு
சூதந்தான் வெள்ளிநின்ற வெடைதொந் தித்துப்
பூங்கியே ஒன்றாகப் பொடித்துக் கொண்டு
பெரிசாக வில்லைபண்ணி யகலில் வைத்து
ஓங்கியே புடம்போடக் குருவு மாகும்
ஒருநூற்று வங்கத்தி லொன்றி டாயே. 972

ஒன்றிடவே ரசிதமது பத்து மாகும்
ஒன்பதென்ற நவலோகம் வெள்ளி யாகும்
வென்றிடவே விரிக்கவென்றால நேகம் பாட்டாம்
வேதைக்குத் தமந்தான் வெகுசு றுக்கு
என்றிடவே இக்குருவால் சூதங் கட்டும்
ஏற்றமாந் தாதுவகை உப்பு கட்டும்
பன்றிடவே காயமது சித்தி யாகும்
பாலையாம் பதினாறு வயது மாமே. 973

## யோகம் கூறல்

வயசான சடமென்ன வழங்காப் பண்டம்
மாலான ஆசையென்ன போக மென்ன
முயதான எந்நேரம் மூலத்தில் மருவி
முதிர்ந்தபின் பறுதலமு முட்டிப் பார்த்துத்
தயதான சந்திரனுந் தாரை தன்னைத்
தாக்கினால் கணத்திலே காயசித் தியாகும்
துயவான சோமப்பால் மதியி னுள்ளே
தூய்தான சத்தியொன்று கோடிரவி யொப்பே. 974

ஒப்பான குருபதந்தான் நாத வீடு
உலாவிநிற்பாள் லாகினியா மென்ற சத்தி
தப்பான ரவிகோடி தாயார் மேனி
தளுக்கான ஒளியாகும் பார்க்கப் போகா

அப்பான அதன்மேலே சமனி சத்தி
அறுகோடிக் கனலொளியா யறிந்து காணு
திப்பான சிவத்தினுள்ளுன் மனையாஞ் சத்தி
சிறுகதிராங் கோடிரவி காந்தி யாமே. 975

ரவியான பரத்தினுள்ளே வியோம ரூபி
ரவிகோடி மதிகோடி வன்னி கோடி
அவியான வெளிப்பாழி லனந்தைப் பெண்தான்
அடங்காத ரவிமதிபோல் வெட்ட வெளியாகும்
ஒவியான ஒளிப்பாழில் அனுசிரதை நிற்பாள்
ஒருகோடி ரவிமதியாம் வன்னி கோடி
தவியான வெளியொளிப்பாழ் தன்னி னுள்ளே
தனியான வுன்மனுந் தத்தின் வீடே. 976

உன்மனையில் நின்றுறைத்து மயக்கந் தீர்ந்து
உற்றுமே மேலேற அம்பரமா மாயி
கன்மனையி லடிதொடுத்து நுனிமட் டுக்குள்
கசகாமலிம் முறையாய்க் கருதி யேறு
வன்மனையில் நின்றக்கால் ஞான மாமே
வழியோடே கூடாட்டால் யோக மாமோ
நன்மனையி லிருந்தாலென் நாட்டில் வாழ்ந்தென்
நலமாக மனமுறைத்தால் நாடுந் தானே. 977

நாடுகிற வரிசையிது ஞான வீதி
நலமறியா அந்தகர்க்கும் வெளியாய்ச் சொன்னேன்
வாடுகிற வரிசையிது யோகத் துக்கு
மார்க்கமாய் வாசிகொண்டு மருவி யேறு
நீடுகிற குளிகையினுல் நிலைத்தே உன்னு
நிமிடத்தி லண்டமெல்லாம் நிலைத்துப் பாரு
ஆடுகிற வரிசையிலே தாங்கா ரத்தை
அமர்த்தியே யடிமூலந் தன்னிற் போடே. 978

அடிமூலந் துலங்கினு லாறுங் காணும்
அதீதமா மும்மூல மேலுங் காணும்
துடிமூல அட்டசத்தி சோதி காணுஞ்
சுருதியாம் பராபரையின் சூட்சங் காணுஞ்
நெடிமூல நிட்களமு நிசமாய்த் தோன்றும்
நிரைநிரையாய் வேதாந்தம் வெளியாய்க் காணும்
முடிமூலம் ஆலவன்னி மீறி நோக்கும்
மிதமில்லா நாமமுற்ற அதீதந் தானே. 979

அதீதமென்று மந்தமென்று மிரண்டு மற்றால்
ஆசையற்ற முத்தனென்ற ஞானி யாவான்
மிதீதமென்ற வானென்று மேக மென்று
மேகிக பாவமானல் மெய்ஞ்ஞானி யாகும்

உதீதமென்ற வூனென்று முயிரென்று மொத்தால்
உண்மையா மெய்ஞ்ஞான மொத்த விடமாம்
குதிதமாங் குருவென்றுஞ் சீட னென்றுங்
கூர்ந்துமே யொன்றானால் ஞானி தானே. 980

ஒன்றான ஞானிநானென் பார்வாய்ப் பேச்சா
லுறுகின்ற நல்வினைதீ வினையைக் காணார்
பன்றான ஞானியென்பர் பாசவலை நீங்கார்
பலபலவாம் போகத்தி லாசை போக்கார்
தன்றான ஞானியென்பார் தாம்வேறாய் நில்லார்
தரியாமல் பதிவிட்டு நாய்போலத் திரிவார்
துன்றான ஞானியென்பர் வாசிவழி காணார்
வேதாந்த சாரத்தில் நாடாதார் காணே. 981

சாரத்தால் ஆணவத்தைத் தறித்தா லல்லோ
சகலசித்தாங் கமனமது தாண்டி யோடும்
கோரத்தால் குண்டலியைக் கண்டா யானால்
குவிந்தாறு தலங்காணு மமுத மூறும்
தூரத்தால் சொல்லற்று வரவு மற்றுத்
தூக்கமற்று துரியத்தில் போதந் தானாய்
ஆரத்தா லசைவற்று நாலு மற்று
அதீதமூற்றால் மெய்ஞ்ஞானி யடக்கந் தானே. 982

8. தாலக பாடாணோற்பத்தி

அடக்கமாந் தாலகபாடா ணந்தான் சாற்றும்
அதிகுந்தஞ் சாலகமாம் லம்பந் தானும்
முடக்கமும் மதக்கோடு கடுங்கும் பந்தான்
மூர்க்கமாம் பனங்காய்ப்பா டாண மாகும்
கடக்ககன் னியாகுமரி தேசந் தன்னில்
கனத்தவக்கி ராமலையின் உச்சி யிற்றான்
வடக்கமாம் வலப்புறத்தி லிடப்பு றத்தில்
மதித்த பனங்காய்ப்போ லிருக்குங் காணே. 983

இருக்கின்ற பனங்காய்ப்பா டாணந் தன்னை
இடமறிந்தவ் விடத்தின தியல்பைக் கேளு
அருக்கின்ற ஆலரசு கல்லத் திகள்ளி
ஆனதோர் எட்டியோடு அழிஞ்சில் கேளு
தருக்கிறதோர் சாணிளம் விரற்பரு மந்தான்
தறித்துமே ஒவ்வொன்றுக் கிருநூ றாக
அருக்கிறதோர் ஆயிரந்தான் விறகைச் சுட்டால்
ஆட்டுப்பால் எருமைப்பால் பசுவின் பாலே. 984

பாலோடே படிகொள்ளு நாழித் தண்ணீர்
பாங்காகக் கொதிக்கவிட்டு விறகெரிஞ்ச விடத்தில்
தேலோடு தெளிக்கவே கல்லுதான் வெடிக்கும்
சிறுகோழி யின்முட்டை போலி ருக்கும்
காலோடு மூன்றுகண்ணுய்த் தானி ருக்கும்
கறுத்ததொன்று வெளுத்ததொன்று சிவந்த தொன்று
நாலோடே ஒவ்வொன்றுய்த் தனித்தி ருக்குந்
தனித்தனியே வெவ்வேருய் வாங்கி டாயே. 985

தனித்தனியே கறுத்திருந்த பாடா ணத்தைத்
தாக்கியே கல்வத்தில் பொடியாய்ப் பண்ணி
அனித்தனியா யரைக்கழஞ்சி ஆவின் பாலில்
அருந்திடவே மூன்றுநாள் சட்டை கக்கும்
பனித்தனியாய் பஸ்மத்தில் கிடத்தி வைத்துப்
பாலொழுக்கில் சட்டையது கழலும் பாரு
இனித்தனியாய் எழுந்திருந்து குளிக்க லாகும்
ஏற்றமாஞ் சிவன்தன்னே டியம்ப லாமே. 986

இயம்பசந் திராதித்தர் அருளுள் ளமட்டும்
இருக்கலாங் ககனத்தில் திரிய லாகும்
இயர்பவே சிவந்தபலங் காய்ப்பா டாணஞ்
செம்புருக்கி ஆயிரத்துக் கொன் றீந் தக்கால்
பயம்பவே பத்துக்குக் குறையா தாகும்
பால்போன்ற வெள்ளையா யிரத்துக் கொன்று
வியம்பவே வெள்ளியத் தீந்தா யானல்
வெள்ளியஃ திருபதோ டைந்து மாற்றே. 987

வெள்ளியது குருவாகும் பனங்காய்ப் பாடாணம்
மிடுக்கான சிவப்பாலே பொற்குருவு மாகும்
அள்ளியது இடப்பார்த்தால் ஆயிரத்தெட் டண்டம்
அணுக்கொண்டு விளையாடும் பேரண்டம் மட்டும்
முன்னியே வந்துமுன்னே எதிர்க்க மாட்டார்
முச்சாடா தாடலாந் தாலம் பத்தால்
பள்ளியதி லிருந்துவித்தை கற்கு மாபோல்
பனங்காய்ப் பாடாணத் திணுடு மாட்டே. 988

## அறிவுரை

ஆட்டான தாடவென்றல் வயதோ கொஞ்சம்
அழும்பான சடமிதுதான் எடுத்தார் லோகர்
மாட்டான நோய்கோடி வறுமை கோடி
வயசாலே கிழத்தாலே மயக்க மெத்த

பூட்டான பெண்பொன்னு மண்ணு ஞசை
 பிரபலத்தால் மதத்தாலே பேசக் கூடா
காட்டான கலையாலே கோபத் தாலே
 கைப்பிடிகள் கால்பிடிகள் கலிக்கூத் தாச்சே. 989

கூத்தாகக் குறித்ததிலே மனங்கூ டாது
 கொள்கின்ற பெண்ணாசை மயக்கங் கொல்லும்
காத்தாகக் காமத்தால் பெண்ணைக் கூடிக்
 களித்துமே மைந்தர்களைப் பெற்றே ஆட்டி
நீத்தாகச் சடம்விழுந்தால் பிள்ளை தானும்
 நிலைத்துநின்று கொள்ளிவைத் தெள்ளி றைக்குந்
தாத்தாகச் சடம்விழுந்தால் உயிரங் கேயாந்
 தவித்துநின்ற மக்கள்பெண்டிர் தமரார் தானே. 990

தானாகச் சடமெடுத்துத் தன்மஞ் செய்தால்
 தன்றனக்கே யல்லாமல் மற்றோர்க் கில்லை
ஊனான யோகத்தி லுற்று ணர்ந்தால்
 உற்றதொரு வமிசமெலாங் கடைத்தே றிப்போம்
நானாக ஞானத்தின் சொரூப முற்றால்
 நலமான பந்துவெல்லாங் கடைத்தே றிப்போம்
வானாகக் குளிகையிட்டு ஆடித் தேர்ந்தால்
 வந்தவர லாறெல்லாந் தோற்ற மாமே. 991

## 9. அமுத பாடாண உற்பத்தி

தோற்றமா மமுதபா டாணந் தன்னைச்
 சிவன்சொன்னார் தேவிக்குச் சுருதி மார்க்கம்
மாற்றமாங் காளிமா தேவி தானும்
 மத்தியபா னம்பண்ணக் காம விச்சை
நாற்றமாந் தன்னுடைய நாயகர் தேடி
 லாகிரிதான் மிகுதியாய் நலங்கிச் சோர்ந்து
பூற்றமாம் பெருமூச்சு தானும் விட்டாள்
 பொறிமரத்து நிசுவாச சுவாசந் தானே. 992

சுவாசந்தான் சுவாலையஃ தோடுங் கூடித்
 துலக்கமாய்ச் சோதிமின்னல் தானுண் டாச்சு
விவாசந்தான் மின்னலிலே நின்று தித்து
 விளக்கமா மலையினிலுற் பத்தி யாச்சு
தவாசந்தான் சபலமென்று மமுதபா டாணந்
 தானென்று முண்டாச்சு பொற்கட்டி போன்றும்
சுவாசந்தான் காரீயக் கட்டி போன்றுங்
 கருஞ்சிவப்பாம் வெள்ளீயக் கட்டி யாமே. 993

ஆமென்ற எஃகுகட்டி வெண்கலமாங் கட்டி
அதிகமாம் பளிங்குக்கற் கட்டி போன்றும்
தாமென்ற தானிருக்குஞ் சபலந் தானுந்
தனித்தவெஃகுக் கட்டிலட்ச குணமுண் டாகும்
காமெஸ்ற காரீயக் கட்டி போன்றால்
கனகமாம் நவலோகங் குருவு மாகும்
போமென்ற பொற்கட்டி ரசஞ்சா ரிக்கிற்
பொன்னாகும் வெகுதூர மெட்டிப் போமே. 994

எட்டிப்போம் ரத்தவண்ணங் கோடிக் கோடும்
ஏற்றமாம் வெங்கலந்தான் வெள்ளியம் வெள்ளி
பட்டிப்போம் படிகலவண்ணஞ் சூதங் கட்டும்
பாடாண வெள்ளியஞ் சூத வெள்ளி
தொட்டிப்போஞ் சொருபமணிக் கிதுதான் வேணும்
துலக்குமா மறுகோணம் மழம ழப்பு
கட்டிப்போஞ் சரக்கெல்லாங் கனத்தி ருக்குங்
கண்டபடி பச்சையிலே வேதை தானே. 995

பச்சையிலே வேதையஃ துலகோர்க் காகா
பரதேசி சிவயோகி தனக்கே யாகும்
கச்சையிலே யுலகோர்க்குக் காண வேண்டில்
களங்குமுதல் சிந்தூரம் பத்தே மாற்று
உச்சையிலே யுத்தமியைப் பூசை செய்தால்
உலகோர்க்கு உயர்ந்ததொரு வித்தை யாகும்
வச்சையிலே வாதத்தால் வாமம் புக்கி
வாராமற் போனக்கால் பொய்யென் பாரே. 996

பொய்யென்று வாமத்தைத் தூசிப் பார்கள்
புழுத்துமே மாண்டபின்பு நரகமெய்துங்
கையென்று எழுவகையும் யோனி நாலுங்
கண்டுகொள்ளுங் கரையில்லா சந்து வாச்சு
உய்யென்று ஒருமுகமோ ஒன்றோ தேகம்
உதிப்பித்தார் பலபலவாம் எட்டுக் குள்ளே
பையென்ற எட்டைவிட்டுப் பறையைக் காணப்
படுகிறதோர் பிறவியெல்லாம் பாழாய்ப் போச்சு. 997

போச்சென்ற சென்மமது ஞான சன்மம்
பூரணத்தில் நேராக மருவிப் போகும்
நாச்சென்ற நாமுந்தான் சடசித்தி பண்ணி
நலமான ரோமமென்ற விருக்கத் தின்கீழ்
ஆச்சென்ற அண்டரண்ட பதமெல்லாந் தாண்டி
அமர்ந்திருந்து கோடியுகம் வாதம் பார்த்து
மாச்சென்ற மணிபண்ணிப் பிள்ளைகட்குச் சொல்லி
மனோன்மணிதன் பாதத்தில் மருவி னேனே. 998

மருவியே வாழுகிறதைப் படித்தான் னென்ருல்
வரிசையாய் யோகத்தே மன்னி நின்று
அருவியே யானந்த வமுத முண்டு
அதனேடே மனமொன்றிப் போன பின்பு
நருவியே பிரபஞ்சமெல்லாம் நானே யாச்சு
நாட்டமாஞ் சராசரமும் நானே யாச்சு
பருவியே பராபரமும் நானே யாச்சு
படைப்பித்த சகலமும்நா னென்று நோக்கே. 999

நோக்காட்டால் பிறவிவருஞ் சித்தென் செய்யும்
நோகாமல் வெகுநாள்தான் சடத்தை வாழ்த்து
தேக்காட்டால் சித்தென்ன குளிகை யென்ன
செகசால வாதமென்ன தேகசித்தி யென்ன
போக்காட்டால் பூரணத்தி லயிக்க மென்ன
பூலோக மனிதரிலே நீயொன் ருச்சு
பாக்காட்டால் குருவென்ன சீடன் என்ன
பரிகாச வேடமிட்ட பாங்க ளுமே. 10

பாங்கான குருவென்ற பேரா ருக்கு
பலிதமாய்ப் பூரணத்தைக் காட்டும் பேர்க்கு
தீங்கான வகையறுத்து மேல்வழியைக் காட்டி
தெரிசிக்கப் பண்ணினவன் குரவ னுகும்
தாங்கான பூரணத்தை நிசமீ தென்று
சமுசயத்தைப் போக்கினவன் ஆசா னுகும்
ஓங்கான உதயத்தில் வெளிச்சம் என்ன
ஓதரிய இராக்காலம் இருட்டாய்ப் போச்சே. 1001

## 10. சிரபந்த பாடாண உற்பத்தி

இருட்டாகப் போகமல் சிரபந் தந்தான்
எவ்விடத்தில் உற்பத்தி யென்ருல் கேளு
இருட்டாக விந்தமாம் பருவ தத்தில்
மெல்லியதாய் அடுக்கடுக்காய் நிற்கும் பாரு
திருட்டாகப் பச்சையிலே வேதை யாகும்
செப்பரிது இதின்வேதை சிவனுங் காணுர்
பொருட்டாகச் சொல்லுதற்குப் பாவு மாச்சு
பிற்கண்டநீ தனிற்குறையைப் புகலு வேனே. 1002

குறையான பாடாணக் குறிப்பை யெல்லாம்
கொட்டினேன் மூன்ருகும் காண்டத் துள்ளே
கறையான காரசா ரத்தின் வைப்புக்,
கைகண்ட படியானுங் கருதிச் சொன்னேன்

முறையான பாடாணம் முப்பத் திரண்டும்
　　முயற்சியாய் வைத்திட்டுப் பார்த்துச் சொன்னேன்
மறையான கட்டுவகைக் களங்கு சுண்ணம்
　　மார்க்கமாஞ் சிந்தூர வகைசொன் னேனே. 1003

சொன்னேனே முப்பாட்டர் திருமூ லநாதர்
　　திருவடிகள் இரண்டுமென் றன் சிரசில் வைத்து
சொன்னேனே பதஞ்சலியார் வியாக்கி ரபாதர்
　　சிவயோக மாமுனிதன் திருவடிமேற் கொண்டு
சொன்னேனே ஈன்றெடுத்த ஐயர்கா லாங்கி
　　துய்யபதாம் புயமென்றன் சிரசில் வைத்து
சொன்னேனே இரண்டான காண்டம் தன்னைச்
　　சுருதிமுறை வழுவாமற் சொன்னேன் முற்றே. 1004

## குறிப்புரை

### பாடல் எண் : 951 முதல் 1004 வரை

பாடல் எண் : 963 :- சயிலோதகம் = செய்முறையை 890 பாடலில் காண்க.

பாடல் எண் : 970 :- சூதபத்தகாரி = இரசத்தைக் கட்டவல்ல சரக்கான.

பாடல் எண் : 974 :- சந்திரஞுந்தாரை = மதிமண்டல அமுத ஒழுக்கு

பாடல் எண் : 978 :- அந்தகர் = குருடர்.

பாடல் எண் : 982 :- சாரம் = சரம் (நீட்டல்).

பாடல் எண் : 983 :- தாலம் = பனை.

பாடல் எண் : 992 :- மத்திய பானம் = கள் குடித்தல்; நலங்கி = கசங்கி

பாடல் எண் : 993 :- சுவாலை – தீக்கொழுந்து.

# போகமுனிவர் ஏழாயிரம்

இரண்டாம் ஆயிரம் முற்றும்.

T.6745